www.padippakam.com


# தொழிலாளர் பாதை

DM 3.-

● மாதமிரு இதழ் — இதழ் 400 ● 1990 நவம்பர் 9 வெள்ளிக்கிழமை


★ யூ. என். பி. இனவாத யுத்தத்தை நிறுத்து!

★ சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்!

★ யூ. என். பி. உலகவங்கி தாக்குதலுக்கு எதிராக பொதுவேலைநிறுத்தத்திற்கு தயார் செய்!

★ யூ. என். பி. அரசாங்கத்தை வெளியேற்று!

★ இலங்கை — தமிழீழம் சோசலிச குடியரசினை கட்டியெழுப்பு!

**தொழிலாளர் பிரதிநிதிகள் மகாநாடு**

நவம்பர் 17, பிற்பகல்

1 மணிக்கு ஆரம்பம்.

புறக்கோட்டை பௌத்த மந்திரய

**புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்**

# வீ. பி. சிங் வீழ்ச்சி: துணைக்கண்ட முதலாளித்துவ நெருக்கடியின் உச்சக்கட்டம்

இந்திய வலதுசாரி தேசிய முன்னணி அரசாங்கம், தனது ஓராண்டு பூர்த்திக் கோட்டை எட்டித் தொடுவதற்கு முன்னரே சிதறி சின்னாபின்னமாகியது. பிரதமர். வீ. பி. சிங் ஜனாதிபதியிடம் இராஜினாமாக் கடிதத்தினைக் கையளித்ததைத் தொடர்ந்து இந்திய ஆளும் வர்க்கத்தின் அரசியல் நெருக்கடி தணிவதற்குப் பதில் மேலும் உக்கிரம் கண்டுள்ளது.

கடந்த 11 மாத ஆட்சிக் காலத்துள் வீ. பி. சிங்கின் அரசாங்கம் ஆட்டம் கண்ட வேளைகளில் எல்லாம் உயிர் மூச்சைப் பிடித்து வைக்கக் கோரப்பட்ட நம்பிக்கை தெரிவிக்கும் பிரேரணைகள் இம்முறை—பாரசீக வளைகுடா யுத்த அபிவிருத்திகளினைத் தொடர்ந்து – சரிபோகவில்லை. நவம்பர் 7ம் திகதிய வாக்கெடுப்பில் வி. பி. சிங்குக்கு ஆதரவாக 142 வாக்குக்களும் எதிராக 346 வாக்குக்களும் கிடைத்துள்ளன.

'மக்கள் தீர்ப்பு' இல்லாமல் ஆட்சி பொறுப்பை ஏற்பதற்கில்லை எனக் கூறி தம்மை ஒரு "ஜனநாயகவாதி"யாகக் காட்டிக் கொள்ள ராஜீவ் காந்தி முயன்றுள்ள போதிலும் அதற்கான உண்மைக் காரணத்தினை அவரே பத்திரிகையாளர்களிடம் கூறி வைத்துள்ளார்.

"ஆட்சிக்கு யார் வருவார் களோ நானறியேன். ஆனால் அவர் பொருளாதாரத்துடன் சங்கடப்படவேண்டியிருக்கும். இரண்டரை மாதங்களில் எம்மிடம் ஒன்றுமேயிராது" என்றுள்ளார்.

தமிழ் ஈழ விடுதலை போராட்டத்துக்கு எதிரான ஆக்கிரமிப்பு யுத்தத்தில் வெட்கக் கேடான முறையில் தோல்வியைத் தழுவிக் கொண்ட ராஜீப் காந்தி அரசாங்கத்திற்குப்பதில் தேசிய முன்னணி அரசாங்கத்தினை ஆட்சியில் அமர்த்துவதென ஏகாதிபத்தியவாதிகளும் இந்திய முதலாளி வர்க்கமும் 1989ல் தீர்மானம் செய்தது. இதன் பெறுபேறாகவே இந்திய ஸ்டாலினிஸ்டுகளின் பக்கபலத்துடன் சேடமிழுக்கும் வீ. பி. சிங் அரசாங்கம் ஆட்சிப் பீடத்தில் அமர்த்தப் பட்டது.

1980பதின் கடைப்பகுதியில் இந்தியா பூராவும் ஏற்பட்ட தொழிலாள வர்க்க வேலைநிறுத்தங்கள், சீக்கிய மதக் கிளர்ச்சி, மணிப்பூர், நாகலாந்து, காஷ்மீர் மக்களின் தேசியக் கிளர்ச்சிகள் – இந்திய காங்கிரஸ் ஆட்சியை தள்ளியதை விட படுமோசமான நெருக்கடியை வி. பி. சிங்கின் தேசிய முன்னணி அரசாங்கம் முகம் கொடுத்தது. அயோத்தி பிரச்சினையின் அடிப்படையில் பாரசிய ஜனதா கட்சி தமது ஆதரவினை விலக்கிக் கொண்டமை சிங்கின் நெருக்கடியை உக்கிரமடையச் செய்தது.

## வளைகுடா யுத்தம்

1977ல் ஜனதா அரசாங்கம் நியமனம் செய்த மண்டேல் ஆணைக்குழுவின் — பின்தங்கிய சாதி, குல மக்களுக்கு வேலை வாய்ப்புக்களில் 50%ஐ வழங்கும் சிபார்சுகளை 33 ஆண்டுகளின் பின்னர் அமுல் செய்வது பற்றிப் பேசிய சமயத்தில் பாரசீக வளைகுடா யுத்தம் வெடித்தது. இதைத் தொடர்ந்து மத்திய கிழக்கில் தொழில் புரிபவர்களிடம் இருந்து மாதாந்தம் கிடைத்து வந்த 600 கோடி ரூபா இந்தியாவுக்கு கிடைக்காது போயிற்று. அத்தோடு ஈராக்கிடம் இருந்து மசகு எண்ணெயை பெறும் இலக்கில் இந்திய அரசாங்கம் கோடிக்கணக்கான ரூபாய்களை கடனாகவும் வழங்கியது. இன்று மசகு எண்ணெய் இறக்குமதி தடைப்பட்டதைத் தொடர்ந்து இந்தியா எண்ணெய் விலையை நூற்றுக்கு 40சதவிதத்தினால் அதிகரித்துள்ளது.

இந்நிலையில் வேலைவாய்ப்பில் அதிக இடங்களை ஒதுக்குவது பற்றிய வீ. பி. சிங். அரசாங்கத்தின் தீர்மானம் இந்தியப் பொருளாதாரத்தின் பாரிய நெருக்கடிக்கு எதிராக வீதியில் இறங்கும் தொழிலாள, ஒடுக்கப்படும் மக்கள் மத்தியில் பிளவினையும், மோதுதலையும் உண்டுபண்ண நனவான முறையில் எடுக்கப்பட்ட தீர்மானமாகும்.

இந்திய ஆளும் வர்க்கம் 'சேம நல' மானியங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்தும், தேசிய கைத்தொழில்களுக்கு முடிவு கட்டியும் வறுமை கோட்டின் கீழ் வாழ்வோரை பெருக்கியும் வந்த நிலையில் பட்டினி மூடுவிழாக்களைத் தொடர்ந்து இலட்சோப இலட்

(2-ம் பக்கம் பார்க்க)

# யுத்தத்தின் மத்தியிலும் பேச்சுவார்த்தை நடாத்த விடுதலைப் புலி தலைமை விருப்பம்

நவம்பர் முதல் வாரத்தில் யூ. என். பி. அரசாங்கத்தின் இனவாத ஆயுதப் படைகள் மாவிட்டபுரத்தில் தமிழீழ விடுதலைப் புலி போராளிகளின் எதிர்த்தாக்குதலிற்குப் பலியாகியுள்ளன. அரசாங்கத் தகவல்களின் படி 11 படையாட்கள் இறந்தும் 18 பேர் காயமடைந்தும் உள்ளனர். பலாலி முகாமை அண்டிய பகுதிகளில் 'படைகளின் பிடியை விஸ்தரிக்கும்' நடவடிக்கையில் ஆயுதப் படைகளுக்கு ஏற்பட்ட பெரும் இழப்பு இது என்பதை 'தி ஐலண்ட்' போன்ற இனவாதப் பத்திரிகைகளும் ஒப்புக்கொண்டன. மாவிட்டபுரத்தில் அரசின் முக்கிய காவல் அரண் சின்னாபின்னமாகியதை ஒப்புக் கொண்ட இந்த இனவாத ஊதுகுழல்கள், இறந்தும், காயமடைந்த படையாட்களின் ஆயுதங்களை விடுதலைப் புலிகள் எடுத்துச் சென்றதாகவும் குறிப்பிட்டன.

மன்னார் பகுதிகளில் ஆயுதப் படைகளின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் விஸ்தரிக்கப்பட்ட சமயத்தில் இடம்பெற்ற இத்தாக்குதலால் படையினர் பலாலி முகாம் நோக்கி பின்வாங்க நேரிட்டது. எனினும் காங்கேசன்துறை, பலாலி, கட்டுவன், தெல்லிப்பழை, வசாவிளான் போன்ற பகுதிகள் படையினரின் காட்டுமிராண்டி விமானத் தாக்குதல்களால் நாசமாக்கப்பட்டுள்ளதோடு— தாக்குதல்கள் யாழ். மாவட்டத்தின் மற்றும் பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளன.

"தேசியச் செல்வமான" காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை 'பயங்கரவாதிகளால்' நாசமாக்கப்பட்டுவிட்டது பற்றி ஊளையிட்டுக் கொண்ட இலங்கை அரச ஊதுகுழல்கள் ... வாழ்க்கைக்கு ஏற்படுத்தியுள்ள பேரழிவுகள் பற்றி மௌனம் சாதித்துள்ளன. ஆயுதப்படைகளின் சாதனைகளைக் காட்டும் விதத்தில் இனவாத பத்திரிகைகள் வசாவிளான் பகுதியில் ஏற்படுத்தியுள்ள அழிவுகளை சித்தரிக்கும் படங்களை பெருமிதத்துடன் பிரசுரித்தன.

அக்டோபர் 21ல் புதிய இராணுவத் தாக்குதல்கள் ஆரம்பித்ததைத் தொடர்ந்து 18 படையாட்கள் கொல்லப்பட்டதோடு 145 பேர் காயமடைந்ததாகவும் அரசாங்கம் அறிவித்தது. இதில் இருவர் இராணுவ அதிகாரிகள். ஒருவர் 'கப்டன்'.

தமிழர் விரோத பிரச்சாரங்களுக்கு மத்தியில் இந்திய, இலங்கை அரசாங்கங்கள் தமிழ் விடுதலைப் போராட்டத்தினை நசுக்கும் புதிய சதிகளினை ஆரம்பித்துள்ளன. நவம்பர் 11ம் திகதி இடம்பெறவிருந்த இந்திய வெளிநாட்டமைச்சர் இந்திரஜித் குஜ்ராலின் இலங்கை விஜயம், வி. பி. சிங் அரசாங்கம் கவிழ்ந்ததைத் தொடர்ந்து இரத்தானது.

வடக்கு – கிழக்கில் இருந்து இந்தியா செல்லும் அகதிகளை தடுக்க இந்திய கடற்படையினரின் துப்பாக்கி படகு முயன்ற வேளையில் அகதிகளின் படகு நடுக் கடலில் கவிழ்ந்ததாக இந்திய அரசாங்கம் அறிவித்தது. அத்தோடு இந்திய அரசாங்கம் 15–45க்கும் இடைப்பட்ட இலங்கைத் தமிழர்களுக்கு 'விசா' வழங்குவதையும் நிறுத்தியுள்ளது.

இந்த இரத்தம் தோய்ந்த நிலையிலும் விடுதலைப்புலிகளின

(7-ம் பக்கம் பார்க்க)

**வடக்கு — கிழக்கில் இருந்து இராணுவத்தை அகற்று!**

படிப்பகம்

www.padippakam.com



# 1991 வரவு செலவுத்திட்டம்: வர்க்க யுத்தத்தின் திட்டம்!

யூ. என். பி. அரசாங்கத்தின் 1991ம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீடு ரூ. 6700/– கோடி துண்டுடன் வெளிப்பட்டுள்ளது. செலவாக 13900 கோடி ரூபாவும் வருமானமாக 7200/– கோடி ரூபாவும் கணக்கிட்டுள்ள இவ்வளவு செலவுத்திட்டம் நவம்பர் 15ம் திகதி தலைநீட்டுவதற்கு முன்னரே பெற்றோலியம் பொருட்களின் விலை அதிகரித்துள்ளது.

வடக்கு – கிழக்கில் ஒடுக்கப்படும் தமிழ் மக்களுக்கு எதிரான காட்டுமிராண்டி இனவாத யுத்தத்தினை மன்னார் மாவட்டத்துக்கு விஸ்தரித்துள்ள யூ. என். பி. அரசாங்கம் மறுபுறத்தில் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களின் தொழில் வாழ்க்கைத் தரம், உதவிமானியங்கள் போன்ற உரிமைகளை நாசமாக்கும் யுத்தத்தினை உக்கிரமாக்கும் நடவடிக்கைகளை இந்த வரவு செலவுத்திட்டத்துடன் புதிய கட்டத்துக்கு உயர்த்தியுள்ளது.

நெருக்கடியில் இருந்து தலையெடுக்கும் பொருட்டு உயிர் காக்கும் உதவி' கேட்டு சர்வதேச நாணய நிதியத்துக்கு அக்டோபர் கடைசி வாரத்தில் அரசாங்கம் செய்தி அனுப்பியதாக 'சன்டே டைம்ஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டது. இந்தப் பாரிஸ் கூட்டத்தில் அரசாங்கம் 80 கோடி கோர இருந்தது.' நாட்டில் முன்னொரு போதும் இல்லாத அமைதியின்மையால் கிராமப்புற ஏழைகளுக்கு எதிரான யுத்தத்தில் ஈடுபட்டிருந்த வேளையில் 75 கோடி டாலர்கள் கிடைத்த வித்தில் இம்முறையும் 'உதவி வழங்கும் குழுவிடம் இருந்து உதவி கிடைக்கும் என்ற நம்பிக்கையை மற்றுமோர் முதலாளித்துவ பத்திரிகையாள 'த ஐலன்ட்' வெளியிட்டது.

ஏகாதிபத்திய நெருக்கடியின் ஒரு பாகமாக இலங்கையில் வளர்ச்சி கணும் முதலாளி வர்க்கத்தின் நெருக்கடி நாளாந்தம் உக்கிரம் கண்ட வேளையில் நிதி அமைச்சர் விஜேதுங்க தலைமையில் சென்ற தூதுக் குழுவுக்கு 'உதவி வழங்கும் குழுவிடம்' இருந்து 105 கோடி டாலர் உதவி கிடைத்தது. இந்த நிதி உதவி 'உலக நாடுகள் தமது ஆட்சியில் கொண்டுள்ள நம்பிக்கையின் வெளிப்பாடு' என ஜனாதிபதி ஜம்பம் அடித்துக் கொள்ளும் அளவுக்கு அரசின் பொருளாதார, அரசியல் நெருக்கடி உக்கிரம் கண்டுள்ளது.

வெளிநாட்டுச் செலாவணி உழைப்பில் முக்கிய பங்கு கொண்டிருந்த ஈராக்குக்கான தேயிலை ஏற்றுமதி. ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பாளர்களின் தடையுத்தரவைத்தொடர்ந்து தடைப்பட்டது. தேயிலைக் கொள்வனவுக்கான பணத்தினைக் திரட்டிக் கொள்ள முடியாமல் ருஷ்யா சந்தையில் இருநது விலகிக் கொண்டுள்ளது. மத்திய கிழக்கு யுத்தத்துடன் மத்திய கிழக்கில் தொழில் புரிவோர் அனுப்பி வந்த வெளிநாட்டுச் செலாவணி வருமானம் தேய்ந்து போய்விட்டது. எண்ணெய் பீப்பாவின் விலை இரண்டு மடங்காக–37 டாலர்களாக அதிகரித்துள்ளது. இந்த அதிகரிப்பினால் ஏற்படும் நஷ்டம் 100 மில்லியன் டாலர்கள் மட்டுமன்றி, இதனால் தேசிய பொருளாதாரத்தில் ஏற்படும் நாசகரமான தாக்க வரலாறு காணாதது. இவை எல்லாவற்றுக்கும் மேலாக அமெரிக்காவிலும் மத்திய கிழக்கிலும் இலங்கையில் தயார் செய்யப்பட்ட ஆடைகளுக்கு இருந்து வந்த வாய்ப்புக்கள் அருகிப் போய் விட்டதாக முதலாளிகள் அறிக்கைகள் வெளியிட்டுள்ளனர்.

தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக யூ.என்.பி, அரசாங்கமும் முதலாளிவர்க்கமும் தயார் செய்யும் உள்நாட்டு யுத்தத்தின் இந்த வரவு செலவுத் திட்டம் முக்கிய பங்களிப்பதாக முன்னரே குறிப்பிட்டோம். அதை மேலும் ஊர்ஜிதம் செய்யவும், தொழிலாளி வர்க்கம் எடுக்க வேண்டிய சுயாதீனமான சோசலிச வேலைத்திட்டத்தின் அவசியத்தினை வலியுறுத்தவும் இந்த 105 கோடி டாலர் எந்த நிபந்தனைகளின் கீழ் வழங்கப்பட்டுள்ளது என்பதை நோக்குவோம். இந்த வர்க்க யுத்தத்தின் ஒரு பாகமாக யூ. என். பி. அரசாங்கம் வடக்கு–கிழக்கில் நடாத்தி வரும் இனவாத யுத்தத்துக்கு தோள் கொடுக்கும் ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் கட்சியின் 'அத்த' பத்திரிகையே அதை வெளியிட்டுள்ளது:

● பால்மா, அரிசி, உரம் மானியங்களை 1990க்குள் முழுமனே அகற்றுதல்.

● இ. போ. ச.வுக்கு வழங்கும் மானியத்தை முழுமனே அகற்றி, புகையிரத சேவைக்கு தரும் மானியத்தை முடிந்த மட்டும் குறைத்தல்.

● அரசாங்கத் துறையில் உள்ள மேலதிக ஊழியர்களை குறைத்தல் விநியோக, வீடமைப்பு, காணி சந்தைபடுத்தல், பொருட்கொள்வனவு திணைக்களங்களை மூடுதல்.

● அரச ஊழியர்கள் ஓய்வெடுக்க வேண்டிய வயதெல்லையை கூட்டுவதோடு முழு ஓய்வூதியம் பெறுவதற்குச் சேவையாற்ற வேண்டிய குறைந்தபட்ச கால எல்லையை கூட்டுதல்.

இந்த வெட்டுக்களின் மறு பாகமாக அரசாங்கம் பாதுகாப்புச் செலவினங்களுக்கென 1178 கோடி ரூபாய்களை ஒதுக்கியுள்ளது. கடந்த வரவு செலவுத்திட்டத்தில் 1000 கோடி ரூபாய்களை ஒதுக்கிய அரசாங்கம் பின்னர் மேலதிக உபமதிப்பீடுகள் மூலம் அதனை 1500 கோடியாக ஒதுக்கி இருந்தது. யுத்த அணிகளை பலப்படுத்தும் பொருட்டு இனவாத அரசாங்கம்ஒதுக்கியுள்ள பணம் இந்நாட்டின் கல்வி, சௌக்கிய சேவைகள் இரண்டுக்கும் ஒதுக்கியுள்ள பணத்தைக்காட்டிலும் 11 கோடி ரூபா அதிகமானது. கல்வி, சௌக்கிய சேவைக்கென முறையே 638, 468 கோடி ரூபாய்களை மட்டுமே தைச்கியுள்ளது.

## சோசலிச வேலைத்திட்டம்

இந்நடவடிக்கைகளுக்கு எதிரான சமசமாஜ–கம்யூனிச நவ சமசமாஜ தலைவர்களின் மோசடி 'ஊழல் ஒழிப்பு,' 'யூ. என். பி எதிர்ப்பு முன்னணி' வேலைத்திட்டங்களுக்குஎதிராக தொழிலாள வர்க்கத்தின் சுயாதீனமான சோசலிச வேலைத் திட்டத்தின் அவசியம் ஏற்பட்டுள்ளது.

● ஏகாதிபத்திய அமைப்புக்கள், வங்கிகளுடனான தொடர்புகளை துண்டித்தல் ● ஏகாதிபத்திய கடன்களை மீளச் செலுத்துவதை நிராகரித்தல் ● ஏகாதிபத்திய சொத்துக்களையும், அடிப்படைத்தொழில்களையும் தொழிலாளர் ஆதிக்கத்தின் கீழ் தேசியமயமாக்குதல் ● வெளிநாட்டு வர்த்தகத்தில் அரசின் ஏகபோகத்தினை நிறுவுதல் ★ ஏகாதிபத்திய வாதிகளும்முதலாளிவர்க்கமும் கூட்டாக உண்டுபண்ணும்அழிவினைத் தடுக்க வேறு மாற்று வழி இல்லை.

யூ. என். பி. அரசாங்கத்தை வெளியேற்றி சோசலிச வேலைத்திட்டத்தினை நடைமுறைப் படுத்தும் சோவியத்துக்களை அடிப்படையாகக் கொண்ட தொழிலாளர் – விவசாயிகள் அரசாங்கத்தினை அமைக்க வேண்டும். இதற்கு தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்டும் அவசியம் ஏற்பட்டுள்ளது.

கிராமப்புற சிங்கள ஏழைகளை நசுக்குவதில் ஈடுபட்டு வந்த அரசாங்கம் இன்று மீண்டும் தமிழர் விரோத இனவாத யுத்தத்தில் ஈடுபட்டுள்ளது இது ஒரு கல்லில் இரண்டு குருவிகளை வீழ்த்தும் நடவடிக்கையாகும. தமிழ் தேசிய இனத்தினை நசுக்கும் அதே வேளையில் தொழிலாளர்களையும் ஏழைகளையும் துரோகத் தலைவர்களைக் கொண்டு யுத்தத்திற்கு தோள்கொடுக்கச் செய்யும் செயலானது துரோக நடவடிக்கையாகும். இதற்கு எதிராக தமிழ் மக்களை மீண்டும சமரசத்துக்குதள்ளும் விடுதலைப் புலிகள் தலைமையின் துரோகத்துக்கு மாறாக தமிழ் ஈழம்–இலங்கை சோசலிச குடியரசு ஒன்றியத்தினை–அதாவது தொழிலாளர் – விவசாயிகள் அரசாங்கத்துக்குப் போராட வேண்டும். நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்துடன் இணைதல் இப்போராட்டத்தின் வெற்றியை உறுதி செய்யும்.

# வீ.பி.சிங் வீழ்ச்சி...

(1–ம் பக்கத் தொடர்ச்சி)

சம் தொழிலாளர்கள் வேலையற்றோர் அணியில் நாளாந்தம் சேர்ந்தபடியுள்ளனர்.

காலனித்துவ, அரைக்காலனித்துவ நாடுகளில் தேசிய முதலாளி வர்க்கத்துடன் தோளில் கைபோட்டபடி முதலாளித்துவம் அல்லாத பாதையில்' பயணம் செல்வதுபற்றிய ஸ்டாலினிஸ்டுகளதும் சீர்திருத்தவாதிகளதும் பயங்கர தப்பாசைகளுக்கு எதிராக 1940பதுகளில்இருந்தே இந்திய போல்ஷிவிக் — லெனினிஸ்ட் கட்சியின் ட்ரொட்ஸ்கிஸ்டுகள் போராடி வந்தனர். இந்த வரலாற்றுப் போராட்டத்தின் தொடர்ச்சியாக நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு தனது முன்னோக்கில் (1988) இந்தியா பற்றி கூறிடதாவது:

## முன்நோக்கு

''1947ல் இந்தியா துண்டாடப்பட்டமை, தேசிய முதலாளித்துவம் ஏகாதிபத்தியத்துடன் கூட்டுச் சேர்ந்து, ஜனநாயக தேசிய போராட்டத்தினைக் கருச்சிதைத்ததுடன் அடையாளமாயிற்று. இந்தப் பாணி அதனையே மீண்டும் மீண்டும் இடம் பெறச் செய்தது. ஆயுதப் போராட்டத்தின் தலையீட்டில் நேரடி காலனித்துவ ஆட்சி முடிவுற்ற அங்கெல்லாம் தேசிய முதலாளித்துவத்தினால் காலனித்துவத்தின் கசப்பான மரபுகளையும் பொருளாதார பின்னடைவுகளையும் இல்லாமற் செய்ய முடியவில்லை. ஏகாதிபத்தியத்தின் பொருளாதார குரல்வளை விடுபட முடியாத வகையில் நெரிக்கப்பட்டுக் கொண்டிருப்பதானது, குறைவளர்ச்சி நாடுகள் என அழைக்கப்படும் நாடுகள், தப்பமுடியாத கடன் பளுவில் இருப்பதில் காணமுடிகிறது. பின்தங்கிய நாடுகளின் மக்கள் தொகையின் பல்வேறு தேசிய இனங்களுக்கிடையில் சமத்துவத்தை ஏற்படுத்துவதற்கு மாறு" இன, மொழி மற்றும் மத ரீதியான குரோதங்கள் திட்டமிட்டு வேண்டுமென்றே தூண்டிவிடப்படுகின்றன. சுயநிர்ணய உரிமை மறுப்பின் வெளிப்பாடே இனவாதம், படுகொலைக்கான ஏற்பாடுகளும் மற்றும் அரச ஒடுக்குமுறைகளாகும்''

(உலகமுதலாளித்துவ நெருக்கடியும், நான்காம் அகிலத்தின் பணிகளும்—பக்கம் 40)

கடந்த 43 வருட ஆட்சிக் காலத்துள் இந்திய தேசிய முதலாளி வர்க்கம் ஜனநாயகப் புரட்சியின் எந்தவொரு பணியையும் தீர்த்து வைப்பதற்கு பதிலாக பிரச்சினைகளை மேலும் மேலும் சிக்கலாக்கியுள்ளது; இன, மதக் குழுக்களுக்கிடையேயான மோதுதல்களும், இரத்தக் களரிகளும் இந்திய ஆளும் வர்க்கத்தின் திட்டமிட்ட தலையீட்டின் வெளிப்பாடுகளே என்பதை வீ. பி. சிங். அரசாங்கத்தின் கடைக் காலத்தில் அயோத்தி, தொழில் ஒத்த.. [illegible] இடம் பெற்ற இரத்தக் களரிகள்நன்கு கட்டிக் காட்டின.

இந்தியாவினுள் இன்று வெடித்துள்ள புரட்சிகரநெருக்கடி நிலைமையினுள் தொழிலாள வர்க்கத்தின் சுயாதீனமான வேலைத்திட்டத்தின் அடிப்படையில் தொழிலாளர் — விவசாயிகள் அரசாங்கத்தினை அமைப்பதற்குப் பதிலாக முதலாளித்துவக்கட்சிகளுடன் பிற்போக்கு கூட்டுக்களில் இறங்கும் இந்திய கம்யூனிச, மார்க்சிச கம்யூனிச கட்சித் தலைவர்களின் நிலைப்பாடு — ஆளும் வர்க்கத்தின் இராணுவ சர்வாதிகாரத்துக்கான கால அவகாசத்தினை வழங்குவதாகும் இந்த எதிர்ப்புரட்சிநிலைப்பாட்டுக்கு எதிராக இந்தியத் துணைக்கண்டத்தில் ஐக்கிய சோசலிசக் குடியரசினை அமைக்கப் போராடும் ட்ரொட்ஸ்கிச இயக்கமான சோசலிசத் தொழிலாளர் கழகத்தினை புரட்சிக் கட்சியாக கட்டி எழுப்புதல்அவசியம். இன்றைய நெருக்கடிக்கான புரட்சிகர வேலைத்திட்டத்திற்குப் போராடுபவர்கள் அவர்களே.

★ சிறப்புக் கட்டுரை 3ம் பக்கம்

சோசலிச புரட்சியின் உலகக் கட்சியை கட்டி எழுப்புங்கள்!

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் சேருங்கள்

பெயர் : ———————————

முகவரி : ———————————

கழகத்தைப் பற்றி மேலும் விபரங்கள் பெற நிரப்பிய இப்பத்திரத்தை அனுப்ப வேண்டிய முகவரி :
தேசிய செயலாளர்,
புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்
இல : 90, 1 – ஆவது
மாளிகாகந்தை ஒழுங்கை
கொழும்பு – 10.

www.padippakam.com



# வீ. பி. சிங் அரசாங்கத்தின் நெருக்கடி உக்கிரமடைகிறது!

விஜே டயஸ்

1947ம் ஆண்டில் இந்தியாவில் சுதந்திர அரசு எனப்படுவதைத் திணித்த காலப்பகுதியில் இந்தியத் துணைக் கண்டத்தில் அடிமுதல் நுனிவரைகட்ட வீழ்த்து விடப்பட்ட இனவாத மோதுதல்கள் கட்டுக்கடங்காது செல்லும் நிலையில் மதச் சார்பு மோதுதல்கள் இன்று இந்தியா பூராவும் பற்றிப் படர்ந்துள்ளது.

பின்தங்கிய சாதி, குல மக்களுக்கு அரசாங்க நிறுவனங்களின் வேலை வாய்ப்புக்களில் நூற்றுக்கு 50%த்தினை ஒதுக்கும் வி. பி. சிங்கின் தேசிய முன்னணி அரசாங்கத்தின் தீர்மானம் வெளியானதைத் தொடர்ந்து கடந்த இரண்டு மாதங்களில் ஏற்பட்ட கிளர்ச்சிகளில் ஆயிரத்துக்கும் அதிகமான உயிர்கள் பலியாகின; பின்தங்கிய மக்கட் குழுக்களுக்குச் சலுகைகள் வழங்குவதற்கு எதிராகத் தூண்டிவிடப்பட்ட பிரச்சாரங்களில் டசின்கணக்கான இளைஞர்கள் தற்கொலை செய்து கொண்டனர். இது அழிவின் ஒரு பக்கமாகும். அரசாங்கத்தின் தீர்மானத்துக்கு ஆதரவாக அமைச்சர்களால் வழங்கப்பட்ட உத்தரவுகளின் பேரில் தூண்டிவிடப்பட்ட இக் கிளர்ச்சிகளில் மாஓவாத குழுக்கள் உட்பட குட்டி முதலாளித்துவ கும்பல்கள் கலந்து கொண்டு பிரயாணிகள் நிறைந்தபுகையிரதங்களுக்கும் தீமூட்டின. இவற்றினால் துடிக்கத் துடிக்க கொல்லப்பட்ட மக்கள், இந்த அழிவுக்குப் பலியானவர்களில் மற்றொரு பிரிவினர்.

இந்தியாவில் இடம் பெற்று வரும் இந்த இன, மத மோதுதல்களும், மக்கட் படுகொலைகளும் இந்தியத் துணைக் கண்டத்தின் ஏனைய அரசுகளான பாகிஸ்தான், பங்களாதேஷ், பர்மாவில் இடைவிடாது இடம் பெற்று வரும் காட்டுமிராண்டி ஒடுக்குமுறையினதும் அடக்குமுறையினதும் உச்சக் கட்டமாகும். இந்த நாசங்கள் தென்முனையில் இலங்கை சிங்கள இனவாத முதலாளி வர்க்கம் தமிழ் மக்களுக்கு எதிராகத் தூண்டிவிட்டுள்ள இனவாத யுத்தத்துக்கும், இராணுவ — பொலிஸ் சர்வாதிகாரத்தை திணிக்கும் இலங்கையில் சிங்கள, தமிழ் முஸ்லீம் தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக நாளாந்தம் திணித்து வரும் அடக்குமுறைக்கும் அழிவுக்குமே இரண்டாந்தரமானவை.

இந்தியத் துணைக் கண்டத்தினை முழுமையாகப் பற்றிப் படர்ந்துள்ள இச்சகல சம்பவங்களும் நிச்சயமாக 1947 — 48 காலப்பகுதியில் ஏகாதிபத்தியவாதிகளுக்கும் தேசிய முதலாளி வர்க்கத்துக்கும் இடையேயான சதிகள் மூலம் திணிக்கப்பட்ட ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ அரசின் முழுப் பிற்போக்கினையும் சுட்டிக் காட்டியுள்ளன 43வருடங்கள் பூராவும் இந்த அரசுகளை தம் பிடியில் கொண்டிருந்த முதலாளித்துவ ஆட்சியாளர்கள் கோடானுகோடி தொழிலாள—ஒடுக்கப்படும் மக்களுள் மேல் வருடாந்தம் உக்கிரம் கண்ட அழிவினை சுமத்தி உள்ளனர். இந்த அரசுகளை தூக்கி வீசி சோசலிச சோவியத் குடியரசு ஒன்றியமாக இணைக் கண்ட ஆட்சியை மறுசீரமைக்கும் பொருட்டு நான்காம் அகிலம் உருவாக்கிய முன்னோக்கின் முற்றிலும் சரியான தன்மை இன்று நன்கு தெளிவாகி உள்ளது.

குட்டி முதலாளித்துவ கும்பல்களைத் தூண்டி விட்டு சாதி மத இன மோதுதல்களை நாடு பூராவும் கிளறிவிட ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ ஆட்சியாளர்கள் முன்வந்துள்ளமை' இந்தியாவினுள் வர்க்கப் போராட்டம் உள்நாட்டுப் போர் மட்டத்துக்கு உக்கிரம் கண்டுள்ளதைச் சுட்டிககாட்டுகின்றது. இங்கு முதலாளித்துவ அமைப்பினைத் தூக்கி வீசி கோடிக்கணக்கான ஒடுக்கப்படும் மக்களின் பாரிய பிரச்சினைகளுக்கு சோசலிசப் புரட்சி மூலம் தீர்வு பெற்றுத்தரக் கூடிய சமூக சக்தியான தொழிலாள வர்க்கத்தினை பிளவுபடச் செய்யவும் இனவாதச் சக்தியில் மூழ்கடிக்கவும், வர்க்கப் போராட்டப் பாதையில் இருந்து தடம்புரளச் செய்யவும் ஆளும் வர்க்கம் தமது முழுப் பலமும் கொண்டு தொழிற்பட்டு வருகின்றது.

இரண்டாம் உலகயுத்தமாக வெடித்த ஏகாதிபத்திய உலக நெருக்கடி நிலைமையின் கீழ் குழிதோண்டிப் புதைக்கக் கூடியதாக இருந்த பிரித்தானிய ஏகாதிபத்திய ஆட்சி, இந்திய முதலாளி வர்க்கத்தின் காந்தி — ஜின்னா தலைமை இரண்டு கோஷ்டிகளாகப் பிரிந்து, இந்து—முஸ்லீம் மத வெறியை தூண்டிவிட்டதன் மூலம் பேணிக்காக்கப்பட்டது. ஸ்டாலினிச இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, இந்தப் பிளவினை வாத்தியமாகக்கொண்டு தேசிய விடுதலைக்கும் சோசலிசப் புரட்சிக்கும்எதிரானதனது துரோகத்தினை இக்கட்டத்தில் புதிய மட்டத்துக்கு உயர்த்தியது. யுத்தத்தின் பின்னர் சுதந்திரத்தின் பேரில் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ ஆட்சி இந்திய தொழிலாள — ஒடுக்கப்படும் மக்கள் மேல் திணிக்கப்பட்டது. இந்திய — பாகிஸ்தான் அரசுகள் ஸ்டாலினிஸ்டுகளின் இந்தத் துரோகத்தின் ஆதரவுடனேயே நிறுவப்பட்டன. இந்தத் துரோகத்துக்கு எதிராக தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களை உலக சோசலிசப் புரட்சி வேலைத் திட்டத்தின் அடிப்படையில் புரட்சிகரமுறையில் அணிதிரட்டப் போராடிய நான்காம் அகிலத்தின் இந்தியத் துணைக் கண்டக் கிளையான போல்ஷிவிக்—லெனினிஸ்ட் கட்சியின் தலைவர்களை பிரித்தானிய ஏகாதிபத்திய பொலிசாரிடம்பிடித்துக் கொடுக்க ஸ்டாலினிஸ்டுகள் உளவு வேலை பார்த்தனர். இதுஉலகமுதலாளித்துவத்தின் சார்பில் ஸ்டாலினிஸ்டுகள் உலக ரீதியில் இழைத்த துரோகத்தின் ஒரு தீர்க்கமான பாகமாகும்.

ஸ்டாலினிஸ்டுகளதும், சமூக ஜனநாயகவாதிகளதும் காட்டிக் கொடுப்பினைப் பாவித்து யுத்தத்தின் பின்னைய காலத்தில் திணிக்கப்பட்ட உலக ஏகாதிபத்திய அமைப்பு இன்று கவிழ்ந்து கொட்டியுள்ளது. 1989ல் கிழக்கு ஐரோப்பா பூராவும் ஒன்றன் பின் ஒன்றாக ஸ்டாலினிச ஆட்சிகள் கவிழ்ந்தமை இதைச் சுட்டிக் காட்டின. இன்று மத்திய கிழக்கு அரபு மக்களுக்கு எதிராக அணுவாயுதம் தாங்கிய மிலேச்ச ஆக்கிரமிப்புக்கு ஏகாதிபத்தியவாதிகள் ஆயத்தமாகி வருகின்றமை மாஸ்கோ — பீகிங் அதிகாரத்துவங்களையும் மற்றும் சகல வகையறாவைச் சேர்ந்த தேசியவாதிகளையும் பாவித்து புதிய உலக அமைப்பு முறையை ஏற்படுத்த ஏகாதிபத்தியவாதிகள் செய்யும் மைாலாகாத்தனமான முயற்சியை சுட்டிக்காட்டுகின்றது.

இந்த உலக நிலைமையின் கீழேயே இந்தியத் துணைக் கண்டத்தில் திணிக்கப்பட்டஏகாதிபத்தியச் சார்பு ஆட்சிகள் அனைத்தினதும் நெருக்கடி முன்னெநபோதும் இல்லாத அபத்தான கட்டத்தினை எட்டியுள்ளது. கடந்த காலப்பகுதியில் இறக்குமதி வரி முதலான பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் ஏகாதிபத்தியவாதிகளுடன் கொடுக்கல் வாங்கல் நடாத்த பின்தங்கிய நாடுகளின் தேசிய முதலாளித்துவ ஆட்சியாளர்களுக்கு இருந்துவந்த சகல வாய்ப்புக்களும் இன்று ஒழிந்து போய் விட்டன. அந்த வாய்ப்புக்களை முழுமையே ஒழித்துக்கட்ட வேண்டும் என்ற முடிவுக்கு வந்துள்ளதாக. ஆயுதம் ஏந்திய வண்ணம்பஹுமாவிலும்மத்திய கிழக்கிலும் பாய்ந்து விழுந்துள்ள ஏகாதிபத்தியவாதிகள் கூறிக் கொண்டுள்ளனர். தேசிய முதலாளித்துவ ஆட்சியாளர்களது கொடுக்கல் வாங்கல்களில் ஸ்டாலினிச அதிகாரத்துவத்திடமிருந்து ஏதேனும் உதவியைக் கடந்த காலத்தில் பெற்றுக்கொள்ள முடிந்தது. இன்று அது முற்றாக அழிந்து போயுள்ளது. ஏகாதிபத்தியவாதிகளின் ஆக்கிரமிப்புக்கு சாஷ்டாங்கமாக விழுந்து ஆதரவு வழங்குவதன் மூலம் இதனை மாஸ்கோ அதிகாரத்துவம் காட்டிக் கொண்டுள்ளது.

## மண்டேல் ஆணைக்குழு

இந்த உலக அரசியல் நிலைமையானது இந்திய ஆளும் வர்க்கத்தின் அவஸ்தையை பன்மடங்கு அதிகரிக்கச் செய்துள்ளது. மண்டேல் ஆணைக்குழு சிபார்சுகளின்படி பின்தங்கிய சாதிக் குழுக்களுக்கு நிவாரணம் வழங்குவதாக அறிவித்ததன் மூலம் வீ. பி. சிங் அரசாங்கம் சாதிக் கலவரங்களை தூண்டிவிட சமிக்கைசெய்தது. அரசாங்கத் துறையில் வேலை வழங்கும் போதும் இந்த ஒடுக்கப்படும் மக்கட் குழுக்களுக்கு இதுவரை காலமும் வழங்கப்பட்டு வந்த நூற்றுக்கு 23% சலுகையை மேலும் நூற்றுக்கு 27%ஆல் அதிகரிப்பதாக அரசாங்கம் அறிவித்தது.



வீ. பி. சிங்

இந்த மண்டேல் ஆணைக் குழு, 1977ல் நியமிக்கப்பட்டது அதன் சிபார்சுகளை அமுல் செய்யும் ஆர்வம் உருவாக ஆளும் வர்க்கத்துக்கு 13 ஆண்டுகள் பிடித்துள்ளது. 13 ஆண்டுகளின் பின்னர் இந்த அவசரம் ஏன்? மண்டேல் ஆணைக்குழுவை நியமனம் செய்யக் காரணமாக விளங்கிய அரசியல் சூழ்நிலையை ஆராய்வது இதற்குப் பதில் வழங்கும்.

இந்த ஆணைக்குழு, இந்திரா காந்தி அரசாங்கத்தினை தோற்கடித்து ஆட்சிப்பீடம் ஏறிய ஜனதா அரசாங்கத்தினால் நியமனம் செய்யப்பட்டது. இந்திரா காந்தி அரசாங்கம் அவசர காலச் சட்டப் பயங்கரவாத ஆட்சியுடன் மக்கள் வெறுப்புக்கு உள்ளாகி 1977ல் ஆட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டது. மூன்று தசாப்தங்களாக தொடர்ந்து ஆட்சியில் இருந்து வந்த காங்கிரஸ் ஆட்சிக்குக் கிடைத்த முதல் தோல்வி இதுவே.

ஜனதா அரசாங்கத்தினை ஆட்சிக்குக் கொணரும் பொருட்டு ஏகாதிபத்தியவாதிகளும் இந்திய ஆளும் வர்க்கமும் செயற்பட்டன. காங்கிரஸ் கட்சியினால் தொடர்ந்து இந்திய தொழிலாள, ஒடுக்கப்படும் மக்கள் புரட்சிகரப் போராட்டத்தில் இறங்குவதைத் தவிர்க்க முடியாது என்பதை புரிந்து கொண்டதன் அடிப்படையில் இதைச் செய்தனர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினதும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினதும் ஆதரவுடன் ஆட்சிக்கு வந்த ஜனதா அரசாங்கம் 'ஜனநாயகத்தை பேணும்' வெற்றுக் கோஷத்துடன் தொழிற்பட்டது. முதலாளித்துவ ஆட்சிக்கு எதிராக வளர்ச்சி கண்டு வந்த மக்கள் இயக்கத்துடன் சாதி, மத மோதுதல்களை தூண்டிவிடும் வேலைத்திட்டமாக இது விழங்கியது. மண்டேல் ஆணைக்குழு, இந்தப் பிற்போக்கு வேலைத்திட்டத்தின் ஒரு பாகமாகவே நியமனம் செய்யப்பட்டது.

ஏகாதிபத்திய வங்கியாளர்களின் வேலைத் திட்டத்தினை அமுல் செய்கையில் தவிர்க்க முடியாதவண்ணம் ஏற்பட்ட மக்கள் எதிர்ப்பினை நசுக்குவதில் ஜனதா அரசாங்கம் வெற்றி காணாததைத் தொடர்ந்து இரண்டரை ஆண்டுகளின் பின்னர் இந்திரா காந்தியின் காங்கிரஸ் அரசாங்கத்தினை ஆட்சிக்குக் கொணர்வதை விட வேறு மாற்றுவழி முதலாளி வர்க்கத்துக்கு இருக்கவில்லை. எனினும் காங்கிரஸ் கட்சி, தேய்ந்து மொட்டையாகி விட்ட ஆயுதம்என்பதை யிட்டுஆளும்வர்க்கம்நனவின்றி இருக்கவில்லை. தொழிலாள வர்க்கத்தின் பொது வேலை நிறுத்தமும் தென்கிழக்கு ஒடுக்கப்படும் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டம் பஞ்சாபில் சீக் மதத்தினரின் கிளர்ச்சிகளும் தொடர்ந்து ஏற்பட்டதால் சவாலுக்குள்ளான காங்கிரஸ் ஆட்சியை இத்தடவை காக்கும் பொருட்டு இந்திரா காந்தியையே ஆளும் வர்க்கம் பலிகொடுக்க நேரிட்டது. 1984ல் இந்தியா பூராவும் தொடுக்கப்பட்ட சீக்கிய எதிர்ப்புக் கொலைகார இயக்கம் சுவாலை விட்டுக் கொண்டிருந்த வேளையில் ராஜீவ் காந்தி ஆட்சி அமைக்கப்பட்டது.

ராஜீவ் காந்தி ஆட்சி இந்திய காங்கிரஸ் கட்சி அரசியல் ஆளுமை ஆட்டம் கண்டு போனதை சுட்டிக்காட்டியது. அதனோடு முதலாளித்துவ பாராளுமன்ற ஜனநாயக முடிவுக்கு வந்து கொண்டுள்ளது என்பதையும் அது குறித்து நின்றது.

## ஆக்கிரமிப்பு

இராணுவ - பொலிஸ் சர்வாதிகாரத்திற்கு மாறிச் செல்லும் பொருட்டு இராணுவத்தின் புகழை உயர்த்த ஈழம் தமிழ் தேசிய இனத்தினரின் விடுதலை போராட்டத்துக்கு எதிராகச் செய்யப்பட்ட இராணுவ ஆக்கிரமிப்பு வெட்கக்கேடாக தோல்வியில் போய் முடிந்தது. இந்நிலையில் காபந்து அரசாங்கத்தினை ஆட்சியில் அமர்த்த ஏகாதிபத்தியவாதிகளும் சகல வகையறாவைச் சேர்ந்த பிற்போக்குச் சக்திகளும், ஸ்டாலினிஸ்டுகளும் ஒரே அணியில் சேர்ந்தனர். இதன் விளைவே. வி. பி. சிங்கின் தேசிய முன்னணி அரசாங்கம். எனினும் அது பிறப்பில் இருந்தே சேடமிழுக்கும் ஆட்சியாக விளங்கியது.

கடந்த நவம்பரில் நிறுவப்பட்ட தேசிய முன்னணி அரசாங்கத்தினுள் நெருக்கடி ஏற்பட பத்தே பத்து மாதங்களே பிடித்தது. துணைப் பிரதமரான தேவிலால் அப்பதவியில் இருந்து வீ. பி. சிங் விலக்க நேரிட்டது அரசாங்கத்தின் வலதுசாரி முண்டான பாரதிய ஜனதா கட்சி அரசாங்கத்

(6-ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com

# "ட்ரொட்ஸ்கி படுகொலையின் 50 ஆண்டு நிறைவை இணைந்து கொண்டுள்ளது"

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் லியோன் ட்ரொட்ஸ்கியின் படுகொலையின் 50வது ஆண்டு நிறைவினைக் கொண்டாடுவது உலகளாவிய ரீதியில் ட்ரொட்ஸ்கிசத்தின் சகாப்தம் — நான்காம் அகிலத்தின் சகாப்தம் ஆரம்பமாகியுள்ளது என்ற அடிப்படையிலாகும் என நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புகசவின் பொதுச் செயலாளர் தோழர் விஜே டயஸ் குறிப்பிட்டார்.

ட்ரொட்ஸ்கி படுகொலையின் 50வது ஆண்டு நிறைவினையொட்டி புகச கொழும்பு பொதுஜன நூலக கேட்போர் கூடத்தில் நடாத்திய பொதுக் கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் இம்மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

## யுத்தத்தினதும் புரட்சியினதும் சகாப்தம்

தோழர் விஜே தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: "சமூக ஜனநாயகத்தினதும் ஸ்டாலினிஸ்டுகளதும் ஆதரவுடன் ஏகாதிபத்தியம் இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் அமைக்கப்பட்ட உலக அமைப்பு வெடித்துச் சிதறிப் போய்விட்டது. புதிய அமைப்பினை உலகத்தில் மீண்டும் கூறுபோடாமல் ஏகாதிபத்தியவாதிகளால் ஏற்படுத்த முடியாது. இந்நிலையில் சகல நாடுகளிலும் வெடித்துள்ள தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களின் போராட்டங்கள் புரட்சிகர உள்ளடக்கத்தைக் கொண்டுள்ளன. இந்த யுகத்தினை உலக யுத்தங்களதும் புரட்சிகளதும் யுகம் என மார்க்சிஸ்டுகள் செய்த மதிப்பீடு, இன்று உலகம் பூராவும் ஆதிக்கம் செய்யும் அரசியல் நிலைமை உருவாகி உள்ளது.

"ஏகாதிபத்தியத்தின் தலைமை சக்தியாக விளங்கிய அமெரிக்க பிரமாண்டமான வர்த்தகப் பற்றுக் குறை கொண்ட நாடாக — கடனாளியாக மாறியமை உலக ஏகாதிபத்தியத்தின் நெருக்கடியை நன்கு சுட்டிக்காட்டுகின்றது. அமெரிக்காவில் போராட்டத்தினுள் தள்ளப்படும் மோட்டார் வாகனத் தொழிலாளர்கள் போக்குவரத்துத் தொழிலாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் இந்த ஏகாதிபத்திய அமைப்பின் நாற்றமடிப்பின் உச்சக் கட்டத்துக்கே முகம் கொடுத்துள்ளனர்.

"இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் அமெரிக்காவின் இந்த ஏகாதிபத்திய ஆளுமையை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்ட தென்—கொரியா போன்ற நாடுகளின் தொழிலாள வர்க்கங்களும் மாணவர்களும் இந்த முழு உலக அமைப்பையும் சவால் செய்யும் விதத்தில் இடைவிடாது போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

"ஏகாதிபத்திய உலக சமபல நிலைமையின் ஒரு பாகமாக ஸ்டாலினிச அதிகாரத்துவ ஆட்சிக்குட்பட்ட கிழக்கு ஐரோப்பிய ஆட்சிகள் கடந்த ஆண்டில் ஒன்றன் பின் ஒன்றாக வீழ்ச்சி கண்டமை, உலக ஏகாதிபத்திய சங்கிலி தொடுவையின், பலவீனமான தொடுவைகள் வெடித்துச் சிதற ஆரம்பித்துள்ளது என்பதைச் சுட்டிக் காட்டின.

"உலகின் பின்தங்கிய நாடுகளைச் சேர்ந்த தொழிலாளர்களும் ஒடுக்கப்படும் மக்களும் தேசிய ஜனநாயக உரிமைகளுக்காகவும் ஏகாதிபத்தியமும் அதன் சரகு தேசிய முதலாளி வர்க்கமும் தம்மீது சுமத்தும் அழிவுகளுக்கும் எதிராகவும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்கள். இது உலக சோசலிசப் புரட்சியுடன் பிணைக்கப்பட்டுள்ளது. லத்தீன் அமெரிக்கா, ஆசியா, மத்திய கிழக்கு, ஆபிரிக்கா ஆகிய மக்களின் எழுச்சியின் அர்த்தம் இதுவே.

"இந்தியத் துணைக் கண்டத்தினுள் துண்டிக்கப்பட்டுள்ள ஒடுக்கப்படும் மக்களின் சிறைக் கூடங்கள் அனைத்தும் எதிராக இந்நிலைமையிலேயே தாக்குதல் இடம் பெற்று வருகின்றது.

"அராபிய எண்ணெய் நிலங்களைக் கொள்ளையடிக்கும் பெருட்டு அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் ஏனைய ஏகாதிபத்தியவாதிகளதும் ஆதரவையும் திரட்டிக் கொண்டு மத்திய கிழக்கு யுத்தத்துக்கு தயாராகின்றது உலக நெருக்கடி நிலைமையின் கீழ் வெறிபிடித்துள்ள ஏகாதிபத்தியத்தின் அவஸ்தை நிலையை இது சுட்டிக் காட்டுகின்றது. ஏகாதிபத்தியம் இந்த யுகத்தில் நிர்மாணிப்பது உலக யுத்தமே. பேரளவிலான அழிவாகும்" என விஜே டயஸ் குறிப்பிட்டார்.

இந்நிலையில் ட்ரொட்ஸ்கிச தலைமையை வலியுறுத்துகையில் தோழர். விஜே கூறியதாவது: "மார்க்சிசத்தினை அபிவிருத்தி செய்து லியோன் ட்ரொட்ஸ்கி முன்வைத்த நிரந்தரப் புரட்சிக் கோட்பாடும் உலக சோசலிசப் புரட்சி வேலைத்திட்டமும் மட்டுமே உலகத் தொழிலாள வர்க்கத்துக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் வெற்றியின் பாதையைக் காட்டும் கோட்பாடும் வேலைத் திட்டமுமாகும். இந்த வேலைத் திட்டத்தின் அடிப்படையில் உலகம் பூராவும் நான்காம் அகிலத்தின அனைத்துலகக் குழுவும் அதன் கிளைகளுமே போராடி வருகின்றன. தொழிலாள வர்க்கத்தினதும் ஒடுக்கப்படும் மக்களதும் அனைத்து போராளிகளும் இந்த உலகக் கட்சியுடன் இணைந்து கொள்ள வேண்டும்.

## 1905 ருஷ்யப் புரட்சி

ட்ரொட்ஸ்கி 26வது வயதில் 1905 ருஷ்யப் புரட்சியின் பீட்டர்ஸ்பேக் சோவியத்தின் தலைவரானார். 1905 புரட்சியின் உத்தியோகபூர்வமான தலைமையை பற்றிப் பேசும் அளவுக்கு அது லியோன் ட்ரொட்ஸ்கியினதும் பீட்டர்ஸ்பேர்க் சோவியத்தினதும் தலைமையாகியது.

"1905 புரட்சியின் படிப்பினைகளையும் பிரச்சினைகளையும் ஆய்வு செய்ததன் அடிப்படையிலேயே ட்ரொட்ஸ்கி நிரந்தரப் புரட்சிக் கோட்பாட்டினை முன்வைத்தார்.

"உலக ஏகாதிபத்திய அமைப்பின் சீரழிவு முதலாம் உலக யுத்தமாக வெடித்த வேளையில் இரண்டாம் அகிலத்தின்



ட்ரொட்ஸ்கி 50 ஆண்டு நிறைவையொட்டி ஒழுங்கு செய்யப்பட்ட புத்தக கண்காட்சியை தோழர்கள் பார்வையிடுகின்றனர்.

இந்த சோவினிச துரோகிகளுக்கு எதிராக பாட்டாளி வர்க்க அனைத்துலகத்துக்காக நின்று வந்த ஒரு சிலருள் லியோன் ட்ரொட்ஸ்கி புகழ் மிக்க தலைவர். அச்சமயத்தில் ட்ரொட்ஸ்கி எழுதிய யுத்த முப்பாட்சியும் பற்றிய பத்திரங்கள் இன்னும் புரட்சிகர முக்கியத்துவத்தினைப் பேணிக் கொண்டுள்ளன.

1917ல் லெனினின் போல்ஷிவிக் கட்சியில் சேர்ந்த ட்ரொட்ஸ்கி அக்டோபர் புரட்சியின் முக்கிய பணிகளை இட்டு நிரப்பினார். அதைப் பொறுத்த மட்டில் அவர் வரலாற்றில் இரண்டாம் இடத்தை வகிப்பது லெனினின் பணிக்கு மட்டுமே.

## ஸ்டாலின்

பின்னர், உலகப் புரட்சியின் முக்கிய எதிரியான ஜோசப் ஸ்டாலின் 1924ல் ட்ரொட்ஸ்கி அக்டோபரில் ஆற்றிய பங்கினை பின்வருமாறு குறிப்பிட்டான்! "மக்கள் கிளர்ச்சியின் நடைமுறை அமைப்பு வேலைகள் அனைத்தும் பீட்ரோகிராட் சோவியத்தின் தலைவர் தோழர் ட்ரொட்ஸ்கியின் நெருக்கமான தலைமையின் கீழ் இடம் பெற்றன. இராணுவம் சோவியத் பக்கம் விரைவில் திரும்பியமைக்கும், மிலிட்டரி புரட்சிக் கமிட்டி அஞ்சாது நடவடிக்கையில் இறங்கியமைக்கும் கட்சி முதலும் முக்கியமாக தோழர் ட்ரொட்ஸ்கிக்கு கடமைப்பட்டுள்ளது என உறுதியாகக் கூற முடியும்".

"அக்டோபர் புரட்சியின் பின்னர் இளம் சோவியத் அரசினைக் காக்கும் பிரமாண்டமான அரசியல் இராணுவ நடவடிக்கைகளில் ட்ரொட்ஸ்கி முக்கிய இடம் வகித்தார். ட்ரொட்ஸ்கி யுத்த ஆணையாளராக செஞ்சேனையைச் சிருஷ்டித்தார். முழு உலக ஏகாதிபத்தியமும் அணிதிரண்டு ஆக்கிரமிப்பு சக்தியை அணி திரட்டி சோவியத் அரசுக்கு எதிராக செயற்பட்ட வேளையில் தொழிலாளர்கள் கிராமப்புற இளைஞர்களைக் கொண்டு நிர்மாணிக்கப்பட்ட செஞ்சேனையை கண்காணிக்க ட்ரொட்ஸ்கி சோவியத்தின் ஒரு கரையில் இருந்து மறு கரைக்குப் பயணம் செய்து இளம் சோவியத் அரசினை பாதுகாத்தார்.

## ட்ரொட்ஸ்கி பற்றி லெனின்

மார்க்சிம் கோர்க்கி தமது நினைவுக் குறிப்புக்களில் லெனினுடனான தமது கலந்துரையாடல் ஒன்றைக் குறிப்பிடுகின்றார். அச்சமயத்தில் லெனினுக்கும் ட்ரொட்ஸ்கிக்கும் இடையே பெரும் கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது என்ற பொய் வதந்தி சோவியத்தின் உள்ளேயும், வெளியேயும் பரந்திருந்தது. இதைப் பற்றி ஆத்திரம் கொதிக்கப்

னுள் மாதிரி எனக் கூறத்தக்க ஒரு இராணுவத்தை அமைக்கக் கூடிய ஒருவரை - ட்ரொட்ஸ்கியை தவிர வேறு ஒரு மனிதனை எனக்குக் காட்ட முடியுமா" எனக் கேட்டார்.

"ட்ரொட்ஸ்கியின் வாழ்க்கையின் அதி உன்னதமான பணி மிகவும் கஷ்டமான நிலைமைகளின் கீழ் நான்காம் அகிலத்தை அமைத்ததே. முதலாம் உலக யுத்தத் தருணத்தில் இரண்டாம் அகிலத்தின் துரோகிகளுக்கு எதிராக பாட்டாளி வர்க்க அனைத்துலகவாத முன்நோக்கினையும், வேலைத்திட்டத்தினையும் காக்கும் பொருட்டு லெனினுடன் அணிதிரள சிம்மர்வால்ட் இடதுசாரிகள் என்ற முறையில் பழைய மார்க்சிஸ்டுகளிடையே விரல்விட்டு எண்ணக் கூடியவர்களேனும் இருந்திருப்பார்கள். ஆயின் 1938ல் ட்ரொட்ஸ்கிக்கு அச்சல வளங்களும் இல்லாது ஒழிந்தன. ஜேர்மனிய வீர கார்ள் லீப்னெக்ட் ரோசா லக்சம்பேர்க் முதலிய அனைத்துலகவாதிகள் லெனினுக்கு கூட்டாக இருந்திருப்பின் ட்ரொட்ஸ்கிபழைய தலைமுறையில் இருந்து ஒருவர் தானும் தமது கூட்டாக அழைக்க இருக்கவில்லை.

## உலகக் கட்சி

ஏன் இந்த நிலை ஏற்பட்டது என்ற கேள்விக்குப் பதிலளிக்கையில் தோழர் விஜே கூறியதாவது:

"அச்சமயத்தில் பழம்மார்க்சிஸ்டுகள் தலைமுறையும் ஸ்டாலினால் உடல் ரீதியாக ஒழித்துக்கட்டப்பட்டிருந்தது 1923ல் இருந்து ட்ரொட்ஸ்கி தாமே முன்நின்று மூன்றாம் அகிலத்தினுள் இடதுசாரி எதிர்க்கட்சியைக் கட்டி எழுப்புவதன் மூலமும், பின்னர் நான்காம் அகிலத்தைக் கட்டி எழுப்பும் போராட்டத்தினைத் தொடுத்ததன் மூலமும் அணிதிரட்டிய காரியாளர்களையே அடிப்படையாகக் கொள்ள வேண்டியிருந்தது. 1920பதுகளின் நடுப்பகுதியில் இருந்து தொழிலாள வர்க்கத்துக்கு பாரிய தோல்விகளை ஸ்டாலினின் நடவடிக்கைகள் ஏற்படுத்தியதால் நிலைமை மேலும் கஷ்டமாகியது. 1930பதுகளில் ட்ரொட்ஸ்கி சகல கஷ்டங்களுக்கும் மத்தியிலும் மார்க்சிசத்தின் விஞ்ஞானபூர்வமான பலத்தின் அடிப்படையில் புரட்சிகர தொழிலாள வர்க்கத்தின் உலக நிலைமாக — உலக கட்சியாக நான்காம் அகிலத்தினைக் கட்டி எழுப்ப முன்நின்றார்."

## நிரந்தரப் புரட்சி

லெனின் 1917 ஏப்ரல் 04ம் திகதி கட்சி மகாநாட்டில் நிகழ்த்திய உரைக்கு ட்ரொட்ஸ்கி அளித்த முக்கியத்துவத்தினைச் சுட்டிக் காட்டிய தோழர் விஜே 'புரட்சி முதலாளித்துவப் புரட்சி அது முதல் கட்டம் யுத்தமும் நடக்கிறது என்றெல்லாம் கோணங்கித்தனமான பேச்சுக்கள் இடம் பெறுகின்றன. நாம் ஆட்சியை கைப்பற்று

படிப்பகம்

www.padippakam.com



# ட்ரொட்ஸ்கிசத்தின் தசாப்தத்தின் ஆரம்பத்துடன்

ரீதியிலும், நனவான முறையிலும் தயார் இல்லாததே: இதனை நாம் நேரடியாக மக்களுக்கு கூறி வைக்க வேண்டும்'' என்ற லெனினின் பேச்சினை ட்ரொட்ஸ்கி 'ருஷ்யப் புரட்சியின் வரலாற்றில்'' பொறித்து வைத்துள்ளதை விஜே நினைவு கூர்ந்தார்.

''ட்ரொட்ஸ்கி, முன்னேறிய பின்தங்கிய நாடுகளின் தொழிலாள வர்க்கத்தின் போராட்டத்தினை ஒரே உலகப் புரட்சியின் சக்திகளாகக் கொண்டே நிரந்தரப் புரட்சிக் கோட்பாட்டினை விரிவுபடுத்தினார். சிறப்பாக அன்று முன்னேறிய நாடாக விளங்கிய ஜேர்மனியினுள் பாசிசம் எழுச்சிபெறும் நிலைமையைத் தோற்கடிக்கும் போராட்டத்தின் மத்தியில் ட்ரொட்ஸ்கி, ஜேர்மனி உலக நிலைமையின் திறவுகோல் எனக் குறிப்பிட்டார்.

''ஜனநாயக'' ஏகாதிபத்தியவாதிகளின் உதவியோடு சோவியத் யூனியனினுள் தமது சலுகைகளைப் பேணுவதில் ஈடுபட்ட ஸ்டாலினிஸ்டுகள், மூன்றாம் அகிலத்தின் கட்சிகளை பிரான்சிய, பிரித்தானிய ஆட்சியாளர்களுக்குக் குழுண்டு கொடுக்கச் செய்தனர். இந்த ஏகாதிபத்தியவாதிகளுடனான கூட்டின் பேரில் ஸ்டாலினிஸ்டுகள் மாஸ்கோ பொய் வழக்குகளை அவர்களுக்கு கப்பமாக வழங்கினர்.

''லெனினின் கட்சித் தலைவர்களுள் உயிர்வாழ்ந்தவர்கள் அனைவரும் படுகொலை செய்யப்பட்டனர். உலகப் புரட்சியுடன் ஸ்டாலினிசத்துக்கு எந்தவிதமான தொடர்பும் இடையாது என்பதை ஏகாதிபத்தியவாதிகளுக்கு நிரூபிப்பதே இப்படுகொலைகளின் முக்கிய இலக்காக விளங்கியது.

## ஐக்கிய முன்னணி

1988 நவம்பரில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் முதலாளித்துவ அரசினதும், பாசிச ஜே.வி.பி.யினதும் பயங்கரங்களுக்கு எதிராக விடுத்த தொழிலாள வர்க்க அமைப்புக்களின் ஐக்கிய முன்னணி அமைப்பினை நிராகரித்ததன் மூலம் சமசமாஜ, கம்யூனிச நவசமசமாஜ மற்றும் மத்தியவாதிகள் முதலாளித்துவ அரசின் மேலான விசுவாசத்தினை காட்டிக் கொண்டனர் எனக் கூறிய தோழர் விஜே டயஸ் இந்தக் கூட்டினைப் பலப்படுத்தும் பொருட்டு துரோகத் தலைமைகள் புரட்சியாளர்களுக்கு எதிரான வேட்டையில் ஈடுபடும் ஆபத்தினையிட்டும் அவர் தொழிலாளர்களை எச்சரிக்கை செய்தார்.

ட்ரொட்ஸ்கி படுகொலை செய்யப்பட்ட நிலைமையை பின்நோக்கி ஆய்கையில் தோழர் விஜே கூறியதாவது: நான்காம் அகிலம் நிறுவப்பட்டு இரண்டு ஆண்டுகளுள் ட்ரொட்ஸ்கி படுகொலை செய்யப்பட்ட போதிலும், அவர் மரணமடைவதற்கு முன்னர் புரட்சிகர திடசங்கற்பம் மிக்க காரியாளர்களை நிர்மாணித்தார். ஸ்டாலினிச படுகொலைகள், ஒடுக்குமுறைகள்



பு.க.க செயலாளர் தோழர் விஜே டயஸ் உரை நிகழ்த்துகிறார்.

ஏகாதிபத்திய சிறைக்கூடங்கள், கொலைகள், உலக யுத்தம் என்பவற்றுக்கு மத்தியில் நான்காம் அகிலம் இட்டு நிரப்பிய பணி பெரும் வீரம் நிறைந்தது.

''நான்காம் அகிலத்தின் இளம் காரியாளர்களுக்கு உயிர்த்துடிப்புமிக்க மார்க்ஸ்—எங்கெல்ஸ்—லெனின் பரம்பரையுடன் நீண்ட உறவு கொண்ட தொடுவையைஸ்டாலினிஸ்டுகளும், ஏகாதிபத்தியவாதிகளும் ஒன்றிணைந்து ஒழித்துக் கட்டினர். இந்நிலையில் 1940களில் அவர்கள் நடாத்திய கொள்கை சார்ந்த புரட்சிகரப் போராட்டம் பற்றி நாம் பெருமைப் பட முடியும்.

## புரட்சிகரத் தோற்கடிப்பு

ஏகாதிபத்தியவாதிகளின் முக்கிய காட்டையான அமெரிக்காவினுள் சோசலிசத் தொழிலாளர் கட்சி, அரச இயந்திரத்துக்கு முகம் கொடுத்த வண்ணம், இரண்டாம் உலக யுத்தத்தில் புரட்சிகரத் தோற்கடிப்பு வாதத்தின் அடிப்படையில் போராடியது. அதன் உததியோகபூர்வ தலைமையை பொலிசார் சிறைப் பிடித்து நடாத்திய வழக்கு விசாரணையில், அவர்கள் புரட்சிகர அடிப்படைகள் கொள்கைகளைக் கைவிடாமல் நடந்து கொண்டது உலக தொழிலாள வர்க்கத்துக்கே முன்னுதாரணமாக விளங்கியது. 1944ல் யுத்த நெருக்கடி பிளவுக்கு மத்தியிலும் சோ.தொ. கட்சி தனது மகாநாட்டினை நடாத்தியது ஹிட்லர், முசோலினியின் பாசிச ஒடுக்குமுறைக்கும் அவ்வாறே யுத்தத்துக்கும் எதிராக தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களைப் புரட்சிகரமான முறையில் அணி திரட்டப் போராடியது. இதன் ஒரு தொடுவையாக ஸ்டாலினிஸ்டுகளை சமசமாஜக் கட்சியில் இருந்து நீக்கிய ட்ரொட்ஸ்கிஸ்டுகள் ஏகாதிபத்திய யுத்தத்துக்கு எதிராக இந்திய துணைக் கண்டம் பூராவும் உள்ள தொழிலாள — ஒடுக்கப்படும் மக்களை சோசலிசப் புரட்சி வேலைத்திட்டத்தின் அடிப்படையில் அணிதிரட்டப் போராடியது. போல்ஷிவிக் லெனினிஸ்ட் கட்சி தேசிய முதலாளி வர்க்கத் தலைவர்களுடன் சமரசம் செய்ய மறுத்து கட்சி தடைசெய்யப்பட்டும், தலைவர்கள் கைது செய்யப்பட்ட நிலையிலும் சிறையை உடைத்து வெளியேறி பாட்டாளி வர்க்க புரட்சிச் சம்பிரதாயங்களை முன்னெடுத்துச் சென்றது. இந்தப் புரட்சிகர வீர பாரம்பரியங்களை பிற்காலத்தில் சமசமாஜ தலைவர்கள் இழைத்த மாபெரும் காட்டிக்கொடுப்புக்களால் பூசி மெழுகிவிட முடியாது. இது இந்நாட்டுத் தொழிலாளவர்க்கத்தின் வரலாற்றுடன் இரண்டறக் கலந்துள்ளது.

## பப்லோவாதம்

''இத்துடன் நான்காம் அகிலத்தின் முன்நோக்கினை கரைத்துவிட தலைநீட்டிய திரிபுவாத போக்குக்களை கோட்பாட்டு, நடைமுறை ரீதியில் தோற்கடிக்க ட்ரொட்ஸ்கிஸ்டுகள் போராட நேரிட்டது இதன் பின்னர் நான்காம் அகிலத்தினுள் ஊடுருவிய ஏகாதிபத்தியத்தின் அழுத்தத்தினை பிரதிநிதித்துவம் செய்த பப்லோவாதத்துக்கு எதிரான ட்ரொட்ஸ்கிஸ்டுகளின் போராட்டம் மிகவும் தீர்க்கமானது. 'பப்லோவாதம்' என்ற பேரில் அழைக்கப்படும் இப்போக்கு எந்த பதத்திலும் ஒரு தனிப்பட்ட தோற்றப்பாடு அன்று. இது தொழிலாள வர்க்கத்தின் சுயாதீனமான வேலைத்திட்டத்தினை கைவிட்டு தேசியவாத சந்தர்ப்பவாதத்துக்கு அடிபணிந்தது.

''1953ல் அனைத்துலக குழுவை நிறுவியதன் மூலம் ட்ரொட்ஸ்கிஸ்டுகள் இந்த பப்லோவாதத்தினை ஒழித்துக் கட்டும் போராட்டத்தில் ஈடுபட்டனர். 1982ல் ஆரம்பமாகி 1986 முற்பகுதியில் உச்சக் கட்டத்தை அடைந்த பிரித்தானிய தொழிலாளர் புரட்சிக் கட்சியின் ஓடுகாலிகளுக்கு எதிரான போராட்டம், இதற்கு ஒன்றும் இரண்டாம் தரமானது அல்ல எனவும் அவர் குறிப்பிட்டார்.

## முன்நோக்கு ஊர்ஜிதம்

அனைத்துலகக் குழுவினால் 1988ல் வெளியிடப்பட்ட ட்ரொட்ஸ்கிச முன்நோக்கு உலக அரசியல் அரங்கில் ஏற்பட்ட நிகழ்வுகளால் ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளதைச்சுட்டிக் காட்டிய தோழர் விஜே, சகல வகையிலான தேசியவாத வேலைத்திட்டங்களதும் வங்குரோத்து நாளுக்கு நாள் அம்பலமாகி வருவதாக குறிப்பிட்டார். ஸ்டாலினிஸ்டுகளின் பெரெஸ்ரொய்கா வேலைத்திட்டம் மீண்டும் முதலாளித்துவத்தினை புனருத்தாரணம் செய்யும் வேலைத்திட்டம் எனக் குறிப்பிட்ட அவர் கொர்பச்சேவின் ஆதரவுடன் ஏகாதிபத்தியவாதிகள் எவ்வளவுதான் சோவியத் ருஷ்யாவுக்குள் ஊடுருவினாலும் இவற்றுக்கு எதிராக தொழிலாள, ஒடுக்கப்படும் மக்கள் கிளர்ந்து எழுவதை தவிர்க்க முடியாது எனவும் கூறினார். கிழக்கு ஐரோப்பிய அபிவிருத்திகள், அங்கு ட்ரொட்ஸ்கியின் ஆய்வுகள் தொடர்பான புதிய விழிப்புணர்ச்சியை தொழிலாளர்கள், இளைஞர்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளதோடு இது பப்லோவாத மண்டேலின் தலையீடுகளுக்கு எதிரான அனைத்துலகக் குழுவின் அரசியலுக்கு புதிய பாதையை திறந்துள்ளதாகவும் விஜே சுட்டிக் காட்டினார்.

இந்தியத் துணைக்கண்ட அபிவிருத்திகள் பற்றிக் குறிப்பிட்ட தோழர் விஜே: ''பூட்டோ ஆட்சியைப் பாருங்கள் பாகிஸ்தானில் ஒரு சில மாதங்களே நின்று பிடித்தது. அது பூட்டோ ஆட்சியின் வம்பு தன்மையை காட்டுகின்றது. இந்தியத் துணைக்கண்ட அரசுகளின் வம்பு தன்மையை காட்டுகின்றது. இந்தியாவை வெட்டிக் கொத்தி அமைத்த அந்த அரசு ஒரு இராணுவ சர்வாதிகாரமாக அன்றி — அதாவது காட்டுமிராண்டி ஆட்சியாக அன்றி வேறு விதத்தில் நின்று பிடிக்க முடியாது என்பது தெளிவாகி உள்ளது.

''நேபாளம் ஆகட்டும், பங்களாதேஷ் ஆகட்டும் பர்மா ஆகட்டும் அவ்வாறே இந்தியத் துணைக் கண்டத்தின் பரந்த இந்தியா வாகட்டும் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளி வர்க்கம் தலையெடுக்க முடியாத நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ளது. இன்று பெரேஸ்ரொய்கா வேலைத்திட்டத்தின் கீழ் ஏகாதிபத்தியத்துடன் நேரடியாக கட்டிப் புரளும் ஸ்டாலினிசத்தின் ஆதரவு இல்லாத நிலையில் இந்தத் தேசிய முதலாளித்துவ அரசாங்கங்களின் நெருக்கடி மாதக் கணக்கில் அன்றி, வாரக் கணக்கில் உக்கிரமடைந்து வருகின்றது.

''இதனை நாம் இலங்கையினுள் காண்கிறோம். இந்த ஆட்சியாளர்கள் அடி முதல் தலைவரை இரத்தம் உறிஞ்சும் ஆட்சியாளர்களாகவே வரலாற்றில் தோன்றி வந்துள்ளார்கள். 1948ல் இருந்து இதை நாம் காண முடியும். தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமையை பிடுங்கியதோடு இது ஆரம்பித்தது. சமசமாஜ கம்யூனிச, நவசமசமாஜ தலைவர்கள் என்னதான் முற்போக்கு ஆடைபோர்த்த முயன்றாலும், இந்த முதலாளித்துவ அரசின் இரத்தம் தோய்ந்த தன்மையை மூடி மறைக்க முடியாத அளவுக்கு அது வெளித்தோன்றியுள்ளது. ஒற்றையாட்சி அரசினைக் காக்கும் பொருட்டுச் செய்யும் இரத்தக் களரிகள் மட்டுமன்றி இதற்கு எதிரான தொழிலாள ஒடுக்கப்படும் மக்களின் போராட்டங்களும் இதைத் தெளிவாக்கி உள்ளன.

உலகின் நான்காவது பெரும் இராணுவமெனப்படும் இந்திய இராணுவத்தைக்கொண்டு தன்னிலும் தமிழ் தேசிய விடுதலை இயக்கத்தின் முதுகெலும்பினை உடைக்க முடியாது போனமை இந்தியத் துணைக் கண்ட முதலாளித்துவ ஆட்சிகளின் வரலாற்று நாற்றமெடுப்பினைச் சுட்டிக் காட்டியது. சமசமாஜ — கம்யூனிச — நவசமசமாஜ தலைவர்கள் தமிழ் தேசிய இன தின் விடுதலைப் போராட்டத்திற்கு எதிராகவும் சிங்கள — தமிழ் தேசிய இனவாத இரண்டினதும் தொழிலாள வர்க்கத்தின் வர்க்கப்போராட்டத்துக்கு எதிராகவும் அலுகோசு' வேலைபார்த்தாலும் உலக அபிவிருத்தியினாலும் முதலாளித்துவ நெருக்கடியினாலும் நாடு பூராவும் இந்த ஆட்சிகள் எதிரானபோராட்டம்வளர்ச்சி காண்பது தெளிவாகி உள்ளது.

''நகர்ப்புறத் தொழிலாளர் ஆகட்டும் தோட்டத் தொழிலாளர் ஆகட்டும் தமது தொழில் உரிமைகளைக் காக்கப் போராடுவது திண்ணம். 42000 தோட்டத் தொழிலாளர்கள் போகவந்தலாவையில் தமது தொழில் உரிமையைக் காக்க போராட்டத்தில் குதித்ததன் மூலம் அவர்கள் ''உனது யுத்தத்துக்கு இடையேயும் நாம் எமது உரிமைகளுக்காக எமது போராட்டத்தை முன்னெடுப்போம்'' என்பதைக் காட்டினர்

சீர்திருத்தவாத கட்சிகளின் இத்துரோகத் தலைவர்கள் இன்று இனவாத யுத்தத்துக்கு ஆதரவளிப்பது தற்செயலானதல்ல இவர்களின் இலக்கு அந்த அலுகோசு வேலையின் மூலம் புதிய நிலைமையில் வயிறு வளர்ப்பு வாழ்க்கையில் ஈடுபடுவதே. இத்துரோகிகள் யுத்தத்தினை தமக்கு புதியநிலைமைகளை உருவாக்கிக் கொள்ளும் சந்தர்ப்பமாகக் கருதுகிறார்கள் என ட்ரொட்ஸ்கி தெளிவு படுத்தினார்.

யுத்தத்துக்கு பாராளுமன்றத்தில் நிதி கிடைக்க பிரேரணைகளை நிறைவேற்றி இத்துடன் கூட்டுச் சேர்ந்ததன் மூலம் சமசமாஜ, நவசமசமாஜ மந்தியவாத துரோகிகள் இன்று முதலாளித்துவ அரசு யுத்தத்தில் தோல்வியடையும் நிலையில் அரசாங்கத்துக்கு தமது முழுப்பலத்துடனும் முண்டு கொடுக்க முன்வந்துள்ளனர். இவர்கள் அரசியல் தீர்வு கோரிக்கொண்டு அரசாங்கத்தின் பின்னர் இழுபடுவதன் அர்த்தம் இதுவே.

இந்தப் பிற்போக்கு மோசடிகளுக்கும் தொழிலாள ஒடுக்கப்படும் மக்களுக்கும் இடையே எந்தவிதமான தொடர்பும் இருக்க இடம் வைக்க முடியாது. இந்த இனவாத யுத்தத்தினதும், இன்று முண்டுவரும் வளைகுடா ஏகாதிபத்திய யுத்தத்தினதும் சுமையை தொழிலாள, ஒடுக்கப்படும் மக்கள் மேல் திணிக்கும் முயற்சியை எதிர்க்கும் யூ.என்.பி.யை வெளியேற்றவும் தொழிலாள வர்க்கத்தினை அணிதிரட்டும் பணியை புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் பொறுப்பேற்க வேண்டும்

''இலங்கை — தமிழ் ஈழம் சோசலிச குடியரசினை, இந்தியத் துணைக்கண்ட சோசலிச குடியரசின் ஒரு பாகமாக நிறுவுவதே புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் போராட்ட இலக்காகும். புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் சேர்ந்து உலகக் கட்சியின் பங்காளிகளாக இப் பணிக்குத்தோள் கொடுக்குமாறு தொழிலாளர்கள், கிராமப்புற இளைஞர்கள், அனைவரையும வேண்டுகின்றோம்''

www.padippakam.com



# வீ. பி. சிங் அரசாங்கத்தின் நெருக்கடி....


(3-ம் பக்கத் தொடர்ச்சி)

துக்கு வழங்கும் ஆதரவின் பேரில் பெரும் பங்கு கோரி வருகின்றது. தொழிலாளர்களையும் ஒடுக்கப்படும் மக்களையும் இலவசமாகவே காட்டிக் கொடுத்து, 'ஜனநாயக' அரசாங்கத்தினைக் காக்க முன்வந்துள்ளவர்கள் ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் கட்சிகளின் தலைவர்களே மட்டுமே.

வி. பி. சிங்கின் தேசிய முன்னணி அரசாங்கம், ராஜீவ் காந்தி அரசாங்கம் அமுல் செய்யத் தவறிய ஏகாதிபத்திய வங்கியாளர்களின் திட்டங்களை உரிய வேகத்துடன் அமுல் செய்வதாக வாக்குறுதி தந்து ஆட்சிக்கு வந்தது. 1990 தசாப்தத்தில் தொழில்நுட்பப் புரட்சியை நடாத்துவதாக வாக்குறுதியளித்து ஆட்சிக்கு வந்த ராஜீவ் காந்தி அரசாங்கத்தின் முதல் மூன்று வரவு செலவுத் திட்டங்களை தயாரித்தவர் வி. பி. சிங்கே. இதனால் இந்த வேலைக்கு அவரே மிகவும் பொருத்தமானவர் என ஏகாதிபத்திய வாதிகளும், முதலாளித்துவ ஆட்சியாளர்களும் தெரிவு செய்தனர். இங்கு இன்னமும் தேசிய பொருளாதாரத்தினை பாதுகாப்பது பற்றி பேசி வருபவர்களை அகற்றி, தாது தனதாட்டால் கட்சியை சுத்தகரிக்கும் அவசியம் வி. பி. சிங்குக்கு ஏற்பட்டது. இதன் ஓர் நடவடிக்கையாகவே தேவிலால் அரசாங்கத்தில் இருந்து நீக்கப்பட்டார். அத்தோடு அவரின் ஆதரவாளருக்கு ஒரு எச்சரிக்கையாகவும் அது அமைந்தது. இது 1970பதுகளில் ஜே. ஆர் ஜயவர்தன தமது பொனபாட்டிச ஆட்சிக்காக யூ. என். பி.யை 'சுத்திகரிக்கும்' நடவடிக்கையில் ஈடுபட்டதை நினைவூட்டுகிறது.

ஏகாதிபத்திய நிதி மூலதனத்தின் வேலைத்திட்டத்தினை அஞ்சாமல் நடைமுறைப் படுத்தும் பொருட்டு ஒருவர் தமது கட்சிக்குள் எல்லாம் செய்வதுண்டு ஆனால் அந்த வேலைத்திட்டத்தினை மக்களிடையே நடைமுறைப்படுத்துவதனை அது வரைஜிதம் செய்துவிட்டது. சமசமாஜ—கம்யூனிச — நவசமசமாஜ தலைவர்கள் முதலாளித்துவ ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கூட்டரசாங்கத்தினுள் இருந்து கொண்டு தொழிலாளர் — ஒடுக்கப்படும் மக்களுக்கு இழைத்த துன்பங்கள், ஒடுக்குமுறைகளின் மூலம் வலதுசாரிகளின் பிடிக்குள் தள்ளப்பட்ட பிரமாண்டமான குட்டி முதலாளித்துவத் தட்டினரின் ஆதரவு 1970பதுகளில் ஜே. ஆர். ஜயவர்தனவுக்கு வாய்ப்பாக அமைந்தது. அப்படி இருந்த போதிலும் தொழிலாள வர்க்கத்தினை ஒழித்துக்கட்ட பாராளுமன்ற அதிகாரம் பற்றாக்குறையானது என்பதைப் புரிந்து கொண்ட யூ. என். பி. 1977ல் ஆட்சிக்கு வந்ததும் தனது இலவாத அகலவீச்சில் இறங்கியது. இதன் மூலம் சமசமாஜ — கம்யூனிச — நவசமசமாஜ தலைவர்களின் துரோகத்தையும் கோழைத்தனத்தையும் பயன்படுத்தி, குட்டி முதலாளித்துவ தட்டினரை பாசிஸ — கம்பலாக்கவும் இராணுவ — பொலிஸ் ஆளுமையை கொண்டு தக்கான் சர்வாதிகாரத்துக்குச் செல்லும் இலக்குடன் தொழிற்பட்டது.

— தொடரும்




This pamphlet can be ordered from

**Neue Arbeiterpresse**
Alfredstr. 71
D – 4300 Essen 1
West Germany

*Please pay DM 1,- plus DM 0,50 postage to account no. 2 11 85 – 431, Postgiroamt Essen*

## Kampagne des Bunds Sozialistischer Arbeiter



# Kämpft für 500 neue Leser!


In ganz Deutschland wie in allen Ländern Europas steht die Arbeiterklasse vor ungeheuren Angriffen der Kapitalisten und kapitalistichen Regierungen auf ihre Arbeitsplätze, Löhne und Rechte. Das zentrale Problem der Arbeiterklasse besteht dabei darin, daß die gegenwärtige Führung von SPD und Gewerkschaften diese Angriffe durchsetzen helfen.

Es ist unmöglich, mit einer Gewerkschaft Arbeitsplätze und Löhne zu verteidigen, wenn die Führung der Gewerkschaft „im nationalen Interesse", d.h. im Interesse des nationalen Kapitals die Vernichtung der Arbeitsplätze, Billiglohnarbeit und Stillegungen unterstützt. Deshalb ist es notwendig eine neue Führung in der Arbeiterklasse und in den Gewerkschaften aufzubauen, die sich auf ein internationales sozialistisches Programm stützt.

Jeder Arbeiter und Jugendliche, der diesen Kampf aufnehmen will, braucht die *Neue Arbeiterpresse*. Es ist die einzige Zeitung, die über die Kämpfe der Arbeiterklasse durch eigene Reportagen berichtet, die Zusammenarbeit zwischen sozialdemokratischen und stalinistischen Gewerkschaftsbürokraten aufzeigt und die Arbeiterklasse für ein revolutionäres Programm mobilisiert.

Deshalb ist es dringend notwendig, die *Neue Arbeiterpresse* in der Arbeiterklasse aufzubauen und zu verbreiten. Seit der letzten Ausgabe haben wir 4 neue Leser und damit seit Beginn der Kampagne insgesamt 95 neue Leser gewonnen. Damit sind wir von unserem ursprünglichen Ziel, bis zum Jahresende 500 neue Leser zu gewinnen, noch weit entfernt.

Wir rufen jeden Leser und Unterstützer der *Neuen Arbeiterpresse* dazu auf, dies in den nächsten Wochen zu verändern. Diskutiert mit Freunden und Kollegen über die *Neue Arbeiterpresse* und ihre politischen Analysen. Gewinnt neue Leser und Abonnenten.




## Abonniert die neue ARBEITER PRESSE

### Wochenzeitung des Bunds Sozialistischer Arbeiter

○ **Ich möchte die Neue Arbeiterpresse ab Nr. ....... kennenlernen.**
Für dieses Probeabonnement (10 Ausgaben) zahle ich DM 10,-

○ **Ich möchte die Neue Arbeiterpresse ab Nr. ....... abonnieren**
Für ein Jahr (52 Ausgaben zahle ich
○ DM 65,- (BRD) ○ DM 85,- (Europa)
Für ein halbes Jahr (26 Ausgaben) zahle ich
○ DM 35,- (BRD) ○ DM 45,- (Europa)

Name, Vorname

Straße, Hausnummer

Postleitzahl, Ort

Unterschrift

Ich weiß, daß ich die Abonnement-Bestellung innerhalb von 7 Tagen gegenüber der Neuen Arbeiterpresse widerrufen kann, und bestätige dies durch meine 2. Unterschrift. Zur Wahrung der Frist genügt die rechtzeitige Absendung des Widerrufs.

Datum, Unterschrift

○ **Ich habe DM ............. auf das Postgirokonto 21 185 – 431 in Essen überwiesen, Bankleitzahl 360 100 43**

○ **Ich habe der Bestellung einen Scheck über DM .......... beigelegt**

Bestellungen an Neue Arbeiterpresse,
Postfach 100 105, W-4300 Essen 1
oder: BSA, Postschließfach 139, O-1058 Berlin

படிப்பகம்

www.padippakam.com



# தோட்டங்களில் யுத்த எதிர்ப்பு உக்கிரமடைகிறது

ஹற்றன், டிக்கோயா பிராந்திய இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர்கள் ஒன்று கூடி, யூ. என். பி. அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகள். இயக்கத்துக்கும் இடையே நடைபெறும் யுத்தத்தினை நிறுத்த வேண்டும் எனக் கோரும் பிரேரணையை நிறைவேற்றி உள்ளனர். இந்தப் பிரேரணையை முன்வைப்பதில் எஸ். ராஜு உட்பட இ. தொ. கா. தலைவர்கள் முன்னணியில் நின்றுள்ளதாக தெரிகிறது.

இந்த இரத்தம் தோய்ந்த இனவாத யுத்தத்துக்கு முழு ஆதரவு வழங்கியும், தோட்டங்களில் தொழிலாளர்களின் சம்பளத்தில் யுத்த நிதிக்கு கழிப்பதை அங்கீகரித்தும் இனவாத யுத்தத்துக்கு ஆதரவு தேடி இந்தியா சென்ற முதலாளித்துவக் கட்சிகளின் பிரச்சார ஏற்பாடுகளை கவனிக்க தலைவர்களை தமிழ்நாடு அனுப்பியும் வந்த இ. தொ. கா. துரோகிகள் கும்பலின் நிலைப்பாட்டில் ஏன் இந்த மாற்றம்?

இனவாத யுத்தத்தின் சுமைகள் தம்மீது திணிக்கப்படுவதற்கு எதிராக தோட்டத் தொழிலாளர்கள் உள்ளடங்லான தொழிலாள வர்க்கத்தினிடையே பலத்த எதிர்ப்புக் கிளம்பியுள்ளதே இதற்குக் காரணம். இந்த எதிர்ப்பின் எதிரில் அதற்கு தாமும் ஆதரவளிப்பதாகக் காட்டிக் கொள்ளவே இந்த 'சமாதான' யோசனையை இத்துரோகத் தலைவர்கள் முன்வைத்துள்ளனர்.

பதுளைப் பகுதியைச் சேர்ந்த தோட்டத் தொழிலாளர்கள் தமது சம்பளத்தில் இருந்து யுத்த நிதிக்கு வெட்டப்பட்ட பணம் திருப்பிச் செலுத்தப்படவேண்டும் எனவும், யூ.என் பி. அரசாங்கத்தை வெளியேற்ற பொதுவேலைநிறுத்தத்துக்கு அழைப்பு விடுக்கும்படி கோரியும் ஸ்டாலினிச தலைவர் எம். ஜி. மென்டிசுக்கு பெட்டிசம் அனுப்பியிருந்தனர். இதற்கு இன்னமும் பதில் கிடைக்கவில்லை.

இத்துரோகத் தலைவர்களின் ஆதரவினைப் பாவித்து யுத்த நிதிக்கு பணம் கழிக்கும் யூ. என். பி. அரசாங்கம் மறுபுறத்தில் 45 கோடி ரூபா செலவில் தோட்டத்துறையில் 22500 படையாட்களை குவிக்க உள்ளது. தோட்டங்களில் வேலை செய்யும் நாட்களின் எண்ணிக்கையை வெட்டிக் குறைத்துள்ள அரசாங்கம் காலை 7 மணி முதல் மாலை 5 வரை தொழிலாளர்களை வேலை செய்யும்படி நெருக்கி வருகின்றது இதன் மூலம் காலை 7 மணி முதல் மாலை 1 மணி வரை வேலை செய்ய இருந்து வந்த உரிமை பிடுங்கப்பட்டுள்ளது. மாலை 5 மணி வரை வேலை செய்ய நெருக்கும் சட்ட விதிகளும் தயாராகி வருகின்றன.

ஒடுக்குமுறை முதலாளித்துவ அரசின் யுத்தச் செலவினங்களை கூட்டிக் கொண்டே போகும் யூ. என். பி. அரசாங்கம், மறுபுறத்தில் தோட்டத் தொழிலாளர் அனுபவித்த தீபாவளி முற்பணம் போன்ற சலுகைகளில் கூடக் கைவைத்துள்ளது. இந்த முற்பணத்துக்கு 15 கோடி ரூபா செலவாகுவதால் இதனை வழங்க முடியாது என பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரும், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருமான ரஞ்சன் விஜேரத்ன அடம்பிடித்தார். நீண்ட காலமாக தொழிலாளர்கள் கடும் போராட்டம் மூலம் வென்றெடுத்த உரிமைக்கு குழிபறிப்பதற்கான நிலைமைகளைச் சிருஷ்டிப்பதில் தொண்டமான் — செல்லச்சாமி தலைமை ஈடுபட்டது. விழா முற்பணம் முதலானவற்றை வாங்கவேண்டாம் உலகத்திடம் கடன்படாமல் சுயகௌரவத்துடன் வாழப் பழகிக் கொள்ள வேண்டும்'' என தொண்டமான் தொழிலாளர்களுக்கு ஆலோசனை கூறினார்.

வாழ்க்கைச் செலவுப் புள்ளி 1026 ஐ தாண்டியுள்ள நிலையில் ரூபா. 800/–க்கும் குறைவான சம்பளம் பெறும் தொழிலாளி தொண்டமான் குறிப்பிடும் 'சுயகௌரவத்துடன்' வாழ்வது என்பது பட்டினிக்குப் பலியாகுவதே.

இந்நிலையில் தோட்டப்பகுதிகளில் சுற்றுப்பயணத்தினை மேற்கொண்டுள்ள முன்னணி ஸ்டாலினிச தலைவரான எம். ஜி. மென்டிஸ், யூ. என். பி. அரசாங்கத்துக்கு எதிரான தோட்டத்தொழிலாளர்களின் கொதிப்பினை முதலாளித்துவ சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குச் சாதகமாக திருப்பும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார். 'பாசிச புலிகளை ஒழித்துக்கட்டும்' பதாகையின் கீழ் யூ.என்.பி. அரசாங்கத்தின் காட்டுமிராண்டி யுத்தத்துக்கு ஆதரவளித்த இந்த ஸ்டாலினிஸ்ட் இனவாத யுத்தம் பற்றியோ உலக வங்கியின் தாக்குதல் பற்றியோ மூச்சும் காட்டவேயில்லை.

30 ஆண்டுகளுக்கு பின்னர் (!) தோட்டப் பகுதிக்கு விஜயம் செய்ததாக கூறிய இந்த ஸ்டாலினிசத் தலைவர் கலந்து கொண்ட கூட்டத்தில், டிசம்பர் 7, 8, 9, திகதிகளில் கொழும்பில் நடைபெறவுள்ள தொழிற்சங்க மகாநாட்டுக்கு நன்கொடையாக தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் தேயிலையில் 500 கிராமை வழங்கும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இந்த சமசமாஜ, கம்யூனிச நவசமசமாஜ, இ. தொ. கா. தலைவர்களின் துரோக நடவடிக்கைகளுக்கு எதிராக தோட்டங்களை தொழிலாளர் ஆதிக்கத்தின் கீழ் தேசியமயமாக்கும் சோசலிச வேலைத்திட்டத்திற்குப் போராடும் புதிய தலைமையை தோட்டத் தொழிற்சங்கங்களுள் கட்டி எழுப்ப தொழிலாளர்கள் போராட வேண்டும். முதலாளித்துவ கட்சிகளுடனும், அமைப்புக்களுடனும் தலைமைகள் கொண்டுள்ள சகல உறவுகளையும் துண்டிக்கவும் கோர வேண்டும்.

## யுத்தத்தின் மத்தியிலும் பேச்சுவார்த்தை . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முக்கிய தலைவர்களில் ஒருவரான சதாசிவம் கிட்டு, இலங்கை அரசாங்கத்துக்கு சில யோசனைகளை முன்வைத்துள்ளார். இதனை அவர் இலங்கையின் இலண்டன் உயர் ஸ்தானிகர் ஜெனரல் சேபால அட்டிகலை ஊடாக சமர்ப்பித்துள்ளார். யுத்தம் நடைபெறுகையில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாக வேண்டும் என்பதே அவரின் நிலைப்பாடு.

### பாலசிங்கம்

1987ல் இலங்கை ஆயுதப் படைகளின் காவலில் இருந்த வேளையில் 'சைனட்' அருந்தி தற்கொலை செய்து கொண்ட விடுதலைப் புலிகள் தலைவர்களின் இரண்டாம் ஆண்டு நிறைவுக் கூட்டத்தில் பேசிய அன்டன் பாலசிங்கமும் இதே நிலைப்பாட்டையே முன்வைத்தார். அக்டோபர் 14ல் வல்வெட்டித்துறையில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய அவர் 'யுத்தம் நடந்து கொண்டுள்ள நிலையிலும் பேச்சுவார்த்தை நடாத்தலாம்'' என்றார்.

பாரிய தியாகங்கள் மூலம் தமிழீழ விடுதலைப் போராளிகள் ஈட்டிக் கொண்ட இராணுவ வெற்றிக்கு மத்தியிலும் விடுதலைப் புலிகள் தலைமை முகம் கொடுத்துள்ள பயங்கரமான நெருக்கடியை பாலசிங்கம், கிட்டு தலைமைகளின் அறிக்கைகள் காட்டுகின்றன;

ஏகாதிபத்தியமும், இந்திய மத்திய அரசாங்கம் முதல் தமிழ் நாடு கருணாநிதி அரசாங்கம் வரையிலான சகல பிற்போக்குச் சக்திகளும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தைக் கைவிடச் செய்யும் அழுத்தங்களை கொணர்வதில் ஈடுபட்டுள்ளன. விடுதலைப் புலிகள் தலைமை, இப்பிராந்தியத்தின் ஏகாதிபத்திய, முதலாளித்துவத் தலைவர்களின் ஆதரவுடன் ஒரு சமரச தீர்வை நாடி நிற்கின்றது;

தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு, அம்பாறை, பிராந்திய தலைவர்களான கரிகாலனும், நியூட்டனும் சமீபத்தில் 'சன்டே டைம்ஸ்' (4–11–90) பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் இதனை அம்பலமாக்கி உள்ளனர் ''ஈழத்துக்கு சற்று குறைந்ததையும் நாம் ஏற்க தயார். ஆனால் இது இந்திய மாநிலங்கள் அனுபவிப்பதை விடக் கூடுதலாக இருக்க வேண்டும்'' என நியூட்டன் குறிப்பிட்டுள்ளார். மத்திய அரசாங்கத்தின் தலையீடு இல்லாமல் அனைத்துலக உதவிகளைப் பெறவும், பல்கலைக் கழக வளாகங்கள், புதிய குடியேற்றத்திட்டங்களை கட்டுப்படுத்தவும் தமக்கு அதிகாரம் வேண்டும் எனவும் இவர்கள் குறிப்பிட்டுள்ளனர். இச் சலுகைகள் கிடைப்பின் இனவாத ஒடுக்குமுறை அரசினை நிர்மூலமாக்கும் பணியை கைவிட தமது தயார் நிலையை இவர்கள் வெளிக்காட்டி உள்ளனர்.

இத்தயாரிப்பின் ஒரு தவிர்க்க முடியாத அங்கமாகவே யாழ்ப்பாண, மன்னார் மாவட்டங்களில் இருந்து முஸ்லீம் மக்களை வெளியேற்றும் இவர்களின் நடவடிக்கை அமைந்துள்ளது. தமிழ் ஈழம் பிராந்தியத்தினுள் வரும் ஒடுக்கப்படும் இன, மதக் குழுக்களை ஐக்கியப்படுத்தும் பணிக்கும் தமக்கும் எதுவித தொடர்பும் கிடையாது என்பதை தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர்கள் காட்டியுள்ளனர். இனவாத யூ. என். பி. அரசாங்கத்தினதும், மற்றும் முஸ்லீம் காங்கிரஸினது பிடிக்குள் முஸ்லீம் ஒடுக்கப்படும் மக்களைத் தள்ளும் விடுதலைப் புலிகள் தலைமையின் இந்நடவடிக்கையை வன்மையாகக் கண்டனம் செய்யும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம், ஜனநாயகப் புரட்சியின் பணிகளைப் பூர்த்தி செய்யும் பொறுப்பை தொழிலாள வர்க்கம் பொறுப்பேற்க வேண்டியதன் அவசியத்தினை இங்கு மீண்டும் வலியுறுத்துகின்றது. ஏகாதிபத்திய நெருக்கடியின் உச்சக் கட்டத்தில் முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவக் குழுக்கள் ஏகாதிபத்தியத்தின் எடுபிடிகளாக மாறுவதை பாலஸ்தீனம், நிகரகுவா, தென் ஆபிரிக்க விடுதலைப் போராட்டங்கள் ஏற்கனவே கட்டிக் காட்டியுள்ளன.

## பு. க. க. அங்கத்தவர் தாக்கப்பட்டார்

கண்டி பன்விலை ராஜசிங்க வித்தியாலயத்தில் பணிபுரியும் ஆசிரியரான எம். டி. பிரேமதிலக, அவரின் முன்னைய பாடசாலை உதவி அதிபரான ஹென்றி என்பவரால் தாக்கப்பட்டுள்ளார். அத்தோடு இவரின் சம்பளப் பட்டியலில் இருந்து பலாத்காரமானமுறையில் பாதுகாப்பு நிதிக்கும் பணம் கழிக்கப்பட்டுள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் நீண்ட கால உறுப்பினரான தோழர் பிரேமதிலக புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக உறுப்பினருமாவார். இத்தாக்குதலுக்கும், பாதுகாப்பு நிதி வெட்டுக்கும் எதிராக தலையீடுமாறு அவர் இலங்கை ஆசிரியர் சங்கத் தலைமைப் பீடத்தைக் கேட்டுக் கொண்டுள்ளார்: இந்த தாக்குதலை நடாத்திய ஹென்றி யூ. என். பி. ஆதரவு ஆத்திரமூட்டல் பேர்வழியாவார்.


Zur Politik Gorbatschows im

**Arbeiterpresse Verlag**

**Perestroika gegen Sozialismus**

Der Stalinismus und die Restauration des Kapitalismus in der UdSSR

*von David North*




Dieses Buch erklärt die Bedeutung von Perestroika und Glasnost vom Standpunkt des grundlegenden Konflikts zwischen der stalinistischen Bürokratie und der sowjetischen Arbeiterklasse. Gorbatschows Politik bedeutet weder einen Bruch mit dem Stalinismus noch eine neue Blüte der Sowjetdemokratie, sondern den Gipfelpunkt der stalinistischen Reaktion gegen das revolutionäre Erbe des Oktobers 1917.

Der Autor, David North, ist der nationale Sekretär der Workers League, der trotzkistischen Partei in den Vereinigten Staaten.

110 Seiten, DM 8.-
ISBN 3-88634-039-2
Auch in englisch

Bestellen bei Arbeiterpresse Verlag, Postfach 100 105, 4300 Essen 1
Überweisungen auf Postgirokto. 22 36 52 - 430, Postgiroamt Essen



Nehmt Kontakt auf beim

**BSA-Büro Berlin**

Unser Ostberliner Büro ist telefonisch jeden Dienstag zwischen 19 Uhr und 21 Uhr unter folgender Nummer zu erreichen: 2813069

**BSA-Büro Essen**

Postfach 10 01 05
D-4300 Essen 1
Telefon: 0201/73 35 56


படிப்பகம்

www.padippakam.com



# மத்திய வங்கி நிர்வாகம் அரச வேட்டையை தூண்டிவிட்டுள்ளது

இலங்கை மத்திய வங்கி நிர்வாகம், மத்திய வங்கி ஊழியர் சங்கத்தின் மாஜித் தலைமைக்கு எதிராக அரச வேட்டையை தூண்டிவிடும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

அக்டோபர் 14ம் திகதி ம. வ. ஊ. சங்க மாஜி தலைவர் தோழர். எம். சிரிபண்டா பணி புரியும் அலுவலகத்திற்குநேரில் வந்த இரகசியப் பொலிஸ் அதிகாரி, ம. வ. ஊ. சங்கத்தினால் வெளியிடப்பட்ட ஒரு துண்டுப் பிரசுரம் சம்பந்தமாக வாக்குமூலம் வேண்டும் என்றார். இந்த இரகசிய பொலிஸ் அதிகாரியின் பாய்ச்சல், தோழர். சிரிபண்டாவை இரகசியபொலிஸ் தலைமை அலுவலகத்துக்கு வருமாறு விடுக்கப்பட்ட அழைப்பை அவர் நிராகரித்ததைத் தொடர்ந்து இடம் பெற்றுள்ளது.

தற்சமயம் தாம் மத்திய வங்கி ஊழியர் சங்கத்தில் பதவிவகிக்காததால்இரகசியப் பொலிசுக்கு வாக்குமூலமளிக்க கடமைப்பட்டிருக்கவில்லை என அவர் பொலிசுக்கு அறிவித்தார். இதைத் தொடர்ந்து சங்கத்தின் இன்றைய செயலாளரையும், தலைவரையும் சங்க அலுவலகத்தில் பொலிசார் சந்தித்த வேளையில் இப்பிரச்சினை சம்பந்தமாக கலந்துரையாடாமல் வாக்குமூலம் அளிக்க முடியாது என அவர் மறுப்புத் தெரிவித்தார்.

மத்திய வங்கி ஆளுனர் உட்பட்ட நிர்வாகிகளால் இந்த பொலிஸ் ஆத்திரமூட்டல் தூண்டிவிடப்பட்டுள்ளது. தோழர்கள். எச். எம். பி. ஹேரத்தும், சிரிபண்டாவும் ம. வ. ஊ. சங்க தலைவரும் செயலாளருமாக விளங்கிய வேளையில் இன்றைய இனவாத யுத்தத்தின் அர்த்தத்தை தெளிவுபடுத்தி, பாதுகாப்பு நிதிக்கு ஒரு சதமும் வழங்க வேண்டாம் என தொழிலாள வர்க்கத்தை கோரும் துண்டுப் பிரசுரமொன்றை வெளியிட்டிருந்தனர்.

இத்துண்டுப் பிரசுரம் வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து மத்திய வங்கி நிர்வாகம் இப் பிரசுரம் ம. வ. ஊ. சங்கத்தினதா என்பதை ஊர்ஜிதம் செய்யும்படி சங்க அன்றைய தலைவர் தோழர். எம். சிரிபண்டாவிடம் எழுத்து மூலமும், வாய் மூலமும் கேட்டது. சங்கத்துக்கும் நிர்வாகத்துக்கும் இடையே சேவை உரிமைகள் பற்றிய கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய தொடர்புகள் மட்டுமே இருப்பதால் சங்கத்தின் ஏனைய நடவடிக்கைகளைப்பற்றி பதிலளிக்கச் சங்கம் கடமைப்பட்டிருக்கவில்லை என தோழர் சிரிபண்டா தெரிவித்திருந்தார். இதைத் தொடர்ந்து இந்தத் துண்டுப் பிரசுர விவகாரத்தை இரகசியப் பொலிசாரிடம் ஒப்படைத்ததாக நிர்வாகம் பிரச்சாரம் செய்து வந்தது.

இந்தப் பொலிஸ் பாய்ச்சலுக்கு முன்னதாக மாஜி செயலாளர் தோழர். ஹேரத்தின் 3 சம்பள உயர்வுகளை இரத்துச்செய்த நிர்வாகத்தின் நடவடிக்கை தொடர்பாக சங்கத்தின் புதிய தலைமை ஆளுனருடன் பேச்சுவார்த்தைக்கு சென்றது. அப்போது 'ஹேரத்தை கொண்டு பேசுக இரகசிய பொலிஸ் வந்தது. காப்பாற்றியது நான்'' என ஆளுனர் தெரிவித்துள்ளார்.

இத்தடவை தோழர். சிரிபண்டாவைத் தேடி வந்த இரகசியப் பொலிஸ் அதிகாரி வசம் ம. வ. ஊ. சங்கம் வெளியிட்ட துண்டுப் பிரசுரம், மத்திய வங்கி செயலாளருக்கு சிரிபண்டா எழுதிய கடிதங்கள் உட்பட்ட நிர்வாகத்துடனான கடிதத் தொடர்புகளின் 'போட்டோ' பிரதிகள் இருந்தன. இவை அனைத்தும் மத்திய வங்கி நிர்வாகத்தினாலேயே இரகசியப் பொலிசுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. இவை மத்திய வங்கி நிர்வாகம் முதலாளித்துவ அரசுடனும், அரசாங்கத்துடனும் மிகவும் நெருக்கமாக இணைந்து, இந்த வேட்டையை நடாத்துகின்றது என்பதைத் தெளிவாக்கியுள்ளது. மத்திய வங்கி நிர்வாகத்தின் இந்த கடைகெட்ட செயல் தொழிலாள வர்க்கத்தின் அரசியல் உரிமைக்கு எதிராகத்தொடுக்கப்பட்டுள்ள தாக்குதலாகும்; தொழிற்சங்கப் போராளிகளையும் புரட்சியாளர்களையும் சிறைப்பிடிக்கவும் கொலை செய்யவும் ஆளும் வர்க்கம் செய்யும் தயாரிப்புக்களை இச்சம்பவங்கள் நன்கு தெளிவாக்கி உள்ளன.

மத்திய வங்கி ஊழியர் சங்கமும், மற்றும் தொழிற்சங்கங்களும் இந்த வேட்டைக்கு எதிராக திட்டவட்டமான முறையில் தலையிட வேண்டும் தோழர்கள். எச். எம். பி. ஹேரத்துக்கும் சிரிபண்டாவுக்கும் ஏதேனும் ஆபத்து ஏற்படின் அதற்கு மத்திய வங்கி நிர்வாகம் நேரடியாகப் பொறுப்பேற்கவேண்டும் என குற்றஞ்சாட்ட வேண்டும் இந்த வேட்டைக்கு எதிரான நடவடிக்கைகளை ஆராயத் ம. வ. ஊ. சங்கத்தின் விசேட கூட்டமொன்றினை கூட்டும் பிரச்சாரத்தில் மத்திய வங்கி பு. க. க. இணை ஈடுபட்டுள்ளது.

## எல்பிட்டி திவிதுர தோட்டத் தொழிலாளர்கள்:

# "இனியும் நாம் பொறுக்க முடியாது"

எல்பிட்டிய திவிதுர அரச பெருந்தோட்டத்துறை தொழிலாளர்களைப் பலாத்காரமாகச் சேர்த்துக் கொண்டு இயங்கி வந்த ஜாதிக சேவக சங்கத்தைக் கலைத்துவிட்டு, தொழிலாளர்கள் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் கிளையை அமைத்துள்ளனர்.

தமது உரிமைகளின் பேரில் போராடும் திவிதுர தோட்டத் தொழிலாளர்களுக்குள்ள பேராபத்துக்கு ஆதரவு வழங்கும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம், இ. தொ. கா. தொண்டமான் செல்லச்சாமி தலைமை யூ.என். பி. அரசாங்கத்துடன் கொண்டுள்ள துரோகக் கூட்டுக்கு முகம் கொடுக்க நேரிடும் எனவும் எச்சரிக்கை செய்கிறது.

தொழிலாளர்களின் அங்கத்துவப் பணத்தை வெட்டிக் கொள்ளும் பொருட்டு மட்டும் இயங்கி வந்த ஜாதிக சேவக சங்கத்தின் காலத்தில், தொழிலாளர்களின் உரிமைகளை ஒவ்வொன்றாக வெட்டித் தள்ளிய தோட்ட நிர்வாகத்துக்கு எதிராக தொழிலாளர்கள் எந்த வொரு போராட்டத்திலும் குதிக்க இடம் கிடைக்கவில்லை, தொழிலாள வர்க்க அமைப்புகளின் தலைவர்களின் துரோகத்தின் துணையுடன் நடைமுறைப்படுத்தப்பட்ட யூ. என். பி. கொடுங்கோன்மைத்தனத்தின் மூலம் முன் கூட்டியே இச்சங்கத்தில் இருந்து விலகிச் செல்ல எடுக்கப்பட்ட முயற்சிகள் நசுக்கப்பட்டன.

பல்வேறு கஷ்டங்கள் இருந்த போதிலும் வங்குரோத்து யூ. என். பி. அரசாங்கம் தொழிலாளர்—ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராகத் தொடுத்த உலக வங்கி தாக்குதல்களின் கீழ் தோட்டத்தில் இடம் பெற்ற சுரண்டலுக்கும்ஒடுக்குமுறைக்கும் எதிராகத் தொழிலாளர்கள்இந்நடவடிக்கையை எடுத்துள்ளனர். முன்னர் காலை 6 முதல் மாலை 3 மணி வரையிலான வேலை முறை பின்னர் மாலை 4 மணி வரை நீடிக்கப்பட்டது. இதற்கும் மேலதிகமாக பலாத்காரமாக வேலை வாங்கும் நடவடிக்கைகளும் இடம்பெற்றது. கொழுந்து தொய்யும் தொழிலாளர்களின் வேலை நாட்கள் கிழமைக்கு 3 நாட்களாக குறைக்கப்பட்டதோடு கொழுந்து முறைக் காரதன் காரணமாக 30கிலோ கொழுந்தைத்தன்னும் அவர்களால் தொய்ய முடியாத நிலை ஏற்பட்டது. இதனைச் சாட்டாக வைத்து அரைநாள் சம்பள வெட்டு இடம்பெற்றது இவற்றுக்கு எதிராக தொழிலாளர்கள் போராட்டத்துக்கு ஆயத்தமாகி உள்ளனர். தொழிலாளர்களை பட்டினிக்குள்ளாக்கியுள்ள யூ. என். பி. அரசாங்கம், அவர்களின் அரிசிப் பங்கீட்டையும் பிடுங்கிக் கொண்டுள்ளது.

இத்தோட்டத்தில் 16ஆண்டுகள் சேவை செய்த உமாசெல்வி என்ற பெண் தொழிலாளிக்கு உரிய மகப்பேற்று கொடுப்பனவுகளை நிர்வாகம் வழங்க மறுத்துள்ளது. மகப்பேற்று நிலையை அடைந்ததன் பின்னர் ஒரு நாளும் வேலை செய்யவில்லை என்பதை இதற்குக் காரணமாக காட்டியுள்ளது. உமா செல்வியின் கணவரான சந்திரபாலவும் இவர்களின் பெற்றோரும் தமது உழைப்பினை தோட்டத்தின் உற்பத்திக்கு செலவிட்டுள்ள நிலையிலேயே செல்வியின் உரிமை மறுக்கப்பட்டுள்ளது. இதுசகல தோட்டத் தொழிலாளர்களதும் உரிமை பற்றிய பிரச்சினையைத் தோற்றுவித்துள்ளது.

தொழிலாளர் குடும்பங்களின் கல்வி, சுகாதாரம் சம்பந்தமாக மாற்றாந்தாய் மனப்பான்மை கூட காட்டப்படுவதில்லை. லைன் அறைகளுக்குள் அடைபட்டுக் கிடக்கும் சிறுவர்களின் ஜீவியம் இருள் சூழ்ந்து போயுள்ளது. அதோடு பாடசாலை செல்ல வேண்டிய வயதினை அடைந்த பெரும்பான்மை சிறுவர்கள் கல்வி நடவடிக்கைகளில் இருந்து தள்ளி வைக்கப்பட்டுள்ளார்கள்.

தோட்டத்திலுள்ளதிவிதுர தமிழ் பாடசாலை செல்லும் 128 மாணவர்களுக்கென மொத்தத்தில் 10 சிறுர் கதிரைகளும் 30 மாணவர் கதிரைகளுமே உள்ளன. பாடசாலை அதிபருக்கென ஒழுங்கான இடமேதுவும் இல்லாத இப்பாடசாலையின் கூரை உடைந்து சிதைந்து போயுள்ளது. இவை தொடர்பாக கல்வித் திணைக்களத்துக்கும் உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்ட நூற்றுக் கணக்கான கடிதங்கள் குப்பை கூடையை சென்றடைந்துள்ளன.

தோட்டத் தொழிலாளர்களின் கொடிய எதிரியான யூ. என். பி, உல்லாசப் பயண, சிறு கைத்தொழில் அமைச்சர் எஸ். தொண்டமான் கடந்த செப்டம்பரில் திவிதுரக்கு விஜயம் செய்துள்ளார்: நன்னீர் மீன் வளர்ப்பு சம்பந்தமாகவே அவ்விஜயம் இடம் பெற்றதேயன்றி தொழிலாளர்களின் இந்த அவல நிலைக்கு தீர்வு காண்பதற்கு அல்ல.

ஜாதிக சேவக சங்கத்தினைக் கலைத்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரசில் சேர்ந்த, சேராத சகல தொழிலாளர்களும் சங்கத்தினுள் உள்ள சகல பிற்போக்கு வலதுசாரி தலைவர்களுக்கும் எதிரான போராட்டத்தினைமுன்னெடுத்துள்ளனர். ''நாம் இன்னும் கொஞ்சக் காலமே பார்ப்போம்'' என்ற வசனத்தின் மூலம் தொழிலாளர்கள் துரோகத் தலைவர்களுக்கு எதிரான போராட்டத்தின் அவசியத்தினை வெளிக்காட்டி உள்ளனர்.

இத்தொழிலாளர்கள் இனியும் பொறுக்க முடியாது தொழிற்சங்கத்தினுள் தொழிலாளர்களின் சார்பில் நின்று வருவதாகக் கூறிக் கொண்டு முதலாளித்துவ இனவாத அரசின் சகல தாக்குதல்களுக்கும் தோள் கொடுத்து வரும் இ. தொ. கா. தலைமையை வெளியேற்றி மாற்றுப் புரட்சித் தலைமையை கட்டி எழுப்பும் பொறுப்பினைமுன்னேற்றமான தொழிலாளர்கள் உடன் பொறுப்பேற்க வேண்டும். அத் தொழிலாளர்கள்காலந்தாழ்த்தாது புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்துடன் இணைய வேண்டும் என 'தொழிலாளர் பாதை' வேண்டுகின்றது.

திருத்தம்:

உட்பக்கங்களில் இப்பத்திரிகையின் திகதியை நவம்பர் 9 என திருத்தி வாசிக்கவும்

படிப்பகம்

www.padippakam.com

Koya




# தொழிலாளர் பாதை

விலை 3.00

● மாதமிரு இதழ் இதழ் 398 ● 1990 செப்டம்பர் 1 வெள்ளிக்கிழமை


வாசகர்களுக்கு:

இந்த இதழில் மேலதிகமாக 8 பக்கங்கள் இணைக்கப்பட்டிருப்பதால் விலை 2.-இலிருந்து 3.-ற்கு உயர்த்தப்பட்டுள்ளது.

# யூ. என். பி. இனவாத யுத்தம் வேண்டாம்! சோசலிச குடியரசினை கட்டியெழுப்பு!

முதலாளித்துவ சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் பின்னால் இழுபட்டுச் சென்று ஜனாதிபதி பிரேமதாசாவைச் சந்தித்ததன் மூலம் யூ என். பி. அரசாங்கத்தின் தமிழர் விரோத இனப் படுகொலை யுத்தத்திற்கு மனிதநேய ஆடை போர்க்கவும், நடைமுறையில் ஒன்றிணைந்து இனவாத யுத்தத்தினை உக்கிரமாக்கவும் சமசமாஜ — கம்யூனிச—, நவசமசமாஜ கட்சித் தலைவர்கள் மேற்கொண்டுள்ள படுபிற்போக்கு நடவடிக்கைகளுக்கு எதிராகக் கிளர்ந்து எழும்படி புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தொழிலாள வர்க்க இயக்கத்தினை வேண்டிக் கொள்கின்றது.

தொழிலாள வர்க்கத்தின் பேரில் பேசி வரும் மூன்று கட்சிகளின் துரோகிகளும், செப்டம்பர் 3ம் திகதி 14 முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவ இனவாதக் கட்சிகளுடன் சேர்ந்து, யூ. என். பி. ஜனாதிபதியை சந்தித்தனர். ஜனாதிபதியை சந்தித்த இக்கட்சிகளின் எண்ணிக்கை 17க்கு உயர்ந்தளவுக்கு அவை ஈடுபட்ட பிற்போக்கு பணியின் தன்மையும் அசிங்கமும் வளர்ந்து நிறைந்தது. தொழிலாள - ஒடுக்கப்படும் மக்களிற்கு எதிரான இக்காட்டிக் கொடுப்புக்கு எதிராகப் பொருத்தமான வெறுப்பும், வைராக்கியமும் வளர்ச்சி காண்பது நிச்சயம்

யூ. என். பி. அரசாங்கம் நடாத்தி வரும் இனவாத யுத்தத்தினால் பட்டினி நிலைமைக்குள் தள்ளப்பட்டுள்ள தமிழ் மக்களுக்கு விமானம் மூலம் உணவு பொட்டலம் போடும்படி கேட்கவே இத்துரோகத் தலைவர்கள் ஜனாதிபதியைச் சந்தித்ததாகக் கூறப்பட்டது. இந்த அறிக்கையின் பிற்போக்கு மோசடியினைப் புரிந்து கொள்ள ஒருவருக்கு விசேட புத்திக் கூர்மை வேண்டியதில்லை. நியாய விலை கொடுத்தேனும் ஒரு வேளை உணவினைப் பெறும் உரிமையை நாடு பூராவும் தட்டிப் பறித்துள்ள இந்த அரசாங்கத்தினை வட — கிழ மாகாண பட்டினியைப் போக்க விமானம் மூலம் இலவச உணவுப் பங்கீடு செய்யும்படி துரோகிகள் கேட்டுள்ளார்கள். சிங்கள — தமிழ் தேசிய இனங்கள் இரண்டிலும் தொழிலாளர் — ஏழை மக்களின் ஒருவேளை உணவினை உத்தரவாதம் செய்ய உதவி வந்த அரிசி பங்கீட்டுப் புத்தகத்தை 1970களின் கடைப்பகுதியில் பறிமுதல் செய்த யூ. என். பி. அரசாங்கம் கடந்த 13 வருடகால ஆட்சியில் வாழ்க்கைச் செலவுப் புள்ளியை 270ல் இருந்து 1023ஆக உயர்த்தியுள்ளது என்பதை மட்டும் மனங்கொண்டாலே சமசமாஜ—கம்யூனிச—நவசமசமாஜ தலைவர்கள் சோடிக்கும் இந்த மோசடி. துகிலுரிந்து போகும்

இந்த மோசடியினைப் புரிந்து கொள்ள உதவுகின்றதும் அதிக தூரம் செல்லாததுமான சான்றுகள், இந்தியா ஒரு தொழிலாள — ஒடுக்கப்படும் மக்களின் எதிரி என்பதே. அது தான் இந்திய முதலாளித்துவ அரசாங்கம் 'இரக்க சிந்தனையோடு' 1987ல் விமான உணவுப் பொட்டலங்கள் போட்டது. ஒரு இலட்சம் இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம். இந்த விமான உணவு நிகழ்ச்சியின் பின்னணியிலேயே வந்திறங்கியது. இந்த விமான உணவுப் பொட்டலங்கள் போடுவதற்கும் அவ்வாறே இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக்கும் சமசமாஜ ஸ்டாலினிச— நவசமசமாஜ தலைவர்களும் மற்றும் மத்திய வாதிகளும் அணிதிரண்டு ஆதரவளித்தனர்.

இன்றுள்ள வேறுபாடு என்னவென்றால் தமிழ் மக்களை ஒழித்துக் கட்ட யூ.என்.பி. அரசாங்கம் மேற்கொண்டு வரும் இராணுவ ஆக்கிரமிப்புக்கு மனிதநேய மூடுதிரையின் பின்னணியில் உணவு விநியோக மோசடியை முன்வைப்பதே

தரைமார்க்கமாக தமது தாயகத்தினுள் நுழையும் ஆக்கிரமிப்பாளர்களுக்கு தமிழ்தேசிய விடுதலைப் போராளிகள் பாரதூரமான தோல்விகளை ஏற்படுத்தியுள்ள நிலைமையில் உணவு விநியோகிக்கும் சாட்டில் கண்மண் தெரியாமல் விமானப்படையைக் கொண்டு பொதுமக்கள் மீது தாக்குதலை தீவிரமாக்கும்படி வேண்டும் ஒரு 'அழைப்பாக' வேண்டுகோளை விட இந்த 17 கட்சிகளின் கோரிக்கைக்கு வேறு அர்த்தமே கிடையாது.

சமசமாஜ—கம்யூனிச—நவசமசமாஜ தலைவர்களை அணிதிரட்டிக் கொண்டு எதிர்க்கட்சி எனப்படுவது இனவாத யுத்தத்துக்கு ஆதரவளிக்க முன்வந்தமையை யூ. என். பி. அரசாங்கம் தலைமுழுகிப் போகின்றவன் துரும்பையும் ஆதாரமாகப் பிடிப்பது போல் அணைத்துக் கொண்டு குட்டி முதலாளித்துவ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் வங்குரோத்தினையும் அடி பணிவினையும் பற்றிக் கணக்கிட்டு, குறுகிய காலத்தினுள் 'தேசிய பாதுகாவலர்களாக' மீண்டும் வேஷம் போட யூ. என் பி அரசாங்கமும் படைத்தளபதிகளும் கொண்டிருந்த எதிர்பார்ப்புக்களை தமிழ் விடுதலைப் போராளிகளின் எதிர்த்தாக்குதல்கள் சின்னாபின்னமாக்கியது.

## பு க. க அரசியல் குழுவின் அறிக்கை

(3-ம் பக்கம் பார்க்க)

## விலை உயர்வு

அச்சுத்தாள் விலை உயர்வு உற்பத்திச் செலவு அதிகரிப்புக் காரணமாக தொழிலாளர் பாதையின் விலை ரூபா. 2/- ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

பதிப்பாளர்

# யாழ் - கோட்டையிலிருந்து இராணுவத்தினர் விரட்டி அடிக்கப்பட்டனர்

இனவாத யூ. என். பி. அரசாங்கத்தின் ஆயுதப் படைகள் யாழ் கோட்டை, மண்டைதீவு, அல்லைப்பிட்டி பகுதிகளில் இருந்து சுருட்டிக் கட்டிக் கொண்டு ஓட்டம் பிடித்துள்ளன. விடுதலைப் புலிகள் போராளிகளின் பலத்த தாக்குதல்களால் ஏற்பட்ட இந்த பின்னடிப்பு யூ. என். பி. அரசாங்கத்துக்குப் பெரும் நெருக்கடியை உருவாக்கியுள்ளது.

செப்டம்பர் 26ம் திகதி வெளிநாட்டு தூதுவர்களுடனும் பத்திரிகையாளர்களுடனும் நடாத்திய மகாநாட்டில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன, யாழ் கோட்டையில் இருந்தும் மண்டைதீவில் இருந்தும் பின்வாங்கும் இந்த திட்டத்தினை வெளியிட்டார். யாழ்ப்பாண பெரியாஸ்பத்திரியை மீளப்பற்றி இராணுவ நிர்வாகத்தில் மீண்டும் திறப்பது பற்றிய அரசின் முன்னைய வாய்ப்புக்களைப் பற்றி அவர் மூச்சு காட்டவில்லை.

செப்டம்பர் 26ம் திகதி மாலை 900 படைகள் யாழ் கோட்டையில் இருந்து வெளியேறி ஊர்காவற்றுறைக்கு செல்வதாக யுத்த அமைச்சர் அறிவித்தார். அதோடு யாழ் கோட்டையை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைப்பதாகவும் யாழ் பெரியாஸ்பத்திரியை திறக்கும் வேலையை செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்கும் பொருட்டே இந்த ஏற்பாடுகள் எல்லாம் என அவர் குறிப்பிட்டார்.

வெளிநாட்டுத் தூதுவர்களுடனும் பத்திரிகையாளர்களுடனும் யுத்த அமைச்சர் நடாத்திய மகாநாடு, யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலி போராளிகளின் கைகளால் ஏற்பட்ட பெரும் இராணுவத் தோல்வியை மூடிமறைப்பதற்கான ஒரு கையாலாகாத்தனமான முயற்சியாக விளங்கியது. இதை எந்தவொரு தொழிலாளியும் அதிக சிரமமின்றி புரிந்து கொள்ள முடியும். விடுதலைப் புலிகள் இயக்கத்தினை சுக்குநூறாக்கி, யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றாமல் அங்கிருந்து வெளியேறப் போவதில்லை எனக் கர்ச்சித்து வந்த யுத்த அமைச்சரும் படைத்தளபதிகளும் திடீரென தமது தாளத்தை மாற்றி, யாழ்ப்பாண ஆஸ்பத்திரியை செஞ்சிலுவைச் சங்கத்திடம் கையளிக்கும் 'மனிதநேய' ஏற்பாடுகளைப் பற்றி மட்டுமன்றி குடாநாட்டில் வாழும் 8 இலட்சம் தமிழ் மக்களின் கஷ்டநஷ்டங்கள் பற்றியும் குரல் கொடுத்துள்ளார்கள்!

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் நோக்கத்துடன் செப்டம்பர் 4ல் ஊர்காவற்றுறையில் குவித்த ஆயுதப் படைகள், குழந்தைகள் முதியோர் உட்பட தமது 20 பேரை துண்டுகத்துடிக்க கொலை செய்துள்ளது. அத்தோடு விடுதலைப் போராளிகளின் பதில் தாக்குதலில் ஒடுக்குமுறைப் படைகளைச் சேர்ந்த 100 கொலைப் பட்டாளத்தோடு நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர்

விடுதலைப் போராளிகளதும், தமிழ்ப் பொதுமக்களதும் பிரமாண்டமான எதிர்ப்பின் எதிரில், யாழ் கோட்டையில் இருந்து வெளியேறி, யாழ்ப்பாணத்தினுள் காலடி வைப்பதை படையாட்கள் நிரந்தரமாக

(10-ம் பக்கம் பார்க்க)

**வடக்கு — கிழக்கில் இருந்து இராணுவத்தை அகற்று!**

படிப்பகம்

www.padippakam.com



# யூ. என். பி. இனவாத யுத்தம் வேண்டாம் . . .

இந்த யுத்தம் தொடர்பான சிங்கள தொழிலாள—ஒடுக்கப்படும் மக்களின் கடும் எதிர்ப்பு அரசாங்கத்தினதும் அரசபடைகளதும் மரண நெருக்கடியை நூறு மடங்கு உக்கிரமாக்கியுள்ளது. பொதுமக்களை இந்த யுத்தத்திற்கு தோள் கொடுக்கச் செய்ய சமசமாஜ — கம்யூனிச நவசமசமாஜ தலைவர்கள் இரண்டு மாதங்களுக்கும் மேலாக நடாத்தி வந்த பிரசாரத்தினை நிராகரித்த மக்கள் பகுதியினர் இன்று யுத்தம் தொடர்பான தமது நிலைப்பாட்டினை அணிதிரண்டு காட்ட முன்வந்துள்ளனர். இது முழு ஆளும் வர்க்கத்தினதும் அதன் ஏஜண்டுகளதும் அவஸ்தையை அளவுகணக்கின்றி உயர்த்தும். பாதுகாப்பு நிதிக்கு பணம் கொடுக்க மறுத்து வேலைத்தலங்களுள் வெடித்த எதிர்ப்புக் குரலுடன் யுத்தத்தினையும் நோக்காது தொழிலாளர்கள் வேலைநிறுத்தப் போராட்டங்கள் மூலம் வர்க்கப் போராட்டப் பாதையில் இறங்குவதும் இன்று சேர்ந்து கொண்டுள்ளது.

தமிழ் தேசிய விடுதலைப் போராட்டம், இந்தியத்துணைக் கண்டத்தின் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ அமைப்பினை சிதறடிக்கும் போராட்டத் தொடரின் உச்சியாகியுள்ளது என்பதைப் புரிந்து கொண்டுள்ள வி. பி சிங்கின் தேசிய முன்னணி அரசாங்கமும் அவ்வாறே கருணாநிதியின் தி. மு. க. அரசாங்கமும் யூ. என். பி. இனவாத யுத்தத்துக்கு வழங்கியுள்ள ஆதரவினை பொருட்படுத்தாது இந்திய தொழிலாள — ஒடுக்கப்படும் மக்களிடையே யுத்தத்துக்கு எதிர்ப்பு வளர்ச்சி கண்டு வருகின்றது. விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் காஷ்மீர், பஞ்சாப், அசாம் போராளிகளுக்கும் இடையேயான கூட்டுப் பற்றி ஆளும் வர்க்கங்கள் ஆத்திரமூட்டும் பிரச்சாரங்கள் நடாத்துவருகின்றன. தமிழ் விடுதலைப் போராட்டத்துக்கும் இந்திய மக்களுக்கும் இடையே வளர்ச்சிகண்டு வரும் ஆதரவினால் இந்திய — இலங்கை ஆட்சியாளர்களும், அவர்களின் ஏஜண்டுகளும் பெரும் அவஸ்தைக்கு உள்ளாகி உள்ளனர்.

## கள்ளர் குகை

உலக ஏகாதிபத்திய கள்ளர் குகையின் அடிக்கழுவும் அமைப்பான ஐக்கிய நாடுகள் சபையின் பல்வேறு அமைப்புக்களும் யூ. என். பி. அரசாங்கத்தின் மனிதாபிமானம் பற்றி என்னதான் அத்தாட்சிப் பத்திரங்களை வழங்கினாலும் இந்த ஏகாதிபத்திய சார்பு ஆட்சியாளர்களின் இனவாத காலைக்காரப் போக்குக்கு எதிராக உலகத் தொழிலாள வர்க்கத்தின் எதிர்ப்பு வளர்ச்சி காண்பதை தவிர்க்க முடியாது. நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு, உலகத் தொழிலாள வர்க்கத்தின் முன்னணிப்படை அணி என்ற முறையில் ஒடுக்கப்படும் தமிழ் தேசிய இனத்தின் தேசிய சுயநிர்ணய உரிமையையும் அதன் பேரில் இடம்பெற்று வரும் போராட்டத்தினையும் நிபந்தனையின்றிப் பேணிக்காக்க நின்று வருகின்றது இது உலக தொழிலாள வர்க்க இயக்கத்தின் இந்த அனைத்துலகவாத ஈர்ப்பிற்கு சான்று பகர்கின்றது.

17 கட்சித் தூதுக் குழுவின் தலைவியான சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்க இந்த அபிவிருத்திகள் தொடர்பாக ஆளும் வர்க்கத்தினுள் உருவாகியுள்ள பீதியை பத்திரிகையாளர் மகாநாட்டில் பின்வருமாறு குறிப்பிட்டார்:

''எமது மகாநாட்டு குழு இப் பிரச்சினையைப் பூரணமாக ஆய்வு செய்ததோடு நாம் உணவு விநியோகம் பற்றிய பிரச்சினையை எழுப்ப வேண்டும் எனவும், அவ்வாறு செய்யாவிடின் வெளிநாடுகளில் பிரசாரம் பரவி, மற்றுமோர் விமான உணவு பொட்டலம் போடல்களுக்கு, (இந்திய அரசாங்கம் செய்த) முகம் கொடுக்க வேண்டும் எனவும் கட்சி, கருதியது.

('த சண்டே டைம்ஸ்' — செப்டம்பர் 9)

உரிய முறையில் அவர் ஆளும் வர்க்கத்தின் நிச இலக்குகளை மூடி மறைக்க முயன்றாலும் அதைச் செய்யும் அந்த வேளையில் தமிழ் விடுதலை இயக்கம் உலகம் பூராவும் ஏற்படுத்தும் தாக்கங்கள் பற்றிய மரண பீதியை மூடிமறைப்பதில் அவர் தோல்வி கண்டுள்ளார்.

யூ. என் பி அரசாங்கமும் முதலாளித்துவ ஆளும் வர்க்கமும் முகம் கொடுத்துள்ள இந்த மரண நெருக்கடியில் சமசமாஜ — கம்யூனிச — நவசமசமாஜ கட்சித் தலைவர்கள் இங்ஙனம் குழம்பிப் போய் அரசாங்கத்துக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ளது ஏன்? இதனை விளங்கிக் கொள்ள முதலாளித்துவ ஆட்சியாளர்களுக்கும் இந்த சீர்திருத்தவாத வர்க்கச் சமரச தலைவர்களுக்கும் இடையேயான உறவினை வரலாற்று ரீதியில் புரிந்து கொள்ள வேண்டும். அவ்வாறே இனவாத யுத்த வேளையில் இத்தகைய தலைவர்களின் செயற்பாட்டினை வரலாற்று அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு அளவிட வேண்டும். அதனை விளக்குவதற்கு நாம் லியொன் ட்ரொட்ஸ்கிக்கு கையளிப்போம்: ''சீர்திருத்தவாத அமைப்புக்களுக்கு சிறப்பாக அவற்றின் தலைவர்களுக்கு யுத்தம் எந்தவிதமான தட்டவட்டமான சவாலையும் முன்வைப்பதில்லை யுத்தம் அதற்குப் பதிலாக சீர்திருத்தவாத தலைவர்களுக்கு விசேடமான பதவிகளை வழங்குகின்றது என்பதை அனுபவங்கள் சுட்டிக்காட்டுகின்றது. சமூக ஜனநாயகம், தமது தேசிய முதலாளி வர்க்கம் பக்கம் சாவனிசத்தினால் நன்கு நெருக்கமாக பிணைக்கப்படுகின்றது. பாசிசத்தினால் தமது தொண்டைக் குழி நெரிக்கப்படும் வேளையில் ஏதோ ஒரு விதத்தில் உயிர் பிழைக்கும் பொருட்டு சில வரையறைகளுக்குள் சமூக ஜனநாயகம் நெருக்கப்பட முடியும் அல்லது அங்ஙனம் இடம்பெறுவது கட்டாயம் என்றாலும், யுத்தம் பிரகடனம் செய்யப்பட்டதும்—சோவியத் யூனியனுக்கு எதிரான யுத்தத்தில் கூட - எந்தவொரு நாட்டினதும் சமூக ஜனநாயகம் தமது முதலாளி வர்க்கத்துக்கு எதிராக போராட எந்தவிதமான இடமும் கிடையாது. யுத்தத்துக்கு எதிரான புரட்சிகரப் பிரச்சாரத்தில் சிறப்பானதும் தட்டவட்டமானதுமான இலக்கு சமூக ஜனநாயகத்தின் மோசடியையும் சீர்கேட்டையும் அம்பலப்படுத்துவதாக இருக்க வேண்டும் (ட்ரொட்ஸ்கியின் பத்திரங்கள் 1932)

சீர்திருத்தவாத, வர்க்க சமரச தலைவர்களின் முறைமுறையான அடிபணிவும் பின்வடிப்பும், ஸ்தம்பிதமும் யுத்தம், புரட்சி சந்தர்ப்பங்களிலேயே உச்சக் கட்டத்தினை அடைகிறது. தொழிலாளவர்க்கத்துக்கும் இந்தக் கேவலம் தலைமைகளுக்கும் இடையேயான முரண்பாடுகள் ஆதாளபாதாளம் ஆகுவதும் இந் நிலைமையிலேயே யூ. என். பி. இனவாத யுத்தத்துக்கு முழுமனே தோள்கொடுக்க சமசமாஜ — கம்யூனிச — நவசமசமாஜ தலைவர்கள் எடுத்துள்ள தீர்மானம் இவ்விடயங்கள் அனைத்தையும் ஒரேயடியாக விளங்குகின்றது. புரட்சித் தலைமை மூலம் துரோகத் தலைமையை தூக்கி வீசும், புதிய காலப் பகுதியின் ஆரம்பத்தினை இது குறிக்கின்றது.

யூ. என். பி அரசாங்கம் இப்போது இடைவிடாது தமிழ் மக்களை படுகொலை செய்யத் தொடங்கி உள்ளது. மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் விமானக் குண்டு வீசுவதன் மூலம் நாளாந்தம் நூற்றுக் கணக்கான குடும்பங்களை நாசமாக்கும் அளவுக்கு யுத்தத்தின் காட்டுமிராண்டித்தனம் உக்கிரம் கண்டுள்ளது.

இந்த மக்கள் படுகொலைகளில் இருந்து தப்பும் பொருட்டு, சுமார் ஒரு இலட்சம் தமிழ் மக்கள் ஏற்கனவே இந்திய அகதிகளை முகாம்களைச் சென்றடைந்துள்ளனர்.

இதற்கிடையே இலங்கையினுள் உருவாக்கப்பட்டுள்ள அடிமைகள் முகாமுக்குச் சமமான அகதிகள் முகாம்களில் 9 இலட்சத்துக்கும் அதிகமானோர் உள்ளனர். இவர்கள் தொற்றுநோய்களால் நாளாந்தம் இறந்து வருகின்றனர். அரசாங்க அறிக்கைகளின்படி ஒரு முகாமில் மட்டும் 20 பேர் வயிற்றோட்டத்தினால் இறந்துள்ளனர்

இங்ஙனம் அகதிகள் முகாம்களுக்கு அனுப்பப்பட்டுள்ள 10 இலட்சம் பேர் —முழு ஜனத்தொகையில் கிட்டத்தட்ட 25%க்கு சமமானோர் நாசி ஜேர்மனியில் ஹிட்லரின் ஆட்சியில் யூத மக்கள் முகம் கொடுத்த அளவிலான அட்டூழியங்களுக்கும், படுகொலைகளுக்கும் தமிழ் மக்கள் ஆளாக்கப்பட்டுள்ளனர்

## துரோகிகள்

சமசமாஜ —கம்யூனிச— நவ சமசமாஜ தலைவர்களும் மற்றும் மத்தியவாத துரோகிகளும் 'விடுதலைப் புலிகளின் பாசிசத்துக்கு எதிர்' எனக் கூறி இந்த பிரமாண்டமான காட்டுமிராண்டி நரசிகொலைகளுடன் இணைந்து நிற்கின்றனர்.

தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தின் போராளிகள், யூ. என் பி. இனவாத யுத்தத்தின் காட்டுமிராண்டித்தனத்துக்கு முகம் கொடுத்து, விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் வங்குரோத்துக்கிடையேயும் உயிர்த்தியாகம் செய்து தமது தேசிய உரிமைகளுக்கான போராட்டத்தினை முன்னெடுத்துச் செல்வதன் மூலம் யூ. என். பி. அரசாங்கத்தின் அவஸ்தையையும் துரோக அதிகாரத்துவங்களின் பீதியையும் அதிகரிக்கச் செய்துள்ளனர். தொழிலாள வர்க்கமும் ஒடுக்கப்படும் மக்களும் பிற்போக்கு முதலாளித்துவ ஆட்சிக்கு எதிராகச் செய்யும் உயிர்த்தியாகம் நிறைந்த போராட்டமானது. தொழிலாள வர்க்கத் துரோகத் தலைவர்களையும், குட்டி முதலாளித்துவ தேசியவாதிகளையும் பிற்போக்கு ஆளும் வர்க்கம் பக்கம் மேலும் மேலும் நெருங்கி உறவு கொள்ளச் செய்துள்ளது இத்துரோகத் தலைவர்களின் உயிர் வாழ்க்கை முதலாளித்துவ சொத்து அமைப்புடனும் முதலாளித்துவ அரசுடனும் பிணைக்கப்பட்டு உள்ளதால் இவர்கள் அவற்றை பாதுகாக்க முழுமுயற்சி எடுத்து வருகின்றனர். முதலாளித்துவ ஆட்சியின் காட்டுமிராண்டி வேலைகளுக்கு பாராளுமன்ற எதிர்க்கட்சியின் ஒத்துழைப்பு பாரியது என்பதையும், முதலாளித்துவ ஆட்சியின் பங்காளர்கள் ஆகாமல் முதலாளித்துவ அமைப்பினை கட்டிக் காக்க முடியாது என்பதையும் அவர்கள் அறிவர். உலகம் பூராவும் உள்ள தொழிலாளர் அதிகாரத்துவங்களும், குட்டி முதலாளித்துவ தேசியவாதிகளும் கோர்ப்பரேட்வாத வேலைத்திட்டங்களுக்கு தோள் கொடுப்பதன் மூலமும் ஏகாதிபத்திய, முதலாளித்துவ ஆட்சியாளர்களின் அப்பட்டமான கையாட்களாகுவதன் மூலமும் அவர்களின் துரோகம் இன்று நிர்வாணமாகியுள்ளது.

17 கட்சிகளுடன் சேர்ந்து சமசமாஜ —கம்யூனிச—நவசமசமாஜ கட்சித் தலைவர்கள் ஜனாதிபதி பிரேமதாசவைச் சந்தித்ததன் மூலம் இனவாத யுத்தம் நடாத்தல் குழுவில் தம்மையும் சேர்த்துக் கொள்ளும்படி வேண்டிக்கொண்டுள்ளனர். ஜனாதிபதி பிரேமதாச அந்த 'அலுக்காசு' வரத்தினை மனப்பூர்வமாக வழங்கியுள்ளார். பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னவின் கீழ் இனவாத யுத்த நடவடிக்கைகளை மதிப்பீடு செய்யும் நிரந்தரக் குழுவின் பதவிகளுக்கு இந்த துரோகத் தலைவர்கள் பாய்ந்து கொண்டுள்ளனர்.

ஒரு புறத்தில் ஜே. வி. பி. பாசிசக் குண்டர்களும் மறுபுறத்தில் யூ. என். பி. பொலிஸ் — இராணுவமும் தொழிலாள வர்க்க அமைப்புக்களுக்கும் அதன் போராளிகளுக்கும் கொலைத்தாக்குதல் தொடுத்த சமயத்தில் முதலாளித்துவ அரச படையணிகளின் காக்கியினுள் நுழைந்து பாதுகாப்புத் தேடிய இந்தத் துரோகத் தலைவர்கள் இப்போது யூ என். பி. அரசாங்கத்தினையும் அரச படைகளையும் 'பாசி விடுதலைப் புலிகளுக்கு' எதிரா ஜனநாயகத்தைக் காப்பவர்களாக காட்டி வருகின்றனர்.

சமசமாஜ— கம்யூனிச — நவ சமசமாஜ—மத்தியவாத தலைவர்களால் ஜனநாயக அரசாங்கம் எனத் தூக்கிப் பிடிக்கப்படும் இந்த அரசாங்கத்தின் பொலிசும், இராணுவமும் ஒரு சில மாதங்களுக்கு முன்னர் தென்மாகாணங்களில் மட்டும் சுமார் 1 இலட்சம் இளைஞர்களையும், யுவதிகளையும் கொன்று தள்ளியது என்பதையும் அவர்களை துடிக்கத்துடிக்க டயர் நெருப்பில் சுட்டுப் பொசுக்கியது என்பதையும் எவரும் மறந்திருக்க முடியாது. மேலும் 5 ஆயிரத்துக்கு அதிகமானோர் இன்னமும் சித்திரவதை முகாம்களில் அடைக்கப்பட்டு உள்ளனர், ஆயுட்காலம் பூராவும் இவர்களின் தலைவிதி இதுவேதான் என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் கூறிக் கொண்டுள்ளார்

இந்த படுகொலைகளாலும் சித்திரவதைகளாலும் உருவான பொதுஜன வெறுப்பு, ஆளும் வர்க்கத்தினையும், அரச இயந்திரத்தினையும் சிதறடிக்கும் நெருப்புப் பிளம்பாக வெடிப்பதைத் தவிர்க்கும் பொருட்டு அரசாங்கம் மீண்டும் ஒரு தடவை தமிழர் விரோத இனவாத யுத்தத்தினை கிளறிவிட்டது ஒற்றையாட்சி அரசின் பாதுகாவலர்களாக வேடமிட்டு. சிங்கள—தமிழ் தொழிலாள — ஒடுக்கப்படும் மக்கள் மேல் இராணுவ சர்வாதிகாரத்தினைத் திணிப்பதே அதன் இலக்கு. எனினும் அரச படைகள் வடக்கு—கிழக்கில் முகம் கொடுக்கும் தோல்வி நிலைமைகளின் கீழ் அரசாங்கத்தின் மரண ஓலம் ஓங்கியுள்ளது.

எனவேதான் யுத்தத்தின் நடுவில் தென்மாகாணங்களிலும் நாட்டின் மத்தியில் தோட்டத்துறையிலும் தொழிலாளர்களுக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் எதிரான மிலேச்ச தாக்குதலை விஸ்தரித்துள்ளது. இன்னமும் நாடு பூராவும் டசின் கணக்கான இளைஞர்களின் உயிர்கள் டயர் நெருப்பில் பொசுங்கிக் கொண்டுள்ளன. நடுச்சாமங்களில் வீடுகளுள் பாய்ந்து விழுந்து இளைஞர்களை கடத்திச் செல்வது தினசரிச் சம்பவமாகியுள்ளது. கடத்தப்பட்டவர்களதும் கொலை செய்யப்பட்டவர்களதும் வீட்டு வாசல்களில் பாய்ந்து விழும் 'அலுக்காசு' இராணுவம் அவர்களின் சகோதரிகளையும், அன்னையர்களையும் பலாத்காரமாக கற்பழிக்கின்றது. யூ. என். பி. ஆட்சியுடனும், முதலாளித்துவ அரசுடனும் இந்த ஒடுக்கப்படும் மக்கள் எந்த விதத்திலும் சகவாழ்வு நடாத்த முடியாது.

தொழிலாள வர்க்கத்தினை ஒழித்துக் கட்டும் பொருட்டு இராணுவ — பொலிஸ் திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதை நாத்தாண்டிய கண்ணாடித் தொழிற்சாலைப் போராட்டம் காட்டியுள்ளது படைகள் வேலைநிறுத்தக்காரர்களுக்கு எதிராகப் பாய்ந்து விழுந்துள்ளன. கண்ணாடித் தொழிலாளர்கள் பாதுகாப்பு நிதிக்கு பணம் கொடுக்க மறுத்து வேலைநிறுத்தத்தில் குதித்தனர். வேலைநிறுத்தம் செய்த தொழிலாளர்களை கலைத்துக் கலைத்துத் தாக்கிய பொலிசார் அவர்கள் தங்கியிருந்த இடங்களுக்கும் சென்று தாக்கியுள்ளனர் இரவு வேலை முறைக்கான தொழிலாளர்களை தேடி வீடுகளுக்குச் சென்ற பொலிசார், வேலைநிறுத்தத்தில் பங்கு கொண்

(6-ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com



# லியொன் ட்ரொட்ஸ்கி படுகொலை

## கடந்த இதழின் தொடர்ச்சி

*நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் தத்துவார்த்த 'போர்த் இன்டர்நஷனல்' சஞ்சிகையின் 1990 ஜனவரி — ஜூன் இதழ் வெளியாகியுள்ளது. அதன் ஆசிரியத் தலையங்கம் இங்கு பிரசுரமாகிறது.*

இன்று கிரேம்ளின், பொருளாதார சர்வாதிகார கோட்பாட்டினைப் பேண முயற்சிக்கவில்லை. அது சோவியத் யூனியன் உலகச் சந்தையின் மேலும் ஊழியத்தின் அனைத்துலகப் பகுப்பின் மேலும் சார்ந்திருப்பதை அங்கீகரிக்கின்றது இந்தச் சார்பினைக் காலங்கடந்து அங்கீகரிப்பதன் மூலம் அது முற்றிலும் பிற்போக்கு பண்புகள் கொண்ட முடிவுகளுக்கு வருகின்றது. அதாவது சோவியத் பொருளாதாரத்தினை உலக ஏகாதிபத்திய அமைப்பினுள் இணைப்பதற்கு மத்திய திட்டமிடலையும் தேசியமயமாக்கப்பட்ட கைத்தொழிலையும் எவ்வளவுக்கு வேகமாக முடியுமோ அவ்வளவுக்கு வேகமாக கரைத்துவிட வேண்டும் என்ற முடிவுக்கு வந்துள்ளது. சோவியத் யூனியன் தசாப்தங்களாகக் கடைப்பிடித்து வந்த சர்வாதிகார பொருளாதார வேலைத் திட்டத்தினை துண்டிசதுக் கொள்ள கொர்பச்சேவ் அதிகாரத்துவம் நின்று வருகின்றது. ஸ்டாலினிசத்தின் பாரம் பரியங்களை - முதலாளித்துவத்தின் புனருத்தாரணம் செய்வதை பூர்த்தி செய்து வைக்கவே அது அங்ஙனம் செய்கின்றது. அங்ஙனம் செய்வதன் மூலம் அது ஸ்டாலினிச அதிகாரத்துவம் ஒரு சோசலிசத்துக்கு எதிரான ஒரு எதிர்ப்புரட்சி சாதி என்ற ட்ரொட்ஸ்கியின் வரைவிலக்கணத்தினை முழுமனே ருசுப்படுத்தி உள்ளது.

1917ன் பின்னர் மேற்கு ஐரோப்பாவில் சோசலிசப் புரட்சி தோல்வி கண்டமையானது ஏகாதிபத்தியத்தின் சோவியத் யூனியன் முற்றுகையை நிரந்தரமாக்கியதோடு அதிகாரத்துவ சீரழிவினை நோக்கிய போக்கினையும் பலப்படுத்தியது 1920பதுகளின் நடுப்பகுதியில் ஸ்டாலினிச அதிகாரத்துவம் ஆட்சியை பிடுங்கிக் கொண்டமை, அனைத்துலகத் தொழிலாள வர்க்கத்தின் தோல்விகளுக்கு ஒரு முக்கிய காரணமாகியது. சோவியத் யூனியனின் உள்ளே, அதிகாரத்துவம் தனது சொந்த சடச் சலுகைகளை சோவியத் சமுதாயத்தின் பொருளாதார, சமூக, கலாச்சார அபிவிருத்திகளின் செலவில் கேவலமான முறையில் பேணியதோடு, முன்னேற்றம் முடக்கின்றது. அனைத்துலக அரங்கில் தனது எல்லைகளுக்கு அப்பால் ஒரு வெற்றிகரமான சமூகப் புரட்சி சோவியத் தொழிலாளர்களின் அரசியல் நனவில் ஏற்படுத்தக்கூடிய தாக்கத்தையிட்டு அஞ்சிய ஸ்டாலினிச அதிகாரத்துவம், உலக ஏகாதிபத்தியத்துடனான அதனுடைய இராஜதந்திரக் கூட்டுக்காக தொழிலாள வர்க்கத்தின் நலன்களை முறைமுறையாகக் காட்டிக் கொடுத்தது.

1917 அக்டோபர் புரட்சியின் அடிப்படையில் நிலை நாட்டப்பட்ட சொத்து உறவுகளை ஸ்டாலினிச அதிகாரத்துவம் தனது சொந்த சடச் சலுகைகள் எவ்வளவுக்கு அதில் தங்கியுள்ளதோ அந்தளவுக்கு மட்டுமே அதைப் பேணின என ட்ரொட்ஸ்கி விளக்கினார். நடைமுறையில் இது தேசியமயமாக்கப்பட்ட சொத்துக்களதும், மத்திய திட்டமிடல் பொறிமுறையினதும் நிலையான அரிப்பினைக் கருதியது ஒரு நிச சோசலிச அடிப்படையில் தேசியமயமாக்கப்பட்ட சொத்துக்களை அபிவிருத்தி செய்ய முயல்வதற்கு மாறாக — அது மத்திய திட்டமிடலின் அமைப்புக்கும் அங்கீகாரத்துக்கும் உழைக்கும் மக்களின் பூரணமான பங்குபற்றலை வேண்டிநிற்கின்றது — அதிகாரத்துவம் அரச சொத்தினை சூறையாடுவதற்கு அரசியல் அதிகாரத்தின் மீதான அதன் அளவுகடந்த அதிகார ஏகபோகத்தினை பயன்படுத்தியது ட்ரொட்ஸ்கி விளக்கியது போன்று "முக்கிய உற்பத்தி சாதனங்கள் அரசின் கரங்களில் இருந்து வரும் ஒரு நாட்டில் ஆளும் பிரமுகர்கள் அரசியல் அதிகாரத்தினைக் கைப்பற்றிக்கொள்வதானது அதிகாரத்துவத்துக்கும் தேசத்துடன் செல்வந்தர்களுக்கும் இடையே புதியதும் இதுவரை காலமும் இருந்திராததுமான ஒரு உறவினை சிருஷ்டிக்கின்றது உற்பத்திச் சாதனங்கள் அரசுக்கு சொந்தமாக இருக்கும். ஆனால் அரசு, அதிகாரத்துவத்துக்கு சொந்தமானதாக இருக்கும். இவை இன்னமும் முற்றிலும் புதிய உறவுகளாக இருப்பின் தொழிலாளர்களின் எதிர்ப்புடனோ அல்லது எதிர்ப்பின்றியோ மதிரியவதோடு நீண்ட காலத்தில் அவை பாட்டாளி வர்க்கப் புரட்சியின் சமூக வெற்றிகளைப் பூரணமாகக் கரைத்துவிட இட்டுச் செல்லும்" (காட்டிக் கொடுக்கப்பட்ட புரட்சி')

ட்ரொட்ஸ்கி, இந்த அதிகாரத்துவம் ஒரு புதிய வர்க்கம் 'அரச முதலாளித்துவம்'' என்றவர்களின் வாதங்களை நிராகரித்தார். "இக் கோட்பாடு, உண்மையில் விமர்சனங்களுக்குத் தாக்குப்பிடிக்காது. இந்த அதிகாரத்துவத்திடம் சரக்குகளோ அல்லது வாக்குறுதிச் சீட்டுக்களோ கிடையாது ஒரு நிர்வாக உயர் மட்ட மரபினைப் போல் அதற்குச் சொந்தமான எந்தவொரு விசேட சொத்து உதவுகளில் இருந்தும் சுயாதீனமானமுறையில் இது ஆட்திரட்டப்பட்டு அனுபந்தப்பட்டு, புதுப்பிக்கப்படுகின்றது ஒரு தனிப்பட்ட அதிகாரி அரச கருவிகளின் சுரண்டல் உரிமையை அவனது வாரிசுகளுக்கு மாற்ற முடியாது. அதிகாரத்துவம் அதிகாரத்துஷ்பிரயோக வடிவின் கீழ் தனது சலுகைகளை அனுபவிக்கிறது. அது தனது வருமானத்தை ஒழித்து மறைக்கிறது. அது இருந்து வராத ஒருவிசேட சமூகக் குழுவாக பாசாங்கு செய்கிறது. தேசிய வருமானத்தில் இருந்து அது சொந்தமாக்கிக் கொள்ளும் பெரும் பங்கு சமூக ஒட்டுண்ணிப் பண்பு கொண்டது இவை எல்லாம் அதன் அதிகாரத்துவத்தின் பூரணத்துவம், அதனை மூடிமறைக்கும் முகஸ்துதி புகை மண்டலத்துக் கிடையேயும் உயர்மட்ட சோவியத் தட்டினரின் அந்தஸ்தை உயர்ந்த அளவில் முரண்பாடும், சந்தேகமும், அகௌரவமும் உடையதாகச் செய்கிறது.

(காட்டிக் கொடுக்கப்பட்ட புரட்சி—பக்கம் 212)

ஒட்டுண்ணி அதிகாரத்துவத்தின் இருப்பு, முக்கியமாக முதலாளித்துவப் பண்பு கொண்ட பங்கீட்டு வடிவங்களை அடிப்படையாகக் கொண்டது. நீண்ட காலத்தில் பங்கீட்டு அரங்கிலான சமத்துவமின்மை தொழிலாளர் அரசின் உயிர் நீடிப்புக்கு ஒரு மரண ஆபத்தாக விளைவும் என ட்ரொட்ஸ்கி முன் அனுமானித்தார் தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகர இயக்கத்தினால் தடுக்கப்படாது விடின் இது முதலாளித்துவத்தின் புனருத்தாரணத்துக்கு இட்டுச் செல்லும் என அவர் எச்சரித்தார். சோவியத் ருஷ்யாவின் எதிர்கால வளர்ச்சியை மதிப்பீடு செய்த நான்காம் அகிலத்தின் ஸ்தாபகப் பத்திரத்தில் அவர் எழுதியதாவது: "அரசியல் தீர்க்கதரிசனங்கள் ஒரு மாற்றுப் பண்பினைக் கொண்டுள்ளது: ஒன்றில் அதிகாரத்துவம் தொழிலாளர் அரசில் என்றுமில்லாதவாறு உலக முதலாளித்துவத்தின் கருவியாகி புதிய சொத்து வடிவங்களைத் தூக்கி வீசித் தொழிலாள வர்க்கத்தினைத் திரும்பவும் முதலாளித்துவத்துள் மூழ்கடிக்கும். அல்லது தொழிலாள வர்க்கம் அதிகாரத்துவத்தினை நசுக்கி சோசலிசத்துக்கான பாதையைத் திறக்கும்.'' 'இடைமருவு வேலைத் திட்டம் - பக்கம் - 33)

## பப்லோவாத பரிந்துரையாளர்கள்

இந்தத் தீர்க்கதரிசனம் இன்று முழுமனே ருசுப்படுத்தப்பட்டுள்ளது. கொர்பச்சேவ் ஆட்சியாளர்களதும் அதன் பெரெஸ்ரொயிகாவினதும் நனவானதும், உடனடியானதுமான இலக்கு முதலாளித்துவத்தினை புனருத்தாரணம் செய்வதும் இறுதியாக அக்டோபர் புரட்சியின் மரபுகளை அழித்து விடுவதுமே. இந்த உண்மை இப்போது நன்கு அம்பலமாகியுள்ளது. இதனை ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் முழுப் பரிந்துரையாளர்களான — மார்க்சிசத்தின் ஒடுகாலிகளான பப்லோவாத சந்தர்ப்பவாதிகள் மட்டுமே மறுத்துள்ளனர்.

பல தசாப்தங்களாக சந்தர்ப்பவாதிகள், ட்ரொட்ஸ்கி ஸ்டாலினிசத்தின் எதிர்ப்புரட்சிப் பாத்திரம் பற்றி செய்த வலியுறுத்தலும் அதிகாரத்துவம் முதலாளித்துவ புனருத்தாரணத்துக்குத் தயார் செய்கின்றது என்ற அவரின் எச்சரிக்கையும் அத்தோடு சோவியத் ருஷ்யாவின் உயிர் வாழ்க்கை அதிகாரத்துவத்தினை புரட்சிகரமான முறையில் தூக்கி வீசுவதில் தங்கியுள்ளது என்பது அதிதீவிரமானது என்றும் அது பிற்கால அபிவிருத்திகளினால் நிராகரிக்கப்பட்டுள்ளன எனவும் கோரி வந்தனர் ட்ரொட்ஸ்கி, பிழையான முறையில் அதிகாரத்துவத்தின் சோசலிச சார்பான சீர்திருத்தங்களின் சாத்தியங்களைத் தள்ளுபடி செய்தார் என்பதே திரிபுவாதிகளின் ஆய்வுகளின் மையமாக விளங்கிற்று. பப்லோவினதும் மண்டேலினதும் சந்தர்ப்பவாதத் திரிபுகளுக்கு அடிப்படையான உள்ளுணர்வினை ஐசாக் டூயூச்சரின் ஆக்கங்கள் வழங்கின. ஸ்டாலினின் வாரிசுகள் "இன்னமும் உட்பகையுடனும் சரியான முறையிலும் பங்கீட்டு முறைகளை சோசலிச சொத்து முறையுடன் நெருங்கி தொடர்புபடச்'' செய்தும் ஆதலால் ஒரு புதிய உடமை வர்க்கத்தின் தோற்றம் பற்றிய ட்ரொட்ஸ்கியின் எடுகோள் முற்றிலும் அவநம்பிக்கைக்கு இடமானது' எனவும் வாதிட்டு இவர்கள் காட்டிக்கொடுக்கப்பட்ட புரட்சியின் முடிவுகளை நிராகரித்தனர்.

1969 அளவில் ஏர்ணஸ்ட் மண்டேல், "சோவியத் யூனியனில் சோவியத் தலைவர் முதலாளித்துவத்தினை மீண்டும் அறிமுகம் செய்ய முயல்கிறார் என்ற கோட்பாடு அர்த்தமற்றது'' என கண்டித்தார். (பெரொஸ்ரொயிகாவுக்கு அப்பால்—பக்கம்—129) சோவியத் ஆட்சியின் கொள்கை மீதான தனது ஆர்வத்தினை தடுக்க முடியாத மண்டேல் உறுதியாகக் கூறியதாவது கொர்பச்சேவின் சீர்திருத்தங்கள் தொடர அனுமதிக்கப்பட்டு, ஊக்கம் தளராமலும் தலைகீழாக்கப்படாவிட்டால்: ஒரு காலப் பகுதியின் பின்னர் பெரொஸ்ரொயிகா பயனளிக்கத் தொடங்குவதோடு மக்களின் வாழ்க்கைத் தரமும் முன்னேறும்' (அதே நூல் — பக்கம் 15) இதே நிலைப்பாட்டினையே பிரித்தானிய தொழிலாளர் புரட்சிக் கட்சியின் ட்ரொட்ஸ்கிச விரோதி திரிபுவாதிகளும் எதிரொலித்தனர். அவர்கள் கொர்பச்சேவின் கொள்கைகள் சோவியத் ருஷ்யாவில் முதலாளித்துவத்தினை புனருத்தாரணம் செய்யும் அச்சுறுத்தலைக் கொண்டுள்ளன என்ற நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் எச்சரிக்கையை இடைவிடாது கண்டனம் செய்தனர். 1989 மே மாதத்தில் வேர்க்கஸ் பிரேஸ்' 'சோவியத் ருஷ்யாவின் அபிவிருத்திகள்'' பற்றிய அனைத்துலகக் குழுவின் மதிப்பீட்டினைத் தாக்கின. அவர்கள் கொர்பச்சேவின் கிளாஸ்நொஸ்டிலும் பெரேஸ்ரொயிகாவிலும் முதலாளித்துவத்தினை மீண்டும் கொணரும் திட்டமிட்ட நனவான செய்கைகளைக் காண்கின்றனர்''

முதலாளித்துவத்தினைப் புனருத்தாரணம் செய்யும் அதிகாரத்துவத்தின் நனவானதும் திட்டமிட்டதுமான நடவடிக்கைகள், 1990 ஜூலை 1ல் சோவியத் ருஷ்யாவில் அமுலுக்கு வந்த ஒரு புதிய சட்டத்தின் மூலம் தெளிவாகியது. இது எந்தவொரு முதலாளித்துவ நாட்டிலும் உள்ளதைப்போல் தனியார் சொத்துக்களுக்கு பரந்த சட்டக் காப்பீடுகளை வழங்குகின்றது. முக்கிய பந்திகள் கூறுவதாவது:

"சோவியத் யூனியனில் சட்டத்தினால் சொத்துடமை உரிமை அங்கீகரிக்கப்பட்டுப் பாதுகாக்கப்படுகின்றது.

"ஒரு சொந்தக்காரன் அவர் பொருத்தமானது எனக் கருதும் சொத்தினை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் அதனை சயடவும் முடியும்.

"எந்த ஒரு சொந்தக்காரனும், தனது சொத்துக்களை

> கொண்டு சட்டத்தினை மீறுத எதையும் செய்யும் உரிமையை கொண்டுள்ளார். அவன் தனது சொத்தினைப் பயன்படுத்தி சட்டத்தினால் தடை செய்யப்படாத எந்த விதமான பொருளாதார அல்லது ஏனைய நடவடிக்கைகளைச் செய்து கொள்ளலாம்.
>
> "சொத்து. நிலப், சுரங்க வளங்கள், தண்ணீர், இயந்திரம் மிருகங்கள் கட்டடங்கள், கருவிகள், சடச்சாதனங்கள், ஆன்மீக கலாச்சாரம், பணம்.

பிணைப்பத்திரங்கள் மற்றும் சொத்துக்கள் என்பவற்றை உள்ளடக்கும்

"சட்டத்தினால் வேறுவிதமாகக் குறிக்கப்பட்டாலன்றி சொத்தின் பொருளாதாரப் பாவனையின் பெறுபேறுகள் (வெளியீடும் வருமானமும்) அந்தச் சொத்தின் உரிமையாளருக்கே உரியதாகும்

"ஒரு உடமையாளன் அவனது உரிமையை மீறுவனவாக உள்ள எதையும் நீக்கும்படி கோரலாம். அத்தகைய மீறல்கள் உடமையை பறிமுதல் செய்வதனை உள்ளடக்காது விடினும்.

"சொத்துடமை உரிமையினுடைய பாதுகாப்பு ஒரு நீதிமன்றத்தினால் அரச மத்தியஸ்த சபையினால் அல்லது மத்தியஸ்த சபையினால் வழங்கப்படும்.

'இந்தச் சரத்தில் வழங்கப்பட்டுள்ள உரிமையை ஒரு ஆள் சொந்தக்காரராக இல்லாத போதிலும் பூரண பொருளாதாரக் கட்டுப்பாட்டுடன் சொத்து

படிப்பகம்

# லயின் 50 ஆண்டுகளின் பின்

தினைக் கொண்டிருந்தாலும் நாளாந்த முகாமையினை கொண்டிருந்தாலும், அல்லது வாரிசுரிமை மூலம் வாழ்நாள் உரிமையைக் கொண்டிருந்தாலும் அல்லது சட்டத்தினால் அல்லது ஒப்பந்தத்தில் குறிக்கப்பட்டுள்ள ஏனைய நிலைமைகளிலும் அனுபவிக்கப்படும்.

உற்பத்திச் சாதனங்களில் உடைமைக்கான சட்ட அடிப்படைகளை அழல் செய்வதோடு உற்பத்திச் சாதனங்களில் அரசுடைமை கொண்டிருக்கும் சாத்தியத்தினை ஒழித்துக்கட்டும் ஒரு முழு அளவிலான நாசகார இயக்கமும் சேர்ந்து கொண்டுள்ளது. அதிகாரத்துவத்தின் துர்நிர்வாகம், ஊழல்களுக்கு இடையேயும் தேசியமயமாக்கப்பட்ட கைத்தொழிலின் அடிப்படையில் சோவியத் பொருளாதாரத்தின் நிசத் தேட்டங்கள் ஒழுங்கு முறையாக அழிக்கப்படுகின்றன. கைத்தொழிலின் வெவ்வேறு துறைகளுக்கும் இடையேயான தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன. அதிகாரத்துவத்தின் கொள்கையின் விளைவாகவோர் பச்சேவின் பொருளாதார



அக்டோபர் புரட்சியின் இணைத் தலைவர்கள் லெனின்-ட்ரொட்ஸ்கி



ஆலோசகர்கள் சோவியத் யூனியனின் பிரச்சினைகளுக்கு முதலாளித்துவச் சந்தையை நிறுவுவதைவிட வேறு பதில் இல்லை எனப் பிரகடனம் செய்கின்றார்கள். கொர்பச்சேவின் ஆட்சியின் நிச சமூக இலக்குகள், லெனின்கிராட் நகர சபையின் ஒரு புதிய அங்கத்தினரான பீட்டர் எஸ். பரிபோவினால் உரைக்கப்பட்டது. நியூயோர்க் டைம்ஸ்' பத்திரிகைக்கு அவர் கூறியதாவது: 'நாம் மார்க்சிசம் லெனினிசத்தில் இருந்து வெகு விரைவாக சோசலிசத்துக்கூடாக நீணிசத்துக்குச் செல்லவேண்டும் என்பவர்களுடன் நான் இணங்குகின்றேன்''.

ஸ்டாலினிசம் ட்ரொட்ஸ்கி தீர்க்கதரிசனமாக கண்டது போல் சோவியத் யூனியனை ஒரு பாதாளத்தின் விளிம்புக்கு கொணர்ந்துள்ளது. 1941 ஜூனில் ஹிட்லரின் படைகள் ஆக்கிரமிப்புச் செய்த வேளையில் இருந்து சோவியத் யூனியனின் இருப்பு அத்தகைய ஒரு உடனடி ஆபத்தில் இருக்கவில்லை. அப்படியானால் இதன் பிர் வாழ்வுக்கான சாத்தியங்கள் என்ன? ட்ரொட்ஸ்கி கேட்பது போல் ''சோவியத் யூனியன் எந்தப் பக்கம்''?

இக்கேள்விக்கான பதிலுக்கு நாம் சோவியத் யூனியனின் உள்ளார்ந்த முரண்பாடுகளை மட்டுமன்றி அனைத்துலக நிலைமையின் அபிவிருத்திகளையும் எல்லாவற்றுக்கும் மேலாக அத்தியாவசியமான உள்நாட்டு உலக மூலகங்களின் பரஸ்பர பிரதிபலிப்புக்களையும் ஆய்ந்தாக வேண்டும். ட்ரொட்ஸ்கி சுட்டிக்காட்டியது போல் 'அக்டோபர் புரட்சியின் தலைவிதி இன்று ஐரோப்பாவினதும் முழு உலகினதும் தலைவிதியுடன் இணைந்து கொண்டுள்ளது.''

(காட்டிக் கொடுக்கப்பட்ட புரட்சி பக்கம் – 243)

சில பெரொஸ் ராயிகா சிந்தனையாளர்களின்படி சோவியத் யூனியனில் சந்தையின் வெற்றியும் முதலாளித்துவத்தின் புனருத்தாரணம் ஜனநாயகத்தினை மலரச் செய்யும். இந்தச் சிந்தனையாளர்கள் இதனை உண்மையில் எந்தளவுக்கு நம்புகின்றார்களோ அவ்வளவுக்கு இந்த ஊகம், சோவியத் பொருளாதாரத்தினை உலக முதலாளித்துவ அமைப்பினுள் பூரணமாக இணைப்பதும் கைத்தொழிற்களின் தேசியமயமாக்கத்தினை ஒழிப்பதும் வெகுஜனங்களின் வாழ்க்கைத்தரத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினை உருவாக்கும் என்பதனை அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஆதலால் முதலாளித்துவத்தினைப் புனருத்தாரணம் செய்வதற்கு எதிரான பொதுமக்களின் எதிர்ப்பு அற்பமாக இருப்பதோடு மீண்டும் இளமை பூண்ட ஒரு முதலாளித்துவ ருஷ்யாவின் பொருளாதார முன்னேற்றங்களால் இலகுவில் சாந்தப்படுத்த, அல்லது குறைந்தபட்சமாக்கிவிட முடியும்.

அரசியல், பொருளாதார பிரச்சினைகளூடாக தீர்க்கமாக ஆய்வுசெய்ய முயலும் எவருக்கும் இந்த ஊக்கங்கள் உண்மையில் சிரிப்புக்கிடமானவையாகும். சோவியத் யூனியனை அனைத்துலக முதலாளித்துவ அமைப்பினுள் இணைப்பதானது: கிழக்கு ஐரோப்பாவின் இன்றைய அனுபவம் தெளிவாக்கியுள்ளது போன்று – அதன் கைத்தொழிலின் பெரும் பகுதியின் இழப்புக்கு வழிவகுக்கும். சோவியத் பொருளாதாரத்தின் அடிப்படைப் பிரச்சினையான — முன்னறிய முதலாளித்துவ நாடுகளுடன் ஒப்பிடுமிடத்து அதன் திறமையின்மை ஒரு முதலாளித்துவ ருஷ்யாவில் போட்டியிட முடியாத துறைகளைக் கலைப்பதன் மூலமே தீர்க்கப்பட முடியும். இதனால் ஏற்படும் வேலையில்லாத் திண்டாட்டம் இட்சோப லட்சமாகும்.

மேலும் முதலாளித்துவப் புனருத்தாரணத்தின் ஆரம்பக் கட்டங்களில் வெற்றி கண்டு விட முடியாத துறைகள், அனைத்துலக போட்டித் தரத்தில் இயங்குவதற்கு பெருமளவிலான மூலதன பாய்ச்சலை தவிர்க்க முடியாத விதத்தில் வேண்டிநிற்கும் சோவியத் பொருளாதாரத்தின் தாக்குப் பிடிக்கக் கூடிய ஒரு சில துறைகள் முதலாளித்துவ புனரமைப்பில், புதிய ருஷ்ய முதலாளிவர்க்கமானது, சோவியத் ருஷ்யாவில் அதிகாரத்துக்கு வந்ததும் ஏகாதிபத்திய நிதி மூலதனத்தின் தரகு ஏஜன்டாகவே (கொம்புரடோர்) விளங்க முடியும்.

சோவியத் யூனியனை முதலாளித்துவ திசையில் புனரமைப்பதானது கற்பனை செய்ய முடியாத பயங்கரப்பண்புகொண்ட ஒரு எதிர்ப்புரட்சியினை வேண்டி நிற்கும் என்பது தெளிவு. ஒரே வார்த்தையில் சொன்னால் முதலாளித்துவப் புனருத்தாரணம், சோவியத் பிரஜைகளை பட்டினி போடுவதன் மூலமே அடையப்பட முடியும் அத்தகைய ஒரு வேலைத்திட்டத்தின் அடிப்படையில் ஒரு ஜனநாயக ஆட்சியை ஏற்படுத்த முடியும் என நினைப்பது, ஒருவரின் புலன்களை ஒழித்து விடுவதாகும். ட்ரொட்ஸ்கி சுட்டிக்காட்டியதுபோன்று முதலாளித்துவம் சமாதானமான வழியில் திணிக்கப்பட்டு விட முடியாது அதன் விளைவுகள் நன்கு தெளிவாகி வருவது போல், புனருத்தாரணத்துக்கான இயக்கம், தொழிலாள வர்க்கத்திடமிருந்து மிகவும் கடும் எதிர்ப்பினைச் சந்திக்க நேரிடும். ஒரு தொழிலாளர் அதிகாரத்துவ எதிர்ப்பு அரசியல் புரட்சியின் அடிப்படையில் மட்டுமே நிசமான ஜனநாயகத்தினை அடைய முடியும். அது கிரெம்ளின் ஆட்சியை அடித்து செல்வதோடு அதன் மூலம் அக்டோபர் புரட்சியினால் நிலைநாட்டப்பட்ட சொத்து வடிவங்களின் புனர்வாழ்வுக்கும், முன்னேற்றமான வளர்ச்சிக்கும் நிலைமைகளைச் சிருஷ்டிக்கும்.

## அரசியல் புரட்சி வேலைத்திட்டம்

ட்ரொட்ஸ்கியினால் 52 ஆண்டுகளின் முன்னர் சுட்டிக்காட்டப்பட்ட அரசியல் புரட்சியின் அத்தியாவசியமான வேலைத்திட்டம் அதன் பூரண உயிர் புஷ்டியைக் கொண்டுள்ளது. சோவியத் யூனியனில் உள்ள புரட்சியின் ஒரு புதிய எழுச்சியானது சந்தேகத்துக்கு இடமற்ற முறையில் சமூக சமத்துவமின்மைக்கும், அரசியல் ஒடுக்கு முறைக்கும் எதிரான பாராட்டப் பதாகையிலேயே ஆரம்பமாகும். அதிகாரத்துவத்தின் சலுகைகள் ஒழிக! ஸ்டக்கானோவிசம் ஒழிக! சோவியத் பிரபுக்கள் தட்டும் அதன் அங்கத்தினர்களும் ஒழிக! சகல வடிவிலான ஊழியத்துக்கும் பெரிதும் சமத்துவமான கூலி!

''தொழிற்சங்கங்களதும், பக்டரி கமிட்டிகளதும் சுதந்திரம் கூட்டம் கூடும் உரிமை, பத்திரிகை சுதந்திரம் ஆகியவற்றுக்கான போராட்டம் சோவியத் ஜனநாயகத்தின் புனருத்தாரணத்துக்கும், அபிவிருத்திக்குமான போராட்டத்தினுள் வெடிக்கும்.

''அதிகாரத்துவம் வர்க்கக் கருவிகளான சோவியத்துக்களை ஹிட்லர் — கோயபெல்ஸ் பாணியிலான சர்வஜன வாக்குரிமை என்ற கட்டுக் கதை மூலம் பதிலீடு செய்தது. சோவியத்துக்களுக்கு அவற்றின் சுதந்திர ஜனநாயக வடிவத்தினை மட்டுமன்றி அவற்றினது வர்க்க உள்ளடக்கத்தினை மீண்டும் வழங்குவதும் அவசியம். முன்னர் முதலாளிகளும், குலாக்குகளும் சோவியத்தினுள் நுழைய இடமளிக்கப்படாதது போன்று இன்று அதிகாரத்துவத்தினையும் புதிய பிரபுக்களையும் சோவியத்துக்களில் இருந்து துரத்தியடிப்பது அவசியம். சோவியத்துக்களில் தொழிலாளர் பிரதிநிதிகளுக்கும் கூட்டுப்பண்ணை அங்கத்தினர்களுக்கும் விவசாயிகளுக்கும் படையாட்களுக்கும் மட்டுமே இடமுண்டு.

'சோவியத் கட்சிகளைச் சட்டரீதியாகதாக்காமல்சோவியத்துக்களை ஜனநாயகமாக்கல் முடியாத காரியம் தொழிலாளர்களும், விவசாயிகளும்தமது சொந்த சுதந்திர வாக்கின் மூலம் எந்தக் கட்சிகளை தாம் சோவியத் கட்சிகளாக அங்கீகரிக்கின்றார்கள் என்பதைச் சுட்டிக் காட்டுவர்.

''உற்பத்தியாளர்களதும் பாவனையாளர்களதும் நலன்களின் பேரில் திட்டமிட்ட பொருளாதாரத்தினை அடிமுதல் தலைவரை புதுக்கியமை! உற்பத்தியைக் கட்டுப்படுத்தும் உரிமை பக்டரிக் கமிட்டிகளுக்கு திருப்பி வழங்கப்பட வேண்டும் ஜனநாயக ரீதியில் ஒழுங்கமைக்கப்பட்ட பாவனையாளர் கூட்டுறவு, உற்பத்திகளது தரத்தினையும், விலையையும் கட்டுப்படுத்த வேண்டும்.

''கூட்டுப்பண்ணைகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் விருப்புக்கும் நலன்களுக்கும் ஏற்ப அவற்றை மறுசீரமை!

''அதிகாரத்துவத்தின் பிற்போக்கு அனைத்துலகக் கொள்கை, பாட்டாளி வர்க்க அனைத்துலக வாதத்தினால் பதிலீடு செய்யப்படவேண்டும். கிரெம்ளினின் முழு இராஜதந்திரக் கடிதத் தொடர்புகளும் பிரசுரிக்கப்பட வேண்டும். இரகசிய இராஜதந்திரம் ஒழிக!

''தேர்மிடோரியன் அதிகாரத்துவத்தினால்நடாத்தப்பட்ட சகல அரசியல் வழக்குகளும் முழுப் பிரசித்தமாகவும் தர்க்க ரீதியிலான திறந்த மனப்பான்மையினதும், நேர்மையினதும் வெளிச்சத்தில் மீளாய்வு செய்யப்படவேண்டும். ஒடுக்கப்படும வெகுஜனங்களின் வெற்றிகரமான புரட்சிகர எழுச்சியினால் மட்டுமே சோவியத் ஆட்சிக்கு புத்துயிர் அளிக்கவும் சோசலிசத்தினை நோக்கிய அதன் மேலாய அபிவிருத்தியை உத்தரவாதம் செய்யவும் முடியும்.''

(இடைமருவுவேலைத்திட்டம் — பக்கம் — 38)

ஆனால் இந்த வேலைத்திட்டம் நிறைவேறுவதற்குள்ள சாத்தியங்கள் என்ன? நாம் சோவியத் ருஷ்யாவினுள் உள்ள போக்கானது ஒரு அப்பட்டமான மோதுதலை நோக்கிச் செல்கின்றது என வாதிட்டுள்ளோம். ஒரு புறத்தில் சோவியத் சமூகத்தில் முதலாளித்துவத்தினை புனருத்தாரணம் செய்யமுயலும் அதிகாரத்துவமும். வசதிகளும் ஊழல்களும் உடைத்த தட்டினரும் மறுபுறத்தில் ஸ்டாலினிசத்தின் குற்றங்களுக்கு இடையேயும் அக்டோபர் புரட்சியின் இலட்சியங்களுக்கு விசுவாசமாக விளங்கும் தொழிலாள வர்க்கமும், முன்னேறிய சகல போக்குக்களும் நின்று கொண்டுள்ளன.

எவ்வாறெனினும் சோவியத் யூனியனின் எதிர்காலம் பெருமளவுக்கு அதன் போராட்டம் வெடிக்கும் அனைத்துலக அமைப்பு ரீதியிலேயே தீர்மானிக்கப்படும். கொர்பச்சேவ் ஆட்சியினால் முன்வைக்கப்படும் முதலாளித்துவத்தின் திடமான உருவம் யதார்த்தத்துடன் தொடர்புபட்டிருப்பின் சோவியத் அரசு அதன் இன்றைய நெருக்கடியில் இருந்து உயிர்பிழைக்க இடமில்லை. ஆனால் சமகால ஏகாதிபத்தியம் பற்றிய அதன் ஒவ்வமயமான பார்வையினைவிட ஸ்டாலினிச முன்நோக்கின் வங்குரோத்தினை விளக்குவது வேறொன்றும் இல்லை.

இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் முதலாளித்துவத்தின் மாபெரும் நெருக்கடி நிலைமைகளின் கீழ் புனருத்தாரண முயற்சிகள் இடம் பெறுவது கிரெம்ளின் அதிகாரத்துவத்தின் துர்அதிஸ்டமாகும். உண்மையில் கிழக்கு ஐரோப்பிய ஸ்டாலினிச ஆட்சிகளின் வீழ்ச்சியானது அனைத்துலகப் பண்பினைக் கொண்ட பொருளாதார முரண்பாடுகளில் வேரூன்றியுள்ள யுத்தத்தின் பின்னைய ஒழுங்குமுறையின் ஒரு பொது இலட்சணமான வெடிப்பின் ஒரு பாகமாகும். பல்தேசிய கம்பனிகளின் பெருக்கமும் உற்பத்தியின் உலகமயமாக்கலும் முன்னெருபோதும் இல்லாத விதத்தில் உலகச் சந்தையின் ஒருங்கிணைப்பும்– இவை கடந்த 15 ஆண்டுகளாக தொழில்நுட்ப புரட்சியால் துரிதப்படுத்தப்பட்டவை — மீண்டும் மனித இனத்தினை எதிர் கொண்டன

(6-ம் பக்கம் பார்க்க)

www.padippakam.com



# லியோன் ட்ரொட்ஸ்கி படுகொலையின் 50 ஆண்டுகளின் பின்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

இவை உலகப் பொருளாதார புறநிலை அபிவிருத்திக்கும் வரலாற்று ரீதியில் முதலாளித்துவம் வேரூன்றிய தேசிய அரசு முறைக்கும் இடையேயான முரண்பாட்டின் தீர்வுகாண முடியாத பண்பினைக் கொண்டிருந்தன. இரண்டாம் உலக யுத்தத்தின் இறுதியில் இந்த முரண்பாடுகளை அடக்கிவைக்க ஏகாதிபத்தியம் சிருஷ்டித்த மேற்கட்டுமான அரசியல், பொருளாதார பொறிமுறை உடைந்து கொட்டி வருகின்றது. கடந்த இலையுதிர்காலத்தில் கிழக்கு ஐரோப்பியச் சம்பவங்களுக்குப் பங்களிப்புச் செய்த, சிறப்பு அரசியல் சூழ்நிலைகளிடையே ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் வீழ்ச்சியானது எல்லாவற்றினையும் விட பெரிதும் கடத்தப்பட்டதும் அதனால் பெரிதும் பாதுகாப்பற்றதுமான தேசியப் பொருளாதாரங்கள் மேல் உலகப் பொருளாதாரத்தினால் சுமத்தப்பட்ட நெருக்குவாரத்தின் விளைவாகும். ஆனால் அதே பொருளாதாரப் போக்குக்கள் உலக முதலாளித்துவ நிலையங்களின் உள்ளே சீரழிவு நாசங்களை உண்டுபண்ணுகின்றது. மலையென உயர்ந்துவரும் நெருக்கடியின் நன்கு தெளிவான வடிவம், ஏகதிபத்தியங்களுக்கு இடையேயான குரோதத்தின் பாரிய உக்கிரமாகும். இது அணுவாயுத உலக யுத்தத்தின் ஆபத்தினை தோற்றுவிக்கின்றது.

முதலாளி வர்க்கத்தின் மிகவும் நனவான பகுதியினர் அனைத்துலக உறவுகளின் நிச்சயமற்ற நிலைமையை அறிவர். 'பொறின் அபயேர்ஸ்' சஞ்சிகையின் சமீபத்திய வெளியீடு எச்சரிக்கை செய்கையில் ''அமெரிக்க — யப்பானிய பொருளாதாரப் பதட்டம் ஏற்கனவே உக்கிரம் கண்டுள்ளதோடு அமெரிக்க — ஐரோப்பிய மோதுதல்களும் கூட வெடிக்கலாம். அமெரிக்கப் பொருளாதாரத்தின் எந்தவொரு கணிசமான வீழ்ச்சியும் ஒரு பாதுகாப்புவாதத்தினை வெடிக்கச் செய்யலாம்.'' (1990 கோடைகால இதழ் பக்கம் — 101)

அது தொடர்ந்தும் கூறுவதாவது: ''உலகளாவிய நிதிச் சந்தைகளின் இயக்கங்கள் தனிப்பட்ட அரசாங்கங்களின் அல்லது ஒன்றிணைந்து தொழிற்படும் பல நாடுகளின் முயற்சிகளை இன்று வெற்றி கொள்ள முடியும். நாடுகளுக்கு இடையேயானமோதுதல்களுக்கான புதிய மூலங்கள், உலகளாவிய அரசியல், பொருளாதார இயலனவின் சமகால மாற்றங்களிலிருந்தும் கூட ஏற்படலாம்.

'அமைப்பு அத்தகைய மிரட்டல்களுக்கு எதிராக பலம் வாய்ந்த பாதுகாப்பினை இனியும் வழங்க முடியாது'' (பக்கம்—104—05)

ஏகாதிபத்திய சக்திகள் ஒவ்வொன்றும் உலகச் சந்தையின் மீது ஆதிக்கம் செலுத்தும் கையாலாகாத்தனமான முயற்சியில் இறங்கத் தள்ளப்பட்டுள்ளன. மாபெரும் போட்டியாளர்கள் ஒவ்வொரு கண்டத்திலும் ஒவ்வொரு நாட்டிலும் மற்றவரை எதிர் கொள்கின்றனர். போட்டிமிக்க நலன்களுக்காக ஒவ்வொரு தேசிய முதலாளி வர்க்கமும் அதன் 'சொந்த' தொழிலாளி வர்கத்தினை சுரண்டுவதை உக்கிரமாக்கும் நிலைப்பாட்டினைப் பலப்படுத்த முயல்கிறது. அத்தகைய ஒரு நிலைமையானது ஒரு சமாதானபூர்வமான தீர்வினை தானே வழங்கிவிடமாட்டாது இரண்டாம் உலக யுத்தத்துக்கு பின்னைய சகாப்தத்தின் சமநிலை தகர்க்கப்பட்டுவிட்டது. இதற்கு 20ம் நூற்றுண்டின் முழு வரலாறும் சாட்சி பகர்கின்றது. இதில் பெரும் பங்கு இரத்தத்தில் பொறிக்கப்பட்டுள்ளது: உலக ஏகாதிபத்தியத்தின் சமநிலை குழம்பியதும் அதனை இந்தக் கோளத்தின் தலைவிதியை நிர்ணயம் செய்யும் கலகங்கள் கொண்ட எழுச்சிகள் ஊடாகவன்றி— அதாவது யுத்தங்கள், புரட்சிகள் - வேறு வழியில் மீள அடைய முடியாது.

தீர்வுகாணப்படாததும், மேலும் மேலும் நிலை குலைந்து கொண்டுள்ளதுமான அனைத்துலக விவகாரங்களின் நிலைமையானது கிழக்கு ஐரோப்பிய சோவியத் நெருக்கடிக்கு விரைவான தீர்வு காணப்படுவதைத் தடுக்கின்றது. ஸ்டாலினிஸ்டுகள், கிழக்கு ஐரோப்பிய அரச அதிகாரத்தினை முழுப்படியே ஏகாதிபத்தியத்தினதும் அதன் உள்ளூர் ஏஜன்டுகளதும் கரங்களில் ஒப்படைத்துள்ள போதிலும் முதலாளித்துவ ஆட்சியை பலப்படுத்துதல் எந்த விதத்திலும் நிறைவேறி விடாது. மாபெரும் சமூகப் போராட்டங்கள் இன்னமும் நிகழ்ச்சி நிரலில் இருந்து கொண்டுள்ளன. கிழக்கு ஐரோப்பாவின் தலைவிதியானது ஒரு புதிய அனைத்தலக ஒழுங்கினை தயார் செய்வதன் ஊடாக மட்டுமே தீர்மானிக்கப்படும்.

மேலும் முன்னேறிய முதலாளித்துவ நாடுகளில் வர்க்கப் போராட்டத்தின் தவிர்க்க முடியாத வெடிப்பு — நாம் தசாப்தங்களில் அன்றி மாதங்கள். வருடங்கணக்கிலேயே பேசுகின்றோம் — சோவியத் கிழக்கு ஐரோப்பிய தொழிலாளர்களின் அரசியல் சிந்தனையில் பெரும் ஆழமான தாக்கத்தினை ஏற்படுத்தும். அவர்கள் தமது பிரச்சினைகளை எங்ஙனம் அணுகுகின்றார்கள் என்பதும் அவர்களுக்கு திறந்துள்ள அரசியல் பதிலீட்டினை அளவிடுவது எப்படி என்பதும் முதலாளித்துவ நிலையங்களில் சிருஷ்டிக்கும் ஏகாதிபத்தியத் திட்டங்களுக்கு எதிராக தொழிலாள வர்க்கத்தின் எதிர்ப்பினால் பெருமளவில் பாதிப்பு செய்யப்படும்.

அனைத்துலகத் தொழிலாள வர்க்கத்தின் அனைத்து பிரிவினரையும் — ஏகாதிபத்திய நிலையங்களிலும், பின்தங்கிய நாடுகளிலும் ஸ்டாலினிசக் கும்பல்களால் ஆளப்பட்ட நாடுகளிலும் ஒரு நிரந்தரப் புரட்சி, சோசலிசத்துக்கான போராட்டத்துக்கு ஐக்கியப்படுத்துவதற்கான வரலாற்று நிலைமைகள் இன்று உருவாகியுள்ளது. மார்க்சிசத்தின் அபிவிருத்தியில் ஒரு புதிய சகாப்தம் ஆரம்பமாகியுள்ளது. ஸ்டாலினிசத்தினதும் அத்தோடு சமூக ஜனநாயகத்தினதும் சுமையினால் அழுல்கிப் போய்க்கிடந்த அனைத்துலக தொழிலாளர் இயக்கத்தின் தேக்கமும், சிதைவும் ஒரு முடிவுக்கு வந்து கொண்டுள்ளது.

நான்காம் அகிலம் காலத்தின் சோதனைக்கு நின்று பிடித்துள்ளதோடு அதன் முன்நோக்கு உலக வரலாற்றின் மாபெரும் சம்பவங்களால் ருசுப்படுத்தப்பட்டுள்ளது. புரட்சிகர பாரம்பரியங்களிலும் அனுபவங்களிலும் இவ்வளவு செழிப்பான ஒரு இயக்கம் ஒரு போதும் இருந்தது கிடையாது. ட்ரொட்ஸ்கியின் மரணத்தின் 50வது ஆண்டு நிறைவில், அவரின் ஆக்கங்கள் வேலைத்திட்டம் கொள்கைகள் வெறுமனே தொடர்புடையவை மட்டும் அன்று அவை அனைத்துலக புரட்சிக் கட்சியை கட்டி எழுப்புவதற்கு அத்தியாவசியமான அத்திவாரத்தினையும் கொண்டுள்ளன. அவற்றுடன் தொழிலாள வர்க்கம் பூமியின் மேற்பரப்பில் இருந்து ஸ்டாலினிசத்தையும், ஏகாதிபத்தியத்தையும் துடைத்துக்கட்டி, மனித இனத்தின் எதிர்காலத்தினை உறுதி செய்யும்.

நான்காம் அகிலத்தில் சேர்ந்து அதனை சோசலிசப் புரட்சியின் உலகக் கட்சியாகக் கட்டி எழுப்புவதன் மூலம் ட்ரொட்ஸ்கி படுகொலையின் ஆண்டு நிறைவை கொண்டாடுமாறு அனைத்துலகக் குழு, உலகத் தொழிலாளர்களை வேண்டுகின்றது.

## யூ. என். பி. இனவாத ...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

டால் கொலை செய்வதாக மிரட்டி உள்ளனர். தொழிற் சங்கம் அமைக்க முயன்ற சிலாபம் சமரசிங்க கம்பனித் தொழிலாளர்களும் இந்த மரண அச்சுறுத்தலுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

தோட்டத்துறையில் பொலிஸ்—இராணுவ குவிப்பு இடம் பெறுவதோடு தொழிலாளர்கள் சுட்டுக் கொல்லப் படுவது தினசரிச் சம்பவம் ஆகியுள்ளது மூன்று வாரங்களுக்கு முன்னர் பொகவந்தலாவையில் 42,000 தோட்டத் தொழிலாளர்கள், இந்த ஒடுக்கு முறையின் மத்தியிலேயே வேலை நிறுத்தத்தில் இறங்கினர்.

தமிழ் தேசிய இனத்துக்கு எதிரான இனவாத யுத்தம் சிங்கள — தமிழ் இரு தேசிய இனத் தொழிலாளர்களையும் ஒடுக்கப்படும் மக்களையும் இலட்சக்கணக்கில் ஒழித்துக் கட்டவே தொடுக்கப்பட்டுள்ளது என ஆரம்பம் தொட்டே புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் மட்டுமே சுட்டிக் காட்டி வந்தது. ஆதலால் இந்த யுத்தத்துக்கு ஒரு சதமோ அல்லது ஒரு ஆளோ கொடோம் என்ற பிரச்சாரத்தினை நாம் தொழிலாள — ஒடுக்கப்படும் மக்கள் இயக்கத்தினுள் ஆரம்பித்தோம். இதனை நாம் பகிரங்கமாக தொழிலாளர் பாதை'— 'கம்கறுமாவத்த' பத்திரிகைகள் மூலம் முன்னெடுத்தோம். இதனை நாம் முன்னெடுத்துச் சென்ற வேளையில் சமசமாஜ — கம்யூனிச — நவ சமசமாஜ — மத்தியவாத தலைவர்கள் இனவாத யுத்தத்துக்கு ஆதரவாக அசிங்கமான பிற்போக்கு பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்தனர். சமசமாஜ—நவசமசமாஜ தலைவர்கள், பாராளுமன்றத்தில் யூ. என். பியின் யுத்த மதிப்பீட்டுக்கு ஆதரவாக வாக்களித்தனர். இன்று இவர்கள் தமிழ் தேசிய இனத்தினைப் படுகொலை செய்து, இராணுவ— பொலிஸ் அதிகாரம் சரியான முறையில் நிறுவப்படுகின்றதா என்பதை ஆய்வு செய்யும் யூ. என். பி. அரசாங்கத்தின் அலுகோசு யுத்த ஆய்வு கமிட்டிகளிலும் சேர முன்வந்துள்ளனர்.

இனவாத யுத்தத்தின் லெப்டினன்டுகளாக மாறியுள்ள இத்துரோகத் தலைவர்கள் தொழிலாள வர்க்கத்தின் எந்தவொரு சுயாதீனமான போராட்டத்தினையும் அடியோடு எதிர்க்கின்றார்கள். யூ. என் பி. அமைச்சரான செளமியமூர்த்தி தொண்டமான், நடாத்தி வந்த போராட்டத்தில் குதிக்கும் தொழிலாள போராளிகளை பொலிசாரிடம் பிடித்துக் கொடுக்கும் வேலையை சமசமாஜ — கம்யூனிச — நவசமசமாஜ தலைவர்களும் தமது நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக் கொண்டுள்ளார்கள்.

மத்திய வங்கி ஊழியர் சங்கத்தினுள் பாட்டாளி வர்க்க அனைத்துலகவாத நிலைப்பாட்டுக்கு போராடி இனவாத யுத்தத்துக்கு எதிராகவும் ஜே வி. பி. பாசிசத்துக்கும், அரச படைகளின் பயங்கரங்களுக்கும் எதிராக உலகளாவிய ரீதியில் தொழிலாள வர்க்கத்தினை அணிதிரட்டப் போராடிய பு. க. க. தலைமையை அகற்றும் பொருட்டு, நவசமசமாஜ கட்சி துரோகிகள் மத்திய வங்கி நிர்வாகிகளுடனும் யூ. என். பி. குண்டர்களுடனும் அணிதிரண்டமை இதை நிரூபித்துள்ளது

கண்ணுடித் தொழிற்சாலைப் போராட்டத்தில் திரிபுவாத மத்தியவாத தம்போ தலைமை, தொழிலாள வர்க்க முழுச் சக்தியையும் அணிதிரட்டுவதற்குப் பதிலாக, நாத்தாண்டிய இரத்மலானை கண்ணுடித் தொழிற்சாலை தொழிலாளர்களிடையே பிளவினை உண்டு பண்ணியது. தம்போ, இரத்மலானை தொழிலாளர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தினைத் தொடர்வதை எதிர்ப்பதாக நாத்தாண்டியாவுக்கு அறிவித்தார். பொலிஸ் தாக்குதலின் பின்னர் நாத்தாண்டியத் தொழிலாளர்கள் பலவீனமடைந்துள்ளதாக இரத்மலானை தொழிலாளர்களுக்கு அறிவித்தார்.

ஜே. வி. பி பாசிச தாக்குதல்களுக்கும், முதலாளித்துவ அரச பயங்கரங்களுக்கும் எதிராகத் தொழிலாள வர்க்க அமைப்புக்களின் ஐக்கிய முன்னணியைத் கட்டி எழுப்பும் பொருட்டு 1988 நவம்பர் தொடக்கம் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் நடாத்திய பிரச்சாரத்துக்கு தடையாய் நின்ற இந்தத் துரோகிகள் இன்று வேலைத்தள மட்டத்திலான கோரிக்கைகளுக்குக் கூட, ஒவ்வொரு வேலைப் பிரிவுக்கும் இடையே ஐக்கியம் ஏற்படுவதற்கும் தடைக்கல்லாக உள்ளனர். தொழிலாள வர்க்க அமைப்புக்களின் ஐக்கிய முன்னணியை இந்தக் துரோகத் தலைவர்கள் எதிர்ப்பது ஏன் என பு. க. க. கூறிய அனைத்து காரணங்களும் இன்று கண் எதிரில் நிரூபிக்கப்பட்டுள்ளது. அத்தகைய ஒரு ஐக்கிய முன்னணி வேலைத்திட்டம், தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகர தலைமையின் அவசியத்தினையும் அத்தகைய ஒரு தலைமையின் கீழ் முதலாளித்துவ அரசினைத் தூக்கிவீசி, சோசலிச வேலைத்திட்டத்திற்குச் சபதம் பூண்ட தொழிலாளர்—விவசாயிகள் அரசாங்கத்தினை ஆட்சிக்குக் கொணரும் வரலாற்றுத் தேவையினையும் எழுப்புவதாலேயே இவர்கள் அன்று அதனை எதிர்த்தனர்.

தொழிலாள — ஒடுக்கப்படும் மக்களின் உரிமைகளைப் பற்றி அணுவளவேனும் அக்கறை கொண்ட எந்தவொரு போராளியும் இந்தத் துரோகத் தலைவர்களுடன் பயணம் செய்ய முடியாது. அவர்கள் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்துடன் உடன் இணைந்து தொழிலாள வர்க்கத்தினுள் புரட்சித் தலைமையைக் கட்டி எழுப்ப வேண்டும்.

ஏகாதிபத்தியச் சார்பு யூ. என். பி. அரசாங்கம். ஏகாதிபத்திய உலக நெருக்கடி நிலைமையின் கீழ் வெடித்துள்ள மத்திய கிழக்கில் வளைகுடாப் பகுதி நெருக்கடியினால் மூச்சும் விட முடியாத நிலையில் உள்ளது தேயிலை இறக்குமதியில் முன்னணியில் நின்ற ஈராக்குக்கு தேயிலை அனுப்ப முடியாத நிலை ஏற்பட்டதால் பெருமளவிலான வெளிநாட்டு வருமானம் இல்லாது போயுள்ளது இதற்கிடையே சகித்துக் கொள்ள முடியாத கட்டத்துக்கு எண்ணெய் விலைகள் உயர்ந்துள்ளது. வெளிநாட்டுச் செலாவணியைப் பொறுத்த மட்டில் தேயிலைக்கும், உடுபுடைவைக்கும் அடுத்ததாக நின்று வந்த மத்திய கிழக்கு தொழில் வாய்ப்பு மூலம் கிடைத்து வந்த செலாவணி வருமானம் தலைமூழ்கிப் போயுள்ளது.

(8-ம் பக்கம் பார்க்க)

33 RUE ALCIDE VELLARD

# யூ. என். பி. இனவாத யுத்தம் வேண்டாம் . . .

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

இனவாத யுத்தம் இழுபட்டுச் செல்லும் நிலையில் இவை அனைத்தினதும் சுமை முதலாளித்துவ அரசின் திறைசேரி மேல் பொறித்துள்ளது.

வளைகுடா நெருக்கடியானது எதுவித தயக்கமும் இன்றி, இலங்கைப் பொருளாதாரம் அரசியல் நிலைமையுடன் பிரிக்க முடியாத விதத்தில் பிணைந்து கொண்டுள்ளதை நன்கு சுட்டிக் காட்டியது. எண்ணெய் நிலங்களைக் கொள்ளையடிக்கும் பொருட்டு அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் தலைமையில் இடம்பெற்ற ஆக்கிரமிப்பு இராணுவத்தின் கட்டளையைப் பொருட்படுத்தாது ஈராக்குடன் கொடுக்கல் வாங்கல்கள் செய்வதாக யூ. என். பி அரசாங்கம் ஜம்பம் அடித்தது. ஆனால் இந்த ஜம்பம் பலூன் வெடிப்பது போல் ஒருசில மணித்தியாலங்களுள் வெடித்துச் சிதறியது. இன்று அரசாங்கம் ஈராக்குக்கு விதிக்கப்பட்டுள்ள தடைகளுக்கு இணங்க நடந்து அதற்கு நஷ்டஈடாக ஏகாதிபத்தியவாதிகள் வழங்கும் பிச்சையுடன் திருப்திப்பட முயல்கிறது. அபிவிருத்தியடையாத நாடுகளின் சகல ஆளும் கும்பல்களைப்போன்றே ஈராக் சதாம் குசேன் ஆட்சியினதும், இந்நாட்டு முதலாளித்துவ ஆட்சியாளர்களதும் ஏகாதிபத்திய எதிர்ப்பு வாய்ப்பாடிப்பானது அந்தந்த நாடுகளின் தொழிலாள ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிரான ஏகாதிபத்திய எஜமானர்களுடன் நன்கு வாய்ப்பான கொடுக்கல் வாங்கல்களை ஏற்படுத்துவதற்கான ஒரு கயிறு இழுப்பின் ஒரு பாகமாகும். ஸ்டாலினிஸ்டுகளின் பெரெஸ்ரொய்காவேலைத்திட்டமானது இந்தக் கயிறு இழுப்பில் அபிவிருத்தியடையாத நாடுகளின் முதலாளிகள் சூழ்ச்சிகளில் ஈடுபட இருந்து வந்த சாதகமான நிலைமைகளையும் அடித்து மூடியுள்ளது. அராபிய மக்களைப் போலவே ஏனைய அபிவிருத்தியடையாத நாடுகளின் ஒடுக்கப்படும் மக்களும் உலக தொழிலாள வர்க்கத்தின் ஒரு பாகமாக அந்தந்த நாடுகளின் தொழிலாள வர்க்கத்தினைச் சூழ அணிதிரண்டு ஏகாதிபத்திய சார்பு ஆட்சியாளர்களைத் தூக்கி வீசப் போராடுவதன் மூலமே ஏகாதிபத்தியத்தின் பிடியில் இருந்து விடுபட முடியும். மூன்றாம் உலக யுத்தத் திசையில் ஆளும் வர்க்கத்தினை வேகமாக ஓடவைக்கும் ஏகாதிபத்திய உலக நெருக்கடி, பாட்டாளி வர்க்க அனைத்துலகவாதத்தின் அடிப்படையில் உலக தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகர ஐக்கியத்துக்கு முன்னெருபோதும் இல்லாத அளவில் சூழ்நிலையை உருவாக்கி உள்ளது.

இனவாத யுத்தத்துக்கும், வளைகுடா நெருக்கடிக்கும் முன்னதாகவே நெருக்கடியினுள் புதையுண்டு போன இந்நாட்டில் முதலாளித்துவ ஆட்சியின் சுமையைத் தொழிலாள—ஒடுக்கப்படும் மக்கள் மேல் திணிக்கும் பொருட்டு ஏகாதிபத்திய வங்கியாளர்களின் கட்டளையின் பேரில் தயார் செய்யப்பட்ட அழிவுமிக்க திட்டங்களை பன்மடங்கு வேகத்துடனும் பரந்தளவிலான காட்டுமிராண்டித்தனத்துடனும் நடைமுறைப்படுத்த நேரிட்டுள்ளது.

பெருந்தொகையான அரசாங்கத் திணைக்களங்களை தனியார் மயமாக்குவதன் மூலம் அரசாங்கத் துறையில் மட்டும் 1 இலட்சத்து 57 ஆயிரம் தொழில்களை நாசமாக்கும் திட்டத்தினைத் தொடர்ந்தும் காலதாமதம் செய்வதற்கு ஏகாதிபத்திய எஜமான்களின் அனுமதி இனியும் இல்லை. தோட்டத் துறையில் 1 இலட்சம் பேரின் தொழில்களை நாசமாக்கவும் 1 இலட்சத்து 50 ஆயிரம் தொழிலாளர்களை இந்தியாவுக்கு நாடுகடத்தவும் போட்ட திட்டம் ஏறகனவே வேண்டாத அளவுக்குக் காலதாமதமாகி விட்டது என வங்கியாளர்கள் நெருக்கி வருகின்றனர்கள். உரமானியத்தினை நூற்றுக்கு 400 வீதத்தினால் உயர்த்தியதும், இலட்சக்கணக்கான விவசாயிகளை பட்டினிக்குள் தள்ளும் பொருட்டு சமூக சேவைகளை பேணும் வெட்டை வேண்டு என்பதும் கடன் வட்டி இலாபத்தினை பொதிகட்டிக் கொள்ளுவதை இலக்காகக் கொண்ட ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ அமைப்பின் கோரிக்கைகளாகும்.

எண்ணெய் விலையை நூற்றுக்கு 25 வீதத்தால் கூட்டி, பஸ் கட்டணத்தினை நூற்றுக்கு 50 வீதத்தால் அதிகரித்தமையானது தூர இடங்களில் இருந்து தினமும் வேலைக்கு வரும் தொழிலாளர்களை தொழிலைக் கைவிட்டுச் செல்லும்படி நெருக்கும் திட்டமாக உள்ளது. அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை பன்மடங்குகளால் அதிகரிக்கப்பட்டு வருகின்றது. அது உள்ளவர்களின் வாய் வயிற்றினை நிரப்பும், இல்லாதவர்களை சுடலைக்கு அனுப்பும் வேலைத்திட்டமாகும். பிரித்தானிய பவுணைப் பொறுத்தமட்டில் கடந்த இரண்டு மாதங்களுள் மட்டும் ரூபாவின் பெறுமதி நூற்றுக்கு 20 வீதத்தினால் மதிப்பிறக்கம் செய்யப்பட்டுள்ளது. இவை அனைத்தினதும் சுமை தொழிலாளர் — ஒடுக்கப்படும் மக்கள் மீது திணிக்கப்படுகின்றது. தொழில் செய்வோர் மீது புதிதாக வரிகளைச் சுமத்தும் அரசாங்கத் திட்டமும் உள்ளது.

ஐ.மீபத்தில் என். எம். பெரேரா நினைவுதினச் சொற்பொழிவை ஆற்றியஜயவர்தனபுர பல்கலைக் கழகத்தின் பொருளாதார பேராசிரியர் திலகரத்ன சுட்டிக்காட்டிய சில புள்ளி விபரங்கள் வருமாறு:

இலங்கையில் குறைந்த வருமானம் பெறும் நூற்றுக்கு 40 வீதமான குடும்பங்கள் அதாவது 12 இலட்சத்துக்கு (75 இலட்சம் மக்கள்) தேசிய வருமானத்தில் நூற்றுக்கு 13% மட்டுமே கிடைக்கிறது என அவர் சுட்டிக்காட்டினார். இது இல்லாதோரை 1973ல்இருந்த மட்டத்தினைக் காட்டிலும் மேலும் 6 வீதத்தால் கீழ் இழுத்து வீழ்த்துவதாகும். இதற்கிடையே முதலாளித்துவ குடும்பங்களில் நூற்றுக்கு 10% மானவை தேசிய வருமானத்தில் 42%த்தினை அனுபவிக்கின்றன. இந்த முதலாளித்துவக் குடும்பங்கள் பிடுங்கிக் கொள்ளும் வருமானப் பங்கு முன்னேறிய முதலாளித்துவ நாடுகளில் 'சுப்பர்' முதலாளிகள் அந்தந்த நாடுகளின் தேசிய வருமானத்தில் கைப்பற்றிக் கொள்ளும் பங்கினைக் காட்டிலும் இரண்டு மடங்கு அதிகமானது எனவும் பேராசிரியர் சுட்டிக் காட்டினார்.

மக்கள் வாழ்க்கை தொடர்பான இவற்றின் நாசகார விளைவுகளையும் அவர் காட்டினார். 1980—87க்கு இடைப்பட்ட காலத்தில் 6 - 23 மாதத்துக்கு இடைப்பட்ட வயது குழந்தைகளில் போஷாக்கின்மையால் வாடுவோரின் எண்ணிக்கை 50%ல் அதிகரித்துள்ளது. குறைந்த நிறைகொண்ட குழந்தைகளின் பிறப்பைப் பொறுத்தமட்டில் இலங்கை உலகில் மோசமான 7 நாடுகளுள் ஒன்றாக உள்ளது.

குழந்தைகள் முகம் கொடுக்கும் இந்நிலைமை, தொழிலாளர்—ஒடுக்கப்படும் மக்கள் முகம் கொடுக்கும் பயங்கரமான பட்டினி நிலைமையாகும். இதற்குக் காரணம் பெற்றோர் பட்டினி கிடந்தேனும் குழந்தைகளை போஷித்தல் சாதாரண சனங்கள் மத்தியில் ஒரு சம்பிரதாயமாக இன்னமும் இருந்து வருவதே இது. தமக்காக இல்லாது போகினும் தமது குழந்தைகளுக்காக வேனும். இந்த நாசகார முதலாளித்துவ ஆட்சிக்கு எதிராக மக்கள் கிளர்ந்து எழுவது நிச்சயம் என்பதைக் காட்டுகின்றது.

சமசமாஜ—கம்யூனிச — நவசமசமாஜ தலைவர்களின் மக்கள் முன்னணி அரசியலின் துணையுடன் ஒடுக்கப்படும் இளைஞர்களையும், கிராமப்புற ஏழைகளையும் 1970பதுகளின் கடைப் பகுதியில் தம் கைக்குள் போட்டுக் கொள்வதில் யூ. என். பி வெற்றிபெற்றது. ஆனால் இன்றைய பொருளாதார, சமூக நெருக்கடி, அத்தகைய கூட்டுக்கான வாய்ப்பினை அடித்து மூடியுள்ளது. ஜே.வி.பி.யைஒடுக்கும்சாட்டில் பிரமாண்டமான ஒடுக்குமுறை கிராமப்புற ஏழைகளுக்கும், இளைஞர்களுக்கும் எதிராக இடம் பெறக் காரணம் இதுவே. கல்வி, தொழில் வாய்ப்புக்களை ஒழிப்பதோடு முதலாளித்துவ ஆட்சியாளர்கள் இளைஞர்களை இனவாத யுத்தத்தினதும், உள்நாட்டுப் போரினதும் 'அலுகோசு' துப்பாக்கி ஏந்திகளாகவும், கொலைக்குப் பலியாகவும், சிறைக்குள் தள்ளபடும் நிலைமைகளையே பதிலாக முன்வைத்துள்ளனர். தொழிலாள வர்க்கம் சுயாதீனமான அரசியல் நிலைப்பாட்டின் அடிப்படையில் முதலாளித்துவ அமைப்பினைத் தூக்கி வீச எடுக்கும் போராட்டக் கிளைப்புக்களுக்கு இந்த ஒடுக்கப்படும் மக்கள் சக்திகளை புரட்சிகரமான முறையில் அணிதிரட்டிக் கொள்வதற்கான பூரண வாய்ப்பு உள்ளது.

யூ. என். பி, அரசாங்கமும், மற்றும் முதலாளித்துவ அரசியல் கட்சிகளும் அவ்வாறே இவற்றுக்குச் சேவகம் செய்யும் துரோக தொழிலாள வர்க்க தலைவர்களும், மக்களிடைய நிலவும் இந்த அரசியல் ஈர்ப்பினால் கிடுகிடுத்துப் போயுள்ளனர். தாம் முகம் கொடுத்துள்ள இந்தப் பயங்கர வடத்தில் இருந்து தலைதப்பும் பொருட்டு ஏகாதிபத்தியவாதிகளதும் முதலாளித்துவ ஆட்சியாளர்களதும் கவனம் ஒடுக்கப்படும் தமிழ் தேசிய இனத்துக்கும், கிராமப்புற ஏழை விவசாயிகளுக்கும் தலைமை தாங்கக் கூடிய புரட்சிகரச் சக்தியான தொழிலாள வர்க்கம், அரசியல் ரீதியில் சுயாதீனமான சக்தியாகத் தலையெடுப்பதைத் தடுப்பதிலேயே திரும்பியுள்ளது. சமசமாஜ—கம்யூனிச — நவசமசமாஜ — இ. தொ கா. மற்றும் மத்தியவாத தலைவர்கள் தலைகீழாக நின்றேனும் இப்பணிக்குத் தோள்கொடுக்க தாம் தயார் என்பதை யூ என். பி. ஆட்சியாளர்களுக்குத் தெரிவித்துள்ளார்.

இத்துரோகத்தினைத் தோற்கடிப்பதன் மூலம், புரட்சித் தலைமையின் கீழ் அணிதிரட்டவும் ஒடுக்கப்படும் மக்களுக்கு தலைமை தாங்கவும் தொழிலாள வர்க்கம் இன்றே கிளர்ந்து எழுந்தாக வேண்டும்.

தொழிலாள வர்க்கத்தின் சகல கோரிக்கைகள் மற்றும் நலன்கள் தொடர்பாகவும் அவ்வாறே ஏழை விவசாயிகள் உட்பட ஒடுக்கப்படும் மக்கட் பிரிவினரின் சகல பிரச்சினைகள் தொடர்பாகத் திட்டவட்டமான தீர்வுகளைக் கொண்ட வேலைத்திட்டத்தின் அடிப்படையில் தொழிலாள வர்க்கம் இன்று கிளர்ந்து எழ வேண்டும். முதலாளித்துவ சிறீலங்கா சுதந்திர கட்சியின் பின்னால் வயிறளந்து கொண்டும், ஜனாதிபதி பிரேமதாசவுடனான பேச்சுவார்த்தைகளிலும் யுத்த சபைகளிலும் நுழைந்து கொண்டும் தொழிலாள வர்க்கம் தனது சொந்த வேலைத்திட்டத்தின் அடிப்படையில் சுயாதீனமாகத் தலையிடுவதை தடை செய்யும் துரோகத் தலைவர்களின் மக்கள் முன்னணி அரசியலை சிதறடிப்பதும் துரோகத் தலைவர்களை வெளியேற்றி புரட்சித் தலைமையின் கீழ் முழுத் தொழிலாள வர்க்கத்தினையும், ஒடுக்கப்படும் மக்களையும் அணிதிரட்டும் அவசியத்தினை அது தோற்றுவிக்கின்றது. இந்தப் புரட்சிகரப் பாதையில் இறங்குவதன் மூலம் அனைத்துத் தொழிலாளர் போராளிகளும் ஒடுக்கப்படும் மக்களும் புரட்சி கம்யூனிஸ்ட் கழகத்தின் வேலைத்திட்டத்தினைச் சூழ அணிதிரள வேண்டும்.

யூ என் பி. அரசாங்கத்தின் இராணுவ சர்வாதிகார வேலைத்திட்டத்துக்கு சமசமாஜ — கம்யூனிச — நவசமசமாஜ—இ. தொ கா. தலைவர்கள் தோள் கொடுப்பதானது 1964ல் இழைத்த மாபெரும் காட்டிக் கொடுப்பினையும் தாண்டும் பேரழிவுகளை முழு இந்தியத் துணைக் கண்டத்திலும் ஏற்படுத்தும். 1964ல் முதலாளித்துவ சிறீலங்கா சுதந்திரக் கட்சி கூட்டரசாங்கத்துள் நுழைந்தமை தமிழ் — சிங்கள தேசிய இனங்களிடையே குட்டி முதலாளித்துவ அமைப்புக்கள் தோன்ற வழிவகுத்தது போன்று, அவற்றின் வேலைத்திட்டங்களின் வங்குரோத்து. பிற பக்குத்

(6-ம் பக்கம் பார்க்க)



வடட்டமேசை பேச்சுவார்த்தை போறுயுள மட்டடி தமிழ ஐடுதலை போராட்டத்தை கழுத்தறுக்க ஜே. ஆர். ஜயவர்தனவுடன் பேச்சுவார்த்தைக்குச் சென்ற வாசுதேவ நாணயக்கார. கே. பி. சில்வா தலைமை.

www.padippakam.com



# யூ. என். பி. இனவாத யுத்தம் வேண்டாம் . . .

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

தன்மை காரணமாகத் தொழிலாளர் — ஒடுக்கப்படும் மக்கள் பேரளவிலான இழப்புக்களுக்கும் முகம் கொடுக்க நேரிட்டது. ஜே. வி. பி.யின் பாசிசப் பக்கமான ஈர்ப்பும், விடுதலைப் புலிகள் இயக்கம் உட்பட்ட தமிழ் குட்டி முதலாளித்துவ அமைப்புக்கள் அனைத்தினதும் அடிபணியும் அரசியலும் இதனை நன்கு தெளிவுபடுத்தி உள்ளன.

சமசமாஜ—கம்யூனிச — நவ சமசமாஜ— இ. தொ. கா. மற்றும் மத்தியவாதிகளின் இன்றைய துரோகம், இத்தகைய வங்குரோத்து குட்டி முதலாளித்துவ இயக்கங்கள் பல தோன்ற ஊக்கமளிக்கிறது. ஏற்கனவே தமிழ் தேசியஇனத்துக்கு எதிரான இனவாத யுத்தத்தினால் தெம்புபெற்ற பல முஸ்லீம் அமைப்புக்கள் தலை நீட்டி உள்ளன. இவர்கள் கிழக்கு மாகாணத்துக்கு தனியான மாகாண சபை கோரும் பிரிவினை இயக்கங்களுக்கு அடிகோலியுள்ளனர். இனவாத யுத்தத்தில் யூ. என். பி.யின் எடுபிடிகளாகத் தொழிற்படும் புதுப்புது தமிழ் குட்டி முதலாளித்துவ அமைப்புக்கள், விடுதலைப் புலிகள் இயக்கத்தினை பாசிஸ்டுகள் எனக் கூறிக் கொண்டு களத்தில் குதித்துள்ளன. இதற்கிடையே ஜே. வி. பீ. பாசிச இயக்கத்தின் குப்பை கூழமான 'தேசிய சிந்தனை'யை சூழ அணிதிரளும் கும்பலும் தோன்றியுள்ளது. இந்தப் பிரிவினை இயக்கங்கள் எல்லாமே, தொழிலாள வர்க்கம், ஒடுக்கப்படும் தமிழ் தேசிய இனம் உட்பட்ட கிராமப்புற ஏழைகளுக்குத் தலைமை தாங்கும் புரட்சிகரப் பணிக்கு சுயாதீனமாக எழுச்சி பெறுவதற்கு குறுக்கே சமசமாஜ — கம்யூனிச — நவசமசமாஜ இ. தொ. கா. மற்றும் மத்தியவாத தலைவர்கள் நிற்பதாலேயே பெருக்கெடுக்கின்றன. தொழிலாள வர்க்கத் தலைமை கிடைக்காது போகையில் குட்டி முதலாளித்துவத்தினுள் தலைதூக்கும் இத்தகைய நாளுவிதமான இயக்கங்கள் அதிகரிக்கும் அளவுக்கு அவை பிற்போக்கு ஏகாதிபத்திய ஆளும் வர்க்கத்தினைச் சுற்றிச் சுழல்கின்றன. அவை பிற்போக்கின் திட்டங்களுக்கு ஏற்ற விதத்தில் மோதுதல்களை நோக்கிச் செல்கின்றன.

இந்த அழிவுமிக்க பெறுபேறுகள், பிற்போக்கு இந்திய ஆட்சியாளர்களதும், இந்தியப் படைகளதும் கைக்கூலி தரகர்களாகச் செயர்பட்டு வந்த ஈபீஆர்எல்எப் உள்ளடங்கலான தமிழ் குட்டி முதலாளித்துவ இயக்கங்களினது நடவடிக்கைகள் மூலமும் அவ்வாறே தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் மூலமும் அம்பலமாகியுள்ளன ஏகாதிபத்தியவாதிகளின் பக்கபலத்துடன் இடம் பெற்ற இந்திய இராணுவத்தின் ஆக்கிரமிப்பில் இருந்து படிப்பினைகளைப் பெருத பெற்றுக் கொள்ள முடியாத விடுதலைப் புலிகள் இயக்கம், இன்றும்கூட இந்திய முதலாளித்துவ அரசாங்கத்தின் தலையீட்டை வேண்டி கெஞ்சுகின்றது. அத்தோடு அது பிரேமதாச அரசாங்கத்துடன் மீண்டும் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிக்க முயல்வதாகவும் செய்திகள் வந்துள்ளன. குட்டி முதலாளித்துவ தேசியவாத இயக்கங்களின் இயற்கைத் தன்மையே இதுதான். தமது கொடுக்கல் வாங்கல்கள் கொண்ட மோதுதல்களுக்கு இடையேயும் புரட்சிகர வர்க்கமான தொழிலாள வர்க்கம், சுயாதீனமாகப் போராட்டப் பாதையில் குதிக்கும் என்ற பீதி இவர்களைப் பீடித்துக் கொண்டுள்ளது. ஆகலால் தொழிலாள வர்க்க ஐக்கியத்துக்கு இவர்கள் காட்டும் குரோதம், ஒடுக்கும் ஆளும் வர்க்கம் காட்டும் குரோதத்துக்கு எந்த வகையிலும் குறைந்தது அன்று.

## நெல்சன் மண்டேலா

நிறவெறி ஆட்சியாளர்களுடனான சமரசத்தின் மூலம் விடுதலை பெற்ற நெல்சன் மண்டேலா, தமது தலைமையிலான ஆபிரிக்க தேசிய காங்கிரசினை கொண்டு இனவெறி மோதுதல்களைச் சிருஷ்டித்து, தென் ஆபிரிக்க தொழிலாள வர்க்கத்தினை பிளவுபடுத்த மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் இந்தத் தேசியவாத முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவ தலைவர்களின் பிற்போக்குத் தன்மைக்கு மற்றுமோர் உதாரணமாகும் அது இந்து—முஸ்லீம் இரண்டு இந்தியாவினைச் சிருஷ்டிக்கச் செயற்பட்ட காந்தி — நேரு தலைமையின் பணியைத் தொடர்வதாகும்.

துரோகத் தலைவர்களின் வர்க்கச் சமரச விலங்கினை உடைத்து எறிந்து, தொழிலாள வர்க்கம் ஒடுக்கப்படும் மக்கட் குழுக்களின் பிரமாண்டமான பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் வேலைத்திட்டத்துடன் கிளர்ந்து எழ வேண்டும். அங்ஙனம் செய்யாமல் இந்த நாசகார அபிவிருத்திகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியாது அந்த வரலாற்றுப் புரட்சிகரப் பணிக்கு, புரட்சிக் கட்சியின் தலைமையில் தொழிலாளி வர்க்கம் அனைத்துலகவாதத்தின் அடிப்படையில் மட்டும்மே தோள் கொடுக்க முடியும். நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தை சிங்கள — தமிழ் தேசிய இனங்களைச் சேர்ந்த தொழிலாள வர்க்கத்தின் புரட்சிக் கட்சியாக ஸ்தாபிதம் செய்யும் பணியில் சகல போராளிகளும் உடன் இணைய வேண்டும். இது மிகவும் அவசரமானதும் தீர்க்கமானதுமான பணியாகி உள்ளது.

## புரட்சிகர வேலைத்திட்டம்

யூ. என். பி. அரசாங்கத்தின் இனவாத யுத்தத்துக்கு ஒரு சதமோ ஒரு ஆளோ வழங்கக் கூடாது என்ற சுலோகத்தின் கீழ் சகல வேலைத்தலங்களிலும் சகல தொழிலாள வர்க்க அமைப்புக்களும் உடனடியாக பிரச்சாரத்தினை ஆரம்பிக்க வேண்டும். மறியல் ஊர்வலம், கூட்டம், வேலைநிறுத்தம் முதலான வர்க்க நடவடிக்கைகள் மூலம் இப் பிரச்சாரத்தினை நடளாவிய விதத்தில் முன்னெடுக்கும் பொருட்டு சகல வர்க்க அமைப்புக்களையும் அணிதிரட்டியாக வேண்டும். பு. க. க. ஏற்கனவே இத்தகைய பொதுக் கூட்டங்களை தொடர்ந்து நடாத்தி வருகின்றது. இப் பிரச்சார நடவடிக்கைகளை எதிர்க்கின்றவர்களும், யூ. என். பி. அரசாங்கத்தின் இனவாத யுத்தத்தின் 'அலுகோசு' லெப்டினன்டுகளாகச் செயற்படுகின்றவர்களுமான சகல வர்க்க துரோகிகளையும் வர்க்க அமைப்புகளின் தலைமையில் இருந்து துரத்தி அடிக்க வேண்டும். இதுதொழிலாள—ஒடுக்கப்படும் மக்களின் சகல உரிமைகளையும் பாதுகாக்கும் போராட்டத்துக்கு அத்தியாவசியமான ஓர் தயாரிப்பு நடவடிக்கையாகும்.

நான்கு தசாப்தங்களுக்கு மேலாக தொழிலாளி வர்க்கத்தினையும், ஒடுக்கப்படும் மக்களையும் இரத்த வெள்ளத்தில் மூழ்க்கடிக்கச் செயற்பட்ட பிற்போக்கு முதலாளித்துவ ஒற்றையாட்சி அரசினைப் பாதுகாக்கும் எந்தவிதமான அவசியமும் தொழிலாள வர்க்கத்துக்குக் கிடையாது. தொழிலாளி வர்க்கம், இந்த ஒற்றையாட்சி அரசின் கீழ் நாசமாக்கப்பட்ட ஒடுக்கப்படும் தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை காக்கத் திடசங்கற்பம் பூணுவதன் மூலம்இந்த முதலாளித்துவ அரசிற்கு எதிரான புரட்சிகரப்போராட்டத்துக்கு அணிதிரள்வது அவசியம். ஒடுக்கப்படும் தமிழ் தேசிய இனத்தின் விடுதலை தொழிலாள வர்க்கத்தின் விடுதலையுடன் பிரிக்க முடியாத வகையில் பிணைக்கப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகள் உட்பட்ட தமிழ் குட்டி முதலாளித்துவ அமைப்புக்கள் தமிழ் தேசிய இனத்தினரைத் தள்ளி வீழ்த்தியுள்ள ஆதாளபாதாளத்தில் இருந்து தலையெடுக்க தொழிலாள வர்க்கத்தின் தலைமையின் கீழ் முதலாளித்துவ அரசினை தவிடுபொடியாக்கப் போராட வேண்டும்.

யூ. என். பி. இனவாத யுத்தம் தோல்வியடையும் நிலையில் இ. தொ. கா. தலைவர் தொண்டமானும் சந்திரசேகரன் போன்ற மத்தியவாதிகளும் அரசியல் தீர்வு கோரிப் பிரச்சாரம் ஆரம்பித்துள்ளனர். இது இவர்களினது தியான இக்கத்தனைப் போன்ற மற்றுமோர் பிற்போக்கு மோசடியாகும், தொழிலாள வர்க்கத்தின் சுயாதீன அரசியல் போராட்டத்துக்கு குழிபறிப்பதாகும்.

தொழில் அழிவினை எதிர்த்து அனைத்துத் தொழிற்சங்கங்களும் ஒன்றிணைந்து கட்டி எழுப்பும் பக்டரி கமிட்டியின் கீழ் வேலைத்தலங்களில் உள்ள மர்வு போராட்டத்தினை ஒழுங்கு செய்ய வேண்டும். இப்போராட்டப் தோட்டங்கள், பக்டரிகள், பெரு வர்த்தக நிறுவனங்களை நஷ்டஈடு இன்றித் தொழிலாளர் கட்டுப்பாட்டின் கீழ் தேசியமயமாக்கும் நோக்குடன் இடம் பெறவேண்டும். உள்ளமச்சலைக் காக்கும் பொருட்டு தொழிலாளர் வர்க்க அரசியல் கட்சிகளும் இளைஞர் இயக்கங்களும் பக்டரிக் கமிட்டிகளைச் சூழ அணிதிரட்டிக் கொள்ள வேண்டும்.



தமிழ்ஈழ விடுதலைப் புலி போராளிகள்

தற்சமயம்தொழிற்சங்கம் இல்லாத சகல வேலைத்தலங்களிலும் தொழிற்சங்கங்களை அமைக்கும் பொருட்டு தொழிலாளர் போராளிகள் முன்னணி வகிக்க வேண்டும் முதலாளித்துவ அமைப்புக்குத் தோள் கொடுத்த சகல துரோகத் தலைவர்களும் இத் தொழிலாளர்கள் அணிதிரட்டப்படுவதை வேண்டுமென்றே நிராகரித்து வருகின்றனர். இதற்கான காரணம் தெளிவு. இன்றைய நெருக்கடியின் மத்தியில் தொழிலாள வர்க்கத்தினை அணிதிரட்டச் செய்யும் சுயாதீனமான குறைந்த பட்ச நடவடிக்கை ஒவ்வொன்றும் தொழிலாள வர்க்க அமைப்புக்களை உடைத்துத் தள்ளச் சபதம் பூண்டுள்ள முதலாளித்துவ ஆட்சியை தூக்கி வீசும் பிரச்சினையைத் தோற்றுவிக்கும் என்பதை அவர்கள் நன்கு அறிந்துள்ளனர் இப்பிரச்சனையின் எதிரில் அடிபணியும் அல்லது சமரசத்துக்கு செல்லும் தலைவர்கள், வர்க்க அமைப்புக்கள் கட்டி எழுப்பப்படுவதை எதிர்க்கின்றார்கள் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் இந்தத் தொழிலாளர் பிரிவினரை அணிதிரட்டுவதற்கு தலைமை தாங்குகின்றது.

விலைவாசி உயர்வுக்கும், உதவிமானிய வெட்டுக்கும் எதிராக அனைத்துத் தொழிலாள வர்க்க அமைப்புக்களும் ஒன்றிணைந்து ஏழை விவசாயிகள் உள்ளடங்கலான ஒடுக்கப்படும் மக்கள் குழுக்களை நடவடிக்கைக் குழுக்களுள் அணிதிரட்டுவதன் மூலம் இலை நடு இலாபக் கறப்புக்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் போராட்டத்தினை ஆரம்பிக்க வேண்டும் மொத்த வியாபாரத்தினை தொழிலாளர் கட்டுப்பாட்டின் கீழ் தேசியமயமாக்கவும் வெளிநாட்டு வர்த்தகத்தில் அரசின் ஏகபோகத்தினை நிறுவவும் அரசியல் போராட்டத்துக்கு அணிதிரட்டுவது எமது இலக்காக வேண்டும். விவசாயிகளின் விளைபொருட்களுக்கு நியாயமான விலை வழங்குவதோடு விவசாயிகளுக்கு அவசியமான உரம், இரசாயன திரவியங்கள்இயந்திரசாதனங்களை அத்தகைய ஒரு வேலைத் திட்டத்தினூடாகவே உருவாக்க முடியும். நகர்ப்புற தோட்டப்புற தொழிலாளர்கள் நியாயமான விலையில் அத்தியாவசிய உணவுப் பொருட்களை பெற்றுக் கொள்வதை உறுதி செய்யும் விதத்தில் அத்தகைய ஒரு நடவடிக்கை அத்தியாவசியமானதாகும்.

அவ்வாறே வங்கிகள், காப்புறுதி கம்பனிகள், பினான்ஸ் கம்பனிகளை நஷ்டஈடின்றி தொழிலாளர் கட்டுப்பாட்டின் கீழ் தேசியமயமாக்காமல்கல்வி ஆஸ்பத்திரி சேவைகள் போன்ற சேமநல சேவைகளை மட்டுமன்றி இலகுவான கட்டணத்தின் அடிப்படையில் போக்குவரத்துச் சேவையை நடாத்துவதும் முடியாத காரியமாகும் ஏழை விவசாயிகளுக்கு அவசியமான கடன்களையும் மற்றும் நிதி வசதிகளையும் செய்து கொடுக்கும் பொருட்டு இன்று நடைமுறையில் உள்ள கடன்களை ஒழித்து, அவர்களை விலங்கில் இருந்து விடுவிப்பதும் அத்தியாவசியமானது.

தொழில்களை ஒழித்து உதவி மானியத்தினை வெட்டி தொழிலாள - ஒடுக்கப்படும் மக்களை பட்டினிக்குள் தள்ளும் கட்டளைகளைப் பிறப்பித்துள்ள உலக வங்கி, சர்வதேச நாணய சபை போன்ற ஏகாதிபத்திய மூலதன அமைப்புக்களுடன் உள்ள சகல உறவுகளையும் உடைத்து எறிவது மக்களைப் பொறுத்தமட்டில் இன்று காலங்கடத்த முடியாத ஒரு நடவடிக்கை ஆகும். ஏகாதிபத்திய வங்கிகள் வழங்கியுள்ள சகல கடன்களையும் ஒழிக்க வேண்டும். தொழிலாள—ஒடுக்கப்படும் மக்களின் வாழ்க்கைத் தரத்தினைப் பேணும் பொருட்டு, ஏகாதிபத்திய வங்கியாளர்களையும் இலாபம் கரண்டலாளர்களையும் அடிப்படையாகக் கொண்டன்றி அந் முன்னேறிய நாடுகளின் தொழிலாள வர்க்கங்களில் ஆதரவின் அடிப்படையில் தொழிற்படும் அனைத்துலக வேலைத்திட்டம் அவசியமாகி

(9-ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com



# யூ. என். பி. இனவாத யுத்தம் வேண்டாம் . . .

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளது. இன்றைய உலக நெருக்கடி நிலைமையின் கீழ் அனைத்து நாடுகளிலும் ஆளும் வர்க்கங்களுக்கும் துரோகத் தலைவர்களுக்கும் எதிராக புரட்சிகரப் போராட்டத்துக்குக் கிளர்ந்துள்ள உலகத் தொழிலாள வர்க்கம், முன்னெருபோதும் இல்லாத அளவில் அத்தகைய வேலைத்திட்டத்துக்கு புறநிலை ரீதியில் தயாராகி உள்ளது.

தமிழ் தேசிய இனத்தினரின் தேசிய ஜனநாயக உரிமைகளை உறுதி செய்தல். தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமையை உத்தரவாதம் செய்தல், அவசரகால சட்டம் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் உட்பட அனைத்து ஒடுக்குமுறைச் சட்டங்களையும் நீக்குதல். ஏகாதிபத்திய ஆட்சிக் காலத்தில் இருந்து தொடர்ந்து வரும் கச்சேரி, அரசாங்க அதிபர் முறையின் கீழ் ஏழை விவசாயிகளுக்கு விதிக்கப்பட்டுள்ள தடைகளை அகற்றல் முதலான ஜனநாயகப் பணிகளுக்காக சிங்கள — தமிழ் தேசிய இனங்களைச் சேர்ந்த தொழிலாள — ஒடுக்கப்படும் மக்கள் தமது சுயவிருப்பின் பேரில் தெரிவு செய்த பேராளர்களைக் கொண்ட அரசியலமைப்புச் சபையை, சிவில் யுத்தத்தின் சிவில் மூடுதிரையாக இருந்து வரும் முதலாளித்துவ பாராளுமன்றத்துக்குப் பதிலாக அமைக்க வேண்டும்.

## முதலாளித்துவ கூட்டரசாங்கம்

இந்த நடவடிக்கைகள் அனைத்தையும் பிற்போக்கு முதலாளி வர்க்கத்துடனான சமரசத்தின் மூலம் சாதிக்க முடியாது. ஆதலால் இவை சமரசமற்ற போராட்ட நடவடிக்கைகளாகும். மக்கள் முன்னணிகளுக்கு எதிராக தொழிலாள வர்க்க அரசியல் சுயாதீனத்தின் அவசியம் இதனுலேயே ஏற்பட்டுள்ளது. முதலாளி வர்க்கத்தின் தலைமையோ அல்லது அதனுடன் கலந்து கொண்டு செய்யும் மக்கள் முன்னணிக் கூட்டரசாங்கத்தின் மூலம் இந்த எந்தவொரு தீர்வினையும் உத்தரவாதம் செய்துவிட முடியாது என்பதை இந்நாட்டு மக்கள் அறிந்துள்ளனர்.

ஆதலால் முதலாளிகளைச் சேர்க்காது தொழிலாள — ஒடுக்கப்படும் மக்களின் பூரண பங்களிப்பினை கொண்ட சோவியத்துக்களை முதலாளித்துவ ஆட்சிக்கான பதிலீட்டு அமைப்பாக நிறுவவும், தொழிலாளர் — விவசாயிகள் அரசாங்கத்தின் ஆட்சிக்குக் காரணரவும் தொழிலாள வர்க்கம் முன்னணி வகிக்க வேண்டும். தமிழ் தேசிய இனத்தினர் மீதும் அவ்வாறே நாடு பூராவும் உள்ள தொழிலாளர — ஒடுக்கப்படும் மக்கள் மீதும் இறுக்கும் தோய்ந்த ஒடுக்கு முறையைத் திணித்து வரும் முதலாளித்துவ அரசின் பொலிஸ், இராணுவத்தினை கலைப்பதும், அதற்குப் பதிலாக சோவியத் சபைகளின் நிர்வாகத்தின் கீழ் தொழிற்படும் பாதுகாப்பு அணிகளை, தொழிலாளர் — ஒடுக்கப்படும் மக்களினதும் உயிர்பாதுகாப்புக்கும், அமைப்புக்கள், வசிப்பிடங்களை காக்கவும் அமைக்க வேண்டும்.

மேற்சொன்ன வேலைத்திட்டத்தின் அடிப்படையில் தொழிலாள வர்க்கத்தின் பொது வேலைநிறுத்தத்தினை ஒழுங்கு செய்வதற்கான தொடக்கி வைப்பினை செய்வதன் மூலம், முழு ஒடுக்கப்படும் மக்களையும் புரட்சிகரப் போராட்டத்துக்கு அணிதிரட்டும் தலைமையை இன்று தொழிலாள வர்க்கம் வகிப்பது அத்தியாவசியம்.

இதனைச் சாதிக்கும் பொருட்டு தொழிலாள வர்க்க அமைப்புக்களின் பேராளர்களை அணிதிரட்டி, தொழிலாள வர்க்கத்தின் வரலாற்று புரட்சிகரப் பொறுப்பினை இட்டுநிரப்பக் கூடிய வேலைத்திட்டத்தினை நிறைவேற்றி அதன் அடிப்படையில் போராட்டத்தினைத் தொடங்க வேண்டும். புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம், அனைத்து தொழிலாள வர்க்க அமைப்புக்களதும் பேராளர் மகாநாட்டுக்கு அழைப்பு விடுத்துள்ளதன் நோக்கம். இப்பணிக்கு தொழிலாள வர்க்கத்தினைத் தயார் செய்வதே.

இந்த தொழிலாளர் பேராளர் மகாநாட்டுக்காகச் செய்யும் பிரசாரத்தினுள் தொழிலாள வர்க்க அமைப்புக்கள் முகம் கொடுத்துள்ள நிசநிலைமையை மூடி மறைப்பது அன்றி, அது சம்பந்தமான நிசநிலைமையை வர்க்கத்தின் எதிரில் முன்வைப்பது வர்க்க நனவுள்ள சகல போராளிகளதும் கடமையாகும்.

தொழிலாள வர்க்கத்தினதும், ஒடுக்கப்படும் மக்களதும் உரிமைகளை ஏகாதிபத்தியச் சார்பு யூ. என். பி. அரசாங்கத்தின் தாக்குதல்களில் இருந்து காக்கப் போராடும் வேலைத்திட்டத்தினைக் கலந்துரையாடும் தொழிலாளர் பேராளர் மகாநாட்டினைக் கூட்ட புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தொடர்ந்து பிரசாரம் செய்து வந்துள்ள போதிலும் 5 ஆண்டுகளுக்கு மேலாக அதைத் தட்டிக் கழிக்கும் தலைமைகளின் தடைகளுக்கு முகம் கொடுத்துள்ளது தொழிலாள — ஒடுக்கப்படும் மக்கள் இந்த 5 ஆண்டுகால தட்டிக் கழிப்புக்களின் போது எவ்வளவு மோசமான தாக்குதல்களுக்கு உள்ளாகியுள்ளார்கள். இவர்கள் அனைத்து தொழிலாள வர்க்க அமைப்புக்களதும் பேராளர் மகாநாட்டினைத் தட்டிக் கழிப்பதுடன் மட்டுமன்றி தமது தொழிற்சங்க சம்மேளனங்களினை கூட உரிய முறையில் கூட்டாது உள்ளனர். தமது ஒரு சில கையாட்களைக் கொண்டு பிற்போக்கு யூ. என். பி. அரசாங்கத்தினை காக்கும் தமது வேலை திட்டத்தினை நிறைவேற்றுவதும், யூ. என். பி. அரசாங்கத்தின் தொழில் ஆணையாளரின் கட்டளைகளை நிறைவேற்றுவதே இவர்கள் தொழிற்சங்க சம்மேளனங்களைக் கூட்டுவதற்கான முயற்சியாகும். இதனை நன்கு அறிந்த தொழிலாளர் நன்கு அறிவர். ஆதலால் அவற்றில் பங்கு கொள்வதை நிராகரிக்கவும் சில வேளைகளில் தொழிலாளர் தள்ளப்படுகின்றார்கள். தலைவர்கள் ஏற்படுத்தும் அழிவின் தரம் இதனால் நன்கு அம்பலமாகின்றது. தொழிற்சங்க இயக்கம் 1940ம் 1950ம் ஆண்டுக் காலப் பகுதிகளில் இந்நாட்டின் விலைவாசி உயர்வு, தொழில் வெட்டு, உதவிமானிய ஒழிப்பு நடவடிக்கைகள் தொடர்பாக எடுத்த நிலைப்பாட்டினை நினைவுகூர்வது இதனை விளங்கிக் கொள்ளப் போதுமானது. தொழிலாள வர்க்கத்தின் பொது வேலை நிறுத்தத்தினால் 1953ல் உணவுப் பங்கீட்டுப் புத்தகம் பறிப்பது தடுக்கப்பட்டது. இன்று பங்கீட்டுப் புத்தகம் பறிக்கப்பட்டுள்ள நிலையில் தொழிலாள — ஒடுக்கப்படும் மக்கள் திணிக்கப்படும் இச்சுமைகளை அவர்கள் சகித்துக் கொள்ள மாட்டார்கள். இந்நிலையிலும் தொழிலாள வர்க்க அமைப்புக்கள் முதலாளித்துவ ஆட்சியை கட்டிக் காக்கச் சபதம் பூண்ட துரோகத் தலைவர்களால் சிறைப்பிடிக்கப்பட்டுள்ளது.

இந்தத் துரோகத் தலைவர்களின் வர்க்கச் சமரச — பாராளுமன்ற வேலைத்திட்டத்தின் அடிப்படையில் கூட்டப்படும் எந்தவொரு மகாநாட்டினாலும் பலன் இல்லை. இதனை எந்தவொரு தொழிலாளியும் விளங்கிக் கொள்ள முடியும். புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் கூட்டும் தொழிலாளர் பேராளர் மகாநாடு தொழிலாள வர்க்க ஒடுக்கப்படும் மக்களை புரட்சிகரமான முறையில் அணிதிரட்டுவதையும், அதற்கு அவசியமான வேலைத்திட்டத்தினையும் கலந்துரையாடுவதை இலக்காகக் கொண்டது.

மக்கள் முன்னணி மரணப் பொறிகளைத் தகர்த்து எறிந்து இந்த பேராளர் மகாநாட்டினைத் தமது அமைப்புக்களைப் பங்கு கொள்ளச் செய்யும்படி அனைத்து தொழிலாளர் அமைப்புக்களதும் தலைவர்களுக்கு தொழிலாளர்கள் சிபார்சு செய்ய வேண்டும். கேவலம் தலைவர்களின் காட்டிக்கொடுப்புக்களை சகித்துக் கொள்வதை ஒரு முடிவுக்குக் கொணரும் காலம் வந்துவிட்டது. கேவலம் தலைவர்களை பதிலீடு செய்யும் கிளர்ச்சியைத் தொழிலாள வர்க்க இயக்கம் பூராவும் திடசங்கற்பத்துடன் தொடுக்க வேண்டும்.

துரோகத் தலைவர்களின் வர்க்கச்சமரச வேலைத்திட்டங்களுக்கு இடமளித்துக் காலங் கடத்துவதனது, ஆளும் வர்க்கத்தின் மக்கள் படுகொலைகள் நாட்டுப் போர்த்திட்டங்களை, இத்தலைவர்களின் உற்சாகமான பங்களிப்புடன் தொழிலாள — ஒடுக்கப்படும் மக்களின் குரல்வளையை சுற்றி இறுக்க அவகாசம் அளிப்பதாகும்.

தமிழ் தேசிய இனத்தினருக்கு எதிரான இனவாத யுத்தத்தினை எதிர்ப்பதும், தொழில் வேட்டையும், உதவிமானிய ஒழிப்பை எதிர்ப்பதும் முதலாளித்துவ அமைப்பினதும் அதன் அரசினதும் முழு அடிப்படையையும் எதிர்ப்பதாகும். தொழிலாள வர்க்கத்தினதும் ஒடுக்கப்படும் மக்களினதும் பெரும்பான்மையினர் இதனை இன்று அறிந்திருந்தாலும் இல்லாவிட்டாலும் உலக ஏகாதிபத்திய நெருக்கடியின் அர்த்தம் அதுவே.

ஆளும் வர்க்கத்தின் சகல பிரிவினரும் இதனை நன்கு புரிந்து கொண்டுள்ளனர். கண்ணுக்குத் தொழிற்சாலைப் போராட்டம் ஆகட்டும் தோட்டத் தொழிலாளரின் வேலைநிறுத்தம் ஆகட்டும் கிராமப்புற ஏழைகளின் எதிர்ப்பு ஆகட்டும் — காட்டுமிராண்டித்தனமான பொலிஸ் — இராணுவ ஒடுக்குமுறையைத் திணிப்பதன் மூலம் இனவாத யுத்தத்தினை கட்டவிழ்த்ததைப் போலவே அவர்களின் தனவானமிலச்ச முடிவுகளை அம்பலப்படுத்தி உள்ளனர். அத்தகைய அமைப்பின் ஆட்சியாளர்கள் வரலாற்றில் எப்போதும் இடம்பெற்றதுபோல் இம்முறையும் முழுப் பலமும் கொண்டு கோரிக்கைகளை முன்வைப்பவர்களை ஒழித்துக்கட்ட முயல்கின்றார்கள் பாண் இல்லையேல் கேக்சாப்பிடு என்பது இன்று சோறு இல்லையேல் துப்பாக்கிச் சூட்டுக்கு ஆளாகு என செயல்படுத்தப்படுகின்றது.

இந்நிலைமையின் கீழ் பாராளுமன்றத்தினுள் செய்யப்படும் மாற்றங்கள் பற்றி பயங்கரமான நப்பாசைகளை விதைப்பதன் மூலம், அரசியல் தீர்வு' காண்பது பற்றி வாயடித்து மக்கள் முன்னணி அரசியலில் ஈடுபட்டுள்ள சமசமாஜ — கம்யூனிச — நவசமசமாஜ — இ.தொ. கா—மத்தியவாத தலைவர்கள் தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகரப் பாதையை மூட தம்மால் ஆனதை எல்லாம் செய்கிறார்கள். தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகரத் தலைமையை நாசமாக்கும் பொருட்டு ஆளும்வர்க்கத்தின் சதியுடனும், வேட்டையுடனும் அணிதிரள்வதுடன் மட்டுமன்றி, அந்த எதிர்ப்புரட்சி நடவடிக்கைகளை தொடக்கி வைப்பதிலும் அவர்கள் முன்னணியில் நிற்கிறார்கள். இத்நூற்றாண்டின் முற்பகுதியில் ஜேர்மன் புரட்சியாளர்களான கார்கள் லீப்நெக்கை லக்சம்பேர்க்கினை ஜெர்மன், ஏகாதிபத்தியவாதிகளின் சார்பில் படுகொலை செய்த சமூக ஜனநாயகவாத தலைவர்களின் பிற்போக்கு சம்பிரதாயம், வர்க்க சமரசத் தலைவர்கள் அனைவரதும் சம்பிரதாயமாகும். இதனைத் தொழிலாள வர்க்கத்தின் சகல போராளிகளும் எச்சரிக்கையாகக் கொண்டு வர்க்க இயக்கத்தின் உள்ளே அந்த ஆபத்தினை ஒழித்துக் கட்டும் பொருட்டுப் போராட வேண்டும், அது புரட்சிகர வேலைத்திட்டத்தின் அடிப்படையில் தொழிலாள வர்க்கத்தையும் ஒடுக்கப்படும் மக்களையும் அணிதிரட்டி நடாத்தவேண்டிய போராட்டமாகும்.

முதலாளித்துவ அமைப்பினை தாக்கி வீசும் புரட்சிகர போராட்டத்தினை வெற்றிக்கு இட்டுச் செல்வதன் மூலமே நாற்றம் கண்ட முதலாளித்துவ அமைப்பு மூலம் சிருஷ்டிக்கப்படும் இந்த அழிவினை தடுத்துக் கட்ட முடியும். ஒடுக்கப்படும் மக்கள் குழுக்களின் தீர்க்கப்படாத அனைத்து பிரச்சினைகளுக்குமான ஜனநாயகத்தீர்வு வேலைத்திட்டத்தினை தமது சோசலிச வேலைத்திட்டத்துடன் ஒன்றிணைப்பதன் மூலம் தொழிலாள வர்க்கம் தனது சுயாதீனமான வர்க்க நடவடிக்கைகள் மூலம் அதற்கு தலைமைதாங்க வேண்டும்.

இதற்கு அவசியமான புரட்சிகரத் தலைமையை இந்நாட்டினுள் லியோன் ட்றொட்ஸ்கியின் நிரந்தரப் புரட்சிக் கோட்பாட்டின் அடிப்படையில் உலக சோசலிசப் புரட்சிக்காகப் போராடும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிகர கம்யூனிஸ்ட் கழகமே கட்டி எழுப்பி வருகின்றது.

இந்தியாவில் தொழிலாள வர்க்கத்தினையும் கோடானு கோடி ஒடுக்கப்படும் மக்களையும் நான்காம் அகிலத்தின் வேலைத்திட்டத்தின் அடிப்படையில் அணிதிரட்டப் போராடி வரும் சோசலிச லேபர் லீக்குடன் இணைந்து புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் போராடி வருகின்றது. இந்தியத் துணைக்கண்ட சோவியத் சோசலிச குடியரசின் மூலம், இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் இந்தத் துணைக் கண்டத்தினை வெட்டிக் கொத்தித் திணிக்கப்பட்ட ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ அரச அமைப்பினை ஒழித்துக் கட்ட வேண்டும். அது உலக சோசலிசப் புரட்சியின் இயக்கமான பணியின் ஒரு பாகமாகும். உலக சோசலிசப் புரட்சியின் வேலைத்திட்டத்திற்கு தோள் கொடுப்பதன் அடிப்படையில் அழிவுமிக்க ஏகாதிபத்தியஉலக அமைப்பினை உலக அரங்கில் இருந்து துடைத்துக் கட்ட முடியும்

அதன் பேரில் அனைத்துலகக் குழு தலைமை தாங்கும் நான்காம் அகிலமே போராடுகின்றது. அதன் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் சேர்ந்து அந்த வரலாற்றுப் புரட்சிகரப் பணிக்கு தலைமை தாங்கும் போராளிகளாக மாறும்படி தொழிலாள வர்க்க, இளைஞர்கள், கிராமப்புற ஏழை போராளிகள் அனைவரையும் அழைக்கின்றது.

★ யூ. என். பி. இனவாத யுத்தத்தின் தோல்விக்காக — தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைக்காகப் போராடு!

★ கிராமப்புறஏழைகளதும் இளைஞர்களதும் பரந்தளவிலான கோரிக்கைகளை நிறைவேற்றும் போராட்டத்தில் தொழிலாள வர்க்கத்தினை அடிபடுத்து!

★ ஏகாதிபத்திய பிடியைத் தகர்க்கவும், முதலாளித்துவ

(10-ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

# யாழ் - கோட்டையிலிருந்து இராணுவத்தினர் ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யும் கோட்டையை விடுதலைப் போராளிகள் மீண்டும் கைப்பற்றலாம் என படைத் தளபதிகளும், அரசாங்கமும் அஞ்சியமையே இராணுவம் வெளியேற்றத்துக்கான நிச காரணமாகும்.

வடக்கு-கிழக்கு யுத்த நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான பிரிகேடியர் விஜய விமலரத்னவும், யுத்த அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னவும் யாழ்ப்பாணம் சென்று நிலைமையை நேரில் பார்வையிட்ட பின்னரே இந்த ஓட்டமெடுக்கும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்பது தற்சமயம் தெரிய வந்துள்ளது.

1987ல் வடமராட்சியில் இடம் பெற்ற ஒப்பரேசன் லிபரேசன்' தோல்வி கண்டதன் பின்னர் இடம் பெற்றுள்ள இந்த ஓட்டமெடுப்பு சிங்கள முதலாளி வர்க்கத்திடையே பெரும் நெருக்கடியை உருவாக்கியுள்ளது. இலங்கை முதலாளி வர்க்கத்தின் நனவான பகுதியினரின் ஊது குழலான 'த சண்டே டைம்ஸ்' பத்திரிகை செப்டம்பர் 30ம் திகதி இதழில் இந்த நெருக்கடியை பிரதிபலிக்கும் விதத்தில் கூறியதாவது:

"... ...யாழ்ப்பாணக் கோட்டைக்கான போராட்டம் புகழுக்கான ஒரு போராட்டம் எனில் — இராணுவம் வெற்றி கண்டதெனில் இன்று தோல்வி கண்டது யார்?

"யாழ் கோட்டையில் இருந்து வெளியேறியதும் இராணுவத் தாக்குதல்களை தளர்த்தியதும், அடுத்த மாதம் பாரிசில் நடைபெறவிருக்கும் உதவி வழங்கும் குழுவின் கூட்டத்தினை இலக்காகக் கொண்டு நடைபெற்றதா? கண்ணிவெடிகளை தாண்டி யாழ்ப்பாணத்தில் முன்னேறிச் செல்லும் அளவுக்கு இராணுவத்தில் போராடக் கூடிய ஆட்கள் இல்லாததா? அல்லது யாழ்ப்பாண நகரத்தில் நுழைந்ததைத் தொடர்ந்து பெருமளவிலானோர் இந்தியாவுக்கு அகதிகளாக வெளியேற நேரிட்டதாலா? மூலோபாயம் இல்லாத இடங்களில் இராணுவத்தை நிறுத்துவது நல்லதல்ல என்பதனாலா? அல்லது 15000 மில்லியன் பாதுகாப்புச் செலவினங்கள் வரவு செலவுத் திட்டத்தில் ஏற்கனவே ஒதுக்கியுள்ள பணத்தைக் காட்டிலும் நூற்றுக்கு 50%ம் மேலதிகமாக உள்ளதாலும் அரசாங்க செலவினங்களில் நூற்றுக்கு 16% ஆக யுத்தச் செலவினங்கள் இருப்பதை பிரஜைகள் பொறுமையிழந்து பார்த்துக் கொண்டுள்ளதாலா?

"பொதுமக்களுக்கு முன்னெச்சரிக்கையாக குறிப்பிட வேண்டிய மற்றுமோர் விடயம் என்னவெனில் வெளிநாட்டு செலாவணியில் 3000 மில்லியன்களை செலுத்தி மேலதிக இராணுவ தளபாடங்களை கொள்வனவு செய்யும் தேவை ஏற்பட்டதா......"

தெற்கில் 1 இலட்சம் கிராமப்புற இளைஞர்களை கொன்று தள்ளி தமிழர் விரோத யுத்தத்தில் இறங்கிய இனவாத யூ. என். பி. அரசாங்கம் தமிழ் — சிங்கள தேசிய இனங்கள் இரண்டினதும் தொழிலாளர் — ஒடுக்கப்படும் மக்களை ஒடுக்கித் தள்ளும் இலக்கிலேயே செயற்பட்டு வந்தது இன்று முதலாளித்துவ ஆளும் வர்க்கத்தின் நெருக்கடி புதிய கட்டத்தினை அடைந்துள்ளது.

இலங்கை முதலாளித்துவ ஆளும் வர்க்கம் இந்நிலைமையை, மத்திய கிழக்கில் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் ஆக்கிரமிப்பு உலக அரசியல் நிலைமையில் பெரும் மாற்றத்தினை உண்டு பண்ணியுள்ள நிலைமையினுள் எதிர்கொள்ள நேரிட்டுள்ளது.

நெருக்கடியினுள் சிக்கலில் போயுள்ள யூ. என். பி. உள்ளடங்கலான ஆளும் வர்க்கத்தினை மீண்டும் முதலாளி வர்க்க ஆட்சியைக் காக்கும் சதிகளில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் இதனை இரண்டு முண்டுகோல்களின் துணையுடன் சாதிக்கலாம் என நம்புகின்றனர் முதலாவது: புதிய மட்டத்திலான எதிர்ப்புரட்சி காட்டிக் கொடுப்புக்களுக்கு அழைப்பு விடுக்கும் இலங்கை சமசமாஜ கம்யூனிச, நவசமசமாஜ இ.தொ.கா தலைமைகள். இரண்டாவது: வடக்கு — கிழக்கில் தமிழ் பொதுமக்களதும் விடுதலைப் போராளிகளதும் வெற்றிகளை விற்றுத்தள்ளும் கொடுக்கல் வாங்கல்களுக்கு தயாராகும் விடுதலைப் புலிகள் தலைமை.

இந்தியாவில் வெளியிடும் 'சண்டே' சஞ்சிகைக்கு விடுதலைப் புலிகளின் தலைவரான அன்டன் பாலசிங்கம் சமீபத்தில் அளித்த பேட்டியில் இலங்கை முதலாளிகள் போதுமான பிராந்திய சுயாதிபத்தியத்தினை வழங்கினால் ஐக்கிய இலங்கையினுள் செயற்பட விடுதலைப் புலிகள் தயார் எனத் தெரிவித்துள்ளார்.

பிரேமதாச அரசாங்கம் ஆயிரக்கணக்கான தமிழ் மக்களை கொன்றும், இலட்சக்கணக்கானோரை அகதிகளாக்கியும் யுத்தத்தினை நடாத்திக் கொண்டுள்ள நிலையிலேயே பேச்சுவார்த்தைக்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதுவும் இலங்கை முதலாளித்துவத்தின் இரு முக்கிய கட்சிகளான சு.ல.சு.க.வும் யூ.என்.பி.யும் வடக்கு — கிழக்கு மாகாணங்களை இணைக்க இடமளிக்க தயார் இல்லை எனக் கூச்சலிட்டு, இனவாத அக்கினிப் பிளம்புக்கு தூபமிடும் சமயத்திலேயே இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்பதையும் மனங்கொள்ள வேண்டும். இதன் பேரில் சிங்கள முதலாளிகள் முஸ்லீம் மக்களை மத அடிப்படையில் தனித்தனி பிராந்தியங்களை கோரும்படி தள்ளியும் மற்றும் தமிழ் குட்டி முதலாளித்துவக் குழுக்களுள் உதவியோடு கைக்கூலி ஊர்க்காவல் படைகளை அமைப்பதன் மூலமும் இரத்தக் களரிகளை ஒரு நிரந்தர அம்சமாக்கவும் தொழிற்பட்டும் வருகின்றது.

விடுதலைப் புலிகள் தலைமை ஒடுக்கும் சிங்கள முதலாளிகள், பிராந்தியத்தின் ஏகாதிபத்திய பொலிஸ்காரனான இந்திய ஆளும் வர்க்கம், ஏகாதிபத்தியவாதிகள் பக்கம் திரும்பியுள்ளது. ஏனைய முதலாளித்துவ தேசியவாதிகளைப் போலவே விடுதலைப் புலிகள் தலைமையும் தொழிலாளர்கள், ஒடுக்கப்படும் மக்களை சுரண்டுவதற்கான ஊடகம் ஒன்றையுத்தத்திலுள் உக்கிரம்கண்ணுள்ள அவல நிலைகளினுள் ஒடுக்கும் முதலாளி வர்க்கத்தில் இருந்து விடுதலை பெறும் அவசியமும் சகல சமூகப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வசியமும் தமிழ்பேசும் தொழிலாளர்கள் ஒடுக்கப்படும் மக்கள், விடுதலைப் போராளிகளுக்கு ஏற்பட்டுள்ளது. இது எந்த விதத்திலும் விடுதலைப் புலிகள் தலைமையின் சமரசம் தேடும் வேலைத்திட்டத்துடன் இணங்கிப் போக முடியாது. தமிழ் ஈழத்தின் தொழிலாளர்களுக்கும் விடுதலைப் போராளிகளுக்கும் மற்றும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் விடுதலைப் புலிகள் தலைமையின் தேசிய முதலாளித்துவ வேலைத்திட்டமானது அழிவுமிக்க சதியாகும். தொழிலாளர், ஏழை விவசாயிகள், விடுதலைப் போராளிகளை உள்ளடக்கிய ஆயுதம் தாங்கிய சோவியத்துக்களை கட்டி எழுப்புவதன் மூலம் ஒடுக்குவோரின் இராணுவ வேலைத்திட்டத்துக்கு எதிராக போராட்டத்தினை அபிவிருத்தி செய்ய வேண்டும்

● இனவாத யுத்தத்தினை நிறுத்து!

தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை உறுதி செய்!

● ஆக்கிரமிப்பு இராணுவத்தினை வடக்கு — கிழக்கில் இருந்து வாபஸ் பெறு!

● அரசியல் கைதிகளை விடுதலை செய்!

கிராமப்புற விவசாயிகளிற்கு உதவிமானியம் வழங்கு! விவசாயிகள் பிரச்சினையைத் தீர்த்து வை!

● உலக வங்கி, ஐ. எம். எப் முதலாளிகளின் தொழில் வெட்டு திட்டங்களை தோற்கடி!

● சுரண்டலை உக்கிரமாக்க சுதந்திர வர்த்தக வலயங்களை ஒதுக்கிக் கொடுக்கும் நடவடிக்கைகளை நிறுத்து!

## யூ. என். பி. இனவாத யுத்தம் வேண்டாம் . . .

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

சொத்துக்களை ஒழிக்கவும் சோசலிச வேலைத்திட்டத்தின் அடிப்படையில் அனைத்து தொழிலாள வர்க்க அமைப்புக்களையும் போராட்டத்துக்கு அணிதிரட்டு!

★ ஜனநாயக உரிமைகளைக் காக்கச் சபதம் பூண்ட அரசியல் நிர்ணய சபையை கூட்டு!

★ முதலாளித்துவ அரசின் சிவில் யுத்த தயாரிப்புக் தோற்கடிக்கும் பொருட்டு சோவியத் சபைகளையும் தொழிலாளர் பாதுகாப்பு அணிகளையும் கட்டி எழுப்பு!

★ அரசியல் கைதிகளை விடுதலை செய்!

★ பொலிஸ் — இராணுவத்தினை கலை!

★ சோவியத் சபைகளை அடிப்படையாகக் கொண்ட தொழிலாளர் — விவசாயிகள் அரசாங்கத்தை நோக்கி முன்னேறு!

★ இந்தியத் துணைக்கண்ட சோசலிச குடியரசின் ஒருபாகமாக இலங்கையின் சோசலிச குடியரசுக்கும் போராடு!

## லியொன் ட்ரொட்ஸ்கி படுகொலையின் 50வது நிறைவு.

நினைவுகூரும் கூட்டம்
மாலை 2 மணி.

அக்டோபர் 21

பதுளை

ட்ரொட்ஸ்கியின் புத்தக கண்காட்சி காலை 10 மணியிலிருந்து இறுதியில் ட்ரொட்ஸ்கியின் வாழ்க்கை பற்றிய வீடியோ செய்திப்படம்.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்


**International Worker**

**SUBSCRIPTION RATES**

*£12.00 - 1 year (24 issues)*
*£6.00 - 6 months (12 issues)*
*£2.50 - 3 months (6 issues)*

**International Worker**

Organ of the Central Committee of the ICP British section of the ICFI


*International Worker* is the fortnightly organ of the Central Committee of the International Communist Party, British section of the International Committee of the Fourth International.

NAME: ------------------------------------------------

ADDRESS: ------------------------------------------------

Order from - International Worker, PO Box 71, Rotherham, S Yorks.


## The Heritage We Defend Published in Sri Lanka




The Bulletin is proud to announce the publication in Sinhalese of the first volume of *The Heritage We Defend* and of *Perestroika Versus Socialism: Stalinism and the Restoration of Capitalism in the USSR*.

These two books, written by Workers League National Secretary David North, have been published by the Revolutionary Communist League, the Sri Lankan section of the International Committee of the Fourth International.

*The Heritage We Defend* is a Marxist analysis of the history of the Fourth International since the assassination of Leon Trotsky 50 years ago. Its focus is the fundamental political and theoretical issues which have confronted the Fourth International since its founding and the struggle waged by the Trotskyist movement against Stalinism, bourgeois nationalism and various forms of petty-bourgeois radicalism. The book originated in the struggle waged by the International Committee of the Fourth International against the renunciation of Trotskyism by the British Workers Revolutionary Party.

The appearance of this book in Sri Lanka, where the history of the workers' movement is so intimately bound up with the struggles of the Trotskyist movement, is of particular importance. *The Heritage* reviews key episodes in the history of the Trotskyist movement in that country, including its heroic struggle against British imperialism during World War II and the subsequent betrayal of working class by the renegades of the Lanka Sama Samaja Party, which entered the bourgeois coalition government of Madame Bandaranaike in 1964.

The original English-language edition of the book was dedicated to Comrade Keerthi Balasuriya, a leader of the International Committee of the Fourth International and the general secretary of the Revolutionary Communist League until his sudden death on December 18, 1987. Comrade Balasuriya himself wrote an imperishable chapter in the struggle for Trotskyism, entering the Trotskyist movement at the age of 16 and fighting against the historic betrayal carried out by the leadership of the LSSP. It was this decadeslong struggle against opportunism which prepared the Revolutionary Communist League, which alone has provided revolutionary leadership to the working class under the conditions of civil war and revolutionary crisis now raging in Sri Lanka.

www.padippakam.com





## அக்டோபர் புரட்சியில் லெனினுடன் இணைத்தலைவரும் நான்காம் அகிலத்தின் ஸ்தாபகருமான லியான் டிராட்ஸ்கி

### ஸ்டாலினால் படுகொலை செய்யப்பட்டு 50ம் ஆண்டு நினைவுக்கூட்டம்

### 1940 - 1990

அக்டோபர் 21, ஞாயிறு காலை 10 மணிக்கு பயணிகள் விடுதி (கிரீன்லாண்ட்)
ரயில்வே காலனி அருகில் மதுரை


# தொழிலாளர் பாதை

விலை: 1/50

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவுடன் ஐக்கியம் கொண்ட சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் மாத வெளியீடு

இதழ் எண் 35 ★ அக்டோபர், 1990 ★


**தொழிலாளர் பாதை**

பின்வரும் தொழிலாளர் பாதை இதழ்களிலிருந்து தொகுக்கப்பட்ட கட்டுரைகள்,

எண்.398 செப்.1990, எண்.400 நவம்.1990- புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்- இலங்கை-

எண்.35 ஒக்டோபர்,1990 சோசலிசத் தொழிலாளர் கழகம்.

# 1947ல் நடந்த இரத்த பிரளயத்தை மீண்டும் ஏற்படுத்த ஏகாதிபத்திய வங்கியாளர்களும் இந்திய முதலாளித்துவமும் சேர்ந்து நடத்தும் கூட்டுச் சதியை தோற்கடி !

1947ல் இந்திய உபகண்டத்தில் தொழிலாளர்களும், விவசாயிகளும் ஒன்றுபட்டு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக நடத்திய புரட்சிகரமான போராட்டத்தினை கண்டு நடுநடுங்கிய பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமும், இந்திய முதலாளித்துவமும் கூட்டுச்சதி செய்து பிரமாண்டமான தொழிலாளர் விவசாயிகளின் புரட்சிகர இயக்கத்தை உடைப்பதற்கு ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் கட்சியின் ஒத்துழைப்புடன் மதவகுப்பு வாதத்தை தூண்டிவிட்டு, கலவரங்களை உண்டுபண்ணி முன் கண்டிராத அளவில் லட்சக்கணக்கான சகோதர கொலைகளை ஏற்படுத்தியதன் மூலமாக தமக்கு எதிராக திரண்டு எழுந்து வந்த மாபெரும் புரட்சி இயக்கத்தினை தமது துப்பாக்கி குண்டுகளுக்குஅதிகசெலவில்லாதுபல வீனப்படுத்தி, சிதறடித்து இரத்த வெள்ளத்தில் மூழ்கடித்து நசுக்கினர்களோ அதைவிடகோரமான சகோதர யுத்தக் கொலைகளுக்கு இன்றைய இந்திய முதலாளித்துவ ஆட்சியாளர்களும், ஏகாதிபத்திய வங்கியாளர்களும் கூட்டாக நடத்தும்சதியின் வெளிப்பாடுகளே வி.பி சிங்கின் மண்டல் கமிஷன் இடஒதுக்கீடு பிரகடனங்களும், அத்வானியின் 'ராம் ரதயாத்திரைகளும், தேவிலால்களின் நகரவாசிகளுக்கு எதிரான போராட்டமும் ஆகும். மோசமான அரசியல், பொருளாதார நெருக்கடியிலுள்ள அரசாங்கத்தினால் தொடுக்கப்படும் தாக்குதலுக்கு எதிராக கிளர்ந்தெழும்தொழிலாளர்களையும், இளைஞர்களையும் விவசாயிகளையும் இதர ஒடுக்கப்படும்மக்களையும் பிளவுபடுத்தக்கூடிய அனைத்து வழிகளையும் கையாண்டு புரட்சிகர போராட்டங்களை இரத்த வெள்ளத்தில் மூழ்கடிப்பதற்காக இந்திய ஆளும்வர்க்கமும் ஏகாதிபத்திய வங்கியாளர்களும் செய்யும் சூழ்ச்சிகளை தோற்கடிக்க புரட்சிகர சோசலிச ஜனநாயகவேலைத்திட்டத்தின் அடிப்படையில் ஒரு காலவரையற்ற பொதுவேலைநிறுத்தத்தின்மூலம்தொழிலாளவர்க்கம் தனது முழு வர்க்கபலத்தையும் அணிதிரட்டி தனதுதலைமையின்கீழ் இளைஞர்களையும்,ஏழை விவசாயிகளையும், ஒடுக்கப்படும் மக்களையும் கொண்ட வெகுஜன இயக்கங்களையும் கூட்டுச்சேர்த்து இச்சூழ்ச்சிகளை தோற்கடிக்க போராட வேண்டும். தொழிலாள வர்க்கத்தின், ஒடுக்கப்படும் மக்களின் ஐக்கியத்தை பேணவும், மத சாதி, மொழி வகுப்புவாத கலவரங்களை திட்டமிட்டே உண்டுபண்ணும் குண்டர்களை தோற்கடிக்கவும் ஒடுக்கப்படும் சிறிய மதப்பிரிவினர்களை (இஸ்லாமியர், சீக்கியர்களை) பாதுகாக்கவும் தொழிலாளர் பாதுகாப்புகுழுக்களையும், சோவியத்துகளையும் (தொழிலாளர் சபைகளையும்) நிறுவும் போராட்டத்தை தொடங்குமாறு வர்க்க நனவு உள்ள தொழிலாளர்களையும் இளைஞர்களையும் நான்காம்அகிலத்தின் அனைத்துலகக் குழுவுடன் ஐக்கியம் கொண்ட சோசலிசத் தொழிலாளர் கழகம் அழைக்கிறது

நான்கு பத்தாண்டுகளுக்கு கூடுதலாக பேணப்பட்டு வந்த யுத்த பிற்கால சமநிலை உடைந்துவிட்டது தொடர்ந்து அதிகரிக்கும் ஏகாதிபத்தியத்தின் ஸ்திரமற்ற நிலைமையானது சர்வதேச ரீதியாகவே 1930களை விட மோசமான ஒரு உலக பொருளாதாரமந்த நிலையை (Depression) உண்டுபண்ணும் நுழைவாயிலில் நிற்கின்றது. அதே சமயம் இதனால் முடுக்கி விடப்பட்டு பிரமாண்டமான முறையில் சர்வதேச தொழிலாளவர்க்கத்தின் கிளர்ச்சி இயக்கம் வளர்ச்சி கண்டு வருகிறது. இந்த ஒரு பகுதியாகவே இந்திய உபகண்டத்திலும் யுத்த பிற்காலத்தில் உருவாக்கப்பட்ட வகுப்புவாத அரசு அமைப்புகள் தொழிலாள வர்க்கத்தின், விவசாயிகளின் ஒடுக்கப்படும் மக்களின் வர்க்கப் போராட்டங்களினால் ஆட்டம் கண்டுள்ளன இவ்வாறாக வளர்ச்சி அடையும் பிரமாண்டமான இயக்கத்தைராணுவபலத்தைமட்டும் கொண்டுஒடுக்கிவிட முடியாது என்பதை வரலாற்று அனுபவங்களின் மூலம் ஆளும் வர்க்கத்தினர் கண்டு கொண்டுள்ளனர். மிக அண்மைக்கால படிப்பினையை உலகத்தின் நான்காவது பெரும் ராணுவம் எனக் கருதப்படும் இந்திய ராணுவம் தமிழீழத்தில்கற்றுக் கொண்டது ஒரு மாதத்தில் தமிழீழ விடுதலை போராளிகளை நிராயுத பாணியாக்குவோம் என்று தம்பட்டம் அடித்து இறுதியில் அம்முயற்சியில் தோல்வியடைந்து அவமானத்துடன்வெளியேறும்படியானது

பாகிஸ்தான், பங்களாதேஷ் பர்மா இலங்கை போன்ற நாடுகளிலுள்ள முதலாளித்துவ ஆட்சியாளர்கள்போனபாட்டிச போலிஸ் ராணுவ சர்வாதிகார ஆட்சிகளை பல வருடங்களாகவும் பத்தாண்டுகளும் கூட நீடித்து நடத்தி வர்க்கப் போராட்டங்களை நசுக்கி தமது நெருக்கடியான ஆட்சிகளை தக்க வைத்துக் கொள்ளமுயற்சித்து வருகின்றனர் ஆனால் அப்படியானஆட்சி வடிவத்தை, இந்தியா போன்ற பிரமாண்டமான மக்கள்தொகையும் (80கோடி) சக்தி வாய்ந்த தொழிற்துறை தொழிலாள வர்க்கத்தையும் கொண்ட நாட்டில் நீடித்து நடத்த முடியாதென்பதை நன்கு அறிந்து கொண்ட இந்திய முதலாளித்துவம் எல்லைப்போர்களை பாகிஸ்தானுடனும், சீனவுடனும் உண்டாக்கி அதன்மூலம் வர்க்கப் போராட்டங்களை ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் கட்சித்தலைமைகளின் உதவியுடன் தேசிய

2ம் பக்கம் பார்க்க

**அனைவருக்கும் வேலை, கல்வி, இருப்பிடம், மருத்துவ வசதியை உத்தரவாதம் செய்யும் சோசலிச ஆட்சி அமைக்கப் போராடும்படி சி. பி. எம், சி. பி. ஐ. தலைமைகளை நிர்ப்பந்தி !**

படிப்பகம்

www.padippakam.com



# 1947ல் நடந்த இரத்த பிரளயத்தை...

வெறியில் மூழ்கடித்து வந்துள்ளது. நாடு பரந்தளவில் 'அவசரநிலை சட்டம்' (1975-77) பிரகடனம் செய்யப்பட்டு நடத்திய மிருகத்தனமான ராணுவ நடவடிக்கைகளை நீடிக்க முடியாத அளவிற்கு பெரும் எதிர்ப்புவெடித்தெழுந்தது, இதனால் 1975ல் பிரகடனம் செய்யப்பட்ட அவசரநிலை சட்டம் 1977ல் வாபஸ் வாங்கபட்டு பாராளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள் இந்தியா போன்ற பெரும் காலனிகளை கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பதற்கு கையாண்ட பிரித்து, ஆளும் சூழ்ச்சிகளை நன்கு கற்றறிந்த அவர்களது சீடர்களான இந்திய முதலாளித்துவ வர்க்கத்தினர் தமது ஆட்சிமுறைக்கு பேராபத்து ஏற்பட்டுள்ளது என்பதை அறிந்து மத, சாதி மொழி கலவரங்களை தீவிரமாக முன்னெடுக்கதீர்மானித்துள்ளனர்.

அதே சமயம் பாரதீய ஜனதாக்கட்சி மதிப்பிழந்துள்ள இதர இரு முக்கிய முதலாளித்துவ கட்சிகளினால்(தேசியமுன்னணி,காங்கிரஸ்) ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை நிரப்புவதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது, ஆனால் வி. பி. சிங்கின், அத்வானியின் (பாரதீய ஜனதாக் கட்சித் தலைவரின்) நடவடிக்கைகளை இடைத்தேர்தல் வருமாயின் வாக்குகளை சேகரிப்பதற்கான செயல்களாக முதலாளித்துவ பத்திரிகைகளும முதலாளித்துவ அரசியல்வாதிகளும் சிறுமைப் படுத்திக் காட்டுகின்றன ஆனால் உண்மையில் வி.பி.சிங்குகளும் அத்வானிகளும்,ராஜிவ்காந்திகளும் தமக்குள்ளே ஒரு தொழிற்பங்கீட்டைஏற்படுததி முதலாளித்துவ அரசாங்கத்திற்கு எதிராக வளர்ச்சி அடையும் போராட்டங்களை மக்களுக்குள்ளேயான போராட்டங்களாக மாற்றுவதில் கண்ணும் கருத்துமாக செயல்படுகின்றனர்.

## உலக அரசியல், பொருளாதார நெருக்கடியின் தாக்கம்

இந்திய முதலாளித்துவ வர்க்கத்தை இந்த எதிர்ப்புரட்சி சதித்திட்டத்தில் தீவிரமாக தள்ளுவது இன்றைய உலக அரசியல்,பொருளாதார அழுத்தங்களின் கீழ் மிகவும் மோசமான நிலையை அடைந்துள்ள இந்திய, அரசியல், பொருளாதார நெருக்கடிகளாகும்.

கடந்த இரு பத்தாண்டுகளில் கமபியூட்டர்களிலும் தொடர்பு சாதனங்களிலும ஏற்பட்ட தொழில்நுட்பப் புரட்சியானது பூகோளமயப் படுத்தப்பட்ட உற்பத்தி முறையை கொண்ட உலகப் பொருளாதாரத்தை முன்கண்டிராத வகையில் ஒருங்கிணைத்தது. முன்பு வரையப்பட்ட தேசிய எல்லைக்கோடுகள் உலகப்பொருளாதாரத்தின் இயக்கத்துக்குதடையாக உள்ள நிலையில் உலகப் பொருளாதாரத்துக்கும் காலாவதியாய்போன தேசிய அரசு அமைப்பு முறைக்கும் இடையிலான முட்டிமோதல்கள் கூர்மை அடைகின்றன. இவற்றின் தீவிர வெளிப்பாடாகவே தீவிர தேசியவாத பொருளாதார கொள்கையை பல பத்தாண்டுகள் பின்பற்றி வந்த கிழக்கு ஐரோப்பிய பொருளாதாரங்கள் வீழ்ச்சி அடைந்து அந்நாடுகளின் ஸ்டாலினிச ஆட்சியாளர்களின் வீழ்ச்சிக்கும் காரணமாக அமைந்தது. சோவியத் யூனியன், சீனா, வியட்நாம், கியூபா ஆகிய நாடுகளின் பொருளாதார நெருக்கடிக்கும் இந்தியா, இலங்கை, பாகிஸதான், பர்மா, பங்களாதேஷ் போன்ற பின்தங்கிய நாடுகளின்பொருளாதார நெருக்கடிக்கும் இவையே அடிப்படைக் காரணம் மேலும் இந்த ஏகாதிபத்திய சகாப்தத்தின் இந்த அடிப்படை முரண்பாடானது ஏகாதிபத்திய சக்திகளுக்கு இடையிலான பகைமையையும் கூர்மை அடையச் செய்துள்ளது. இந்நிலைமையிலே யே ஏகாதிபத்தியத்தின் இயல்பான குணாம்சத்தின் வழி மீண்டும் உலக சந்தையை மறுபங்கீடு செய்ய, கச்சாப் பொருட்களை சூறையாட, உபரி உழைப்பை அதிகமாக்க மறுபடி உலக யுத்தத்தை நடத்த தயார் செய்கின்றன, அமெரிக்க முதலாளித்துவம் பொருளாதாரத்திலும், நிதி நிலைமையிலும் அடைந்துள்ள பாதாள வீழ்ச்சியானதுஅமெரிக்க தொழிலாளவர்க்கத்துக்கும் மற்றும் அராபிய, ஆபிரிக்கா, ஆசியா போன்ற வரலாற்று ரீதியாக்காலனித்துவ ஒடுக்குமுறையை அனுபவித்து வந்தவர்களுக்கு எதிரான கோரமான தாக்குதல்களுக்கு உந்தும் காரணியாக உளளது'

இந்நிலைமையில் உலகப் பொருளாதாரத்தின் அழுத்தத்தின் கீழ் சுயபூர்த்தி கொள்கைகளை, (ஆந்தியனுக இரு. இந்திய பொருளை வாங்குஎன்ற கொள்கையை) பின்பற்றிய இந்தியாபோன்ற பின் தங்கிய நாடுகள் அவற்றை கைவிட்டு வெளிப்படையாகவே ஏகாதிபத்திய மூலதனங்களை தமது பிராந்தியங்களில் முதலீடு செய்யும் படி மன்றாடுகின்றன. மேலும் ஏகாதிபத்தியவாதிகளை திருப்திப்படுத்துவதற்காக புதிய தொழிற்கொள்கைகளை வி.பி.சிங் ஆட்சியினர் கொண்டு வந்துள்ளனர். இது பரந்தளவில் ஆலை மூடல்களையும், ஆட்குறைப்புகளையும், வேலைப்பளு அதிகரிப்பையும், சம்பள வெட்டுகளையும் மேலும் பன்மடங்கு அதிகரிக்கச் செய்யும், 3 லட்சம் கோடி ரூபாயை வெளிநாட்டு, உள்நாட்டு கடனாக கொண்டுள்ள நிலையில் ரூபாயின் மதிப்புமேலும் வீழ்ச்சி அடைந்து விலைவாசி ஏற்றத்தை தொடர்ந்து அதிகரிக்க செய்வது தொழிலாளர்களின், மத்தியதர வர்க்கத்தின், மற்றும் ஏழை விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தையும் மோசமாக்கி வருகிறது.

இந்நிலைமையை மேலும் மத்திய கிழக்கு நெருக்கடி உக்கிரப்படுத்தி உள்ளது. இதுபற்றி நிதி அமைச்சர் மதுதண்டவதே பின்வருமாறு கூறியுள்ளார். "வளைகுடா நெருக்கடியினால்பலபிரச்சினைகள் தோன்றியுள்ளன. இவற்றுள்மிக முக்கியமானது நமது இறக்குமதிப் பொருள்களின் மதிப்பு கணிசமாக உயர்ந்தது. இரண்டாவது நமது நிதி நெருக்கடி இந்தசூழ் நிலையைசமாளிக்க இந்தியா போன்ற நாடுகளுக்கு விசேஷ உதவி எதையும் சர்வதேச நிதி நிறுவனமும் உலக வங்கியும் செய்யாது என்பது தெளிவாகி விட்டது எனவே பிரச்சினைக்குத் தீர்வு காண கடினமான முடிவுகளை நாம் தான் எடுத்தாக வேண்டும்"

பிரதமர் வி.பி.சிங் இது பற்றி குறிப்பிடுகையில்: 'வளைகுடா நெருக்கடியினால் ஏற்பட்டுள்ள பொருளாதார பிரச்சினைகளை நாம் கற்பனை செய்து கூட பார்க்கவில்லை இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள மக்களின் நம்பிக்கையை முதல்வர்கள் பெற வேண்டும்.... 'வளைகுடாவில் ஏற்பட்டுள்ள சம்பவங்கள் காரணமாக இந்தியா மீது திணிக்கப்பட்டுள்ள "பொருளாதார யுத்தத்தை' எதிர்கொள்ள தியாகங்களை செய்ய மக்கள் தயாராக தயாராக வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

'தினமணி 12—10—90)

ஜனதாதள ததின்மூத்த தலைவரான சந்திரசேகர். விக் பத்திரிகைக்கு அளித்தபேட்டியில சந்தர்ப்பவாத காரணங்களுக்காக வி.பி.சிங்கின் கொள்கைகளை எதிர்ப்பது போல் காட்டிக்கொண்டார். "நாடு, மிக மோசமான காலத்தை எதிர்கொண்டுள்ளது. நெருக்கடி எல்லா முனைகளிலும் ஆழமாகி உள்ளது.........இப்போதுவகுப்புவாத சக்திகளுக்கு சவால்விடுபவர்கள் யாருமே இல்லை போல் தோன்றுகிறது. அவற்றுடன் மக்கள், அதன் நீண்ட காலபிரதிவிளைவுகளை புரிந்து கொள்ளாமல் உடனடி நலன்களுக்காக கூட்டாக சதி செய்துகூட ஒத்துழைக்கின்றனர்.........சமூக பதட்ட நிலைமைகள் வளர்ச்சி அடைகின்றன. அதன் அண்மைக்கால உதாரணம்தான் மண்டல் கமிஷன் அறிக்கையை அமல் படுத்துவதாக பிரகடனம் ஆகும் யாரும் எதையும் பெற்று விடவில்லை, யாரும் எதையும் இழக்கவும் இல்லை. ஆனால் பதட்டம் அதிகரித்து உள்ளது. 'மக்கள் தமக்குள்ளேயே போராடுகிறார்கள்' என்று கூறியுள்ளார்.

## ஒரே அணியில் முதலாளித்துவமும் ஸ்டாலினிசமும்

இடஒதுக்கீடு கொள்கையை ஆதரிப்பதாகவும் ஆனால் அதனை வி.பி.சிங் செயல்படுத்தும் விதத்தை எதிர்ப்பதாகவும்சந்திரசேகர் கூறியுள்ளார். இதே பித்தலாட்ட நிலைப்பாட்டையே பாரதீய ஜனதாக் கட்சியும், காங்கிரஸ் கட்சியும் எடுத்துள்ளன. 1934ல் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தினால் இந்தியஅரசாங்கவேலைகளில் அறிமுகப்படுத்தப் பட்ட பிரித்து ஆளும் சாரத்தைக்கொண்ட இட ஒதுக்கீடு கொள்கையை தொடர்வதில் அனைத்து முதலாளித்து கட்சிகளிலும், ஸ்டாலினிச கம்யூனிச கட்சிகளும் ஒன்றுபட்டு நிற்கின்றனர். ஆனால் அதை என்ன விதத்தில் செயல்படுத்துவது என்பது சம்பந்தமாக சில கருத்து வேறுபாடுகள் கொண்டுள்ளனர். இந்திய முதலாளித்துவமும், ஏகாதிபத்திய வங்கியாளர்களும கூட்டாகவே மோசமான பொருளாதார நெருக்கடியினால் வளர்ச்சிஅடையும் சமூக கொந்தளிப்பை,சமூககலவரங்களாக மாற்றும் திட்டத்தை தீட்டி உள்ளனர். 10 வருடங்களுக்கு முன்பே இட ஒதுக்கீடு பற்றி முன்னைய பீகார் முதன் மந்திரியாக இருந்த பி.பி. மண்டல் தலைமையான குழு வழங்கிய சிபாரிசுகளை செயல்படுத்த வேண்டிய தருணம் இதுதான் என்பதை சிறுபான்மை தேசிய முன்னணி அரசாங்கம் கண்டுள்ளது. தமது எதிர்புரட்சி திட்டங்களை மூடி மறைத்து "குடிசைகளில் வாழ்பவர்களுக்கும் நாட்டை ஆள்வது சம்பந்தமாக சொல்வதற்கு உண்டு என்பதை உத்தரவாதம் செய்ய"தான் மத்திய அரசாங்க வேலைகளிலும கல்வி நிறுவனங்களிலும்27சதவீதத்தை "பின் தங்கிய வர்க்கங்களுக்கு" ஒதுக்கி உள்ளதாக வி.பி.சிங் கூறியுள்ளார்.

கடந்த 43 வருடங்களாக சுதந்திர ஆட்சி என்ற போர்வையில் டாட்டா, பிர்லா போன்ற சுரண்டும் முதலாளி வர்க்கத்தினர் தமது செல்வங்களை பெருக்கவும், நாட்டின் பாதிக்கு மேற்பட்ட மக்கள் தொகையினர் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்க்கை நடத்தவும், 12 கோடிக்கு மேல் டோர் வேலையின்றி இருப்பதற்கும் லட்சக்கணக்கான ஆலைகள் நலிந்த நிலையில் இருப்பதற்கும், சிறிய, மத, மொழி பிரிவினர்களின் அடிப்படை உரிமைகள் பறிக்கப்படுவதற்கும் விவசாயிகளின், விவசாயத் தொழிலாளர்களின் நிலைமைகள் மிக மோசமடைவதற்கும் உலக வங்கியாளர்களுடன் நீண்ட காலமாக ஒத்துழைத்து வருபவர்களில் முக்கியமான ஒருவரான வி.பி.சிங் "பின் தங்கிய வர்க்கங்களின் மேம்பாட்டுக்காகவும், "குடிசைகளில் வாழ்பவர்கள் நாட்டை ஆள்வது சம்பந்தமாக பேசுவதற்கும்"என்று கூறுவதெல்லாம் நச்சுத்தன்மானமோசடிகளே என்பதை வர்க்க நனவுள்ள அனைத்து தொழிலாளர்களும் அறிவார்கள்.

இட ஒதுக்கீடு கொள்கை சம்பந்தமான மண்டல் குழுவின் சிபாரிசுகள் அமல் படுத்தப்படும் என்று அறிவித்த பின்னர் நாடு பரந்தளவில் மாணவர்களின் எதிர்ப்பு போராட்டங்களும், சாதிக் கலவரங்களும் வெடித்தெழுந்துள்ளன. பல மாணவர்கள் தீக்குளித்து தற்கொலை செய்துள்ளனர். போலிஸ் ராணுவத்திற்கும்மாணவர்களுக்கும் இடையே நடந்த மோதலில் மாணவர்கள் பலர் சுட்டுக் கொல்லபட்டுள்ளனர். வேலையின்மையானது உலகமுதலாளித்துவ நெருக்கடியின் காரணமாக மேலும் அதிகரித்து வரும் நிலைமையிலும் போதிய கல்லூரிகளும்,பல்கலைக்கழகங்களும் இல்லாத பற்றாக்குறையான நிலைமை இருக்கையில் ஏற்கனவே இடஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களை நிரப்புவதிலே "பிற்படுத்தப் பட்ட வர்க்கங்களுக்குள்ளேயே" பலத்த போட்டி அதிகரித்துள்ளது. பணம் மிகுந்த செல்வாக்கு நிறைந்த "பிற்படுத்தப்பட்ட" பிரிவினரால் மட்டுமே போட்டியில் வெல்ல முடிகிறது. மண்டல் குழுவின் சிபாரிசுகள் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள் மத்தியில் வர்க்க ஐக்கியத்தை உடைப்பதையும் முதலாளித்துவ அரசாங்களுக்கு எதிராக வளர்ச்சி அடையும் தொழிலாளர்களின் விவசாயிகளின் புரட்சிகர இயக்கங்களை தோற்கடிப்பதற்கு தொழிலாள விரோத பிற்போக்கு கட்டி முதலாளித்துவ சக்திகளை வளர்ப்பதற்கும் ஆகும்.

மரண நெருக்கடியிலுள்ள முதலாளித்துவ அமைப்புக்கு புத்துயிர் அளிப்பதற்காக முதலாளித்துவ பிரதிநிதிகளும், ஸ்டாலினிஸ்டுகளும் கோருகிற அனைத்துதியாகங்களையும் மகிழ்ச்சியுடன் நிராகரித்து முதலாளித்துவ அமைப்புக்கு உள்ள அரசியல்; பொருளாதார நெருக்கடிகளை மேலும்ஆழப்படுத்தி முதலாளித்துவ அமைப்பை தூக்கி வீசிஉற்பத்திசாதனங்களை தொழிலாள வர்கக்த்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து திட்டமிட்ட சோசலிசப் பொருளாதாரத்தை உருவாக்க தொழிலாள வர்க்கம் போராட வேண்டும் ஒருபுறம் இந்திய முதலாளித்துவம், ஏகாதிபத்திய வங்கியாளர்களுடன் சேர்ந்து மதக்கலவரங்களை உண்டு பண்ணி அப்பட்டமான சர்வாதிகார ஆட்சிக்கான தயாரிப்பில் ஈடுபட்டுள்ளது, மறுபுறம ஸ்டாலினிச கம்யூனிச கட்சிகள் மக்கள் முன்னணி (வர்க்கக் கூட்டு) கொள்கை மூலம் முதலாளித்துவ ஆட்சியை தக்க வைக்க முயற்சிக்கின்றனர். இந்த அடிப்படையிலேஸ்டாலினிச கம்யூனிஸ்ட கட்சித்தலைவர்கள், 'தேசிய ஒருமைப்பாட்டு கவுன்சில்' கூட்டம் களில்பங்கு கொண்டு,தேசிய ஒருமைபபாட்டை காப்பாற்ற அனைத்து கட்சிகளும் எப்படி ஒன்றுபட்டு செயல்பட வேண்டும் என்பதுபற்றி 'விரிவுரை' நிகழ்த்துகின்றனர். தேசியவாதம், மத, சாதி வகுப்பு வாதங்கள் அனைத்துமே நெருக்கடியிலுள்ள முதலாளித்துவ ஆட்சியை தக்கவைப்பதற்காக முதலாளித்துவவர்க்கத்தின் அரசியல் பிரதிநிதிகளால் தூண்டிவிடப்படும் விஷக்கிருமிகள் என்பதை தொழிலாள வர்க்கத்திற்கு மூடி மறைக்கின்றனர்.

பாரதிய ஜனதாக்கட்சியின் வகுப்பு வாததிற்கு எதிராக

★11ம் பக்கம் பார்க்க


## Soeben erschienen!




Die jetzt als Broschüre veröffentlichte Erklärung des Zentralkomitees des Bunds Sozialistischer Arbeiter, der deutschen Sektion des Internationalen Komitees der Vierten Internationale, vom 21. Oktober 1990 analysiert die Ursachen für den Zusammenbruch der DDR, die Rolle und den Verrat des Stalinismus sowie die Rolle der Sozialdemokratie und der kleinbürgerlichen „Linken". Sie geht auf den Zusammenhang zwischen dem Sturz der stalinistischen Nationalstaaten Osteuropas und der Weltkrise des Imperialismus ein und erklärt das Programm und die Perspektiven des Bunds Sozialistischer Arbeiter für die Arbeiterklasse.

**Bestellung über:**
**Arbeiterpresse-Verlag, Postfach 100 105, 4300 Essen 01.**
Preis: DM 1,—


படிப்பகம்

www.padippakam.com



# தோழர் சேதுராமனின் நினைவு நீடூழி வாழ்க!

உலக டிராட்ஸ்கிச இயக்கமான நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் தீவிர அரசியல் ஆதரவாளரான தோழர் சேதுராமன் 65 வயதில் புற்று நோயினால் பாதிக்கப்பட்டு மரணமடைந்துள்ளார் நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவுடன் ஐக்கியம் கொண்ட இந்திய டிராட்ஸ்கிச இயக்கத்துடன் கடந்த ஒரு வருட காலமாக நெருக்கமாக ஒத்துழைத்த தோழர்சேதுராமனின் மறைவுக்கு சோ.தொ. கழகம்அதன் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கிறது. தோழர் சேதுராமனின் நினைவுக்கூட்டங்களை திருச்சியிலும், மதுரையிலும், கல்கத்தாவிலும் நடத்த எண்ணியுள்ளது

சேதுராமன் தனது வாழ்க்கையின் இறுதிக் காலப்பகுதியில் நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் மற்றும் வொர்க்கர்ஸ் லீக்கின் முக்கிய அரசியல், தத்துவார்த்த கட்டுரைகளை தமிழில் மொழிபெயர்ப்பதில்ஈடுபட்டிருந்தார். அவர் டிராட்ஸ்கியின இடைமருவு வேலைத்திட்டத்தையும், ஸ்டாலினிசமும், போல்ஷேவிசமும் எனப்படும் சிறு நூலையும் தமிழில் மொழி பெயர்த்தார். அவர் டிராட்ஸ்கிசத்தின் மீதும், நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் மீதும் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்தார். அவர் செப்டம்பர் 11, 1989ல் சோசலிசத்தொழிலாளர் கழகத்திற்கு எழுதிய கடிதத்தில் பின்வருமாறுகுறிப்பிட்டார்: ''உலகப் பாட்டாளி வர்க்கத்தின் விடுதலைக்காக வேலை செய்வதைவிட சிறந்த சேவை எதுவும் கிடையாது. டிராட்ஸ்கிசம்தான மார்க்சிசம் லெனினிசம், பாட்டாளி வர்க்க சர்வதேசியம், டிராட்ஸ்கி காட்டிய நிரந்தரப் புரட்சி, சோசலிசப்புரட்சியைத் தவிர வேறு பாதை கிடையாது''.

இளவயதிலேயே தோழர் சேதுராமன் டிராட்ஸ்கிசஇயக்கத்தில் சேர்ந்தார். அப்போது



தோழர் சேதுராமன்

நான்காம் அகிலத்தின்இந்திய பகுதியான போல்ஷேவிக் லெனினிசக் கட்சியில் 1946ல் இருந்து 1952 வரை முழு நேர ஊழியராக பணியாற்றினார்.

சர்வதேச ரீதியாக 1950 களில் பப்லோவாத திருத்தல்வாதிகளினால்நியாயப்படுத்தப்பட்ட நுழையும் தந்திரோபாயத்தை பின்பற்றி போல்ஷேவிக் லெனினிஸ்ட்கட்சியும் சோசலிச கட்சியினுள்கலைக்கப்பட்டது.

போல்ஷேவிக் லெனினிஸ்ட் கட்சியின் காரியாளர்கள் தேசியவாத சோசலிசக்கட்சியினால் ''உறிஞ்சப்பட்டார்கள்'' பாப்லோவாதத்திற்கு எதிராக நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழு நடத்திய போராட்டத்தைப்பற்றி அறிந்திருக்காத நிலைமையில் தோழர் சேதுராமனும் பப்லோவாதத்திற்கு பலியானார்.

அதன் பின்னர் 1970களில் அவர் சி. பி. எம்.இல் சேர்ந்தார். அவர் சி.பி.எம்.இன் இயக்க நடவடிக்கைகளில் பலவற்றில் பங்குகொண்டிருந்த போதிலும் அவர் சி.பி.எம்இன் ஸ்டாலினிச அரசியலை எதிர்த்தார். அவர் ஆகஸ்ட் 1989ல் சோசலிசத் தொழிலாளர் கழகத்துடன் தொடர்பை ஏற்படுத்திய பின்னர் கடந்த 36 வருடங்களாக பப்லோவாத கலைப்புவாத போக்கிற்கு எதிராக நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழு நடத்திய அரசியல், தத்துவார்த்த போராட்டங்களை பற்றி அறியும் வாய்ப்பு கிடைத்தது நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் ஆவணங்களையும் தோழர் டேவிட்நார்த் எழுதிய ''சோசலிசத்திற்கு எதிராக பெரஸ்த்து ரொய்கா''எனப்படும் நூலையும் கவனத்துடன் படித்து முடித்ததும் தோழர் சேதுராமன் நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழு முன்னெடுக்கும் அரசியல் நிலைப்பாட்டுடன் தனது முழு உடன்பாட்டையும் தெரிவித்தார்.

அவர் உத்தியோகபூர்வமாக சி.பி.எம் உடன் முறித்துக் கொள்ளாவிடினும் அவர் சி.பி எம். இன் ஸ்டாலினிச எதிர் புரட்சி அரசியலை விமரிசித்து பல கட்டுரைகள் எழுதினார். அவர் தனதுஅரசியல் கட்டுரைகளை எழுதி வெளியிட 'இஸ்மாயில்' என்ற புனைபெயரை உபயோகித்தார். சோசலிசத் தொழிலாளர்கழகத்தின்மாதப் பத்திரிகையான தொழிலாளர் பாதையின்ஜனவரி,ஏப்ரல் 1990 இதழ்களில் அவர் சி.பி. எம்,ஐ விமரிசனம் செய்து கட்டுரைகள் எழுதினார், அவை யாவன: எதிர் புரட்சிகரமான ஸ்டாலினிச-ஹிட்லர் ஒப்பந்தமும் சி.பி.எம்இன் ஆதரவும் 2) மூன்றும் அகிலம் கலைப்பு பற்றி நம்பூதிரிபாத்தின் ஒப்புதல் வாக்குமூலம்.

தோழர்சேதுராமன்வாழ்ந்து வந்த இடத்தில் தனிமைப் பட்ட சூழ்நிலைமையில் இருந்த தன் காரணமாக அவர் சி பி. எம்.இன் அரசியலை வெளிப்படையாக கண்டனம் செய்வதில் தயக்கம் காட்டினார். அவர் தனது கடைசி நாட்களில் சி.பி எம் உடன் ஸ்தாபன ரீதியாக அவருக்கு இருந்த நொய்ந்து போன உறவையும் முழுமையாக முறித்து கொள்ள தீர்மானித்தார். இருந்த போதிலும் அவருக்கு டிராட்ஸ்கி மீதும், நான்காம் அகிலத்தின் மீதும் இருந்த நம்பிக்கை பற்றி சி பி எம் உறுப்பினர்களுக்கு அவர் வெளிப்படையாக தெரிவிக்கவில்லை. இதனால் அவரது இறந்த உடல் சி.பி.எம். கொடியினால்போர்த்தப்பட்டு தகனம் செய்யப்பட்டது. தோழர் சேதுராமனின் மகளின் வேண்டுகோளின்படி சோசலிசத் தொழிலாளர் கழகத்திற்கு தந்தி அனுப்புவதாக சி.பி,எம் உறுப்பினர்கள்கூறிய போதிலும் மரணச்செய்தி சென்னைக்கு வந்து சேரவில்லை அவர் இறந்து 5 நாட்களின் பின்னரே அதுபற்றிசோ.தொ. கழகத்திற்கு கிடைத்தது.

தோழர் சேதுராமனின் உடல் நிலை மோசமடைந்த நிலைமையில் அவரை திருச்சி ஜீ ச ஸ் சைல்ட் ஆஸ்பத்திரியில் சோசலிசத்தொழிலாளர் கழகத்தின் தலைமை உறுப்பினர் உதவியுடன் சேர்த்ததுடன், அவருடன் கூடவே பல நாட்கள் அவர் ஆஸ்பத்திரியில் தங்கி உதவி செய்தார். தோழர் சேதுராமனின் புற்றுநோயை குணபடுத்துவதற்கான ஒரு சிறந்த ஆஸ்பத்திரியை சென்னையில் பார்த்து அவரை அங்கே சேர்ப்பதற்கான் திட்டங்களுடன் சோ.தொ.கழக தலைமை உறுப்பினர் சென்னை திரும்பிய ஒரு சில நாட்களில் தோழர் சேதுராமன் மரணமானார். அவர் நனவுடன் மேலும் சில நாட்கள்வாழ்ந்திருப்பாராயின எவ்வித சந்தேகத்திற்கும் இடமில்லாமல் அவர் வெறுப்புடன் விமரிசித்து பேசிய, எழுதிய ஸ்டாலினிசத்துடன் வெளிப்படையாகவே முறித்துக் கொண்டிருப்பார். அவருடன் திருச்சி ஜீசஸ் ஆஸ்பத்திரியில் கூடஇருந்த சோசலிசத்தொழிலாளர் கழக தலைமை உறுப்பினருடன் பேசும்போது சென்னையில் டிராட்ஸ்கி கொலை செய்யப்பட்டு 50வது வருடத்தை நினைவுகூர்வதற்காகசோசலிசத் தொழிலாளர் கழகம செப்டம்பர் 23ல் பாவணர் நூலகக்கட்டிடத்தில் ஏற்பாடு செய்த கூட்டத்தில்பேசுவதற்கு உற்சாகத்துடன் சம்மதம் தெரிவித்தார் ஆனால் நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் தலைமையின் கீழ் சோவியத் யூனியனிலும், சீனாவிலும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் உள்ள ஸ்டாலினிச ஆட்சிகளுக்கு எதிரான அரசியல் புரட்சியிலும், முதலாளித்துவ நாடுகளில் பாட்டாளி வர்க்க புரட்சியிலும்அவருக்குஇருந்த ஆழ்ந்த நம்பிக்கையை அவர் வெளிப்படையாக பேசவிடாது மூளை புற்றுநோய் அவரை இறுதியாக தடுத்து விட்டது.

தோழர் சேதுராமனின் நினைவுநீடூழி வாழ்க!

நான்காம் அகிலத்தின் அனைத்துலககுழு நீடூழிவாழ்க!

ஏகாதிபத்தியமும், ஸ்டாலினிசமும், தேசிய முதலாளித்துவமும் ஒழிக!



## தோழர் சேதுராமன் நினைவுக் கூட்டம்

நான்காம் அகிலத்தின் அனைத்துலககுழுவின் அரசியல் ஆதரவாளரும் 1940களில் டிராட்ஸ்கிச போல்ஷேவிக் லெனினிஸ்ட் கட்சியில், ஏழு வருடங்கள் முழு நேர ஊழியராகவும் பணியாற்றிய தோழர் சேதுராமனின் போராட்ட வாழ்வை நினைவு கூரும்கூட்டம்:

அக்டோபர் 22, திங்கள் மாலை 5 மணி
பயணிகள் விடுதி (கிரீன்லாண்ட்)
இரயில்வே காலனி அருகில், மதுரை.


## தோழர் ஸ்ரீப் லோங்ஸ்டாப் நினைவு நீடூழி வாழ்க !

நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் ஆஸ்திரேலியா பகுதியான சோசலிஸ்ட் லேபர்லீக் உறுப்பினராக பத்தாண்டுகளுக்கு மேல் பணியாற்றிய தோழர் ஸ்ரீப் லோங்ஸ்டாப் ஆகஸ்ட் 14ல் 63 வயதில் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டு இறந்துள்ளார். அவருடைய இழப்பு குறித்து சோசலிசத் தொழிலாளர் கழகம் அதன் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கிறது.

ஸ்ரீப் லோங்ஸ்டாப் 53 வயதில் டிராட்ஸ்கிச இயக்கத்தில் சேர்ந்து அவருடைய வாழ்க்கையின் மீதி நாட்களை நான்காம்அகிலத்தை கட்டுவதற்காக செலவழிக்க தீர்மானித்தார். அவருடைய நீண்ட அனுபவத்தில், ஸ்டாலினிசம், சமூக ஜனநாயகம், மத்தியவாதம் இவற்றின் காட்டிக் கொடுப்புகளுக்கு எதிராக நான்காம் அகிலத்தின் வேலைத் திட்டமே அதாவது உலக சோசலிச புரட்சியே தொழிலாள வர்க்கத்தின் முன்னேற்றத்திற்கு சரியான பாதையை காட்டும் என்பதில் முழு நம்பிக்கையுடன் அவர் செயல்பட்டார்.

**Subscribe to**
**Fourth International**

*"Fourth International" is the quarterly magazine of the International Comittee of the Fourth International.*




*Order from*
***Arbeiterpresse Verlag***
*Alfredstr. 71*
*D-4300 Essen 1*
*West Germany*

*single issue DM 18,-*
*Subscription DM 50,-*

படிப்பகம்

www.padippakam.com



# வளைகுடா யுத்தத்தை தொழிலாளர்கள் எதிர்க்க வேண்டும் !

**நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவுடன் அரசியல் ஐக்கியம் கொண்ட அமெரிக்க டிராட்ஸ்கிச இயக்கமான வொர்க்கர்ஸ் லீக் செப்டம்பர் 2, 1990ல் கூட்டிய சிறப்பு தேசிய மாநாட்டில் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் கீழே தரப்பட்டுள்ளது.**

மத்திய வளைகுடாவில்அமெரிக்க ராணுவத் துருப்புக்களை குவிப்பதற்கு வொர்க்கர்ஸ்லீக்கின் எதிர்ப்பை இந்த சிறப்பு மாநாடு தெரிவிப்பதுடன்அமெரிக்க ஏகாதிபத்தியம் தயாரிக்கும் குரூர குற்றங்களுக்கு எதிராக தொழிலாள வர்க்கத்தை அணி திரட்ட கட்சியின் அனைத்து சக்திகளையும் ஒன்று திரட்டும் என்று உறுதி அளிக்கிறது. அதன் முழு வரலாற்றிலும் காலனி ஆதிக்கத்தின் கசப்பான மரபுகளின் வடுக்களைக் கொண்டுள்ள ஒருசிறிய வளர்ச்சி அடையாத நாடான, ஈராக்கிற்கு எதிராக புஷ் நிர்வாகம் ஒரு ஏகாதிபத்திய யுத்தத்தை தொடுக்க தயார் செய்கிறது. புஷ் நிர்வாகத்தின் கொள்ளைத் திட்டங்கள் மிக அப்பட்டமானவை. அதாவது அதன் யுத்த உந்துதலை தூண்டி விடும் பொருளாதார நலன்களை அதன் பாரம்பரிய, பித்தலாட்ட பேச்சுக்களான ''ஜனநாயகத்தையும்'' ''சுதந்திரத்தையும்'' பாதுகாத்தல் ஆகியவற்றின் பின்னால் மூடிமறைக்கக்கூட முயற்சிக்கவில்லை. அரைநிலபிரபுத்துவ குடும்ப வழி ராஜ்யங்கள் இஸ்லாமிய ஆட்சிகள், முடியாட்சிகள் ஆகிய அனைத்துமே பிற்போக்கு சர்வாதிகார ஆட்சிகளாகும், இவற்றுடன் அமெரிக்கா கூட்டுவைத்துள்ளது. ஒரு சில நூறு ராஜ ஒட்டுண்ணிகளின் கைகளிலே பிரமாண்டமான எண்ணெய் வளத்தை அடிப்படையாகக் கொண்ட செல்வம் குவிந்திருக்கிறது. இவர்கள் தமது கோடிகளை அமெரிக்க, ஐரோப்பிய மற்றும் ஜப்பானியவங்கிகளில் முதலீடு செய்கின்றனர். 1962 வரை சவூதி அரேபியாவில் ஜங்கம அடிமைமுறைசட்டரீதியாக இருந்தது, இதுநாள் வரை அது பரந்தளவில் உத்தியோக பூர்வமற்ற முறையில் நடை முறைப்படுத்தப் பட்டு வருகிறது—இவற்றுடன் கூடவே விபச்சாரத்திற்கு சிரச்சேதம், சிறுகுற்றங்களுக்கு தண்டனையாக அங்கவீனமாக்கல்போன்ற காட்டுமிராண்டித்தனமான நடைமுறைகளும் உள்ளன. புஷ் நிர்வாகமோ அல்லது யுத்த முழக்கமிடும் முதலாளித்துவ பத்திரிகைகளோ பாரசீக வளைகுடாவில் உள்ள அரசுகளின் அரசியல் தன்மை, வரலாற்று தோற்றுவாய் இவை பற்றி எதுவுமே குறிப்பிடவில்லை. இவை அனைத்துமே ஏகாதிபத்தியத்தினால் மனம்போனபோக்கில் உருவாக்கப்பட்டவை. அதன் நோக்கம் அரபு மக்களை பிளவுபடுத்தி அந்தப் பிராந்தியத்தின் மீது ஆதிக்கத்தைசெலுத்துவதற்காகவாகும்சர்ச்சைக்கு இடமில்லாத உண்மை என்னவெனில் வங்கிகளின் மற்றும் எண்ணெய் நிறுவனங்களின் லாபங்களுக்காக அமெரிக்க அரசாங்கம் ஒரு யுத்தத்தை தொடுக்க தயாராகிறது. இந்த கிரிமினல் ஸ்தாபனங்களைஉறுதியாகவும், தெளிவாகவும் அமெரிக்கத் தொழிலாள வர்க்கம் எதிர்க்க வேண்டும்.

2. தேசியவெறி யுத்தக் கூச்சலில் புஷ் நிர்வாகமும், முதலாளித்துவ பத்திரிகையும் ஏகாதிபத்திய நாஜி ஜெர்மனிக்கு ஒப்பான நவீன காலனி நாடாக ஈராக்கையும், அடால்ப் ஹிட்லரின் மறு அவதாரமாக சதாம்குசெயினையும் காட்ட முயற்சிக்கின்றன. இவ்வாறாக வரலாற்று உண்மையை பரிகாசம் செய்கின்றனர்! அமெரிக்கா தான், அந்தப்பிராந்தியத்தில் சர்ச்சைக்கு இடமில்லாத அதன் ஆதிக்கத்தை நிலைநாட்ட ஒரு ஏகாதிபத்திய சக்தியின் பிரமாண்டமான ராணுவ இயந்திரத்தின் மூலமாகஆக்கிரமித்து வெற்றி கண்டு, அழிக்கப்போவதாக அச்சுறுத்துகிறதே தவிர ஈராக் அல்ல. உண்மையில் அமெரிக்காவின் மக்கள் தொகையின் பதினைந்தில் ஒரு பங்கைக்கொண்டதும், சார்பு ரீதியாக பழமையான ராணுவ சக்தியைக் கொண்டதுமான ஈராக்கிற்கு எதிரான யுத்தம் ஒரு மக்கட்படுகொலை யுத்தத் தன்மையுடையதாக இருக்கும். வால்ஸ்ரீட் பத்திரிகை வெளிப்படையாக குறிப்பிட்டதாவது மத்தியகிழக்கில்''அரபுவாதத்தை'' ஒழிக்க ஈராக்கிற்கு எதிராக யுத்தம தொடுக்க வேண்டும் என்பதாகும். அந்தஇலக்கை அடைவதற்கு லட்சக்கணக்கான அராபியர்களை ஒழித்துக்கட்டுவது அவசிய மாகும்.

4. டாங்கிகள், யுத்தக்கப்பல்கள், நூற்றுக்கணக்கான விமானங்கள் இவற்றின் துணையுடன் லட்சத்திற்கும் மேலான அமெரிக்கத்துருப்புகள் மத்திய கிழக்கில் ஆக்கிரமிப்பு செய்ததானது வரலாற்று ரீதியான பிரதி விளைவுகளை கொண்டதாகும், அது பாரசீக வளைகுடாவிற்கும் அப்பால் செல்கின்றது. இது உலக அரசியலில் ஒரு திருப்பு முனையாகும். இது ஏகாதிபத்தியம் உலகை ஒரு புதிய பங்கீடு செய்யும் தொடக்கத்தை குறிக்கிறது. அது இரண்டாம் உலகப் போரின் பின்னர் பெயரளவிலான சுதந்திரத்தை வென்ற முன்னைய காலனித்துவ (மற்றும் அரைக்காலனித்துவ) நாடுகள் மீது நேரடி காலனி ஆட்சியை ஒரு புதிய வடிவில் திணிக்கும் நோக்கம் கொண்டதாகும். பலவீனமான, பின் தங்கிய நாடுகளுக்கு எதிரான இவ்வாறான மூர்க்கமான ஆக்கிரமிப்பு நடவடிக்கையின் வெடிப்பை பிரதானமுதலாளித்துவ மையங்களில் உள்ள தனித்தலைவர்களின் கிரிமினல் எண்ணங்கள் என்று விளக்க முடியாது. உண்மையில் இது வெளிப்படுத்துவது ஏகாதிபத்தியத்தின் அரசியல், பொருளாதார சாரத்தையாகும். அதாவது உலகப் பொருளாதாரத்தின் மீதான நிதி மூலதனத்தின் ஆதிக்கத்தையாகும்.

5 ஏகாதிபத்திய நெருக்கடி மிகப்பிரமாண்டமானது, அது பின்தங்கிய நாடுகளை சுரண்டுவதற்கு தனக்கு இருக்கும் அனைத்து தடைகளையும் துடைத்துக்கட்ட வேண்டியுள்ளது. சந்தைகள், கச்சாப் பொருட்களுக்கான வளங்கள், 'மலிந்த' கூலிக்கான வழிகள் இவை அனைத்தையும அடைவதற்கு பூகோளத்தின் பெரும் பகுதிகளை மறுபடி இணைக்க வேண்டியுள்ளது. பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி, ஜப்பான் இத்தாலிஏகாதிபத்தியங்களும் அதே போல அதைவிட சிறிய சக்திகளான ஸ்பெயின், பெல்ஜியம், நெதர்லாந்து ஆகியவைகளும்கூட அமெரிக்கா தலைமையில் ஈராக்கிற்கு எதிரான தாக்குதலில் பங்கெடுத்த உள்ளன, ஏனெனில் அதனை அவர்கள் ஆசியா, ஆப்பிரிக்கா லத்தீன் அமெரிக்காமீது தமது சொந்த நிலைப்பாடுகளை-காலனித்துவ எஜமானர்களாக-நிலைநாட்டுவதற்கான முதல் படியாக கருதுகின்றனர். அதே சமயம் இஸ்ரேலின் சியோனிச ஆட்சியானது ஈராக்கிற்கு எதிராக ஒரு ராணுவத்தாக்குதலை தொடுப்பதற்கு அதன் ஏகாதிபத்திய சகபாடிகளுக்கு ஊக்கம் அளிக்கிறது, ஒரு முழு அளவிலான யுத்த வெடிப்பானது மேற்குக் கரைப்பகுதியிலிருந்து ஜோர்தானுக்குள் லட்சக்கணக்கான பாலஸ்தீனியர்களை விரட்டியடிப்பதற்கான ஒரு சந்தர்ப்பமாக அது எண்ணுகிறது, அதன் பின்னர் சியோனிஸ்டுகள் மேற்குக்கரையை இணைப்பதை பூரணமாக்கி சோவியத் யூனியனிலிருந்து குடிபெயர்வோரை (யூதர்களை) பெருமளவில் மறுபடி குடியேற்றும் திட்டத்தைநடைமுறைப்படுத்தும்.

6 ஈராக்கிற்கு எதிராக ஏகாதிபத்தியவாதிகள் இடையே தொடக்கத்தில் ஐக்கியம் இருந்தபோதிலும். மத்திய கிழக்கின் வளங்களை சூறையாடும் அவர்களின் முயற்சி தவிர்க்க முடியர்தபடி பெரும் சக்திகளிடைய மோதல்களை அதிகரிக்கச் செய்யும் சந்தைகளுக்காகவும், லாபங்களுக்காகவும் தொடர்ந்து நடக்கும் போராட்டத்தில் அமெரிக்கா அதன் பிரதான பகையாளிகளுக்கு, குறிப்பாக ஜப்பான், ஜெர்மனிக்கு மேலாக ஒரு பலமான நிலைப்பாட்டை எடுப்பதற்காக, உலகின் எண்ணெய் விநியோகத்தின்பெரும் பகுதியை வழங்கும் பிராந்தியத்தில் ஒரு நிரந்தரமான ராணுவத்தை நிறுத்தியுள்ளது இதுவே அமெரிக்க தலையீட்டின் பிரதான நோக்கமாகும் எனவே தான் மத்திய கிழக்கு மீதான ஆக்கிரமிப்பு ஒரு புதிய ஏகாதிபத்தியங்களுக் கிடையிலான யுத்தத்தின முதல் கட்டமாகும், இதே நூற்றாண்டு இறுதியில் மூன்றாவதாகவெடிக்கவிருக்கும் இந்த யுத்தமானது ஒரு அணுவாயுத நாசத்தின் மூலமாக மனித இனத்தை அழிக்க அச்சுறுத்துகிறது இந்த யுத்தத்திற்கான உந்து சக்தியானது, முதலாவது, இரண்டாவது உலக யுத்தங்களில் கோடிக்கணக்கானோரை பலி எடுத்ததில் முடிவடைந்த அதே உந்து சக்தியாகும்—உற்பத்தி சாதனங்கள் மீதான தனி உடமையும், உலகம் பகைமை கொண்ட முதலாளித்துவ தேசிய அரசுகளாக பிரிந்திருப்பதும் ஆகும்.

7. அந்த யுத்தத்திற்கான அரசியல் பொறுப்பு உலக ஏகாதிபத்தியத்தின் தலைவர்களுடன் மட்டுமல்ல சோவியத் யூனியனிலும், சீனாவிலும் ஆட்சி செய்யும் அவர்களது கால் வருடிகளான ஸ்டாலினிச அதிகாரத்துவத்திடமும் உள்ளது. பாரசீக வளைகுடா மீதான நீண்டகாலமாக திட்டமிடப்பட்ட அமெரிக்க ராணுவத்தலையீடானது. சோவியத அதிகாரத்துவத்தின் உடன்பாடு இல்லாமல் ஆகஸ்ட் 1990ல் முடுக்கிவிடப்பட்டிருக்க முடியாது. இது ஈராக்கிற்கு எதிராக ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் ஒரு தொடராக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்கு சோவியத் யூனியனும், சீனாவும் வெளிப்படையான ஆதரவு வழங்கியதை தொடர்ந்து பேக்கரும் செவர் நாட்சேயும வெளியிட்ட ஒரு கூட்டறிக்கையில் தெளிவானது. முதலாளித்துவ சொத்து உறவுகளை மீட்டமைக்கும் அவர்களது கொள்கைகளின் வழிப்பிரகாரம் கோர்பச்சேவ் மற்றும் டெங்சியோபிங் தலைமையிலான அதிகாரத்துவங்கள் அரைக்காலனித்துவ நாடுகள் மீதான ஏகாதிபத்திய ஆதிக்கத்தை எதிர்ப்பதாக பாவனை செய்வதைக்கூட கைவிட்டுவிட்டனர். பாரசீகவளைகுடாவில் ஒரு காலனித்துவ யுத்தத்திற்கு அனுமதி அளிப்பதன் மூலமாக அவர்கள்மேலும் ஏகாதிபத்திய கொள்ளைக்கார நடவடிக்கைகளுக்கு கதவை திறந்து விடுகின்றனர். இறுதியாக சோவியத் யூனியனையும், சீனாவையும்துண்டுதுண்டாக்கி காலனித்துவ அடிமைத்தனத்தின் கீழ் கொண்டுவர வழிவகுக்கின்றனர். ஏகாதிபத்திய எதிர்ப்பு ஐக்கியம் என்கிற அடிப்படை கோட்பாடுகளை காட்டிக் கொடுப்பதில் பிடல் காஸ்ட்ரோவின் ஆட்சியும் இணைந்துள்ளது. அது ஈராக்கிற்கு எதிரான ஆக்கிரமிப்புக்கு ஒரு சட்ட ரீதியான சாக்கை அமெரிகாவுக்கு வழங்கிய, ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் முக்கிய தீர்மானங்களுக்கான வாக்கெடுப்பில் ஆதரவாக வாக்களித்தது அல்லது வாக்களிப்பில்பங்குகொள்ளாது இருந்தது.

8. தற்போதைய நெருக்கடியில் ஐக்கிய நாடுகள் சபை எனப்படுவது வகிக்கும் பங்கானது பின் தங்கிய நாடுகளுக்கு எதிரான ஏகாதிபத்திய சூழ்ச்சி மற்றும் ஒடுக்கு முறைக்கு பச்சைக்கொடி காட்டும் ஒரு ஸ்தாபனமே தவிர வேறு எதுவும் இல்லையென்பதை அம்பலப்படுத்தி உள்ளது. ஈராக்கிற்கு எதிராக தற்போதைய தடையை ஐக்கிய நாடுகள் சபை நடைமுறைப்படுத்திய வேகத்தையும், உண்மையான கிரிமினல் அரசாங்கமான தென் ஆப்பிரிக்காவிற்கும் அதற்கு முன்னைய காலப் பகுதியில் ரொடீசியாவிற்கும் எதிராக முழுமையாக பாதிப்பில்லாத, முக்கியத்துவ மற்ற தடைகளை ஐக்கிய நாடுகள் நடைமுறைப் படுத்தியதையும் ஒருவர் ஒப்பிட்டு பார்க்கலாம். இஸ்ரேல் உல்லாசமாக ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானங்களை மீறி ஜெருசலேம் மீதும் 1967ல் பக்கத்திலுள்ள அரபு நாடுகளிலிருந்து கைப்பற்றியஇதரபிரதேசங்களிலும் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டியுள்ளது. ஆனால் இதற்காக ஐக்கிய நாடுகள் சபை எப்போதுமே ஹைய்பா எய்லத், டெல் அவிவ் ஆகிய இடங்கள் மீது தடை விதிக்க விமானம் தாங்கி கப்பல்களையும், யுத்தக் கப்பல்களையும் அனுப்பும்படி பிரேரிக்கவில்லை.

9. அமெரிக்க ராணுவத் தலையீட்டிற்கும், ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதாரத்தடைகளுக்கும் எகிப்து, சிரியா மற்றும் இதர அரபு முதலாளித்துவ ஆட்சிகள் வழங்கும் ஆதரவானது முதலாளித்துவ தேசியவாதத்தின் திவாலையும் வரலாற்று மரண முடிவையும் எடுத்துக்காட்டுகிறது. பல பத்தாண்டுகளாக சியோனிசத்திற்கும் வெளிநாட்டு ஏகாதிபத்திய ஆதிக்கத்திற்கும் எதிராக ''அரபு ஐக்கியம'' என்று வெற்று கூச்சல்கள செய்த பினனர் இந்த முதலாளித்துவ ஆட்சிகள் அமெரிக்க ஏகாதிபத்தியம் நடத்தும் காலனித்துவ சூறையாடலுக்கான யுத்தத்திற்கு அரபு கால்வருடிகளாகவும் (யுத்த) முன்னணியில் நிற்பவர்களாகவும் தம்மை மாற்றிக் கொண்டுள்ளனர். டிராட்ஸ்கியின் நிரந்தரப்புரட்சி முன்நோக்கு மீண்டும் ஒருதடவை ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது ஒடுக்கப்படும் நாடுகளைச் சேர்ந்த தேசிய முதலாளித்துவம் தேசிய ஒன்றுபடுத்தலையோ அல்லது ஏகாதிபத்திய ஆதிக்கத்திலிருந்து உண்மையான விடுதலையையோ அடையும் திறன் அற்றதாகும், இந்தக் கடமைகளை தொழிலாள வர்க்கத்தினால் மட்டுமே நிறைவேற்ற முடியும். அது மத்திய கிழக்கின் ஐக்கிய சோசலிச அரசுகள் மற்றும் இவற்றில் அரபு, யூத, ஈரானிய, குர்தீஸ் மற்றும் துருக்கி தொழிலாளர்களுக்கு சம உரிமைக்கான போராட்டத்தின் மூலமாக நிறைவேற்றப்படும்.

10. ஒரு ஒடுக்கப்படும் நாடான ஈராக்கை வொர்க்கர்ஸ்லீக் பாதுகாப்பதால் அது சதாம் குசெயினுக்கோ அல்லது அர பாத் சோசலிசக் கட்சிக்கோ அரசியல் ஆதரவு என்று கருத முடியாது. மாறாக அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிராக நிபந்தனை அற்று ஈராக்கை பாதுகாப்பது என்பதன் அர்த்தம் வொர்க்கர்ஸலீக் நீண்டகாலமாக சதாம்குசெயின் ஆட்சிக்கும் கொள்கைகளுக்கும் எதிர்ப்பை தெரிவித்து வந்தபோதிலும் ஈராக்கை பாதுகாக்கிறது. குசெயின குவைத்தை ஆக்கிரமித்து இணைக்க எடுத்த தீர்மானத்திற்கு வொர்க்கர்ஸ்லீக் ஆதரவு அளிக்கவும் இல்லை, அதற்கு எந்த முற்போக்கு தன்மையும் இருப்பதாகவும் கூறவில்லை. எவ்வாறாயினும் இணைப்பு சம்பந்தமான எமது விமரிசனம் ஒரு சர்வதேசிய பாட்டாளி வாக்க வேலைத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். அது மத்திய கிழக்கிலுள்ள ஒடுக்கப்படும் மக்களை ஐக்கியப்படுத்தும் பணிகளையும், பழையகாலனித்துவ எஜமானர்களால் உருவாக்கப்பட்ட பிற்போக்கு நாட்டு எல்லைகளை அழிக்கும் பணிகளையும் தொழிலாள வர்க்கத்துக்கு வழங்குகிறதே தவிரஇப்போதுஇருக்கும் எந்த முதலாளித்துவ ஆட்சிகளுக்கும் அல்ல. ஒரே சோசலிச முன்நோக்கின் அடிப்படையில் பாரசீக வளைகுடாவின் எண்ணெய் வளங்கள் மீதுதொடர்ச்சியான ஏகாதிபத்திய ஆதிக்கத்தை உறுதி செய்ய, மத்திய கிழக்கை துண்டாடிய யுத்த பிற்கால ஏற்பாட்டின் ஒரு பகுதியாக, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தினால் துண்டாடப்பட்டு அமெரிக்க ஏகாதிபத்தியத்தினால் பேணப்பட்டுவந்த குவைத் அரசை மறுபடி ஸ்தா

★9ம் பக்கம் பார்க்க

படிப்பகம்.

www.padippakam.com



# லியான் டிராட்ஸ்கி கொலை செய்யப்பட்டதிலிருந்து 50 ஆண்டுகள்

# லியான்ராட்ஸ்கி: மூத்தமனிதனின் நினைவுக்கு

லியான் டிராட்ஸ்கி கொலை செய்யப்பட்டு 50 வருடங்களை ஆகஸ்ட் 20, 1990 குறிக்கிறது. இருபதாம் நூற்றுண்டில் லெனினுடன் இணையாக மகத்தான மார்க்ஸிய, புரட்சியாளராக டிராட்ஸ்கி திகழ்ந்தார். ரஷ்யாவில் அக்டோபர் புரட்சியின் இணைத் தலைவராகவும் செம்புடையின்ஸ்தாபகராகவும், சோவியத்யூனியன் ஸ்டாலினிச சீரழிவில் செல்லும்போது அதற்கு எதிராக போராட இடது எதிர்ப்பு இயக்கத்தைஉருவாக்கியவரும், இன்று புரட்சிகர மார்க்சிசத்திற்கான போராட்டத்தை முன்னெடுக்கும் நான்காம் அகிலத்தின் ஸ்தாபகரும் டிராட்ஸ்கி ஆவார்.

ஸ்டாலினிச ஜி. பி. யு ஏஜண்டான ரேமன்மெர்-காடர்டெல்ரியேயாவினுல் மெக்சிகோநகரின்புறநகர் பகுதியான கொயாகனில் டிராட்ஸ்கிகொலைசெய்யப்பட்டார்.

அவன் அனுதாபீஎன்ற போர்வையில் டிராட்ஸ்கி படிக்கும் அறைக்குள் நுழைந்து பின்பக்கமாக சென்று போல்ஷேவிக் தலைவரின் மண்டையில் பனிக்கோடாரியை ஆழமாகப்பாய்ச்சினுன். அது ஒரு மரணத் தாக்குதலாக இருந்தது.

இந்த நூற்றுண்டின் மிகப்பயங்கரமான அரசியல்குற்றங்களில்டிராட்ஸ்கியின் படுகொலையும் ஒன்ருகும். அந்தக்கொலையானதுஅக்டோபர்புரட்சிக்கு தலைமை தாங்கிய போல்ஷேவிக் தலைவர்களை சரீர ரீதியாக ஒழித்துக்கட்டும் வேலையை மேற்கொண்ட ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் மிகக்குரூரமான நடவடிக்கைகளை ஒரு முடிவுக்கு கொண்டு வந்தது. மாஸ்கோவில் ஆகஸ்ட் 1936ல் தொடங்கிய முதலாவது பொய்ப் புனைவு வழக்குகளுக்கும், நான்கு வருடங்களின் பின்னர் டிராட்ஸ்கி படுகொலை செய்யப்பட்டதற்கும் இடைக் காலத்தில் சோவியத் யூனியனில் இருந்த முக்கியமான மார்ஸியவாதிகள் அனைவரும் கொல்லப்பட்டனர்.

இரண்டாம் உலகப் போரின் முதலாவது வருடத்தில்டிராட்ஸ்கி கொலை செய்யப் பட்டதானது, தொழிலாளவர்க்கத்துக்கு பேரிழப்பாகும். அது 'சிறப்பான' மார்க்கிசத்தின் பிரகாசிக்கும் அரசியல் கலாச்சாரத்தின் கடைசி, மிகத் திறமையானபிரதிநிதியை, அரசியல் அரங்கிலிருந்து அகற்றியது.

ஏகாதி பத்தியத்திற்கும் அதன் ஸ்டாலினிச கால் வருடிகளுக்கும்டிராட்ஸ்கி பற்றிஇருந்த பீதிஅவரை அவர்கள் கொலை செய்ய தேர்ந்தெடுத்த நேரத்தில் வெளிப் படுத்தப்பட்டது ஹிட்லர், ஸ்டாலினில் இருந்து ருஸ்வெல்ட் வரை சர்வதேச பிற்போக்கின் அனைத்து பிரதிநிதிகளும்யுத்தத்தினுல்உண்டு பண்ணப்பட்ட துன்பங்கள் 1917ஐ போலவே டிராட்ஸ்கியைஒரு அரசியல் ரீதியாக நாடு கடத்தப்பட்டவர் என்ற நிலையிலிருந்து உலக சோசலிசப்புரட்சியின் செல்வாக்கு மிகுந்த தலைவராக மாற்றும்என்று அஞ்சினர். டிராட்ஸ்கியை கொலை செய்தபோதிலும் அவருடைய அரசியல் பாரம்பரியத்தை ஸ்டாலினிச அதிகாரத்துவத்தினுல் அழிக்கமுடியவில்லை நம்பமுடியாத தடைகளின் மத்தியிலும் நான்காம் அகிலத்தின்தத்துவார்த்த அரசியல் மற்றும் ஸ்தாபன அடித்தளங்களை நிலை நாட்டுவதில் வெற்றிகண்டார். டிராட்ஸ்கி செப்டம்பர் 1938ல் நான்காம் அகிலத்தை ஸ்தாபித்தது தான் புரட்சிகர தொழிலாளர்இயக்கத்திற்குஅவரது சேவையின் மிக முக்கியமான பங்களிப்பாகும். அதன்மூலம் அவர் புரட்சிகர மார்க்சிசத்துன் தொடர்ச்சியை அதன் தத்துவார்த்த, அரசியல் மரபுகளை ஸ்டாலினிசஅதிகாரத்துவத்தின் மிக இழிவான சீரழிவுக்கு எதிராக பாதுகாத்தார்.

டிராட்ஸ்கியின் அரசியல் வாழ்க்கையை நினைவு கூறும் முகமாக நானகாம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் பகுதிகள் அமெரிக்கா, ஐரோப்பாஆசியா, ஆஸ்திரேலியா கண்டங்களில் பொதுக் கூட்டங்களையும், அரசியல் தத்துவார்த்த தொடர் சொற்பொழிவுகளையும் நடத்த ஏற்பாடு செய்துள்ளன. நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவுடன் ஐக்கியம் கொண்ட சோசலிசத் தொழிலாளர் கழகமும், டிராட்ஸ்கி நினைவுக் கூட்டங்களை இந்தியாவின் முக்கிய தொழிற்துறை மையங்களான பம்பாய், சென்னை,



லியான் டிராட்ஸ்கி

கலகத்தாவில் நடத்த ஏற்பாடுகள் செய்துள்ளது. டிராட்ஸ்கியின் ஐம்பதாவது நினைவாண்டை முன்னிட்டு தொழிலாளர் பாதையில் லியான்டிராட்ஸ்கியின் கட்டுரைகளும் வெளியிடப்படும், 'லியான் டிராட்ஸ்கி- மூத்த மனிதனின் நினைவு' என்ற தலைப்பில் வெளியாகும் இக் கட்டுரை டிராட்ஸ்கி கொலைசெய்யப்பட்டுஎட்டு நாட்களுக்கு பின் நியூயார்க் நகரில் ஏற்பாடு செய்யப்பட்ட நினைவுக் கூட்டத்தில் அமெரிக்காவில் டிராட்ஸ்கிசத்தின் ஸ்தாபகரான ஜேம்ஸ். பி.கெனன் ஆற்றிய உரையாகும்.

ரஷ்யாவின் மாகாண, பட்டணமான நிக்கொலாயிவில் 18 வயதில் தொழிலாளர் இயக்கத்தில்சேர்ந்ததில் இருந்து, 42 வருடங்களின் பின்னர் மெக்சிகோ நகரில் அவர் 'இறக்கும் வரை தோழர் டிராட்ஸ்கியின் உணர்வு பூர்வமான முழு வாழ்க்கையும் ஒரு மையமான கருத்துக்காக மட்டுமே வேலை செய்யவும், போராடவும் முழுமையாக அர்ப்பணிக்கப்பட்டது. அதாவது அவர் உலகத் தொழிலாளர்களின் மற்றும் ஒடுக்கபடும் மக்களின் விடுதலைக் காகவும் ஒரு சோசலிசப் புரட்சியின் மூலமாக சமுதாயத்தை முதலாளித்துவத்திலிருந்து சோசலிசமாக மாற்றுவதற்காகவும் பாடுபட்டார். அவருடைய கருத்துப்படி சோசலிசப் புரட்சியின் வெற்றிக்கு தேவையானது முன்னேறிய தொழிலாளர் பகுதியின் ஒரு புரட்சிகரமான அரசியல் கட்சியின் தலைமையாகும்.

தோழர் டிராட்ஸ்கி அவருடைய முழுமையான உணர்வுபூர்வமான வாழ்க்கையில் ஒருபோதுமே அந்தக் கருத்தில் இருந்து விலகவில்லை அதை அவர் ஒருபோதும் சந்தேகித்ததில்லை, அதை அடைவதற்காக அவர் ஓய்வின்றி போராடினுர். அவருடைய மரணப்படுக்கையில், அவருடைய தொண்டர்களான நமக்கு அவர் விட்டுச்சென்ற இறுதி செய்தியில் அவரது இறுதி சாசனத்தில் அவருடைய வாழ்நாள் கருத்தின் நம்பிக்கையை எடுத்துரைத்தார். ''நமது நண்பர்களுக்கு கூறுங்கள் நான்காம் அகிலத்தின் வெற்றியில் எனக்கு நம்பிக்கை உண்டு முன்னேறிச் செல்லுங்கள்!''

அவருடைய வேலையை பற்றியும், சாசனத்தைப் பற்றியும் முழு உலகிற்கு தெரியும் உலக பத்திரிகைச் செய்திகள் அவரது இறுதி சாசனத்தை வெளியிட்டன, உலகில்கோடி கணக்கானேர் அதை அறிந்தனர். இன்றிரவு நமமுடன் துக்கம் அனுஷ்டிக்கும் அனைவரின் இதயங்களிலும், ஒருசிந்தனை ஒருகேள்விமிக அதிகமாக உள்ளது அவர் உருவாக்கி, உற்சாகம் ஊட்டிய அந்த இயக்கம் அவரது மரணத்திற்குபின்னர் உயிர்வாழுமா? அவருடைய சீடர்கள் அனைவரையும ஒன்றுபடுத்தி வைத்திருக்க முடியுமா. அவருடைய சாசனததை அவர்கள் நடத்தி முடிப்பார்களா, நானகாம அகிலத்தின் வெற்றியின் மூலமாக ஒடுக்கப்படுவோரின் விடுதலையை ஏற்படுத்துவார்களா?



ஜேம்ஸ் பி. கனன்

எவ்வித தயக்கமும் இல்லாமல் இந்தக் கேள்விக்கு நாம் உறுதியான பதிலை அளிக்கிருேம். டிராட்ஸ்கி இல்லாமல் டிராட்ஸ்கியின் இயக்கத்தின் வீழ்ச்சி பற்றி முன்னறிவிக்கும் அந்த எதிரிகள் அதை பற்றி பீதி அடையும பலவீனமான நண்பர்கள் காட்டுவது ஒன்றை மட்டும்தான். அதாவது அவர்கள் டிராட்ஸ்கியை புரிந்து கொள்ளவில்லை. அவர் யாராக இருந்தார் அவர் எதை பிரதிநித்துவம் செய்தார், அவர் எதை பின்னே விட்டுச்சென்றுர் என்பதை. தோழர் டிராட்ஸ்கியைப் போல கஷ்டப்பட்ட எந்த ஒரு குடும்பமும் அவ்வாருன ஒரு வளம் நிறைந்த மரபை விட்டுச்செல்லவில்லை. அவர் ஒரு தீர்க்க தரிசி தகப்பனைப் போல் அதனை, அனைத்து முற்போக்கு மனித இனத்துக்கும் டிரஸ்டியாக நான்காம் அகிலத்தின் குடும்பத்துக்கு விட்டு சென்றுளளார். அவர் நமக்கு கருத்துக்களின் ஒரு பெரும் மரபைவிட்டுச்சென்றுள்ளார் அந்தக் கருத்துக்கள் அனைத்து மனித இனத்தின் சிறந்த சுதந்திரமான எதிர்காலத்தை நோக்கிய போராட்டத்திற்குவழிகாட்டும். டிராட்ஸ்கியின் சக்தி வாய்ந்த கருத்துக்கள் தான் அனைத்து செயல் திட்டமும், நமது பதாகையும் ஆகும. அவை நமது சகாப்தத்தின் அனைத்து சிக்கல்களின் மத்தியில் செயலுக்கான ஒரு தெளிவான வழி காட்டியாகவும், நாம் சரி நமது வெற்றி தவிர்க்க முடியாதது என்று நமக்கு மீண்டும் மீண்டும் தொடர்ச்சியாக உறுதி செய்வதாகவும் இருக்கின்றன.

உலகில் மிகச் சிறந்த சக்தி கருத்துக்கள் என்று டிராட்ஸ்கியே நம்பினுர். அவற்றை எடுத்துரைப்பவர்கள் கொல்லப்படலாம். ஆனுல் கருத்துக்கள் ஒரு தடவை வெளியிடப்பட்டதும் அவை தமது சொந்த வாழ்க்கையை வாழ்கின்றன. அவை சரியான கருத்துக்களாக இருப்பின் அனைத்து தடைகளுக்குஊடாகவும் அவை ஊடுருவிச் செல்லும. இதுவே தோழர் டிராட்ஸ்கியின் தத்துவத்தின் மையமான ஆதிசகம் செலுத்தும கருத்தாகும். அதை அவர் நமக்கு பல தடவைகள் விளக்கினுர். அவர் ஒருதடவை எழுதினுர். ''கட்சி அல்ல செயல திட்டத்தை உருவாக்குவது; செயல் திட்டமதான் கட்சியை உருவாக்குகிறது'' என்று எனக்கு எழுதய தனிப்பட்ட கடிதத்தில் அவர் ஒரு தடவை. குறிப்பிட்டதாவது: ''நாம் உலகத்தில் மிகச் சரியான மிகச்சக்தி வாய்ந்த கருத்துக்களுடன் ஆனுல் போதாத எண்ணிக்கை, பொருள் வளத்தைக் கொண்டும் வேலை செய்கிருேம. ஆனுல் சரியான கருத்துக்கள் நீண்ட காலபோக்கில், எப்பொழுதுமே வெற்றி அடையும், அவர்களுக்கு அவசியமான பொருள் வளத்தையும், சக்திகளையும ஏற்படுத்தி கொடுக்கும''.

மார்க்ஸின் ஒரு சீடரான டிராட்ஸ்கி, மார்க்சுடன் சேர்ந்து நமபியதாவது ''ஒரு கருத்து. மக்களை ஊடுருவும் போது ஒருஜடரீதியான சக்தியாக (Material force) மாறுகிறது' அதில்நம்பிக்கையுள்ள தோழா டிராட்ஸ்கி, அவருக்கு பின்னர் அவரது வேலைகள் உயிர் வாழும் என்பதை ஒருபோதும் சந்தேகிக்கவில்லை. அதில் அவருக்கு

★6ம் பக்கம் பார்க்க

படிப்பகம்

www.padippakam.com



# லியான் டிராட்ஸ்கி கொலை செய்ய

# லியான் டிராட்ஸ்கி: மூத்

நம்பிக்கை இருந்தது. அதனால் அவரது கருத்துக்களை தன்னுள்ளே கொண்டிருக்கும் நான்காம் அகிலத்தின் எதிர்கால வெற்றி பற்றி அவரது மரணப்படுக்கையில் அவரால் நம்பிக்கையுடன் கூற முடிந்தது. அதை யார் சந்தேகித்தாலும், அவர்கள் டிராட்ஸ்கியை புரிந்து கொள்ளவில்லை என்றுதான் கூறலாம்.

டிராட்ஸ்கி தனது பெரும் முக்கியத்துவமும், பெரும் மதிப்பும், தனது சரீர வாழ்விலோ, அல்லது தனது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த செயல்களிலோ அடங்கி இருக்கவில்லை என்று நம்பினார். அந்த செயல்கள் வரலாற்றில் கதாநாயகர்களிக தோன்றிய அனைவரின் செயல்களையும் விடவீச்சிலும் மேன்மையான தோற்றத்திலும் மிஞ்சியதாகும்). ஆனால் கொலைகாரர்கள் தமது வேலையை செய்து முடித்தபின்னர்எதை விட்டுச் செல்வதுஎன்பதிலதான் இருக்கிறதுஎன்றுநம்பினார். அவரது மரணம் முடிவானது என்று அவருக்கு தெரியும், அதனால் அவர் நமக்கு ஊடாக, மனித இனத்துக்கு சாத்தியமான அனைத்தையும் விட்டுச்செல்வதற்காக காலத்துடன் போராடினார். அவருடைய இறுதி வெளி வாழ்க்கையின் கடைசி 11 வருடங்கள் முழுவதும் அவர் தன்னை ஒருஅடிமையை போல தன்னை (எழுதும்) மேசையுடன் பிணைத்துக் கொண்டார். நம் யாருக்குமே தெரியாத சக்தியுடன் அவ்வாறு தொடர்ச்சியாகவும், சுயகட்டுப்பாட்டுடனும் உழைத்தார். அப்படி இருப்பது மிகத்திறமையான மனிதர்களால்தான் முடியும். அவருடைய சக்தி வாய்ந்த மூளையின் முழு செல்வம் நிறைந்த உள்ளடக்கத்தையும் பேனவின் மூலம் வடித்தெடுக்க அவர் காலத்திற்கு எதிராக போராடினார். அதை நமக்காகவும், நம் பின்னால் வருபவர்களுக்காகவும் நிரந்தரமான எழுத்து வடிவத்தில் பாதுகாக்க போராடினார்.

முழுமையான டிராட்ஸ்கி, முழுமையான மார்க்சைப் போல் அவரது நூல்களிலும், அவரது கட்டுரைகளிலும், அவரது கடிதங்களிலும் பேணப்பட்டுள்ளார். அவரது எண்ணற்ற கடிதத்தொடர்புகள்—அவை அவரின் பிரகாசிக்கும் சிந்தனைகளின்சிலவற்றையும், அவரது மிக தனிப்பட்ட உணர்வுகளையும், மனவெழுச்சிகளையும் உள்ளடக்கியவை- அனைத்தும் திரட்டப்பட்டு வெளியிடப் படவேண்டும். அது செய்து முடிக்கப்பட்டதும், அவருடைய நூல்களுடன் கூடவே அவரது கடிதங்களும் அவரது சிறு நூல்களும அவரது கட்டுரைகளும வெளியிடப்பட்டதும் நமக்கும் மனித இனத்தின் விடுதலைப் போராட்டத்தில் நம்முடன் சேர்பவர்கள் அனைவருக்கும் எமது மூத்த மனிதர் இன்னமும் எமக்கு உதவி செய்பவராகவே இருப்பார்

கிரெம்ளினில் மிக உயர்ந்த பதவியிலுள்ள, சக தோழர்களை கொலை செய்யும் ஸ்டாலின், அக்டோபர்புரட்சியின் மூத்தலைமுறையையும் அழித்தவன். அவன்தன்னையும் கொலை செய்ய குறிவைத்துள்ளான் என்றும், அதில் அவன் சீக்கிரமாகவோ அல்லது தாமதித்தோ வெற்றி காண்பான் என்பதுபற்றியும் டிராட்ஸ்கிக்கு தெரியும். அதனால் தான் அவர் மிக அவசரமாக வேலை செய்தார். அதனை தான் அவர் தனது சிந்தனையில் உள்ள அனைத்தையும எழுத அவசரப்பட்டார், எவராலும் அழித்து விட முடியாதபடி அதை ஒரு நிரந்தர வடிவத்தில் தாளில் எழுதினார்.

ஒருநாள் இரவு நான் நமது மூத்த மனிதனின் நம்பகமான செயலாளர்களில்ஒருவருடன் இரவு சாப்பாட்டு வேளையின் போது பேசினேன். அந்த இளம் தோழர், டிராட்ஸ்கி நாடு கடத்தப்பட்டு வாழ்ந்த வாழ்க்கையின் இறுதிவருடங்களில் அவருக்கு நீண்டநேரம் சேவை செய்தவர், அவருடைய தனிப்பட்ட அந்தரங்க வாழ்க்கையை நன்கு அறிந்திருந்தவர். அவரைப்பற்றிய நினைவுகளை தாமதமின்றி எழுதும்படி நான் அவரைஊக்குவித்தேன் நான் சொன்னேன். "நாம் அனைவருமே டிராட்ஸ்கியை பற்றி நமக்கு தெரிந்தவை அனைத்தையும எழுத வேண்டும். அவரைப்பற்றியநினைவுகளை கருத்துக்களை ஒவ்வொருவரும் எழுத வேண்டும். நம்முடைய காலத்தின் மிகப் பெரும் மனிதரின் சுற்றுப் பாதையில் நாம இயங்கினோம் என்பதை யாரும் மறக்கக்கூடாது. லட்சக்கணக்கான மக்கள், இன்னும் வரவிருக்கும் தலைமுறைகள் அவருடையகருத்துக்கள், அவருடைய நோக்கங்கள், அவருடைய அந்தரங்கவாழ்க்கை அவரை பற்றி ஒவ்வொரு சொல், செய்தி, பற்றி அறிய வேட்கையுடன் இருப்பார்கள்"

அதற்கு அவர் பதில் அளித்தார்: "நான் அவருடைய தனிப்பட்ட தன்மைகளைப்பற்றி நான் கவனித்ததைத்தான் எழுத முடியும். அதாவது அவருடைய வேலை செய்யும் முறைகள் அவருடையதாராள மனப்பான்மை இவற்றைபற்ற ஆனால், அவருடைய கருத்துக்களை புதிதாக எதையும என்னால் எழுத முடியாது. அவை ஏற்கனவே எழுதப்பட்டு விட்டன. அவர் சொல்ல வேண்டியது அனைத்தும், அவருடைய மூளையில் இருந்தது அனைத்தும் தாளில் எழுதப் பட்டுள்ளது. அவர் தனது மூளையின் அடிவரை அனைத்தையும் தோண்டி எடுத்து அவரின் எழுத்துக்கள் மூலம உலகத்திற்கு வழங்க உறுதி கொண்டிருந்தார் போல் தெரிந்தது. எனக்கு நினைவுக்கு வருகிறது. அடிக்கடி, இரவு சாப்பாட்டு மேசை விவாதத்தின் போது சில பிரச்சனைகள்சம்பந்தமாக எழும சாதாரணமான கலந்துரையாடல்களின் போது சம்பிரதாயப்படி இல்லாத விவாதம் நடைபெறும் மூத்த மனிதர் சில புதிய புதுமையான (சுத்தமான) கருத்துக்களை தெரிவிப்பார். பெரும்பாலும் வழக்கமாக இரவுசாப்பாட்டுவேளை கலந்துரையாடலின் போது அவரின் பங்களிப்புகள் சிறிது நேரம் கழித்து ஒரு புத்தகத்திலோ, ஒரு கட்டுரையிலோ ஒரு கடிதத்திலோ வெளியிடப்படும்".

அவர்கள் டிராட்ஸ்கியை ஒரே அடியினால் கொல்லவில்லை. அவரின் மண்டை ஓட்டின் உள்ளே பனிக் கோடாரியை ஸ்டாலினிச ஏஜண்ட் ஒருவர் கொலைகாரர் பாய்ச்சியபோது அல்ல. அது கடைசி அடி மட்டும் தான். அவர்கள் அங்குல அங்குலமாக அவரை சாகடித்தனர். அவரை பல தடவைகள் அவர்கள் கொன்றனர். அவருடைய ஏழு செயலாளர்களை அவர்கள் கொன்றபோது அவரை ஏழு தடவைகள் கொன்றனர். அவருடைய நான்கு பிள்ளைகளை கொன்றபோது நாலு தடவைகள் அவரை கொன்றனர். ரஷ்யப் புரட்சியின் அவரது பழைய சக தோழர்களை கொன்றபோது அவர்கள் அவரைக் கொன்றனர்.

இப்படி அனைத்தும் இருந்தபோதிலும் அவர் தனது பணிகளுக்காக தளராது நின்றார். முதுமையும் நோயும் வளர்ச்சி அடைகையில் இப்படியான அனைத்து ஆத்மீக உணர்ச்சிகள் மற்றும் சரீரரீதியான தாக்குதல் மத்தியிலும அவர் முன்னேறிச் சென்று மனித இனத்துக்கு அவர் இறுதி சாசனத்தை எழுதி முடித்தார். அவர் அனைத்தையும ஒன்றுதிரட்டினார். ஒவ்வொரு கருத்து, அவருடைய கடந்த அனுபவத்திலிருந்து ஒவ்வொரு படிப்பினை —அனைத்தையும் நமக்கு ஒரு அறிவு தந்தார்—அந்த செல்வத்தை அந்தப்பூச்சிகளும, துருக்களும் அழிக்க முடியாது

டிராட்ஸ்கிக்கும் வாழ்க்கை காலத்தில்மக்கள்மேல்பெரும் செல்வாக்கு செலுத்திய இதர பெரும் செயல் வீரர்களுக்கும் இடைநடுவே தோன்றிய அரசியல் தலைவர்களுக்கும இடையே ஆழமான வேறுபாடு உண்டு. பெரும்பாலும் அந்த அனைவரின் ஏதோ ஒரு தனிப்பட்ட ரீதியானதாக,மற்றவர்களுக்கு அறிவிக்க முடியாததாக இருந்தது. அவர்களது செல்வாக்கு உயிர் வாழவில்லை. உதாரணத்திற்கு தலைமுறையின், அல்லது இப்போது கடந்த சென்ற தலைமுறையின் பெரும் தலைவர்களை ஒருகணம் நினைவு கூருங்கள்; கிளெமென்சோ, ஹின்டர்பேர்க், வில்சன் தியோடோர் ரூஸ்வெஸ்ட், பிராயன் போன்றோர் அவர்களை பெரும மக்கள் கூட்டம் பின் தொடர்ந்தனர்; அவர்கள் மேல் சார்ந்திருந்தனர். ஆனால் இப்போது அவர்கள் இறந்து விட்டனர். அவர்களுடன் கூடவே அவர்களின் செல்வாக்கும் மடிந்துவிட்டது. நினைவுச் சிலைகளையும், மரணச்சடங்கு துதி பாடல்களையும் தவிர வேறு எதுவும் நிலைக்கவில்லை. அவர்களுடைய தனிப்பட்ட குணம் சத்தைத் தவிர விசேஷமான வேறு எதுவும் அவர்களிடம் இருக்கவில்லை. அவர்கள் சந்தர்ப்பவர்திகள். ஒரு நாளுக்குத் தான் தலைவர்கள். அவர்களுடைய உடல்கள் மண்ணோடு மண்ணாகிவிட்ட போதிலும் மக்களுக்கு வழி காட்டும், உற்சாகப்படுத்தும் கருத்துக்கள் எதையும் அவர்கள் விட்டுச்செல்லவில்லை. அவர்களுடைய தனிப்பட்ட குணம்சங்கள் பற்றிய ஒரு நினைவு மட்டுமே உள்ளது.

டிராட்ஸ்கியை பொருத்த மட்டில் அவ்வாறு இல்லை. அவரிடம் அப்படி இருக்கவில்லை. அவர் வேறுபட்டவராக இருந்தார். திட்டவட்டமாக கூறினால் அவரும் கூட ஒரு மாபெரும் செயல்வீரராக திகழ்ந்தார். மனித இன வரலாற்றின் மிகப்பெரும் புரட்சியில் அவரது செயல்கள் உள்ளடங்கிஇருந்தன. ஆனால் சந்தர்ப்பவாதிகளையும, ஒரு நாள் தலைவர்களையும் போல் அல்லாமல் அவருடைய செயல்கள் பெரும் கருத்துக்களால் ஊக்குவிக்கப்பட்டவையாக இருந்தன. இந்தக் கருத்துக்கள் இன்னும் உயிர் வாழ்கின்றன, அவர் ஒரு புரட்சியை மட்டும் செய்யவில்லை. அதன் வரலாற்றையும் எழுதினார்; அனைத்து புரட்சிகளையும் வழிநடத்தும அடிப்படை விதிகளையும் விளக்கினார். அவர் தான் எழுதிய நூலில் பெரும் படைப்பு என்று கருதிய 'காட்டிக் கொடுக்கப்பட்ட புரட்சி' என்ற நூலில் புதிய புரட்சிகளை செய்வதற்கு நமக்கு ஒரு வழிகாட்டியை வழங்கினார். இன்னும சரியாகச் சொன்னால் 1917 அக்டோபரில் தொடங்கிய புரட்சியை உலகம் முழுவதும் விஸ்தரிக்க ஒரு வழிகாட்டுதலைத் தந்தார்.



தொழிலாளர் செம்படையின் மத்தியில் லெனினும் டி

## மார்க்சிசத்தின் சக்தி

கருத்துக்களை கொண்ட மகத்தான மனிதரான்டிராட்ஸ்கி, இன்றும் பெரும் மகத்தான மனிதராக திகழும மார்க்சின் ஒரு சீடர்தான். டிராட்ஸ்கி, தான் எடுத்துரைத்த மிகவும் அடிப்படையான கருத்துக்களை தானகவே உருவாக்கவிலலை, அல்லது அப்படி உருவாக்கியதாகவும் கோரவில்லை, பத்தொன்பதாம் நூற்றாண்டின் மாபெரும் சிற்பிகளான மார்க்சும். ஏங்கெல்சும்போட்ட அடித்தளத்தை அவர் கட்டிஎழுப்பினார், கூடுதலாக அவர் லெனினின் மாபெரும் பள்ளிக்கு ஊடாகவும் சென்று அவரிடமிருந்து கற்றுக்கொண்டார். டிராட்ஸ்கியின் மேதாவித்தனம எதில் உள்ளதென்றால் மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லெனின் எழுதியவை அனைத்தையும் பூரணமாக கிரகித்துக் கொண்டதில் தான் அவர்களுடைய வழிமுறையை முழுமனேகற்றுக்கொண்டார். அவர்களுடைய கருத்துக்களை நவீன நிலைமைகளுக்கு ஏற்ப வளர்த்தெடுத்தார். பாட்டாளி வர்க்கத்தின் நடப்புப் போராட்டங்களுக்கு அதை மிகச் சிறந்த முறையில் பிரயோகித்தார்.

நீங்கள் டிராட்ஸ்கியை புரிந்து இருந்தால், உங்களுக்கு தெரியும் அவர் மார்க்சின் ஒருசீடர் ஆவார் என்று, ஒரு வைதீக (நல்ல முறையான) மார்க்சிஸ்ட் ஆவார், அவர் 42 வருடங்கள் மார்க்சிச பதாகையின் கீழ் போராடினார். அவருடைய வாழ்க்கையின் இறுதிக்காலத்தில் இதர அனைத்தையும் ஒரு பக்கம் வைத்துவிட்டு நான்காம் அகிலத்தின் உறுப்பினர் மத்தியிலே மார்க்சிசத்தை பேணி பெரும் அரசியல்தத்துவாரத்த போராட்டத்தை நடத்தினார். அவருடைய படிக்கும் மேசையில் அவருடைய கடைசிக்கட்டுரை பூர்த்தியாக்கப் படாமல் விடப்பட்டிருந்தது. அவை அப்போதைய திருத்தல்வாதிகளுக்கும் ஐயுறவாதிகளுக்கும் எதிராக மார்க்சிசத்தை பேணுபவைடாகும்

மார்க்சிச கருத்துக்களின் சக்தி பற்றிய ஸ்தூலமான விளக்கம ஒன்று உங்களுக்கு தேவையா? அதை சிந்தித்து பாருங்கள் : 1883ல் மார்க்ஸ் இறந்தபோது டிராட்ஸ்கிக்கு நாலு வயது மட்டும் தான்

படிப்பகம்

www.padippakam.com



# ப்பட்டதிலிருந்து 50 ஆண்டுகள்

# ந மனிதனின் நினைவுக்கு !

லெனினுக்கு பதினுலு வயது தான். அவர்கள் இருவருமே மார்க்சை தெரிந்திருக்கவும் அறிந்திருக்கவும் மாட்டார்கள். இருப்பினும் இருவருமே மார்க்சின் காரணமாக வரலாற்றின் மாபெரும் கதாநாயகர்களாக மாறினர்கள். ஏனெனில் அவர்கள் பிறப்பதற்கு முன்னரே மார்க்ஸ் கருத்துக்களை உலக முழுவதும் பரவ விட்டிருந்தார். அவை லெனின், டிராட்ஸ்கியின் வாழ்க்கைகளை சீராக அமைத்தன. அவர்களுடன் மார்க்சின் கருத்துக்கள் இருந்தன. அவர்கள் வரலாற்றின் மிகப்பெரும் புரட்சியை செய்த போது அவை ஒவ்வொரு



ராட்ஸ்கியும்

கட்டத்திலும் அவர்களுக்கு வழிகாட்டின.

அதேபோலத்தான் டிராட்ஸ்கியின் கருத்துக்களும் அவை மார்க்சின் கருத்துக்களில் இருந்து வளர்ச்சி அடைந்தவை அவை அவருக்கு பின்னர் உயிர்வாழும் அவரது சீடர்களாகிய நம்மீது செல்வாக்கு செலுத்துகின்றன. அவைமிகப்பெரும எண்ணிக்கையில்இன்னும் டிராட்ஸ்கியின்பெயரை அறிந்திராத, சீடர்களின் வாழ்க்கையையும் சீரமைக்கும். மிகச்சிறந்த டிராட்ஸ்கிஸ்டுகளாக வர இருக்கும் சிலர் இன்று பள்ளிகளில் விளையாடிக் கொண்டிருக்கின்றனர். டிராட்ஸ்கியும் லெனினினும், மார்க்ஸ், ஏங்கெல்சின் கருத்துக்களில் போஷிக்கப்பட்டது போல அவர்களும் டிராட்ஸ்கியின் கருத்துக்களில் வளர்க்கப்படுவார்கள்.

உண்மையில், அமெரிக்காவில் சரீரரீதியாக அவர் இல்லாமலே, தொடக்க காலத்தில் எந்தவித தொடர்பும் இல்லாமலே அவரதுகருத்துக்களில் எமது இயக்கம் உருப்பெற்று வளர்ச்சி அடைந்தது 1928ல் இந்த நாட்டில் டிராட்ஸ்கிசத்திற்கானபோராட்டத்தை நாம் தொடங்கியபோது டிராட்ஸ்கிநாடுகடத்தப்பட்டு தனிமைப் படுத்தப்பட்டிருந்தார். அவருடன் நமக்குஎந்த தொடர்பும் இருக்கவில்லை. அவர் உயிருடன் இருக்கிருரா இறந்து விட்டாரா என்பது பற்றிக்கூட நீண்ட காலம் நமக்கு தெரியாதிருந்தது. அவருடைய நூல் திரட்டுகள் கூட நம்மிடம் இருக்கவில்லை. நம்மிடம் இருந்தது ஒரே ஒரு நடப்பு ஆவணம் —அது ''கோமிங்டன் மூன்றும் அகிலத்தின் வரைவு வேலைத் திட்டம் பற்றிய (அவரது) விமரிசனம்'' ஆகும். அன்றைக்குஅது போதுமானதாக இருந்தது. அந்தஒருஆவணத்தின்வெளிச்சத்தில நமதுபாதையை நாம் கண்டு கொண்டோம். உயர்ந்த நம்பிக்கையுடன் நமது போராட்டத்தை தொடங்கினேம். தள்ளாடமல் பிளவுகளை கடந்து வந்தோம். தேசிய ஸ்தாபனத்திற்கான ஒரு கட்டமைப்பை கட்டினேம். நாம் டிராட்ஸ்கி வார பத்திரிகையை தொடங்கினேம். எமது இயக்கமதொடக்கத்திலிருந்தேஉறுதியாககட்டபட்டது. அதுஅவ்வாறே தொடர்ந்து நீடித்தது ஏனெனில் அது டிராட்ஸ்கியின கருத்துக்களில் கட்டப்பட்டது அந்த மூத்த மனிதருடன் நாம் நேரடி தொடர்புகளை ஏற்படுத்த சுமாராக ஒரு வருட காலம எடுத்தது.

அதேபோன்ற நிலைமை தான் உலகம் முழுவதும் உள்ள நான்காம்அகிலத்தின் பகுதிகளிலும் நிலவியது. ஒரு மிகச்சிறிய எண்ணிக்கையுடைய தனிப்பட்ட தோழர்கள் மட்டுமே நெருக்க நேர் டிராடஸ்கியை பார்த்திருக்கின்றனர். இருப்பினும அவரைப்பற்றி எலலா இடங்களிலும . தெரிந்திருந்தது. சீனவிலும் மாபெரும் சமுத்திரங்களைக் கடந்து சிலி, ஆர்ஜென்டின, பிரசிலிலும்கூட ஆஸ்திரேலியாவிலும்ஐரோப்பாவிலும் நடைமுறையில் பார்த்தால் எல்லா நாடுகளிலும், ஐக்கிய அமெரிக்காவிலும, கனடாவிலும்,இந்தோசீன, தென் ஆபிரிக்காவிலும் இதேபோலத்தான். அவாகள் அவரை ஒருபோதும் பார்த்ததில்லை. ஆனல் டிராட்ஸ்கியின கருத்துககள அ ர்களை ஒரே சீருடையில் உறுதியான உலக இயக்கத்தில் நன்ருக இறுகஅது ஒன்றிணைத்தது. ஆகையால் அது அவரது சரீரரீதியான மறைவுக்கு பின்னரும். தொடரும். அதில் சந்தேகத்திற்கு இடமே இல்லை.

வரலாற்றில்டிராட்ஸ்கியின் இடம் ஏற்கனவே நிலைநாட்டபட்டுவிட்டது. பாட்டாளி வர்ககத்தின் இதர மூன்று பெரும் மாமனிதர்களான மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லெனின் பக்கத்தில் அவரும் ஒரு வரலாற்றின் உயர்ந்த ஸ்தானத்தில் எப்பொழுதுமேநிற்பார். மனித இனத்தின வரலாற்று ஞாபகத்தில அவருடைய பெயர் மிகவும் இதயபூர்வமான நன்றியையும் உளம் கனிந்தநன் மதிப்பையும் அனைவருக்கும் உண்டு பண்ணும என்பது சாத்தியமானது, உண்மையில் அது அனேகமாக எதிர்பார்க்கக்கூடியது. ஏனெனில் அவர் மிகவும் நேர்மையாக, மிகவும் தைரியத்துடன் சுயநலமற்ற அர்ப்பணிப்புடன் எதிரிகளின் உலகத்திற்கு எதிராக நீண்ட காலம் போராடினர்.

சுதந்திரமான மனித இனத்தைக் கொண்ட எதிர் கால தலைமுறைகள், குரூரமான இரத்தம் தோய்ந்தமோதல்களை, சமூகமாற்றத்தைஏற்படுத்தும் இந்த பிற்போக்கு பைத்தியகார சகாப்தத்தை ஒரு சமூக அமைப்பின் மரண நெருக்கடியையும இன்னெரு சமூக அமைப்பிற்கும் வேதனையையும கொண்ட இந்த சகாப்தத்தை தனியாத வேட்கையுடன் திரும்பிப்பார்க்கும் எல்லா இடங்களிலும் ஒடுக்கபடும் மக்கள் எப்படி இருளில் தட்டுத்தடுமாறி. குருடர்களாய், குழப்பத்துடன் இருந்தார்கள் ன்று அவர்கள் ஒரு வரலாற்றுஆய்வாளரின் பூதக்கண்ணுடியின் மூலம் பார்க்கும்பொழுது, எங்களுக்கு ஒளியையும், திடசித்தத்தைத் தந்த அந்த மகத்தான இதயத்தையும் தந்த எல்லையற்ற அன்புகொண்ட அந்தமேதையின்பெயரைவிளக்குவார்கள் நமது காலத்திய மாபெரும் மனிதர்கள் தமது பயங்கரமான கஷ்ட காலங்களில வழிகாட்டுதலுக்காக மக்கள் திரும்பியஅனைத்து பிரபலமானவர்கள் இவர்கள் அனைவரையும் விட, டிராட்ஸ்கி மட்டும.தான் நமக்கு பிரச்சினைகளை விளக்கினர். அவர் மட்டும் தான் நமக்குஇருளில் ஒளி காட்டினர். நமது சகாப்தத்தின் மர்மங்களையும் சிக்கல்களையும் அவரது மூளை மட்டும்தான் விடுவித்தது. டிராடஸ்கியின் மகத்தான மூளையைப்பற்றி அவரின் அனைத்து எதிரிகளும் பீதி அடைந்தனர் அதனுடன் அவர்களால் சமாளிக்கமுடியவில்லை. அவர்களால் அதற்கு பதிலளிக்க முடியவில்லை. நம்பமுடியாத பயங்கரமான முறையில் அவர்கள் அவரை அழித்தனர். அங்கே ஒரு ஆழமான சின்னம மறைந்திருந்தது. அவர்கள் அவரது மூளையில் தாக்கினர்! ஆனல் அந்த மூளையின் வளம்மிகுந்த உற்பத்திகள் இன்னும் உயிர் வாழ்கின்றன. அவை ஏற்கனவே தப்பி விட்டன. அவற்றை ஒருபோதும் கைப்பற்ற முடியாது; அழிக்கவும் முடியாது.

நமக்கும், நமது இயக்கத்துக்கும், உலகிறகும் இழைக்கப்பட்ட தாக்குதலை நாம் குறைத்து மதிப்பிடக்கூடாது. அது மிக மோசமானபேரழிவு நாசம்நாம் மதிப்பிடமுடியாத பொக்கிஷத்தை இழந்து விட்டோம். அதனை திரும்பப் பெற முடியாது. அவரது சரீர ரீதியான இருப்பினுல் நமக்கு உண்டாகும உற்சாகத்தையும அவரது ஆலோசனைகளையும் நாம் இழந்து விட்டோம். அவை அனைத்துமே என்றைக்குமாக இழந்தாகி விட்டது. அனைத்துக்கும் மேலாக ரஷ்ய மக்களுககு அது மிகப்பயங்கரமான தாக்குதலாக இருந்தது. பதினெரு வருடங்களுககு பின்னரே ஸ்டாலினிச கும்பல்டிராட்ஸ்கியை கொல்லவேண்டி இருந்தது, அதுவும் மாஸ்கோவிலிருந்துஅதை செய்யவேண்டி இருந்தது. டிராட்ஸ்கியின் வாழ்க்கையை அழிக்க தமது அனைத்து சக்திகளையும், திட்டங்களையும்ஒன்றுதிரட்டி பிரயோகிக்கத்தல் என்ற அந்த உண்மையே ரஷ்ய மக்களின் இதயங்களில் டிராட்ஸ்கிஇன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிருர் என்பதற்கு அத்தாட்சியாகும், அவர்கள் பொய்களை நம்பவில்லை. அவர்கள் காத்திருந்தனர், அவர் மறுபடியும் வருவார் என்ற நம்பிக்கையுடன் இருந்தனர். அவருடைய சொற்கள் இன்னும் அங்கே இருக்கின்றன. அவரது நினைவு அவர்களது இதயங்களில் உயிர் வாழ்கின்றது.

தோழர் டிராட்ஸ்கியின் மரணத்திற்கு ஒரு சில நாட்களுக்கு முன்னர் ரஷ்ய 'புல்லட்டின்' பத்திரிகையின் ஆசிரியர்கள் ரீகாவிலிருந்து ஒரு கடிதத்தை பெற்றனர், அது லாத்வியாவை, சோவியத்யூனியனின் ஒருபகுதியாக சேர்ப்பதற்கு முன்னரே அனுப்பப்பட்டிருந்தது, அது டிராட்ஸ்கியின் ''சோவியத் யூனியன் தொழிலாளர்களுக்கு ஒரு பகிரங்க கடிதம்' தமக்கு கிடைத்ததாகவும் அவர்களது இதயங்களுக்கு தைரியத்தை ஊட்டி உள்ளதாகவும், அவர்களுக்கு வழியை காட்டி உள்ளதாகவும குறிப்பிட்டிருந்தது. அந்தக் கடிதம் மேலும் குறிப்பிட்டதாவது: டிராட்ஸ்கியின் செய்தி சொல்லுக்கு சொல் மனப்பாடம் செய்யப்பட்டு, என்ன நடந்தாலும சரி அது வாய் வழியாக பரவ விடப்படும். ஸ்டாலினின் கொடூர ஆட்சியைவிட டிராட்ஸ்கியின் சொற்கள் சோவியத் யூனியனில் நீண்ட காலத்திற்கு நிலைக்கும என்று நாம் நிஜமாக நம்புகிருேம. வர விருக்கும் விடுதலைக்கான அந்த மகத்தான நாளிலே டிராட்ஸ்கியின் செய்தியே ரஷ்யமக்களின் பதாகையாக இருக்கும்.

## ஜி. பி. யு, கொலைகார இயந்திரம்

முழு உலகிற்கும தோழர் டிராட்ஸ்கியை யார் கொன்றது என்பது தெரியும். அவர் தனது மரணப்படுக்கையில் ஸ்டாலினையும் அவனது ஜி.பி.யு. வையும் நோக்கி குற்றம் சாட்டினர் என்று முழு உலகிற்கும் தெரியும். குற்றத்திற்கு முன்பதாகவே தயார் செய்யப்பட்ட கொலைகாரனின் அறிக்கையே மேலும அத்தாட்சி தேவையாயின் அதுவே இறுதி அத்தாட்சியாகும, அதாவது அந்தக் கொலை ஜி.பி.யுவின் வேலை என்பதாகும். அது மாஸ்கோ வழக்குகளின் பொய்களை மறுபடி வலியுறுத்துவதாகும், முழு உலகின் கண்களின் முன்னே மதிப்பிழந்த பொய்ப்புனைவுகளை மறுபடி தாமதித்து புனருத்தாரணம் செய்யும் ஒரு முட்டாள்தனமான போலிஸ் த்தியின் முயற்சியாகும். கொலைக்கான உந்துதல்கள் உலகின் பிற்போக்குசக்தியிடமிருந்து புரட்சி பற்றிய பீதியின காரணமாகவும, மற்றும் துரோகிகளின் வெறுப்பு பழி வாங்கும் உணர்வுகளிலிருந்தும் தோன்றியது. ஆங்கில வரலாற்று ஆசிரியா மெககாலே என்பவர் குறிப்பிட்டதாவது.''அனைத்து காலகட்டத்திலுமேநம்பிக்கையை இழந்தவர்கள் தாம் காட்டிக் கொடுத்தவர்கள் மீது ஒரு விதிவிலக்கான கொலைகார மனேபாவத்தைகொண்டிருந்தனர்.'' தமது கடந்த காலத்தை நினைவூட்டிய மனிதனின் மேல் ஸ்டாலினும் அவனது துரோகக் கும்பலும் ஒரு வெறிகொண்ட வெறுப்பை கொண்டிருந்தனர். மகத்தான புரட்சியின்சின்னமான டிராட்ஸ்கி, அவர்கள் விட்டோடிய, காட்டிக்கொடுத்த பாதையை தொடர்ச்சியாக அவர்களுக்கு நினைவூட்டிக் கொண்டிருந்தார். அதற்காக அவரை வெறுத்தனர். அவர் தனிப்பட்ட ரீதியில் வெளிப்படுத்திய அனைத்து சிறந்த நல்ல மனிதப்பண்புகளுக்காக அவரை அவர்கள வெறுத்தனர். அப்பண்புகள் அவர்களுக்குநூதனமானது. எப்படியாயினும் அவரை ஒழித்துக் கட்ட அவர்கள் தீர்மானித்தனர்.

நான் இப்போது மிகவும் வேதனை நிறைந்த பகுதிக்கு வருகிறேன், ஒரு சிந்தனை அது நிச்சயமாக நமது அனைவரின் மூளைகளிலும்இருப்பது என்று நான்நமபுகிறேன்டிராட்ஸ்கி மீதான தாக்குதலின் வெற்றி பற்றிய செய்தியைநாம் படித்த மறுகணமே நிச்சயமாக நம் மத்தியில் இருக்கும் அனைவரும ஒரு கேள்வியைக் கேட்டிருப்பார்கள். இன்னும்கொஞ்சகாலத்திற்கு அவரை நாம் காப்பாற்றி இருக்க முடியாதா ? நாம் கடினமாக முயற்சி செய்திருந்தால் இன்னும் மேலதிகமாக நாம் செய்திருந்தால் அவரை நாம காப்பாற்றி இருக்க முடியாதா ? அன்புள்ள தோழர்களே நம மைநாமேகடிந்துகொள்ளாது இருப்போம. தோழர் டிராட்ஸ்கிஇருளால் சூழப்பட்டார். வருடங்களின்முன்னமரமரண தண்டனைக்கு ஆளானர். புரட்சி, அதன்மரபு, நம்பிக்கை இல்ல அவருள்ளேவாழ்ந்தது என்று புரட்சியை காட்டிக் கொடுத்தவர்களுக்குதெரியும் ஸ்டாலின் வெறுபபினுலும் பழிவாங்கும் உணர்வினுலும வளங்கள் இலாத வரல் விட்டு எண்ணக்கூடிய மிக நெருக்கமானபில பற்றுவோரைகொண்டஒருதனிமனிதனை தீர்த்துக கட்டுவதற்காக ஒரு பலமான அரசின் அனைத்து வளங்களும், முடுக்கிவிடப்பட்டது. அவரது அனைத்து சக ஒத்துழைப்பாளர்களும்அவரதுநமபகமான ஏழு செயலர்கள்; அவரது நாலுபிள்ளைகளும் கொல்லபபட்டனர். இருப்பினும் ரஷ்யாவிலிருந்து அவர் நாடுகடத்தப்பட்ட பின்னர் அவர் மீது அவர்கள மரணக்குறி வைததிருந்தபோதிலும் பதினெரு வருடங்கள் நாம் அவரை பாதுகாத்தோம். அவைதான் அவரது முழு வாழ்க்கையின் மிகவும் பயன் செறிந்த வருடங்கள். அந்த வருடங்கள் தான் அவர் தனது அனுபவங்களையும்சிந்தனையையும நிரநதரமான எழுத்து வடிவில் சுருக்கிக் கூறினர். அவைமுழுமையான பக்குவத்துடன் இருந்துசெயற்பட்ட வருடங்களாகும.

★8ம் பக்கம் பார்க்க

www.padippakam.com



## லியான் டிராட்ஸ்கி கொலை செய்யப்பட்டதிலிருந்து.....

டிராட்ஸ்கி அவரது சிறந்தது அனைத்தையும் தன் பின்னே விட்டுச்சென்ருர் என்பதை அவர்களின் போலீஸ் புத்திகளினல் அறிய முடியாது. அவர்களை அவர் தனது மரணத்திலும்கூட விரக்தியடையச் செய்தார். ஏனெனில் அனைத்துக்கும் மேலாக அவர்கள் கொல்ல விரும்பியது. புரட்சி பற்றிய நினைவையும், நம்பிக்கையையும், தான். அந்த டிராட்ஸ்கி தன் பின் விட்டுச்சென்ருர்.

இந்த கொலைகார இயந்திரம் டிராட்ஸ்கியை எட்டி அவரை தாக்கி அழித்தது என்பதற்காக நீங்கள் உங்களையோ அல்லது நம்மையோ கடிந்து கொள்வீர்களாயின் நீங்கள் ஒன்றை நினைவிற் கொள்ள வேண்டும். கொலைகாரர்களிடமிருந்து யாரையேனும்பாதுகாப்பதுஎன்பது மிகக்கடினமான தொன்றாகும். தனது பலியாளை இரவும் பகலும் கண்காணித்து வரும் கொலைகாரனல் அனேகமாக பெரும் தடைகளை ஊடுருவி செல்ல முடிகிறது. ரஷ்ய ஜார்களும் இதர ஆட்சியாளர்களும் பெரும் அரசுகளின் அனைத்து போலீஸ் சக்திகளினலும் சூழப்பட்டுஇருப்பினும், மிகக் குறைந்த வளங்களைக் கொண்ட உறுதியான சிறிய பயங்கரவாத குழுக்களின் கொலைத்தாக்குதலில் இருந்து எப்பொழுதுமே தப்ப முடியவில்லை. இந்த நிகழ்ச்சிகள் புரட்சிக்கு முன்னைய நாட்களில் ரஷ்யாவில் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள்நிகழ்ந்தன. டிராட்ஸ்கியை பொருதளவில் இவை அனைத்தும் தலைகீழாக இருந்தன. அனைத்துவளங்களுமேகொலைகாரரின் பக்கம் இருந்தன. ஒருபெரும் அரசு இயந்திரம் கொலைகாரரின் பக்கம் இருந்தது. ஒரு பெரும் அரசு இயந்திரம் ஒரு கொலைகார இயந்திரமாக மாற்றப்பட்டது. அது ஒரு மனிதருக்கும் தம்மையே அர்ப்பணித்துக்கொண்டசிறிய எண்ணிக்கையிலான அவரது சீடர்களுக்கும் எதிராக திருப்பப்பட்டது. எனவே இறுதியில் அவர்கள் துளைத்து ஊடுருவி இருப்பார்களாயின் நம்மை நாமே கேட்கவேண்டியது. அதை தடுப்பதற்கு அல்லது அதை ஒத்திப் போடுவதற்கு செய்யவேண்டிய அனைத்தையும் நாம் செய்தோமா? ஆம் நம்மால் முடிந்தது அனைத்தையும் பயன்படுத்துவோம் என்று அனைத்து தோழர்களும் சம்மதித்தனர். கட்சித் தலைவர்களின் ஒரு பிரதிநிதிக்குழு மெக்சிக்கோவிற்கு விஜயம் செய்தது. அந்த சமயத்தில், அவருடன்கலந்து ஆலோசித்து காவலை பலப்படுத்துவதற்கு ஒரு புதிய இயக்கத்தை தொடுக்கஉடன் பட்டோம். ஆயிரக்கணக்கான டாலர்கள் செலவில் அந்த வீட்டிற்கு பாதுகாப்பு அளிக்க நாம் இந்த நாட்டில் நிதி திரட்டினேம்; நமது அனைத்து உறுப்பினர்களும், அனுதாபிகளும் இதற்காக பெரும் தியாகங்கள் செய்தனர்.

அப்படி இருந்தபொழுதிலும் கொலைகார இயந்திரம் ஊடுருவியது. நிதி மூலமாகவோ அல்லது காவல் செய்த நமது இளம் துணிகரமான தோழர்களைப் போல் சரீர முயற்சிகள் மூலமாகவோ, மிக. குறைந்தளவிலேனும் உதவி செய்தோர் அனைவரும், மூத்த மனிதரை பாதுகாக்க தாம் செய்தவற்றுக்காக ஒருபோதும் வருத்தப்படமாட்டார்கள்.

இறுதியாக தோழர் டிராட்ஸ்கி தாக்கப்பட்ட அதே நேரத்தில் மினியாபொலிசிற்கு ஒரு சிறப்பு விஜயத்தை மேற்கொண்ட நான் ரயிலில் திரும்பிக் கொண்டிருந்தேன், கோயாகனில் காவலை பலப்படுத்துவதற்காக. புதியசிறப்புத் தகுதி பெற்ற தோழர்களை ஏற்பாடு செய்யும் நோக்கத்துடன் தான் அங்கே சென்றிருந்தேன். வீடு திரும்பும் வழியில் காவல்களை பலப்படுத்துவதற்கான பணி நிறைவேறி விட்டது என்ற திருப்தியுடன் தான் அந்த ரயிலில் உட்கார்ந்திருந்தேன்.

காலை நாலு மணி அளவில் ரயில்பென்சில்வேனியாவை கடந்து கொண்டிருக்கையில் அவர்கள் காலை பத்திரிகையை கொண்டு வந்தனர். அதில் காவல்களை கடந்து சென்று தோழர் டிராட்ஸ்கியின் மூளையில் ஒரு பனிக் கோடாரியை கொலைகாரன் பாய்ச்சி விட்டான் என்ற செய்தி இருந்தது. அதுதான் ஒரு குரூரமான நாளின் தொடக்கமாகும். நமது வாழ்க்கையின் மிகத் துக்கமான நான், மூத்த மனிதர் தனது இறுதிப்போரை நடத்தினர். மரணத்துடன் யுத்தம் தொடுத்தார் அது பயனற்றதாய் போனது. அந்த சமயத்தில் நாம் காத்திருந்தோம், மணிக்கு மணி ஆனல் அப்போதும்கூட ஆழ்ந்த துக்கத்தில் நாம் இருந்தபோது தொலைதூர தொலைபேசி மூலம் : ''மூத்த மனிதர் இறந்து விட்டார்'' என்ற துக்ககரமானசெய்தியை நாம் பெற்றபோது அப்போதும் கூட நாம் தேம்பி அழுவதை எம்மால் நிறுத்த முடியவில்லை. நாம் உடனடியாக அவரது நினைவை பாதுகாக்கவும் அவரது சாசனத்தை நிறைவேற்றவும் வேண்டிய பணியில் மூழ்கினேம் முன்னெருபோதும் இல்லாத அளவு கடுமையாகநாம்வேலை செய்தோம், ஏனெனில் இப்போது அனைத்தையும்நாமாகவே செய்யவேண்டும் என்பதை முழு நனவுடன் நாம் முதல் தடவையாக உணர்ந்தோம். இனிமேலும் நாம் மூத்த மனிதரிடம் சார்ந்து இருக்க முடியாது இப்போது அவர் விடடுச்சென்ற பணியை நாம் செய்யவேண்டும். இந்த உணர்வுடன் தான் இப்போதிருந்து நாம் வேலை செய்யவேண்டும்.

உலகின் முதலாளித்துவ எஜமானர்கள் டிராட்ஸ்கினுடைய பெயரின் அர்த்தம் என்ன என்பதைஉள்ளுணர்ச்சியுடன் புரிந்து கொண்டனர் ஒடுக்கப்படுவர்களின் நண்பன், புரட்சிகளின் தயாரிப்பாளர், அவர்கள்வெறுத்த பயந்த அனைத்தினதும் அவதாரமாவார். அவரின்மரணத்திலும் கூட அவர்கள் தூஷிக்கின்றனர். அவர்களுடைய பத்திரிகைகள் அவரின் மேல் சேற்றை வாரி இறைத்தன. பிற்போக்கு ஆதிக்கம்செலுத்திய அந்த காலத்தில் அவர் உலகிலிருந்தே நாடு கடத்தப்பட்டவரானர். மெக்சிக்கோ குடியரசை தவிர வேறு எங்கும் அவருக்கு கதவு திறக்கப்படவில்லை. டிராட்ஸ்கி புரட்சியைகாட்டிக்கொடுத்து விட்டார் அவர் தொழிலாளர்களுக்கு எதிராக திரும்பி விட்டார் என்ற ஸ்டாலினிஸ்டுகளின் கரிபூசல்கள், மோசடிதனமான குற்றச்சாட்டுகள் அனைத்தையும் தெளிவாக நிராகரிப்பதாக இருந்த உண்மை என்னவெனில், டிராட்ஸ்கி அனைத்து முதலாளித்துவ நாடுகளுக்குள்ளும் உள்ளே செல்லவிடாதுதடை செய்யப்பட்டார்என்பதாகும் அதுபற்றி அவர்களால் முதலாளித்துவ உலகத்தைஒரு கணம்கூட நம்பவைக்க முடியவில்லை.

அனைத்து விதமான முதலாளிகளும் அவரது இறந்த உடலைக்கூட கண்டு அஞ்சுகின்றனர், வெறுக்கின்றனர்! நிச்சயமாக நமது பெரும் ஜனநாயகங்களின் கதவுகள் பல அரசியல் கைதிகளுக்காக திறக்கப் பட்டிருக்கிறது. அனைத்து வகையிலான பிற்போக்காளர்கள்; தமது மக்களை காட்டிக் கொடுத்து விட்டோடிய ஜனநாயகக் கயவர்கள்; முடியாட்சியாளர் மற்றும் பாசிஸ்டுகள்கூட இவர்கள் அனைவருமே நியூயார்க் துறைமுகத்தில் வரவேற்கப்பட்டனர். ஆனல் ஒடுக்கப்படுவோரின் நண்பனின் இறந்த உடலுக்கு கூட இங்கே அகதிஸ்தானம் கிடையாது! அதை நாம் மறக்கக்கூடாது! அந்த ஆழ்ந்த துக்கத்தை நமது இதயத்துனுல் எப்போதுமே பேணிக் கொள்ளவேண்டும். நல்ல நேரம் கிடைக்கும் போது அதற்கு நாம் பழி வாங்க வேண்டும்.

### டிராட்ஸ்கியின் குணம்சம்

ரூஸ்வெல்டின், ஹல்லின் பெரிய சக்தி வாய்ந்த ஜனநாயகமானது மரணசடங்கிற்காக அவரது உடலை இங்கே கொண்டு வர அனுமதி மறுத்து விட்டது. ஆனல் இங்கே அதேபோலத்தான் இருக்கிருர். இன்றிரவு இந்த மண்டபத்தினுள்ளே அவர் இருப்பதாக நாம் அனைவரும் உணர்கிருேம். அவரதுமகத்தான கருத்துக்களில் மட்டுமல்ல சிறப்பாக இன்றவு அவரை ஒரு மனிதராக நாம் நினைவு கூரும்போதும் கூட, நமது காலத்திய சிறந்த மனிதன் மகத்தான மூளை, மிகவும் பலம் வாய்ந்த, மிகவும் நேர்மையான அந்த இதயம் நமக்கு சொந்தமானவர் என்பதில் நாம பெருமை கொள்வதற்கு நமக்கு உரிமை உள்ளது, நாம் வாழும் வர்க்க சமுதாயம் அயோக்கியர்களையும், போக்கிரிகளையும் சுயநலக்காரரையும், பொய்யர்களையும் மக்களை ஒடுக்குபவர்களையும் புகழ்கிறது. சீரழியும் இந்த வர்க்க சமுதாயத்தில், உயர்ந்த அல்லது தாழ்ந்த அளவிற்கேனும் ஒரு பரிதாபகரமான வேஷதாரியும் இழிவான கோழையாகவும் இல்லாத ஒரு அறிவுஜீவி பிரதிநிதியை நீங்கள் அருமையாகத்தான் பார்க்க முடியும். அவர்கள் எல்லாம் எல்லாவற்றுக்கும் முதல் தனது பலனற்ற தனிப்பட்ட விவகாரங்களை மற்றியும், முக்கியத்துவமற்ற தமது வாழ்க்கையை பாதுகாப்பதை பற்றியுமே அக்கறை கொண்டவர்கள். இப்படியான இழிவானகும்பலைச் சேர்ந்தவர்கள் அவர்கள. அனைவரிலுமே நேர்மைகிடையாது. உற்சாகம் கிடையாது இளைஞர்களின் இதயத்தில் தீப்பொறியைஉண்டுபண்ணகூடிய மனிதர்கள் யாவருமே அவர்களிடம் கிடையாது. எமது மூத்த மனிதர் சிறந்த அம்சங்களால் உருவாக்கப்பட்டவர். எமது மூத்த மனிதர்முற்றிலும்வேறுபட்ட அம்சங்களைக் கொண்டவர். அவரது ஒழுக்க குணம்சங்களில் இப்படியான சித்திரக்குள்ளர்களுக்கு மேலாகஅவர் உயர்ந்து நிற்கிருர்.

மனித ஐக்கியத்தை ஒரு எதிர்கால குறிக்கோளாக கொண்டு ஒரு புதிய சமூக அமைப்பிற்காக மட்டும் தோழர் டிராட்ஸ்கிபோராடினர். டிராட்ஸ்கி தனது வாழ்க்கையின் ஒவ்வொரு நாளையும் அதன் உயர்ந்த சிறந்த தரங்களின்படி வாழ்ந்து காட்டினர். எந்த ஒரு நாட்டின் பிரஜையாக இருக்கவும் அவர்கள் அனுமதிக்கவில்லை. ஆனல் உண்மையில் அவர் அதைவிட மிக மேலானவர். அவர் ஏற்கனவே அவரது சிந்தனையிலும் அவரது நடத்தையிலும் மனித இனத்தின் கம்யூனிச எதிர்காலத்தின் ஒரு பிரஜையாக விளங்கினர். அவர் பற்றிய அந்த நினைவானது ஒரு மனிதராக, ஒரு தோழராக அவை தங்கங்களையும் வைரங்களையும் விட மதிப்பு வாய்ந்தவையாகும். நம் மத்தியில் வாழும் அந்த மாதிரியான மனிதரை நாம் புரிந்து கொள்வதுகடினமாக இருக்கும், உருக்குவலை போன்ற வர்க்க சமுதாயத்தில் அதன் சமத்துவமின்மைகள், அதன் முரண்பாடுகள் அதன் சம்பிரதாயங்கள், அதன் போலியான மதிப்புகள், அதன் பொய்கள் ஆகிய இவற்றில் நாம சிக்குண்டு போய் இருக்கிருேம். வர்க்க சமுதாயமானது ஒவ்வொருவருக்கும் நஞ்சூட்டுகிறது. ஊழல்மயமாக்குகிறது. அகனல் நாம் அனைவரும் சிறுமைபடுத்தப்பட்டு, சிரிக்கப்பட்டு குருடாக்கப் பட்டிருக்கிருேம். ஒரு சுதந்திரமான சமுதாயத்தில் மனித உறவுகள் எப்படி இருக்கும்; மனிதனின் தனிப்பட்ட தன்மை எத்தகையதாக இருக்கும் என்பதை நாம் எண்ணிப் பார்ப்பது கடினமானதாகும்.

தோழர் டிராட்ஸ்கி, நாம் எண்ணிப் பார்க்கும் போது அந்த படத்தை நமக்கு வழங்கினர். அவரில், ஒரு மனிதன் என்கிற அவரது தனிப்பட்ட தன்மையில், ஒரு மானிடன் என்கின்ற வகையில் ஒரு கம்யூனிச மனிதன் எப்படி இருப்பான் என்பதற்கான ஒரு துணுக்கு கிடைத்தது. ஒரு மனிதன், ஒரு தோழர் என்கிற அவர் பற்றிய நினைவானது மனித இனத்தின் ஐக்கியத்திற்காக பாடுபட்ட உணர்வுகள் வெல்ல முடியாதவை என்கிற மிக உயர்ந்த உறுதியை நமக்கு அளிக்கிறது. நமது இந்த பயங்கரமான சகாப்தத்தில் பல சம்பவங்கள் கடந்து செல்லும். ஸ்டாலினும் ஹிட்லரும், சர்ச்சிலும் ரூஸ்வெல்டும் மற்றும் அவர்கள் பிரதிநிதித்துவம் செய்யும் அனைத்து பொய்களும் அநீதிகளும், மோசடிகளும் இரத்தத்திலும், நெருப்பிலும் கடந்து செல்லும். ஆனல் தோழர் டிராஸ்ட்கி பிரதிநிதித்துவம் செய்த கம்யூனி மனிதனின் உணர்வு கடந்து செல்லாது.

பொது தன்மையுடைய மனிதர்களாக, தோழர் டிராட்ஸ்கியின் நேரடியான சீடர்களாக சீடர்களாக நம்மை விதி உருவாக்கி உள்ளது. இப்போது நாம் அவரது வாரிசுகளாக மாறி விட்டோம். அவரது சாசனத்தை நிறைவேற்றும் பணியின் பொறுப்பை ஏற்று உள்ளோம். எம்மில் அவருக்கு நம்பிக்கை இருந்தது. நாம் சரி என்றும் நாம் நிலைத்து நீடிப்போம் என்றும் அவரது இறுதி வார்த்தைகளில் நமக்கு உறுதி அளித்தார். நம் மீதும், நமது மரபுரிமைகளுக்கு அவர் நமக்கு விட்டுச்சென்ற கருத்துக்கள், பாரம்பரியம், நினைவு இவற்றில் மட்டும் தான் நாம் நம்பிக்கை வைக்கவேண்டும். நாம் அவருக்கு முழுமையாக கடமைப்பட்டுள்ளோம் எமது அரசியல் இருப்பு எமது விளக்கம், எதிர் காலத்தில் எமக்குள்ள நம்பிக்கை இவற்றுக்காக நாம் அவருக்கு கடமைப்பட்டுள்ளோம். நாம் தனியாக இல்லை. நம்மைப் போன்றோர் பலர் உலகின் அனைத்து பகுதிகளிலும் இருக்கின்றனர். எப்பொழுதும் அதை நினைவில்வைத்துக் கொள்ளுங்கள். நாம் தனியாக இல்லை. டிராட்ஸ்கி முப்பது நாடுகளுக்கும் மேலான தனது சீடர்களான காரியாளர்களுக்கு கல்வி ஊட்டி உள்ளார். அவர்களின் வெற்றிக்கான உரிமை மீது அவர்களது எலும்பு வரை அவர்கள் நம்பிக்கை கொண்டவர்கள் அவர்கள் ஊசலாடமாட்டார்கள். அவரது வாழ்வின் இறுதி கணத்தில் ''நான்காம் அகிலத்தின் வெற்றியில் எனக்கு நம்பிக்கை உண்டு'' என்று தோழர் டிராட்ஸ்கி கூறினர். அவ்வாறே நாமும் நம்பிக்கை கொண்டுள்ளோம்.

அனத டிராட்ஸ்கி ஒருபோதும் சந்தேகிக்கவில்லை, நாமும் சந்தேகிக்கக்கூடாது, அவருடைய ஆயுதங்களை தரித்தவர்களாக அவருடைய கருத்துக்களுடன் உலகின் ஒடுக்கப்படும் மக்களை யுத்தத்தின் குரூர கொந்தளிப்பில் இருந்து வெளியே ஒரு புதிய சோசலிச சமுதாயத்திற்கு வழி நடத்திச் செல்ல வேண்டும. இதுதான் இன்றிரவு தோழர் டிராட்ஸ்கிக்காக துக்கப்படும் எமது உறுதிமொழியாகும்.

அவரது துக்க நாளில்அவர் நம்மைவிட்டுச் செல்லும் போது கூறிய ஆணையை நாம் ஒரு பாதும் மறக்க மாட்டோம் என்றும் இங்கேஉறுதி எடுப்போம். அவருடைய அனைத்து போராட்டங்களிலும் நாடு விட்டு நாடு செல்லும்போது உண்மையான வாழ்க்கைத் துணைவியாக இருந்த அவரது போராளி மனைவியை நாம் அன்புடன் பராமரிப்போம். ''அவரை கவனித்துக் கொள்ளுங்கள்'' அவர் என்னுடன் பலவருடங்கள் ஒன்ருக இருந்தார்.' என்று டிராட்ஸ்கி கூறினர். ஆம், நாம் அவரை கவனித்துக் கொள்ளவேண்டும். ஏனைய அனைத்துக்கும் முன்பு, நாம் நாட்டாலியாவைகவனித்துக் கொள்ளவேண்டும்.

நமது மகத்தான தோழரும் ஆசிரியரும் இப்போது நமது பெரும் புகழ்பெற்ற தியாகியாக மாறிவிட்டவரின்பிரியாவிடையின் கடைசி வார்த்தைக்கு நாம் இபபோதுவருந்துகிறோம். எமது இதயங்களை சூழ்ந்துள்ள துன்பத்தை நாம் மறுக்கவில்லை. ஆனல் நம்முடைய துக்கம் தோல்வி மனப்பாங்கை கொண்டது அல்ல. மனோநிடத்தை பலவீனப்படுத்துவது அல்ல.

அது கோபத்தினலும், வெறுப்பினலும், உறுதியினலும் உரமூட்டப்பட்டுள்ளது. நாம் அதை' மூத்த மனிதரின் போராட்டத்தைமுன்னெடுப்பதற்கான போராட்ட சக்தியாக மாற்ற வேண்டும். டிராட்ஸ்கியின் ராணுவத்தின் நல்ல போர் வீரர்களைப் போல அவருடைய சீடர்களாக இநகக பெறுமதி வாய்ந்த முறையில் அவருக்கு நாம் பிரியாவிடைகூறுவோம் பலவீனத்திலும் நொடிந்து விழாமல் ஈரமில்லாத கண்களுடனும் ஓங்கிய கையுடனும் நிமிர்ந்து நிற்போம். போராட்டப் பாடலுடனும் நமது உதடுகளில் வெற்றியுடனும் நிற்போம். சர்வதேச கட்சியே மனித இனமாக இருக்க வேண்டிய, அந்த டிராட்ஸ்கியின் நான்காம் அகிலத்தில் நம்பிக்கை பாடலுடன் எழுநது நிற்போம்!

www.padippakam.com



★4ம் பக்கத் தொடர்ச்சி

பிக்கவேண்டும் என்ற அனைத்துக் கோரிக்கைகளையும் வொர்கர்ஸ்லீக்நிராகரிக்கிறது. இந்த ஆக்கிரமிப்பை வொர்க்கர்ஸ லீக் எதிர்ப்பதற்குகாரணம் அது குவைத்துக்கு எதிரான ''வலுத்தாக்குதலை'' பிரதிநிதித்துவப்படுத்துவதால் அல்ல, அது வெற்றிகரமாகஇருந்தாலும்கூடஅரபு மக்களின ஜனநாயக ரீதியான ஐக்கியத்துக்கும், ஏகாதிபத்தியத்திலிருந்து விடுதலைக்கும் உதவி செய்யாது என்பதனால் தான்

11. கசப்பான வரலாற்று அனுபவம் நிரூபித்தவாறு அரபு மக்களின் ஐக்கியத்திற்கு முன் நிபந்தனையாக தேவையானது. ஜனநாயகத்திற்கான மற்றும் ஏகாதிபத்திய எதிர்ப்புப்போராட்டத்தில் தொழிலாள வர்க்கத்தின் மேலாதிக்கத்தை நிலைநாட்டுவதாகும். பாலஸதீன மக்களின் நிஜமான சுயநிர்ணய உரிமை உள்பட அரபு மக்களின் பிரச்சனைகளுக்கான தீர்வை இங்குமங்குமாக நிகழ்கிற சந்தர்ப்பவாத ரீதியான எல்லைப் பேசர்களின் மூலம் அடைய முடியாது. அரபு தேசியத்தை ஐக்கியப்படுத்தி மத்திய கிழக்கில் ஏகாதிபத்திய ஆதிக்கத்தை ஒழிப்பதற்கு சதாம் குசெயின் முயற்சிக்கவில்லை, ஆனால் அதன் உள்ளூர் பகையாளிகளுக்கும் அதேபோல அதன் ஏகாதிபத்திய எஜமானர்களுக்கும் எதிராக ஈராக் முதலாளித்துவத்தின் நிலைப்பாட்டை பலப்படுத்துவதற்காகவே ஆகும். குவைத் இணைப்பை அமெரிக்கா அங்கீகரிப்பதற்கு மாற்றாக இஸரேலிய அரசை அங்கீகரிக்கும். அதாவது பாலஸ்தீனியர்களை காட்டிக் கொடுக்கும் ஒரு இரகசிய தந்திச்செய்தி உள்பட சதாம் குசெயினின் அண்மைக்கால ''மோதான முன்முயற்சி'' ஏற்கனவே அம்பலமாகிஉள்ளது.

மத்திய கிழக்கில் யுத்த நெருக்கடியின்தோற்றமானது நான்காம் அகிலத்தின் அனைத்துலககுழுவின் மற்றும் வொர்க்கர்ஸ்லீககின் முனநோக்குகளை ஊர்ஜிதம் செய்துள்ளது. அனைத்துக்கும் மேலாக அது 1989 கிழக்கு ஐரோப்பிய சம்பவங்களின் முக்கியத்துவம் பற்றிய மார்க்சிய ஆய்வை உறுதிப் படுத்துகிறது. ஒரு அரை நூற்றாண்டு காலமாக ஏகாதிபத்தியத்தின் பூகோள நலன்களை பேணி வந்த யுத்த பிற்கால ஏற்பாடுகள் அனைத்துக்குமான நெருக்கடியை பிரதிநிதித்துவம் செய்வதாகவே ஸ்டாலினிச ஆட்சிகளின் வீழ்ச்சி அமைந்தது என்று அனைத்துலக குழு வலியுறுத்தியது. அனைத்துலக குழு கூறியதாவது. கிழக்கு ஐரோப்பிய சம்பவங்கள், காலாவதியாகிப்போன தேசிய அரசு அமைப்பின் மீது உலகப் பொருளாதாரத்தின் அழுத்தத்திலிருந்து தோன்றியதாகும், அது ஏகாதிபத்தியத்தின் விவகாரங்களை ஒழுங்குபடுத்திய சர்வ தேச சம நிலையின் பொதுவான வீழ்ச்சியின் ஒரு பகுதியாகும். ஒரு நீடித்த காலத்தைக கொண்ட அரசியல். சமூக கொந்தளிப்பின்றி ஒரு புதிய சமநிலையை அடைய முடியாது மேலும் அனைத்துலக குழு கூறியதாவது : பொருளாதார வல்லாண்மையை இழந்த அமெரிக்க ஆளும் வர்க்கம் தனது உலகரீதியான ஆதிக்கத்தை பாதுகாக்க தனக்கு இன்னுமிருக்கும் ராணுவபலத்தை உபயோகிக்கும்.

13. மத்திய கிழக்கில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பு வெளிப்படுத்துவது அதன் ஆற்றொணா நெருக்கடியையே தவிர பலத்தை அல்ல. யுத்த பிற்காலத்தில்1960களில் அதன் சுபீட்சக்காலத்தில் கூட வியட்நாமில் யுத்தத்தைகால வரையற்று நடத்துவதற்கு போதுமான வளத்தை கொண்டிருக்கவில்லை. இன்றுபெடரல் அரசாங்கம் திவாலாகவும், அமெரிக்க நிதி - அமைப்பு நொடிந்தும் உள்ள நிலையில் உலகிலேயே மிகவும் அரசியல் ரீதியாக ஸ்திரமற்ற பிராந்தியத்திற்கு பிரமாண்டமான ராணுவ சக்தியை அனுப்ப எடுத்த தீர்மானம் ஒரு சாகசத் தன்மை கொண்டதாகும். பனாமா மீதான அமெரிக்க ஆக்கிரமிப்பின்போது வொர்க்கர்ஸ்லீக்கின் அறிக்கை கூறியதாவது : ''பொருளாதார பலவீனம் ராணுவபலம் இவற்றை கூட்டாககொண்டுள்ளதானது ஒரு வெடிக்கும்தன்மைகொண்ட கலவையாகும் ஆனால்நீண்ட காலப்போக்கில், முதலாவது காரணி மிகவும் தீர்க்கமானதாக மாறும், அமெரிக்கா ராணுவசக்தியை உபயோகிப்பதில் அதிகரிக்கும் அசட்டுத் துணிச்சல் தவிர்க்க முடியாதபடி அமெரிக்க ஏகாதிபத்தியம் ஒரு நிரந்தரமான பல்டியை நோக்கிச்செல்வதையே அர்த்தப்படுத்தும்''.

14. பாரசீகவளைகுடாவில்ஏகாதிபத்திய தலையீடானது அமெரிக்காவிலுள்ள தொழிலாள வர்க்கத்தின் வாழ்க்கை நிலைமைகள் ஜனநாயக உரிமைகள் மீதுஆளும் வர்க்கத்தின்தாக்குதல்கள் பெருமளவில் அதிகரிப்பதையே அர்த்தப்படுத்தும். காங்கிரசில் (பாராளுமன்றத்தில்) ஜனநாயக கட்சியின்முழு ஆதரவுடன் புஷ் நிர்வாகம் தொழிலாள வர்க்கத்தின்மேல் யுத்தத்தின் முழு செலவுகளையும் திணிக்கும். வியட்நாம் யுத்த காலத்தை போலல்லாது புஷ் நிர்வாகத்தினால்''துப்பாக்கிகளும் வெண்ணெய்களும்'' என்றவேலைத்திட்டத்தைநடைமுறைப்படுத்த முடியாதுஇருக்கும். மத்திய கிழக்கு மண்களிலே பத்தாயிரக்கணக்கான தொழிலாள வர்க்க இளைஞர்கள் மரணத்தை எதிர்கொள்வது மட்டும் அல்ல, இங்கே உள்ள அவர்களது வர்க்க சகோதரர்கள் தமக்குள்ள சமூக வேலைத்திட்டங்கள் யுத்தச்செலவிற்காக அழிக்கப்படுவதையும் காண்பார்கள்.வேலை நிறுத்தங்கள் மற்றும் பல்வேறு வடிவிலான தொழிற்சங்க நடவடிக்கைகள் தடை செய்யப்படும், லட்சக்கணக்கானோர் வறுமைநிலைக்குதள்ளப்படுவர். ராணுவநடவடிக்கைதொடங்குவதற்கு முன்பே மிகவும். ஒடுக்கப்படும் பின் தங்கிய நாடுகளுக்கு போட்டியாக பெரும் நகரங்களிலுள்ள பரந்தளவிலான வீடின்மை. கல்வியறிவின்மை, சத்துணவு இன்மை, சிறுபிள்ளை சாவு போன்ற வறுமையின் மிகவும் கொடூரமான வேறுபாடுகளை நிவர்த்தி செய்யும் சமூக வேலைத் திட்டங்களுக்கு அமெரிக்க முதலாளித்துவத்தினால் கொடுக்க முடியாதிருக்கிறது. ஏற்கனவே தற்போது ஒரு நாளைக்கு 72 மில்லியன் டாலர்களை ஒரு நாள் செலவாக கொண்டு சவூதி அராபியாவை அமெரிக்கப் படைகள் ஆக்கிரமித்து உள்ள நிலையில்,புஷ் நிர்வாகமும் காங்கிரசும் சமூக செலவினங்களில் மேலும் அதிகமாக வெட்டவேண்டியது அவசியம் என்று ஒப்புக் கொண்டுள்ளனர்.இவ்வாறாக லட்சக்கணக்கான தொழிலாளர்கள் ஏகாதிபத்திய யுத்தத்திற்கும், தமது வாழ்க்கை நிலைமைகள் அழிக்கப்படுவதற்கும் இடையேஉள்ளதொடர்புகளை பார்ப்பார்கள்.தொழிசங்க அதிகாரத்துவம், ஜனநாயக கட்சி, முதலாளித்துவ செய்தி சாதனங்கள் ஆகிய இநத முக்கிய ஸ்தாபனங்களுகு ஊடாகவே முதலாளித்துவம் தனது சித்தாந்த அரசியல் ஆதிக்கத்தை தொடர்ந்து பேணுகிறது. இவை அனைத்துமே முழுமையாக ஏகாதிபத்திய யுத்தத்துடன் தம்மை ஒன்றாக காட்டுவதன் மூலம், பூரணமாக மதிப்பிழப்பார்கள்

15. அமெரிக்காவின் வரலாற்றில் முன்கண்டிராத அளவில் தொழிலாளவர்க்கத்தின் ஜனநாயக உரிமைகள் மற்றும அமைப்புகள் மீதும்தாக்குதல் தொடுத்த வண்ணமே ஏகாதிபத்திய யுத்தம் வெடித்தெழும் என்று வொர்க்கர்ஸ் லீக் எச்சரிக்கிறது. மத்திய உளவு ஸ்தாபனத்தின் (சி.ஐ ஏ) நிர்வாகிஒருசமயம் சேவை செய்த புஷ்ஷினால் அமெரிக்க தலையீட்டுக்கான சதி எப்படி நடைபெறுகிறது என்பது பற்றி தொழிலாளர்கள் முக்கிய கவனம் எடுக்க வேண்டும். ஆகஸ்ட் 19 'நியூயார்க் டைம்ஸ்' பத்திரிகை பின்வருமாறு அறிவித்தது. '' வியட்நாம் யுத்தத்திற்கு பின்னர் மிகவும் பரந்தளவிலும், மிகவும் ஆபத்தான ராணுவ சாகசத்தில் அமெரிக்காவை புஷ் நிர்வாகத்தின் உயர் அதிகாரிகள் உள்படுத்திய வேளையிலே 15 நாட்களுக்குள்கோடை இடைவேளையின்போது காங்கிரஸ் கலைக்கப்பட்டு அனேகமாக வாஷிங்டனில் உள்ள அதிகாரிகள் விடுமுறையில் இருந்தனர்''. முதலாளித்துவ பத்திரிகைகளின் எதிர்ப்பு எதுவுமின்றி, பாரசீக வளைகுடாவில் அமெரிக்க ராணுவ நடவடிக்கை பற்றிய செய்திகள் மீது ஒரு குறிப்பிட்ட அளவு தணிக்கை செய்யப்பட்டது.இந்த ராணுவ நடவடிக்கையானது இரண்டாம் உலகப்போரின் உச்சக்கட்டத்தில் இருந்ததையும் விட மிக கடுமையானது.

16. முதலாளித்துவ பத்திரிகைகளால் தயாரிக்கப்பட்ட பொய்மைபபடுத்தப்பட்டயுத்தசார்பு அபிப்பிராய வாக்கெடுப்பு பற்றி ஆளும் வர்க்கம் ஒருபோதும் நமபவில்லை. எபபடித்தான் செயலற்று, சீரற்றதாக பொது மக்களின் கருத்துக்கள் தற்போது இருந்தாலும் அது யுத்தத்தின் சமூகவிளைவுகள் நாட்டை தாக்கும்போது பிரமாண்டமாக வெடித்தெழும் என்பதை அறியும் வியட்நாம பல்டியிலிருந்து முதலாளித்துவம கற்றுக் கொண்ட முக்கிய 'படிப்பினை களில் ஒன்று என்னவெனில் அமெரிக்கஏகாதிபத்தியத்தின் ராணுவ நடவடிக்கைகளை பலவீனப்படுத்தும் வகையில் தோன்றும் உளநாட்டு அரசியல் அதிருப்தி நிலைமையை அனுமதிக்கக்கூடாது. யுத்த எதிர்ப்பு எழுச்சியின் சமூக தளமானது, பல்கலைக்கழகங்களில்உள்ளமத்தியதரலாக்க மாணவர்களுக்கு பதிலாக கோடிக்கணககான தொழிலாளர்களாக இருக்கும் என்பது தெளிவாகும்போது இநத சட்டமானது மிகவும் கொடூரமாக பிரயோகிக்கப்படும. 1980களில் ''சமாதான கால'' தொழிற்துறை போராட்டங்களின் போது அரசாங்கமும, தொழில் கொள்வோரும் வேலை நிறுத்தத்தை உடைத்தல், சங்கத்தை உடைத்தல், சட்டரீதியான பொய் வழக்குகள், சிறைவைத்தல்மற்றும்கொலை நடவடிக்கைகளையும கூட கையாண்டார்கள். இப்படியான முறைகள் யுத்தகால நிலைமைகளில் மேலும் விஸ்தரிக்கப்பட்டு உக்கிரகப் படுத்தப்படும், இந்நிலைமைகளால் தனது வாழ்க்கைத்தரத்தை பேணுவதற்காக தொழிலாள வாக்கம் நடத்துமபோராட்டங்கள் ''தேச பக்த விரோதமாகவும்'', ''தேசிய ஐக்கியத்துக்கு'' ஆபத்தை ஏற்படுத்துவதாகவும்அரசாங்கத்தினால் பார்க்கப்படும்.

17. ஏகாதிபத்திய யுத்தத்தின் தன்மையை அம்பலப் படுத்த ஆக்ரோஷமாக தலையிடுவதும், ஒரு சுதந்திரமான வர்க்க மூல உபாயத்தின் அடிப்படையில் உருவாக்கப் படும் பரந்தளவிலான அதிருப்தி நிலையை அணி திரட்டி அதற்கு ஒரு புரட்சிகர தலைமையையும்,சோசலிச வேலைத்திட்டத்தையும் வழங்குவது வொர்க்கர்ஸ் லீக்கின் கடமையாகும். எமது பணியானது எமது இயக்கத்தின் ஸ்தாபர்களால் எடுத்துரைக்கப்பட்ட புரட்சிகர தோற்கடிப்புவாத கோட்பாடுகளை அடிப்படையாக கொண்டதாகும். நாம் தொழிலாள வர்க்கத்துக்கு கூறுவதாவது அதன் எதிரி அமெரிக்க ஆளும் வர்க்கமும் அதன் அரசாங்கமுமே தவிர ஈராக்கோ அதன் மக்களோ அல்ல, அதாவது தொழிலாள வர்க்கமானது அமெரிக்க முதலாளித்துவத்தின் யுத்த முயற்சியை,அதன் முழு சக்தியையும் உபயோகித்து எதிர்க்க வேண்டும். யுத்தம் வெடிக்குமாயின் அதை, தொழிலாள வர்க்கம் தொடர்ந்து எதிர்ப்பதுடன் அனைத்து தேசபக்த தியாகங்களுக்கானகோரிக்கைகளுக்கு எதிராக அதன் சுதந்திரமான வர்க்கப்போராட்டத்தை அபிவிருத்தி செய்யவேண்டும். நாம் பிரகடனம் செய்வதாவது :

ஃ ஏகாதிபத்திய யுத்தத்திற்கு ஒரு மனிதனையோ,ஒரு பெனியையோ (பைசாவையோ) வழங்கக்கூடாது.

ஃ யுத்த இயந்திரத்துக்கு தியாகங்கள் வேண்டாம்! வேலைகளையும், வாழ்க்கைத் தரங்களையும் பேணு!

ஃ மத்திய கிழக்கில் இருந்து ராணுவ படைகளை வாபஸ் வாங்கு!

ஃ யுத்தத்திற்கு பொறுப்பான முதலாளித்துவ ஆளும வர்ககத்திற்கு எதிராக வர்க்கப்போராட்டத்தைஉக்கிரப் படுத்து.

18. வொர்க்கர்ஸ் லீக்கின் யுத்த எதிர்ப்பு மூல உபாயம் ஏகாதிபத்தியத்திற்தஎதிராக தொழிலாள வர்க்கத்தை சுதந்திரமாகஅரசியல்ரீதியில் அணிதிரட்டுவதாகும் ஏகாதிபத்திய யுத்தத்திற்கு எதிராக நாம் சர்வதேச தொழிலாள வர்ககத்தின் ஐக்கியத்திற்காகவும், சோசலசக் கொள்கைகளின் அடிப்படையில் ஒரு தொழிற்கட்சியை கட்டுவதற்கும், ஒரு தொழிலாளர் அரசாங்கம் அமைப்பதற்கும் போராடுகிறோம். யுத்த எதிர்ப்புமக்கள் இயக்கங்களை முதலாளித்துவ அரசியல் வாதிகளுக்கு கீழ் படியச்செய்யும் மற்றும யுத்தத்தினால் உண்டுபண்ணப்படும் சமூக எதிர்ப்புகளை பாரசீக வளைகுடாவில் அமெரிக்க ராணுவ நடவடிக்கைகள் பற்றிய தனி பிரச்சினையாக்கும் பல்வேறு விதமான மத்தியதர வர்க்க தீவிரவாத ஸ்தாபனங்களின் அனைத்து முயற்சிகளையும் வொர்க்கர்ஸ் லீக் நிராகரிக்கிறது. யுத்தத்திற்கு காரணம் முதலாளித்துவமாகும; அதனால் யுத்தத்திற்கு எதிரான போராட்டதை முதலாளித்துவ லாப உற்பத்திமுறைக்கு எதிரான போராட்டத்தில் இருந்து பிரிக்க முடியாது. வியட்நாம் யுத்தத்தின் மிகப் பெரும் அரசியல் படிப்பினைகளில ஒன்று என்னவெனில் முதலாளித்துவ கட்சிகளுக்கு எதிராகவும், அவற்றிலிருந்து சுதந்திரமாகவும தொழிலாள வர்க்கத்தை அணி திரட்டுவதும். அதன் வேலைகளையும, வாழ்க்கைத் தரங்களையும், சமூக சேவைகளையும் பாதுகாப்பதற்கான தொழிலாள வர்க்கத்தின் போராட்டங்களுடன்இணைப்பதும் ஏகாதிபத்திய எதிர்ப்பு யுத்தத்திற்கு தேவையானதாகும், யுத்தத்திற்கு எதிராக போராடுவதன் அர்த்தம் ,தொழிலாள வர்க்கத்தின் சர்வதேச ஐக்கியத்திற்கும், சோசலிசத்துக்கு போராடுவதும் முதலாளித்துவத்துக்குமுடிவுகட்டுவதற்கு போராடுவது மென்பதாகும்.

19. இந்த அரசியல் கட்டமைப்பிற்குள் ஒருபுரட்சிகர வேலைத்திட்டத்தின் அடிப்படையில் ஒரு தொழிற்கட்சியைஅமைப்பதற்கானகோரிக்கையானது தொழிலாளர்அரசாங்கத்தை அமைப்பதை நோக்கமாக கொண்டதாகும் இது மிகப்பெரும்நடைமுறை முக்கியத்துவம் கொண்டதாகும். இந்த நெருக்கடியின் மிகத் தொடக்கத்திலிருந்தே ஜனநாயக கட்சியின் தலைமை பிரதிநிதிகளான டெட் கென்னடி, ஜெஸிஜக்சன், சாம்நன் ஆகிய அனைவரும் புஷ நிர்வாகத்துடன் தமது ஐக்கியத்தை பிரகடனம்செய்தனர். 1898ல் ஸ்பானிய-அமெரிக்க யுத்தத்திலிருந்து முதலாவது, இரண்டாவது உலக யுத்தங்கள், கொரிய யுத்தம், வியட்நாம யுத்தம் வரை அமெரிக்காவினால்மேற்கொள்ளப்பட்டது அனைத்தும் ஏகாதிபத்திய யுத்தங்களேமுன்போலவேஜனநாயக கட்சியும் குடியரசு கட்சியும இணைந்தே தன்மையின் அர்த்தம் வால்ஸ்ரீடின் (வங்கிகளையும் பங்கு சந்தைகளையும் கொண்ட தெரு) நலன்களை காப்பதற்கு கூட்டாக ஒத்துழைப்பதாகும். ஏகாதிபத்திய யுத்தத்தை எதிர்த்து போராட பெரும் செல்வந்தர்களின் இரு யுத்தக்கட்சிகளிலும் இருந்து பிரிந்து அதன் சொந்த தொழிற்கட்சியை தொழிலாள வர்க்கம் கட்ட வேண்டும்.

20. இந்த அரசியல் போராட்டத்திற்கு முன்தேவையாக இருப்பது தொழிற்சங்கங்களிலிருந்து ஏகாதிபத்திய சார்பு ஏ.எப்.எல்.சி.ஐ ஓ அதிகாரத்துவத்தை விரட்டுவதாகும். லேன்கிர்க்லாந், ஔன் பீபர், ரிச்சார்ட் டிரம்கா ஆகியோர் பெரும் செல்வந்தர்களின்யுத்த இயந்திரத்தின் அடியாட்கள் ஆவார். தேசியவெறியை தட்டி எழுப்பவும், தமதுபிற்போக்குவர்த்தகப்போர் கொள்கைகளை முன்னெடுக்கவும்,தேசப்பற்று தேசிய பாதுகாப்பு இவற்றின் பேரிலே தொழில் கொள்வோருடனும் அரசாங்கததுடனும் தமது கூட்டுறவுவாத (முதலாளித்துவ அரசஅமைப்பின் ஒரு பகுதியாக மாறும்) ஒத்துழைப்பை தீவிரமாக முன்னெடுப்பதற்கானசாதகஅம்சமாக அவர்கள் யுத்தத்தைவரவேற்கின்றனர். அதிகாரத்துவத்தின் தேசிய வெறியையும், அது வெளிப்படுத்தப்படும் மிகக்கொடுமையான அனைத்து வடிவங்களையும் நிராகரிக்கும்படி நாம் தொழிலாள வர்க்கத்திடம் வேண்டுகிறோம்.. குடிபெயர்ந்த தொழிலாளர்களுக்கு குறிப்பாக அமெரிக்காவில வாழும் மத்தியகிழக்குவம்சாவளிமக்களுக்குஎதிரான வெறிக்கூச்சல்களை தொழிலாளர் இயக்கம உறுதியாகஎதிர்க்க வேண்டும் அவசியமான இடங்களில் பாசிச நாசகார நடவடிக்கைகளின் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள குடிபெயர்நத தொழிலாளர்களின் வீடுகளையும் அயலவர்களையும் பாதுகாப்பதற்கான பாதுகாபபு குழுக்களை அமைக்க தொழிற சங்கங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும்.

★10ம் பக்கம் பார்க்க

படிப்பகம்

www.padippakam.com




# தொழிலாளர் பாதை

சந்தா

Tholilalar Pathai
POSTFACH 1609
7120 BIETIGHEIM-BISSINGEN

நான்காம் அகிலத்தின் அனைத்துலககுழுவின் இலங்கைப் பிரிவான புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகத்தின் உத்தியோகபூர்வமான பத்திரிகை.

சிங்கள,தமிழ் தொழிலாளர்களை சுயாதீனமாக அணிதிரட்டி உலக சோசலிசப் புரட்சியின் ஒரு அங்கமாக சிறீலங்கா,தமிழீழ ஐக்கிய சோசலிச குடியரசை நிர்மாணிப்பதற்காக எதுவித சமரசங்களுமில்லாமல் போராடும் புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகத்தினுல் வெளியிடப்படும் 'தொழிலாளர் பாதை' மட்டுமே தமிழ் மொழியில் பிரசுரமாகும் ஒரே ஒரு மார்க்சிசப் பத்திரிகையாகும்.


பெயர் ______________________


விலாசம் ______________________

______________________ திகதி ______________________

புதிய சந்தா விபரம்,
12 பிரதிகள் DM26.-




ஏகாதிபத்தியத்திற்கும்,ஸ்டாலினிசத்திற்கும் எதிராக உலகத் தொழிலாளவர்க்கத்தின் சோசலிசப்புரட்சிக்காக அணிதிரட்டும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக்குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் வெளியீடுகள்.

நாள்தோறும் கூர்மையடையும் உலக ஏகாதிபத்தியத்தின் நெருக்கடிகளினுல் வெடித்துக் கிளம்பும் வர்க்கப் போராட்டங்களுக்கு ஆயுதபாணியாகுவதற்காக ஒவ்வொரு தமிழ்த் தொழிலாளியும் அவசியம் படிக்கவேண்டிய புத்தகங்கள்.


## வளைகுடா யுத்தத்தை தொழிலாளர்கள்...

★9ம் பக்கத்திலிருந்து

21, ஒரு தொழிற்கட்சிக்கான கோரிக்கையை முன்னெடுக்கும் வொர்க்கர்ஸ்லீக் ஏகாதிபத்திய யுத்த உந்துதலுக்கு எதிராக தொழிலாள வர்க்கத்தை அணிதிரட்டும் சிறப்புக கோரிக்கைகளையும் முன் வைக்கிறது. ஆயுத தொழிற்சாலையை தொழிலாளர் கட்டுப்பாட்டின கீழ் தேசியமயமாக்கி, அதனை சமூகரீதியாக உபயோகமான உற்பத்திக்கு மாற்றிஅமைக்க நாம் அறைகூவுகின்றேம். மேலும் எண்ணெய் தொழிற்துறையையும், வங்கிகளையும் தேசியமயமாக்கல், யுத்த லாபங்களை பறிமுதல் செய்தல் ஆகியவற்றுக்கும் அழைப்பு விடுக்கிறேம், இப்படியான அனைத்துக் கோரிக்கைகளும் ஒன்றை நோக்கமாக கொண்டதாகும், அது அரசு அதிகாரத்தை கைப்பற்றுவதற்பாக தொழிலாள வர்க்கத்தைவரிசைக்கிரமமாக அரசியல்ரீதியாக அணிதிரட்டுவதாகும்,

22. மத்திய கிழக்கில் யுத்தத்திற்கான அமெரிக்காவின் உந்துதல், வொர்க்கர்ஸ்லீக்கின் ஒவ்வொரு உறுப்பினர் மீதும் மிகப்பெரும் அரசியல் மற்றும் நடைமுறை பொறுப்புக்களை கொண்டு வரும். வொர்க்கர்ஸ்லீக்கின் உறுப்பினர்கள் நேரடி அரசஒடுக்குமுறை உன்பட பிரமாண்டமான சமூக, அரசியல அழுத்தங்களுக்கு எதிராக உறுதியாக நிற்கவேண்டும். இரண்டாம் உலகப்போர் காலத்தின்போது அமெரிக்கடிராட்ஸ்கிச இயக்கத்தின் 18 தலைவர்கள் மீது பொய் வழக்குகள் ஜோடிக்கப்பட்டு தேசவிரோத குற்றம் சாட்டப்பட்ட 1914ன் சிமித் சட்ட வழக்கின் படிப்பினைகளை மறுபரிசிலனை செய்து கிரகித்துக் கொள்ளவேண்டும். யுத்தத்தினுல் உண்டுபண்ணப்பட்ட மாறுபட்ட நிலைமைகளின்கீழ் கட்சியும் அதன் ஒவ்வொரு உறுப்பினரும் முழுமையாக பாதுகாப்பு சம்பந்தப்பட்ட அனைத்து பிரச்சினைகள் தொடர்பாகவும் மிக அதிக அளவு அரசியல் உணர்ச்சி உள்ளவர்களாக இருக்க வேண்டும். ஆத்திரமூட்டாளர்களுக்கும், உளவாளிகளுக்கும் எதிராக விழிப்பாக இருங்கள்! தற்போதைய வேலை வடிவங்கள் அனைத்தையும் மீளாய்வு செய்து யுத்தத்தினுல் எழுந்துள்ள பணிகளுடன் இணக்கமில்லா தவற்றை விடவேண்டும்.

23, பிற்போக்கு வூரிஸ் சட்டத்தின் காரணமாக நான்காம் அகிலத்தின் உறுப்பினர் நிலையிலிருந்து வொர்க்கர்ஸ் லீக் தடை செய்யப்பட்டிருந்தாலும் அனைத்துலக குழுவிலுள்ள எமது சக சிந்தனையாளர்களுடன் அரசியல் குறிக்கோள்களை பங்கிட்டு கொள்வதுடன் அதன் கொள்கைகளுக்காக உலக ஏகாதிபத்தியத்தின் மையத்திலே போராடுகின்றோம். தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகர பங்கில் விஞ்ஞான அடிப்படையில் நம்பிக்கை கொண்டுஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டத்தை வொர்க்கர்ஸ்லீக் நடத்துகிறது எமது (போராட்ட) முறைகள் அமெரிக்க தொழிலாளர்களின் வர்க்க நனவை வளர்ச்சியடையச் செய்யும் நோக்கத்துடன் அரசியல் வளர்ச்சியும், கல்வியூட்டலுமாகும், மனச்சாட்சி எதிர்ப்பு, ராணுவத்தில் கட்டாய சேர்ப்புக்கு எதிர்ப்பு அல்லது ராணுவ எதிர்ப்பு நாசகார—நடவடிக்கை ஆகிய அனைத்து குட்டி முதலாளித்துவ முறைகள், ஒரு சோசலிச வேலைத்திட்டத்தின் அடிப்படையில் தொழிலாள வர்க்கத்தை வரிசைக்கிரமமாக அரசியல் ரீதியாக அணிதிரட்டுவதை ஒரு சில தனிப்பட்ட நபர்களின் செயல்களால் பிரதியீடு செய்வதாக இருக்கும், இவற்றை நாம் நிராகரிக்கிறேம்.

தொழிலாள வர்க்கம் தனது சொந்தக் கைகளில் அதிகாரத்தை எடுத்து முதலாளித்துவ அரசின் நிறுவனங்களைக் கலைத்து, தனது சொந்த ஜனநாயக ஆட்சி வடிவங்களை உருவாக்குவதன் மூலம் மட்டுமே, லாப உற்பத்தி முறையினுல் விளையும் போர் அச்சுறுத்தல் மற்றும் அனைத்து சமூக இன்னல்களையும் ஒரு முடிவுக்குக் கொண்டு வரமுடியும்.

24. போருக்கு எதிரான போராட்டமானது, தொழிலாள வர்க்கத்தினுள்ளும் இளைஞர்களுக்குள்ளும் பொறுமையான, சக்தி வாய்ந்த, உறுதியான அரசியல் நடவடிக்கைகளை வேண்டி நிற்கிறது. தொழிலாளர், இளைஞர்களது வாழ்க்கைத்தரத்தினை அழிப்பதற்கு எதிராகவளர்ந்துவரும் சமூகப் போராட்டங்களையும், அதனுடன் ஏகாதிபத்தியப் போருக்கு எதிரான நனவுபூர்வமான எதிர்ப்பினையும் பற்ற வைக்கக்கூடிய வெடிமருந்துதிரியாக நமது குறிக்கோள் இருக்கவேண்டும். நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவுடன் ஐக்கியம்கொண்ட வொர்க்கர்ஸ் லீக்கினை கட்டி எழுப்புவதன் மூலமும் உலக ஐக்கிய சோசலிசக் குடியரசுகளின் ஒரு பகுதியாக சோசலிச அமெரிக்காவை நிறுவுவதன் மூலமும் மட்டுமே போரையும் அதன் கொடுமைகளையும் ஒருமுடிவுக்குக் கொண்டு வரமுடியும் என்பதை நாம் தொழிலாள வர்க்கத்திற்கு சளைக்காமல் விளக்க வேண்டும்.

## இனவாத யுத்தத்திற்கு எதிராக இலங்கை மத்திய வங்கி ஊழியர் சங்கத்தின் தீர்மானம்

யூ.என்.பி. அரசாங்கம் வடகீழ் மாகாண தமிழ் தேசிய இனத்தினரின் தேசியவிடுதலை போராட்டத்துக்கு எதிராகத் தொடுத்துள்ள இனவாத யுத்தத்துக்கு ஆதரவாக ஆரம்பித்துள்ள பாதுகாப்பு நிதிக்கு ஒரு ஒரு சதமோ அல்லது இராணுவத்தைப் பலப்படுத்த ஒரு ஆளோ வழங்கக்கூடாது என்ற தீர்மானம் மத்திய வங்கி ஊழியர் சங்கம் மற்றும் தொழிற் சங்கங்களின் ஆதரவுடன் நடத்திய பொதுக்கூட்டத்தில் நிறைவேறியது.

அரசாங்க எழுத்தர் சேவைச் சங்க மண்டபத்தில் ஜூன் 29ம் தேதி நடைபெற்ற இக்கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறிய இத்தீர்மானம் கூறுவதாவது : ''வட-கீழ் மாகாண தமிழ் ஒடுக்கப்படும் தேசிய இனத்துக்கு எதிராக யூ. என். பி. அரசாங்கம் தொடுத்துள்ள யுத்தத்துக்கு எதிராக கிளர்ந்து எழும்படி இக்கூட்டம் தொழிலாளர் இயக்கத்தினை வேண்டுகின்றது. கடந்த மாதங்களில் ஜே. வி. பியை ஒடுக்குவதாக கூறிக்கொண்டு கிராமப்புற ஏழை இளைஞர்களை கொலை செய்யும் யுத்தத்தில் ஈடுபட்டு வந்த அரசாங்கம், இன்றுவட-கீழ் மாகாண யுத்தத்தினை ஆரம்பித்துள்ளது. சிங்கள முதலாளி வர்க்கத்தின் தேசிய ஒடுக்குமுறைக்கு எதிரான தமிழ் மக்களின் கிளர்ச்சியை நசுக்குவதேயுத்தத்தின்இலக்கு இந்த யுத்தம் தொழிலாள வர்க்கத்தினை தோற்கடித்து இராணுவ சர்வாதிகாரத்தினை திணிக்க சிங்கள முதலாளிவர்க்கம் நடத்தி வரும் வேலைத்திட்டத்தின் ஒரு பாகமாகும்.

உலக வங்கியினதும் சர்வதேச நாணய நிதியத்தினதும் கட்டளைகளையும், முதலாளி வர்க்கத்தின் நெருக்கடியையும் தொழிலாள, ஒடுக்கப்படும் மக்கள் மீது திணித்து, தொழில், வாழ்க்கைத்தரங்களையும் ஜனநாயக உரிமைகளையும் நசுக்கும் யுத்தத்தில் இன்று ஈடுபட்டுள்ள இந்த அரசாங்கம் நாளை வட-கீழ் மாகாணங்களை ஒத்த பூரண இராணுவ பயங்கரத்தினை கட்டவிழ்க்கத் திட்டமிட்டுள்ளது.

தொழிலாள வர்க்கத்தின் தொழில், வாழ்க்கைத் தரம் மற்றும் உரிமைகளுக்கான வர்க்கப் போராட்டத்தினை இந்த தமிழர் விரோத சிங்கள இனவாதத்தின் மூலம் தடம் புரளச் செய்யும் பிரமாண்டமான இனவாதப் பிரச்சாரத்தினை அரசு ஆரம்பித்துள்ளது. பதுளையில் ஏற்கனவே இரண்டு தோட்டத் தொழிலாளர்களை படுகொலை செய்தும் அநேக தோட்டங்களில் தொழிலாளர்களுக்கு எதிரான தாக்குதல்களைக் கட்டவிழ்த்தும், தமிழ் இளைஞர்களைக் கைது செய்தும். இனவாத ஆத்திரமூட்டும் நடவடிக்கைக்குத தூபமிட்டும் வருகின்றது.

### மூடி மறைப்பு

இவற்றினை இனவாதப் பிரச்சாரங்கள் மூலம் மூடி மறைத்து வட-கீழ் மாகாண தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களது உயிர்களுக்கும் உடமைகளுக்கும் இந்த யுத்தம் பெரிய அழிவினை ஏற்கனவே உண்டு பண்ணியுள்ளது. முதலாளி வர்க்கத்தின் இந்த யுத்தத்துக்கு ஆதரவு வழங்கும் சகல துரோகத் தலைவர்களும் தமிழ் ஒடுக்கப்படும் மக்களை மட்டுமின்றி இலங்கை தொழிலாள ஒடுக்கப்படும் மக்களை முதலாளித்துவத்துக்கு

★12ம் பக்கம் பார்கக

படிப்பகம்

www.padippakam.com



## 1947ல் நடந்த இரத்த பிரளயத்தை.....

★2ம் பக்கத்தொடர்ச்சி

'போராடுவதாக' பித்தலாட்டம் செய்யும் சி.பி.எம், சி.பி.ஐ தலைமைகள் அண்மையில் சென்னையில்நடைபெற்ற தேசிய ஒருமைப்பாட்டு கவுன்சிலின். கூட்டத்தில் பாரதீய ஜனதாக்கட்சி பங்கு கொள்ளாததுபற்றிவருத்தம் தெரிவித்துள்ளனர்.

மேலும் அக்கூட்டத்தில் பங்கு கொள்வதற்காக சென்னை வந்த சி.பி.எம. பொதுச்செயலாளர் நம்பூதிரிபாட், அர்கிசன் சுர்ஜித்சிங் ஜோதிபாசு, சுபாஷினி அலி ஆகியோர் பேசிய பொதுக் கூட்டம் ஒன்றில் சி.பி.எம். எம்.பிசுபாஷினி அலிபாரதீய ஜனதாக்கட்சியின் நடவடிக்கைபற்றிபின்பிருமாறு குறிப்பிட்டார். ''அவர்கள் ஒரு கோயிலை அயோத்தியில் ராமருக்காக் கட்டட்டும். நாம் அதைமுழுமையாகஆதரிக்கிறோம். நாமும் கூட அந்த பணியில் நமது செங் கொடிகளை பிடித்த வண்ணம் சேருவோம் (!!) ஆனால் ஒரு மஜீதை (மசூதியை) உடைப்பதற்கான தந்திரமாக அதை மாற்ற வேண்டாம்'' (இந்தியன் எக்ஸ் பிரஸ், செப்டம்பர் 24, 1990 பக்கம் 3).

சி.பி.எம் தலைவர் கூறியதன்படி, பாரதீய ஜனதாக்கட்சி அதன் பிற்போக்கு முஸ்லிம் விரோத பிரச்சார இயக்கத்துடன் ராமர்கோயிலை கட்டுவதற்கான் வேலையை செய்யலாம். அதற்கு சி.பி.எம் கூட அதன் செங்கொடிகளுடன் சென்று உதவி செய்யும். ஆனால் தயவுசெய்து மசூதியை இடித்து பெரும் சங்கடத்தை நமக்கு ஏற்படுத்தி விடாதீர்கள் என்று பாரதீய ஜனதாக் கட்சியிடம் ''தோழமை ரீதியில்'' கேட்டுள்ளது !.

அதுபோலவேவி.பி.சிங்கியின் இட ஒதுக்கீடு கொள்கையிலும் சி.பி.எம் அதை முழுமையாக ஆதரிக்கிறது. அக் கொள்கையை திறம்பட அமல்படுத்த சிலவற்றை சேர்க்கவேண்டும் என்று ஆலோசனையும் வழங்கியுள்ளது.

அரசியலில் இருந்து மத, சாதி, மொழி வகுப்பு வாதங்களை ஒழிக்க வேண்டுமாயின் அதை தூண்டி விடுவதற்கு பொருளாதார அடிப்படையாக இருக்கும் லாபஉற்பத்தி தனியார் உடமைஅமைப்பை ஒழிக்கவேண்டும். எனவே வகுப்புவாதத்திற்கு எதிரான போராட்டத்தை முதலாளித்துவத்திற்கு எதிரான போராட்டத்திலிருந்து பிரிக்க முடியாது. ஆனால் சி பி.எம், சி.பி.ஐ தலைமைகள் அவ்வாறு பிரித்து வர்க்கப் போராட்டத்தை திசைதிருப்புவதிலேயே முழு சக்தியையும் பயன்படுத்தி வேலை செய்கின்றனர்.

வி.பி.சிங் ஆட்சிக்குஎதிரான இயக்கம் எத்தருணத்திலும் தேசிய முன்னணி ஆட்சியின் வீழ்ச்சிக்கு வழிவகுக்கக் கூடாது என்பதில் சி.பி.எம், சி.பி.ஐ தலைமைகள் அக்கறையாக இருப்பதன் காரணம்மறுபடி காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வந்துவிடும் என்பதனால் அல்ல ஏனெனில் தேசிய முன்னணியின் 10 மாத ஆட்சிக்காலத்தில் அது காங்கிரஸின் ஏகாதிபத்திய சார்பு கொள்கையை தீவிரமாக முன்னெடுக்கும் ஏகாதிபத்திய வங்கியாளர்களின் இந்திய முதலாளித்துவத்தின் விசுவாசமான ஏஜண்டு என்பதையே நிரூபித்துள்ளது. கோர்பச்சேவுகள், டெங்கியோ பிங்குகள் எவ்வழியோ அவ்வழியேநம்பூதிரிபாத்துகளும், இந்திரஜித் குப்தாக்களும்! அதுதான்தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் புரட்சிகர இயக்கத்தை நசுக்கஏகாதிபத்தியங்களுடன் நெருங்கிய உறவை ஏற்படுத்துவது, சென்னையில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் சி.பி எம் செயலாளர் நம்பூதிரிபாட் பேசுகையில் ''வி.பி.சிங்கை பிரதமர் பதவியிலிருந்து மாற்றுவதற்கு எடுக்கப்படும் எந்த நடவடிக்கையும்அராஜகத்திற்கும் வழிவகுக்கும் என்று கூறியுள்ளார் முதலாளித்துவ அமைப்பையும், அதன் அரசியல் ஆட்சியையும் புரட்சிகரமான ரீதியில் வர்க்கப் போராட்ட முறைகள் மூலம் தூக்கி வீசி பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தை ஏற்படுத்தும் புரட்சிகர முன்னேக்கை எதிர்க்கும் சி.பி.எம்., சி பி.ஐ. ஸ்டாலினிசத் தலைமைகள் காங்கிரஸ் ஆட்சி நிராகரிக்கப்பட்டு 10 மாத காலத்திற்குள்ளேயே தேசிய முன்னணி ஆட்சியும் வளர்ச்சி அடையும் தொழிலாளர், விவசாயிகள், ஒடுக்கப்படும் மக்களின் புரட்சிகர இயக்கத்தினால் மேலும் அரசியல் நெருக்கடிக்குள் தள்ளப்படுவதனால் உருவாக்கப்படும் ''அராஜக'' நிலைமை பற்றியே மரணபீதி அடைந்துள்ளார். அதனால் தேசிய முன்னணி ஆட்சி எதிர் கொள்ளும் அனைத்து அரசியல் பிரச்சினைக்கும்'' சர்வரோக நிவாரணி''யாக சி பி,எம், சி பி.ஐ தலைமைகள் அனைத்துக் கட்சி கூட்டங்களை பிரேரிக்கின்றனர் இப்படியான மக்கள்முன்னணி (வர்க்ககூட்டு) அமைப்புகளின் மூலம் முதலாளித்துவ சித்தாந்தத்திலிருந்தும், சுரண்டல் அமைப்பிலிருந்து தொழிலாளர்கள் விடுபடாமல் பா காத்துக்கொள்கின்றனர். இந்தத் துரோகத்தலைமைகள் பிற்போக்கு தேசிய முன்னணி ஆட்சிக்கு வழங்கும் அரசியல் ஆதரவை உடனடியாக நிறுத்தும்படியும், முதலாளித்துவ கட்சிகளுடன் முழுமையாக உறவைதுண்டித்துக் கொண்டு சோசலிச மற்றும் தீர்க்கப்படாத ஜனநாயகப் புரட்சியின் கடமைகளை நிறைவேற்றும் தொழிலாளர், விவசாயிகள் அரசாங்கம் அமைக்கப் போராடும்படி தொழிலாளர்கள் சி.பி.எம், சி பி.ஐ தலைமைகளை நிர்ப்பந்திக்கவேண்டும். பின்வரும் கோரிக்கைகளுக்காக போராடும்படி கோர வேண்டும்.

- முதலாளித்துவத்திற்குஎதிரானபொதுப்போராட்டத்தில் சர்வதேசதொழிலாள வர்க்கத்துடன் ஐக்கியப்படு !
- அனைவருக்கும்வேலைக்காக போராடு !
- தொழிலாளர்களை பிளவுபடுத்தும் மண்டல்கமிஷன் பரிந்துரைகளையும், இந்து வகுப்புவாதத்தை தூண்டி விடும் ரதயாத்திரைகளையும் தோற்கடி !
- முதலாளித்துவ போலீஸ், ராணுவத்தை கலை !
- அனைத்து முக்கிய ஆலைகளையும், நஷ்டஈடின்றுதொழிலாளர் ஆதிக்கத்தின் கீழ் தேசியமயமாக்கு!
- ஆலைமூடல்அபாயங்களுக்கு எதிராக உள்ளிருப்பு போராட்டத்திற்கு தயார் செய்யும்!
- உலக வங்கிக்கான கடன்களை நிராகரி! வேலை நீக்கம்செய்யப்பட்டஅனைத்து தொழிலாளர்களையும் மீண்டும் வேலையில் அமர்த்து !
- ஏகாதிபத்திய வங்கிகளையும் நஷ்டஈடின்றி தொழிலாளர் ஆதிக்கத்தின் கீழ் தேசியமயமாக்கு !
- தொழிலாளர் பாதுகாப்பு குழுக்களை கட்டு!
- நிபந்தனையின்றி விவசாயிகளின் கடன்களை தள்ளுபடி செய் !
- நிலங்களையும், ஆறுகளையும், தேசியமயமாக்கு!
- உழுபவர்களுக்குநிலத்தை வழங்கு !
- விவசாயி உற்பத்தி பொருள்களுக்கு நியாய விலை வழங்கு!
- மலிந்த விலையில் விவசாய உற்பத்தி கருவிகளை வழங்கு !
- இலகுவான முறையில் திருப்பி செலுத்தக்கூடிய புதிய கடன் முறைகளை ஏற்படுத்து!
- காஷ்மீரிலிருந்துராணுவத்தை உடனடியாக வாபஸ் வாங்கு !
- காஷ்மீரிதேசியஇனத்தின் சுயநிர்ணய உரிமையை பேணு !
- மறு ஐக்கியம் செய்யப்பட்ட சோசலிச உபகண்டத்தில் காஷ்மீரி, பஞ்சாபி, மணிப்பூரி வங்காளி மற்றும் தமிழ் ஈழ மக்களின் அடிப்படை ஜனநாயகஉரிமைகளையும் அவற்றில் ஒன்றுனதேசி சுயநிர்ணய உரிமையையும் பேணு!
- தொழிலாளர், விவசாயிகளின் சபைகளை (சோவியத்துக்களை) நிறுவு !
- உலக சோசலிச குடியரசின் பகுதியாக உபகண்டத்தில் ஐக்கிய சோசலிச குடியரசுகள் அமைக்கப் போராடு !
- உலக சோச்லிசப் புரட்சியை நோக்கி முன்னேறு!

# காட்டிக் கொடுக்கப்பட்ட ஜெர்மன் தொழிலாளர்கள்

சம்பிரதாய ரீதியாக அக்டோபர் 3ல் ஜெர்மனியை முதலாளித்துவ அடிப்படையில் ஐக்கியப்படுத்துவதாக அறிவிக்கப்பட்டதானது ஸ்டாலினிசத்தின் காட்டிக் கொடுப்புகளில் மைல் கல்லாகும். 1945ல் நாஜி சர்வாதிகாரஆட்சி முடிவுற்ற பின்னர் முதலாளிகள் கிழக்கிலும், மேற்கிலும் உள்ள தொழிலாளர்கள் மீது தொடுக்கும் மிகப்பெரும் தாக்குதல்களுக்கான சமிக்ஞைகளையும் குறிக்கிறது.

கிறிஸ்தவ ஜனநாயக யூனியன் கட்சியைச் சேர்ந்தஜெர்மனியின் தலைவர் ஹெல்முட் ஹோலும் அவரது கிழக்கு ஜெர்மனி பொம்மையான லோதர்டி மைசீரேயும் கட்டி அணைத்து 'டொச்சுலாந்ஊபர் அலஸ்' பாடி ஒரு சமாதான ஜனநாயக வளர்ச்சி காலத்திற்கு வாக்குறுதி அளிக்கின்றனர். ஆனால்

ஜெர்மனியை ஐக்கியப்படுத்துவதன் உண்மையான நோக்கம் ஜெர்மனி தொழிலாளர்களுக்கு எதிரான வர்க்கப் போரை உக்கிரப்படுத்துவதாகும். தொழிலாள வர்க்கத்தின் மத்தியில் நிலவும் அதிருப்தியையும், கொந்தளிப்பையும் திசைதிருப்புவதற்காக ஜெர்மனியை ஐக்கியப்படுத்தும் தேதி கூட ஜெர்மனி ஆளும் வர்க்கத்தாலும் அதன் காலவருடிகளான சமூக ஜனநாயகவாதிகளாலும், ஸ்டாலினிஸ்டுகளாலும் எவ்வளவு சீக்கிரம் முன்னுக்கு கொண்டு வருவது சாத்தியமென பார்த்து நிர்ணயிக்கப்பட்டது.

மே 18ல் நாணய ஒன்றிணைப்பு செய்யப்பட்டதிலிருந்து கிழக்கு ஜெர்மனியில் வேலையின்மை ஒரு வாரத்துக்கு 50,000 என்ற விதத்தில் அதிகரித்து வருகிறது. அதேவேளை ஆயிரக்கணக்கான அரசுக்கு சொந்தமான நிறுவனங்கள் மூடப்பட்டன அல்லது நிறுவன நிர்வாகிகளாக மாறியுள்ள பல ஸ்டாலினிச அதிகாரிகளின் உதவியுடன் முதலாளித்துவ கொள்ளைக்காரர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அடுத்த வருடத்தில் கிழக்கு ஜெர்மனி தொழிலாளர்களில் மூன்றில் இரண்டு பகுதியினர் வேலையின்றி இருப்பார்கள்.

கிழக்கு ஜெர்மனியை எடுத்துக்கொள்வதற்காக மேற்கு ஜெர்மனியின் ஹோல் அரசாங்கம் பட்ஜெட் வெட்டுகளையும், வரி உயர்வுகளையும் கொண்ட ஒரு குரூரமான வேலைத் திட்டத்தை கட்டவிழ்த்து விட்டது. இந்த நூற்றாண்டில் எண்ணற்ற புரட்சிகரமான போராட்டங்களை நசுக்கிய இரத்தம் தோய்ந்த கைகளுடன் நிற்கும் ஜெர்மனிமுதலாளித்துவ வர்க்கமானது. கிழக்கு ஜெர்மனியில் முதலாளித்துவ மீட்சியை சமாதான முறையில் திணிக்க முடியாது என்பதை நன்கு அறியும்.

லட்சக்கணக்கான கிழக்கு ஜெர்மனி தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டு, அவர்களது ஆஸ்பத்திரிகளும், பாடசாலைகளும், குழந்தை பராமரிப்பு நிலையங்களும் மூடப்படும் அதேசமயம், ஸ்டாசி (STASI) என்றழைக்கப்படும் ரகசிய போலிசார் மீண்டும் வேலைக்கமர்த்தப்பட்டு, உள்நாட்டு யுத்தத்திற்கு அவசியமான நவீன பாதுகாப்பு கருவிகளும் வழங்கப்பட்டுள்ளனர். 85,000 ஸ்டாசி ரகசிய ஏஜன்டுகளில் 7,500க்கும் குறைவானவர்களே அவர்களது வேலையை இழந்துள்ளனர்.

''ஜெர்மனி ஐக்கிய நிதிக்காக அதாவது ஜெர்மனியை ஐக்கியப்படுத்துவதற்கான செலவாக ஹோல் அரசாங்கத்தினால் திரட்டப்பட்ட 100 பில்லியன் (10,000 கோடி) ஜெர்மன் மார்க்கில் ஏற்கனவே ரகசிய அரசு நியந்திரத்தை நவீன ஆயுதபாணியாக்க 4,400 கோடி ஜெர்மன் மார்க்குகள் செலவிடப்பட்டுள்ளன.

அதேசமயம் சந்தைகளிலிருந்து தம்மை நசுக்கி வெளியேற்றும் ஒரு ஐக்கியப்பட்ட ஜெர்மனியின் தோற்றத்தை ஜப்பான், அமெரிக்க ஏகாதிபத்தியங்களோ அல்லது ஜெர்மனியின் ஐரோப்பிய பகையாளிகளோ சமாதான ரீதியில் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை

''சோசலிசத்தின்மரணம்'' என்று முதலாளித்துவ பத்திரிகைகள் கொக்கரிப்பதுக்கு மாறாக ஜெர்மனி முதலாளித்துவ அடிப்படையில் மறு ஐக்கியம் செய்யப்பட்டதானது இரண்டாம் உலகப்போரின் பின்னர் தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகர போராட்டங்களை நசுக்கிய ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் 45 வருட கால காட்டிக் கொடுப்புகளின் விளைவாகும்.

வேலைகள் பாதுகாப்பதும் ஜெர்மன் தொழிலாள வர்க்கத்தின் வாழ்க்கை நிலைமைகளை பேணுவதும் சோசலிசப்புரட்சியின், மூலமும் ஐக்கிய ஐரோப்பிய சோசலிசக் குடியரசுகளுக்கான போராட்டத்தின் மூலமுமே சாத்தியமாகும். இந்த அடிப்படையிலேயே நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் ஜெர்மன் பகுதியான பி.எஸ்.ஏ (BSA) போராடுகிறது.

திருத்தம் ;

4ம்பக்கத்தில் ''வளைகுடா யுத்தத்தை எதிர்க்க வேண்டும்'' என்ற அறிக்கையில் 3வது குறிப்பாக சேர்த்து படிக்க வேண்டியது பின் வருமாறு :

3 பாரசீக வளைகுடாவில் ராணுவத்துடன் தலையிட்டு அதன் பிரமாண்ட எண்ணெய் வளங்கள் மீது தனது கட்டுப்பாட்டை நிலைநாட்டும் அதன் நீண்ட கால திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு, குவைத்தை ஈராக் ஆக்கிரமிப்பு செய்து இணைத்தானது இலகுவான தாக்கியது,

''கார்ட்டரின் ரேகனின் கொள்கைப்படி பாரசீக வளைகுடா மீது அமெரிக்க ஆதிக்கத்தை நிலைநாட்ட ராணுவப் படை பயன்படுத்தப்படும்' எண்ணற்ற ராணுவ பயிற்சிகள், தீவிர படைகுவிப்பு போன்ற தொடக்க நடவடிக்கையில் இருந்து 1987-88ன் ஆத்திரமூட்டும் கப்பல் படையின் ''மறுகொடியேற்றும்நடவடிக்கை'' வரை அனைத்துமே தற்போதைய நடவடிக்கைகளுக்கான ஒத்திகையாகும். ஏற்கனவே மிகத்தெளிவாகி உள்ளது என்னவெனில் ராணுவ நடவடிக்கையின் நோக்கங்கள், நிலப்பிரபுத்துவ சவூதிசர்வாதிகாரத்தை பாதுகாப்பதற்கும் மற்றும் குவைத்திலிருந்து ஈராக் படைகளை திரும்பப்பெறும்படிநிர்ப்பந்திப்பதற்கும்அப்பால்கூட சென்றுவிட்டது. பாரசீக வளைகுடாவில் ஒரு நிரந்தரமான பிரமாண்டமான ராணுவப்படையை அமெரிக்கா உருவாக்கின்றது, அது ஒரு முழுமையான அமெரிக்க ஆளுமையின் கீழ் உள்ள பிராந்தியமாக இருக்கிறது. இந்த இலக்கை அடைவதற்கு அது அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நலன்களுக்கு இருக்ககூடிய அரசியல மற்றும் ராணுவ எதிர்ப்புகளை அழிக்க உறுதி பூண்டுள்ளது. அதனால்தான் முதலாளித்துவ பத்திரிகையும், அரசியல்வாதிகளும் வெளிப்படையாகவே சதாம் குசெயினின் ஆட்சியை தூக்கி வீசி, ஈராக் ராணுவத்தை நசுக்கி, பாக்தாத்தை ஆக்கிரமித்து அங்கே இரண்டாம் உலகப்போரின் பின்னர் ஜப்பானில் மக்ஆதர் ஆட்சி செய்ததுபோல ஒரு அமெரிக்க ஜெனரலை அந்நியநாட்டு பிரதிநிதிப்போல உறுதியமிக்கு அவசியத்தைப் பற்றி பேசுகின்றனர்.

Printed in Germany
Neue Arbeiterpresse. Alfredstr. 71, D – 4300 Essen 1, West-Germany

படிப்பகம்